பாகம் - 02

## ஓர் ஆளுமையின் திசை மாறிய பயணம்

P.ஜைனுல் ஆபிதீன்

# ஏகத்துவப் புத்துயிர்ப்பும் ஹதீஸ் மறுப்பும்

ஹம்னா பதிப்பகம்

எம்.ஏ.ஹபீழ்

P.ஜைனுல் ஆபிதீன் ஏகத்துவப் புத்துயிர்ப்பும் ஹதீஸ் மறுப்பும் பாகம் - 02 எம்.ஏ.ஹபீழ்

வடக்கிளைஞன் என்ற புனைப் பெயரில் தனது 14வது வயதில் எழுத ஆரம்பித்த எம்.ஏ.ஹபீழ் (ரியாதி, எம்.ஏ) அவர்களின் முதல் நூல், அவரது 15வது வயதில் தென்னிந்தியாவில் வெளியிடப்பட்டது. தற்போது, 15க்கும் அதிகமான நூல்களை எழுதி, தமிழ் எழுத்துலகில் தனக்கென தனித்துவ அடையாளத்தைப் பதிவு செய்திருக்கிறார். இந்தியாவிலிருந்து வெளிவரும் சமரசம் சஞ்சிகை, உணர்வு வாரப் பத்திரிகை ஆகியவைகளில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இந்தியாவில் இவரது சில நூல்கள் பல பதிப்புக்களை கண்டுள்ளன. இலங்கையில் அல்ஹஸனாத், உண்மை உதயம், சத்தியக் குரல், தினகரன், மீள்பார்வை, எங்கஎ தேசம், வீரகேசரி போன்றவற்றில் காலத்துக்குத் தேவையான காத்திரமான கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

சிறந்த Calligrapher ஆன இவர் அரபு எழுத்தணிக்கலையில் தேர்ச்சிமிக்கவர். வாசிப்பை நேசிக்கும் இவர் சிறந்த சொற்பொழிவாளரும் கூட. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கருத்தாழமிக்க பல ஆய்வுரைகளை ஆற்றியுள்ளார். பழகுவதற்கு இனிமையான பண்பியல்புடைய இவர், மிகவும் எளிமையான போக்குடையவர். ரியாதிலுள்ளள இலங்கைத் தூதரகத்தில் மொழிபெயர்ப்பாளராகக் கடையாற்றிய இவர், அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலும் பல துறைகளில் பணியாற்றியுள்ளார்.

ரசூல் புதுவெளில் பிறந்த இவர் ஊர்ப் பாடசாலையிலும், அதற்கு அருகிலுள்ள கிறிஸ்தவப் பாடசாலையிலும் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றுள்ளார். பறகஹதெனிய தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர், ஸலபிய்யாக் கலாபீடத்தில் மார்க்கத் துறைக் கற்கையை நிறைவுசெய்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர், சவுதி அரேபியாவின் மன்னர் ஸவூத் பல்கலைக்கழகத்தில் அரபி மொழி - கலாசாரம் தொடர்பான கற்கையை நிறைவு செய்து, முதல் தரத்தில் சான்றிதழ் பெற்றுள்ளார். பொதுத் துறை நிர்வாகத்தில் முதுமாணி கற்கையை முதல் தரத்தில் நிறைவு செய்து, தற்போது Mphil கற்கையை மேற்கொள்வதற்கான முயற்சியில் உள்ளார்.

அரசியல், இலக்கியம், சமூகவியல் என சமகால நிகழ்வுகளையும் விடயதானத்தோடு, கருத்தாழமிக்க கட்டுரைகளாக வரைவதில் அதீத ஆற்றல் பொருந்திய இவர் இன்னும் பல படைப்புக்களைத் தரவேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

ஐ.எம்.இர்ஸாட் - கிண்ணியா.

ISBN 978-624-95953-0-9
9786249595309
ஹம்னா பதிப்பகம்

بسم الله الرحمن الرحيم

# ஓர் ஆளுமையின் திசை மாறிய பயணம்

# P.ஜைனுல் ஆபிதீன்

## ஏகத்துவப் புத்துயிர்ப்பும் ஹதீஸ் மறுப்பும்

**பாகம் – 02**

அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி,(M.A.)

ஹம்னா பதிப்பகம்

# புத்தக விபரத் தொகுப்பு

*தலைப்பு:*

**ஓர் ஆளுமையின் திசை மாறிய பயணம் பாகம் -02**

**பீ. ஜைனுல் ஆபிதீன்**
**ஏகத்துவப் புத்துயிர்ப்பும் ஹதீஸ் மறுப்பும்**

*நூலாசிரியர்:*

*அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் ஸலபி, ரியாதி,*(M.A.)

முதல் பதிப்பு:

ஏப்ரல் 2020


**வெளியீடு:**

© ஹம்னா பதிப்பம்,
இல.*87/3*, பாலியல்லபிடிய, அம்பகோட்டே-*60036*, இலங்கை.


*விலை:*

*Rs.* 500.00


*Or Aalumayin Thisai Maariya Payanam Part -02, P.Jainul Abideen Ehattuwap Puttuirpum Hadees Maruppum in Tamil by M.A.Hafeel Salafi (M.A.Public Administration),Published By Hamna Publications, No.87/3,Paliellapitiya, Ambakote.60036,(NWP) Sri Lanka.*

*Email: suaadhafeel@gmail.com*
*ISBN: 978-624-95953-0-9*

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நன்றியுரை | 05 |
| 2. | முன்னுரை | 06 |
| 3. | அறிமுகம் | 09 |
| 4. | கொள்கையும் கோட்பாடுகளும் | 25 |
| 5. | பொருளாதாரக் கோட்பாடு | 37 |
| 6. | பரிணாமவாதக் கோட்பாடு | 40 |
| 7. | ஜிஹாத் பற்றிய கோட்பாடு | 46 |
| 8. | இணையதளம் | 49 |
| 9. | இலங்கை வருகை | 53 |
| 10. | உமர் அலியுடன் பைஅத் விவாதம் | 60 |
| 11. | ஜும்ஆவிற்கு முன் சுன்னத் | 76 |
| 12. | ஜின் பற்றிய நிலைப்பாடு | 85 |
| 13. | விவாதங்கள் | 93 |
| 14. | திசைமாறிய பயணம் | 100 |
| 15. | ஸகாத் | 108 |
| 16. | ஹதீஸ் மறுப்பு | 112 |
| 17. | சூனியக் கொள்கை | 119 |
| 18. | இரட்டை வேடம் | 125 |
| 19. | ஸலபுகள் பற்றி இரட்டை நிலைப்பாடு | 130 |
| 20. | நீக்கம் | 142 |
| 21. | பின்னுரை | 153 |
| | உசாத்துணைகள் | 163 |

# நன்றியுரை

இந்நூலாக்கதின் போது, கணினிப்படுத்தலில் உதவியவருக்கும் ஆலோசனைகளைத் தந்த கலாநிதி முபாரக் மதனி, அஷ்ஷைக் இஸ்மாயீல் ஸலபி, அஷ்ஷைக் ரிஸ்வான் மதனி, இணையதளத் தரவுகளைத் தந்துதவிய இஸ்லாம் கல்வி வெப்மாஸ்டர் சகோ.முப்தி இனாயத்துல்லாஹ், சகோ. இஹ்ஸாஸ் அப்துல்லாஹ் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதல் பாகம் வெளிவந்த வேளை கருத்துக்களைப் பதிவு செய்தோருக்கும் சில தகவல்களையும் ஆலோசனைகளையும் தந்த சகோ. அஸ்கர் அலி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அட்டைப்படத்தை அழகுற வரைந்து தந்த எனது அன்புச் செல்லங்களான ஹம்னா ஏ. ஹபீழ், அனூத் ஏ. ஹபீழ் ஆகியோருக்கும் கணினியில் வடிவமைக்க உதவிய சகோ.என்.எம்.இர்ஹாம் அவர்களுக்கும் Proof Reading செய்து தந்த தமிழ்த்துறை ஆசிரியர் ஏ.எல்.அப்துஸ் ஸலாம் (SLPS1) அவர்களுக்கும் இதை அச்சாக்கம் செய்த அச்சகத்தார்க்கும் எனது நன்றிகள்.

# முன்னுரை

அன்புடையீர்,
அஸ்ஸலாமு அலைக்கும்.

P.ஜைனுல் ஆபிதீன் பல ஆளுமைப் பண்புகளைக் கொண்டவர் என்று நன்கு அறியப்பட்டவர். பொருளியல், அரசியல், சமூகவியல், சமயத் துறை என்று பல்வேறு துறைகளில் தனது புலமையை வெளிப்படுத்தினார். நவீன பிரச்சினைகளுக்குப் பல நல்ல தீர்வுகளைச் சொன்னார். எனினும், அவரது ஒழுக்கவியல் தொடர்பான Audio சர்ச்சை அவரது மதிப்பை பெருமளவு பாதித்துள்ளது.

P.ஜைனுல் ஆபிதீன் பற்றிய இந்நூல் சுருக்கமாக அவர் தொடர்பான பல்வேறு விடயங்களை பகுப்பாய்வுக்குட்படுத்துகிறது. அவரது ஆளுமையும் சிந்தனைகளும் செல்வாக்குச் செலுத்திய பல விடயங்களை முதல் பாகத்தில் நாம் குறிப்பிட்டிருந்தோம். அவர் மீதுள்ள விமர்சனங்களோடு அவரது முரண்பாடுகள், சர்ச்சைக்குரிய கருத்துக்கள், அவரது சில கோட்பாடுகள் பற்றியும் இரண்டாம் பாகம் ஆராய்கிறது.

இஸ்லாமியத் துறை சார்ந்த நிறைய நூல்களை எழுதியுள்ளார்; பல நூறு உரைகளை ஆற்றியுள்ளார்; கட்டுரைகளையும் வரைந்துள்ளார். எனினும், அவரது அறிவையும் சேவைகளையும் பரந்த அளவு தமிழ் உலகம் பெற முடியாத நிலையை, அவரது செயற்பாடுகளும் கடும் போக்குகளும் இயக்க ரீதியான தவறான நடவடிக்கைகளும் தோற்று வித்துள்ளன.

எந்த ஒரு மனிதனதும் ஆக்கப்பணிகள், அவற்றில் நிகழ்ந்த தவறுகள் ஆகிய இரண்டு பக்கங்களும் விமர்சன ரீதியாகப் பேசப்பட வேண்டும் என்பது நியாயமானது என்று நாம் கருதியதால், P.ஜைனுல் ஆபிதீனின் பணிகள் பற்றிய மதிப்பீட்டில் இந்த அணுகு முறைக்காக அதிக கவனம் செலுத்தியுள்ளோம். இது சிலருக்கு ஆத்திர

மூட்டியிருக்கலாம். சிலருக்கு இது ஏன் என்ற கேள்வியையும் எழுப்பி யிருக்கலாம். அவரின் சேவைகள் பற்றி எனது அவதானங்களை அதிகம் எடுத்துக் காட்டியிருப்பது சிலருக்கு அலர்ஜிக்கையும் ஏற்படுத்தியிருக்கலாம்.

அவரது புத்தாக்கப் பணிகளில் நிறைகள் உள்ளன போன்று, அவரது சிந்தனைகளிலும் சேவைகளிலும் நகர்வுகளிலும் பல குறைபாடுகள் உள்ளன என்பதை நாம் நடுநிலையாக அணுகினோம். படிப்பினையை மையப்படுத்தியே அவரது வாழ்வையும் கருத்துக்களை யும் ஆய்வுக்கு உட்படுத்தினோம்.நான் எந்த இயக்க முகாமிலும் அங்கத்துவ அடையாளம் கொண்டவன் அல்லன். அதனால், பக்கச் சார்பான ஆதரவுத் தளத்தில் நின்று வெறும் போற்றும் பாங்கில் துதிபாடலாகவோ, எதிர்ப்பு முகாமில் நின்று தூற்றுதலாகவோ இதை எழுதாமல், விமர்சன ரீதியாகவே அணுகியுள்ளேன்.

அவரை எதிர்ப்பவர்களில் அதிகமானவர்கள் அவரை முழுமை யாகத் தூற்ற வேண்டும் என்று கருதுகின்றனர். அவரை இன்னும் ஆதரிப்போர் போற்ற வேண்டும் என்று எண்ணுகின்றனர். இந்த இரண்டு முகாம்களுக்கும் மத்தியில்தான் இப்பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அன்று அவருக்கு மிக அருகாமையில் இருந்து அவதானித்த வர்கள், அவருக்கு நஸீஹத் செய்து நெறிப்படுத்தாமல், அவரை அதிகமாகப் புகழ்ந்தவர்கள், அவரது ஆன்மிக வறுமை நிலையையும் தவறுகளையும் நன்கு தெரிந்தும், அப்போது திருத்தத் தவறிவிட்டு, அவரது அனைத்துத் தவறுகளுக்கும் இயக்க நீதியாகத் துணை புரிந்து விட்டு, இப்போது தூக்கி எறிந்துவிட்டு, தூற்றி வருகின்றனர்.

அதனால், அவரது முன்னாள் சகாக்கள் நடுநிலை தவறிச் செயற்பட்டதையும் எழுதியதையும் முதல் பாகத்தில் அதிகம் எடுத்துக் காட்டியிருக்கின்றேன். இயக்க ரீதியாக இவர்கள் செயற்பட்டு, இஸ்லாத்தின் விழுமியங்களை எந்தளவு சிதைத்துள்ளார்கள் என்பதை அனைவரும் அறிவர். தூய்மைவாதம் பேசிப் பேசியே காலத்தை ஓட்டிய அவர்கள், இப்போது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பாரதூரமான குற்றம் சுமத்தி, விமர்சிப்பதையும் தூற்றுவதையும்

சுட்டிக் காட்டியிருக்கின்றேன். இது ஏன் என்பதற்குக் காரணங்கள் உண்டு என்பதை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

P.ஜைனுல் ஆபிதீன் பற்றி தமிழில் எந்த நூலும் எழுதப் படவில்லை. ஆங்கிலத்தில் ஒருவர் எழுதியதை P.ஜைனுல் ஆபிதீன் அண்மையில் எனக்கு அனுப்பியிருந்தார். அதை எழுதியவரின் பெயரும் நூலின் தலைப்பும் அவர் அனுப்பிய PDF ல் இருக்கவில்லை. அதனால், அதை நான் உசாத்துணையில் இணைக்கவில்லை.

இவர் மீது அன்பு வைத்தவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். 2014ம் ஆண்டு நான் இவரை இறுதியாகச் சந்தித்தேன். அதன் பின்னர்தான் நான் விழித்துக் கொண்டேன். முன்னர் நான் பார்த்த அறிஞர் P.ஜைனுல் ஆபிதீனாக தற்போது அவரைப் பார்க்க முடியவில்லையே என்ற கவலை என்னை ஆட்கொண்டது. அந்த ஆதங்கத்தினால்தான் நான் இந்த நூலை எழுதினேன்.

அவரது ஆன்மிக வறுமை, பழிவாங்கும் இழி குணம், மாற்றுக் கருத்துச் சொன்னவரைக் குறுக்கு வழிகளில் கருவறுக்கும் வக்கிர உணர்வு போன்ற சில விடயங்களை 2016ம் ஆண்டு நான் வெளியிட்ட வீடியோக் கிளிப்களிலும் குறிப்பிட்டிருந்தேன். அவருக்குச் சில அறிவுரை மடல்களையும் எழுதினேன். அவரது கடும் போக்கும் தவறான அணுகுமுறையும் இன்றுவரை மாறவில்லை.

அவரைச் சுற்றி கட்டமைக்கப்பட்டுள்ள மாயத் தோற்றங்களை அலட்சியப்படுத்திவிட்டு, என்னை வசீகரித்த அவரது நல்ல பணிகளை இரண்டு பாகங்களிலும் முடிந்தளவு எடுத்துக் காட்டி, அவரும் அவரது சிந்தனைக்குள் சிறைப்பட்ட சிலரும் தொடராகச் செய்து வரும் தவறுகளையும் வெளிப்படையாகப் பேசியுள்ளளேன்.

இன்னும் பல்வேறு அம்சங்களுடன் மூன்றாம் பாகத்தில் சந்திக்கும் வரை...

அன்புடன்,
எம்.ஏ. ஹபீழ் ஸலபி

# அறிமுகம்

P.ஜைனுல் ஆபிதீன் தமிழ் உலகில் நன்கு அறிமுகமானவர். உரைகள், விவாதம், எழுத்தாக்கம், பத்திரிகைத் துறை என்று பன்முக ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார். அல்குர்ஆன் விரிவுரை, அல்குர்ஆன் தமிழாக்கம், ஹதீஸ் தமிழாக்கம், ஹதீஸ் திறனாய்வு, பிக்ஹ் கலை, வரலாற்றுத் துறை, சமகால அரசியல் விமர்சனம் என பல்துறைகளில் அவரது புலமை வெளிப்பட்டுப் பாராட்டைப் பெற்றது போன்று, அவரது இயக்க நடவடிக்கைகள், ஒழுக்கம்,பத்வாக்கள் என்று அவர் வெளிப்படுத்திய புலமை சார்ந்த எல்லாத் துறைகளிலும் கடுமையான கண்டனங்களும் விமர்சனங்களும் எழுந்தன.

தமிழ் மொழி பேசும் முஸ்லிம்களிடம் காணப்பட்ட மூட நம்பிக்கை களை சொற்பொழிவுகள், துண்டுப் பிரசுரங்கள், கட்டுரைகள், நூல்கள், இஸ்லாம் ஓர் எளிய மார்க்கம், இணையதளம் என்று பல்வகை ஊடகங்கள் மூலம் அகற்றப் பங்களிப்பாற்றினார். இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம் என்ற நிகழ்ச்சி மூலம் சினேகபூர்வமாக அந்நிய மக்களிடம் இஸ்லாத்தின் தூதைக் கொண்டு சென்றார். இந்த நிகழ்ச்சி அப்போது விஜய் T.V. யில் ஒளிபரப்பானது. குமுதம் (22.03.2002) இதழில் “அரசு பதில்கள்” பகுதியில் இந்நிகழ்ச்சி பற்றிப் பாராட்டப்பட்டிருந்தது.

**கேள்வி :** வெள்ளிக்கிழமை தோறும் விஜய் T.V. யில் ஒளிபரப்பாகும் இஸ்லாமிய நிகழ்ச்சியைப் பார்ப்பதுண்டோ?

**பதில் :** எத்தனை அன்பாய் பதில் சொல்கிறார் அந்த அறிஞர். இடக்கு மடக்கான கேள்விகள் கேட்டாலும், நடுநிலையில் நின்று, புன்சிரிப்புடன் பதில் சொல்கிறார். மத நிகழ்ச்சியை எல்லோரும் பார்க்கும் படி செய்யும் திறமை எல்லோருக்கும் வராது.”

இதேபோல் சமூக நல சேவைகள், முதியோர் இல்லம், சிறுவர் இல்லம் என்று பல பணிகளை ஆற்றியுள்ளார். எனினும், அவரது எல்லாப் பணிகளிலும் இயக்க நலன் வெளிப்பட்டதை அவதானிக்க

முடிந்தது. அது அவருக்கு எதிரான விமர்சனங்களை வலுப்படுத்தியது.

மாற்று மதத்தவர்களையும் ஈர்க்கவல்ல வசீகரிக்கும் வார்த்தைகளால் இஸ்லாத்தின் தூதை முன்வைக்கச் சக்தி பெற்ற P.ஜைனுல் ஆபிதீன், இன்று கடுமையான விமர்சனத்திற்கும் கண்டனங்களுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகி, அவரது இயக்கத்திலிருந்தே நீக்கப்பட்டு, அசிங்கப்பட்டு நிற்பது வேதனைக் குரியது. அவர் மட்டுமல்ல, பொதுவாக தவ்ஹீத் இயக்க முகாம்களைச் சேர்ந்த பலரது அண்மைக்காலப் போக்கும் நோக்கும் பலத்த கண்டனத்தை தோற்றுவித்துள்ளன. தவ்ஹீத் அமைப்புகளில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள் பலரின் அக்கொள்கைக்கு மாற்றமான செயன்முறைகளும் தெளிவற்ற நடைமுறைகளும் கடுமையான விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளன. இயக்க உறுப்பினர்களும் அவர்களை வழிநடாத்தும் தலைமைகளும் இதுவிடயத்தில் கவனக் குவிப்பை மேற்கொள்ளவேண்டும். தீவிரமாகச் சுய பரிசோதனை செய்ய வேண்டிய முக்கிய பொறுப்பு இயக்க உறுப்பினர்களுக்கும் அவர்களை வழிநடத்தும் தலைமைப் பீடங்களுக்கும் உள்ளது. தர்பிய்யாக்கள் வழங்கப்பட்டு, பண்படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயத் தேவை அதிகம் உணரப்படுகிறது. எனினும், போதுமான அடைவுகளை இன்னமும் அடைய முடியாமல் இயக்கங்கள் இயங்கி வருகின்றன.

“தலைவரைப் பின்பற்றுங்கள் – ஒரு நவீன நீதிக் கதை” என்று ரெக்ஸ் அலன் ரெடிபர் குறிப்பிடுவது இன்றைய இவர்களின் நிலையை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

“ஒரு வீதியில் அணிவகுப்பு ஒன்று சென்று கொண்டிருந்தது. அதனைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்திலிருந்து ஒரு குரல் அலறுவது கேட்டது.

மடையர்களே! கவனமாக இருங்கள்! நீங்கள் பிழையான வழியில் செல்கிறீர்கள். இந்த வீதியில் நீங்கள் தொடர்ந்து செல்ல முடியாது. இதன் மறுமுனை உடைக்கப்பட்டுள்ளது. அணிவகுப்பில் சென்றவர்கள் தயங்கி நின்றனர்; கலவரமடைந்தனர். ஆனால், அதெப்படிச் சாத்தியமாகும்? என யோசித்தனர். அங்கே, கம்பீரமாக

வும் பெருமையோடும் அவர்களது அழகான தலைவர் சென்று கொண்டிருந்தார். அவர் கட்டாயம் சரியான பாதையில் தான் போய்க் கொண்டிருக்கிறார். பாருங்கள் எவ்வளவு அழகாக நடை பயில்கிறார்; எவ்வளவு கம்பீரமாக இருக்கிறார்; பாருங்கள்! ஆம்! நிச்சயமாக அவர் சரியான பாதையில் தான் செல்கிறார் என்று அவர்கள் சிந்தித்தனர்.

எனவே, அவர்கள் தொடர்ந்து அணிவகுத்துச் சென்றனர். அழகான தலைவர் சிறிது தயங்கினார்; கலவரம் அடைந்தார். ஆனால், இது எப்படிச் சாத்தியமாகும்? என அவர் யோசித்தார். யாருமறியாதவாறு பின்நோக்கிப் பார்வையை வீசினார். நான் சரியான பாதையில் தான் போய்க் கொண்டிருக்கிறேன். ஏனெனில், எத்தனை பேர் என்னைப் பின்தொடர்கிறார்கள் பாருங்கள். ஆம்! நிச்சயமாக நான் சரியான பாதையில் தான் போகின்றேன் என்று அவர் நினைத்தார். எனவே, அவர் (தொடர்ந்து அழிவை நோக்கி) அணி வகுத்துச் சென்றார்." (Training Guide for Islamic Workers)

இஸ்லாமியத் தலைமைகள் மதி நுட்பத்துடனும், திட்டங்கள் தீட்டி, தூர நோக்கோடும் செயற்பட வேண்டும். இன்று, இயக்கத் தலைவர்களும் அவர்களைப் பின் தொடர்வோரும் மேலுள்ள கதைப் பாத்திரங்கள் போல்தான் காணப்படுகின்றனர். சில வேளைகளில், தலைமைத்துவம் பின்தொடர்வோரைப் பின் தொடர்கிறது. எனவே, நாம் எப்போதும் எதனையும் ஆழமாகக் கவனிப்பதும், சிந்திப்பதும், மதிப்பீடு செய்வதும் அவசியமாகிறது. சரியானதைச் செய்வது நமது தனிப்பட்ட பொறுப்பு. உண்மையைத் துணிந்து கூறுவது ஒரு கண்ணாடிக் குவளையைப் போட்டு உடைப்பதற்குச் சமமானது. அதைப் போட்டு உடைக்கும் போது, சிலவேளை நமக்கும் அதன் சிதறல்களால் தாக்கம், காயம் என்பன ஏற்படலாம். அதற்குத் தயங்கக் கூடாது? கண்மூடித்தனமாகத் தலைமையைப் பின்பற்றவும் கூடாது. தம்மைப் பின்பற்றுவோரின் செயல்களுக்காகத் தலைவர்களுக்கு வெகுமதி களும் அதேபோல் தண்டனைகளும் வழங்கப்படும் என இஸ்லாம் குறிப்பிடுகிறது.

P.ஜைனுல் ஆபிதீனை கண்ணை மூடிக்கொண்டு ஒரு கூட்டம் தக்லீத் செய்கிறது. அவரை எதிர்க்கும் இன்னொரு பிரிவு மார்க்க அறியாமையிலும் பழைமைத்துவ மரபுவாதப் போக்கிலும் காணப்

படுகிறது. அவரையும் அவரது தவறான போக்குகளையும் தெளிவோடு எதிர்ப்பவர்கள் சொற்பமானவர்களே உள்ளனர். அல்லாஹ்வுடைய வேதத்தின் மீதும் இறுதி தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுடைய வாக்குகள் மீதும் எந்தப் பற்றும் அற்றவர்களாக அதிகமானவர்கள் காணப்படுகின்றார்கள். பள்ளிவாசல்களில் மஸாயில் ரீதியான கருத்தியல் முரண்பாட்டுகள் எழுந்து விட்டால் சமூக ஒற்றுமை, ஊர் நடைமுறை, மூத்த அறிஞர்களின் மரபார்ந்த வழிமுறை என்றுதான் வாதிடுகின்றார்களே தவிர, மார்க்க வழிகாட்டலுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தயக்கம் காட்டுகின்ற போக்கு அதிகமாகக் காணப் படுகிறது. சில இடங்களில் சுன்னாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற போக்கு மங்கி, தான் சார்ந்த இயக்கத் தலைமைகளின் கருத்துகளுக்கு முக்கியத்துவமளித்துவருகின்றனர். அல்லாஹ்வுடைய தூதருடைய பொன்மொழிகளை ஒரு பக்கமாக வைத்து விடுங்கள் என்று பகிரங்கமாக பள்ளிவாசலுக்குள் குரலை உயர்த்திப் பேசுகின்ற நிலையில் சில பாரம்பரியத் தவ்ஹீத்வாதிகள் கூட உள்ளார்கள் என்பது வேதனையான விடயம். இத்தகைய மிகப் பாரதூரமான, பயங்கரமான ஒரு சிந்தனை வறட்சியில் இன்று தவ்ஹீத் என்ற பெயர்ப் பலகை அடையாளங்களைக் தொங்கவைத்துக்கொண்டுள்ள சில பள்ளிகள் காணப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

P.ஜைனுல் ஆபிதீனிடம் பல தவறுகள் காணப்படுவது போன்று, அவருக்கு எதிரான முகாம்களிலுள்ள அமைப்புக்களிடையே பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அறிவு, பண்பாடு, நாகரிகம், கொள்கைத் தெளிவு போன்ற விடயங்களில் மிகவும் பின்தங்கிய ஒரு நிலையை அவதானிக்க முடிகிறது. பாரம்பரியமாகவும் பரம்பரைத் தவ்ஹீத்வாதிகளாகவும் இருந்து வருகின்றோம் என்ற செருக்கும் இறுமாப்பும் இருக்கின்றதே தவிர, கொள்கைப் பிடிப்பும் ஆழமான பார்வையும் தூரநோக்கும் விடயத் தெளிவும் இல்லாத, மிக மோசமான குறுகிய மனப்பான்மையுடன் நடைபோடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்கள் மார்க்க அறிவும் உலக அறிவும் போதுமான அளவு இல்லாத ஒரு சமூகமாக வளர்ந்து வருவது மிகவும் ஆபத்தானது. இவ்வாறு, இலங்கையில் காணப்படும் சில தவ்ஹீத் அமைப்புகளின் பலவீனங்களை P.ஜைனுல் ஆபிதீன் தனது தவறான கொள்கையை வளர்ப்பதற்குச் சாதகமானதாக ஆக்கிக் கொண்டார்.

துவக்க காலத்தில் தவ்ஹீத் பிரசாரம் எதிர்நோக்கிய பாரதூர மான எதிர்விளைவுகளை இன்று மார்க்க ரீதியான கருத்துக்களை உள்ளிருந்து சொல்லுகின்ற பொழுது, தவ்ஹீதின் காவலர்கள் என்று தங்களுக்குப் பெயர் சூட்டிக் கொண்டுள்ள சிலர் அதே கடந்த கால அநாகரிக, அராஜக வழிமுறைகளாலேயே பிரச்சினைகளை அணுகுகின்றார்கள். பொய் வழக்குப் போடுகிறார்கள்; வீடு தேடி வந்து ஆளைத் தாக்குகின்ற வன்முறைகளில் ஈடுபடுகின்றார்கள். மானத்தோடு விளையாடும் ஒற்றைப் பரிமாண, அவதூறுகள் நிறைந்த, எடிட் பண்ணப்பட்ட குறுந்தகடுகளைப் பள்ளி நிர்வாகம் மூலமே வீடுவீடாக வினியோகித்து, இரு பக்கப் பரிசீலனையற்ற, ஒரு பக்கச் சார்பான, பிரதேசவாத ஜாஹிலிய்யத்தையும் நயவஞ்சகத் தனத்தையும் வெளிப்படுத்தி வருகின்றனர். தான் சார்ந்த அமைப்பின் அறிஞர் பக்திக்கு ஆட்பட்டுள்ளார்கள். ஜும்ஆவிற்கு இரண்டு பாங்கு சுன்னா அல்ல என்ற போது, உங்களுடைய உஸ்தாத் சொல்லாத விடயங்களை நீங்கள் சொல்ரீங்களே! என்று என்னிடமே சில தவ்ஹீத் இயக்கவாதிகள் கேட்டனர். அல்லாஹ்வும் அவனது தூதரும் சொல்லியுள்ளார்களா என்று பார்ப்பதைவிட, தான் நேசிக்கும் அறிஞன் சொல்லியிருக்கின்றானா என்று பார்ப்பதே இன்று சிலரின் “தவ்ஹீத் கொள்கையாக” மாறியுள்ளது. இந்த வழிமுறை வழிகேடானது. இது மாற வேண்டும். அறிஞர் பக்தியை விட அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் பக்தி அதிகரிக்க வேண்டும்.

“உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தை, அவரின் பிள்ளைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக அன்பானவராகும் வரை அவர் (உண்மையான) இறை நம்பிக்கை யாளராகமாட்டார்” என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவித்தார்கள். (ஆதாரம் : புகாரி –15)

ஒரு காலத்தில் தவ்ஹீத் பிரசாரம் துவங்கப்பட்ட போது, என்னென்ன கொடுமைகள் எல்லாம் அது சந்தித்ததோ அதுபோன்ற, அதற்கு நிகரான, சில போது அவர்களை விஞ்சிய கொடுமைகளை இன்று சில குறும்புத்தி கொண்டோர் கொள்கையின் பெயராலேயே செய்து வருகின்றனர். கருத்தை கருத்தால் அணுகத் தெரியாத சில அறிவீனர்களும் ஒற்றுமைக் கோசமிடும் ஓடுகாலிகளும் நடுரோட்டில் நாகரிகம் தெரியாமல் சண்டித்தனம் செய்வதும், வீடு தேடிச் சென்று

ரவுடித்தனம் காட்டுவதும் இன்று இரண்டு குழுக்களிடமும் காணப்படும் பண்பாக உள்ளது.

முகநூலிலும், கள்ள வெப்சைட்டுகளிலும் இன்னுமுள்ள சமூக வலைத் தளங்களிலும் இத்தகையப் “பெண்மைப் பண்பு கொண்ட போராளிகள் தமது முகத்தை மறைத்துக் கோழைத்தன வீரியத்தைக்” காட்டி வருகின்றனர். ஸலாத்திற்குக் கூடப் பதில் சொல்லும் பண்பாடற்ற, நீண்ட குரோதத்தை வளர்த்து வரும் யூதப் பண்பையும் சிலர் வெளிப்படுத்துகின்றனர். ஜைனுல் ஆபிதீன் எப்படி தனக்கு எதிரான கருத்தை வெளிப்படுத்தியோரிடம் ஹிட்லரிஸத்தைக் கடைப்பிடித்தாரோ, சீடி வெளியிட்டு மானத்தோடு விளையாடினாரோ, அதே வழிமுறையை சில “தவ்ஹீத் இயக்கக் காப்பாளர்களும்” கடைப்பிடித்தமைக்குச் சான்றுகள் உள்ளன. கருத்தியல் ஜனநாயகம் என்பதே இவர்களிடம் காணக்கிடைக்கவில்லை. அந்தளவு தரம் தாழ்ந்த நடவடிக்கைகளை வெளிப்படுத்தியுள்ளனர். P.ஜைனுல் ஆபிதீன் கடைப்பிடித்த அநாகரிக வழிகளுக்கு நிகராக அவரை எதிர்க்கின்ற சிலரும் கடைப்பிடித்துள்ளனர்.

ஓர் ஆய்வு ரீதியான கருத்தை முன்வைக்கும் போது, தவ்ஹீத் என்ற போர்வையில் தெளிவற்று இருக்கின்றவர்கள் சிலர், அதை எதிர்க்க அநாகரிகமாக நடந்துகொள்வதை அவதானிக்க முடிகின்றது. ஒரு கருத்தை முன்வைத்ததற்காக ஊரைப் பிரித்த பழியையும் சுமத்துகின்றனர். பல்லாண்டுகளாக பலகூறாகப் பிரிந்து, கிழிந்து கிடக்கும் இவர்களது ஒற்றுமைக் கோசத்தைக் கேட்கும் போது வியப்பாக உள்ளது. இப்போக்கு மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. இவர்களிடம் பிரதேசவாதம் ஓங்கியுள்ளது. பீஜேவாதிகளும் பொலீஸ் நிலையத்தில் வாதாடும் போது கூட பிரதேசவாதம் பேசி, தலைகுனிவைச் சந்தித்தனர்.இந்த நாட்டில் சிங்கள சித்தாந்தத்தில் தீவிரப் போக்குடையோர் அனைத்து முஸ்லிம்களையும் “வந்தான் வரத்தான்களாக” சித்திரித்துக் கொண்டிருக்கும் போது, பல முஸ்லிம் பிரதேசங்களில் அதற்கு நிகரான பிரதேசவாத ஜாஹிலிய்யத்தை சிலர் கடைப்பிடித்து வருகின்றனர். பவ்த்த கடும்போக்காளர்களால் அனைத்து முஸ்லிம் களும் வந்தேறிகள் என்று பரப்புரை செய்யப்பட்டுவருவது இவர்க ளுக்குத் தெரியாதுள்ளமை ஆச்சரியமானதே! அதில் இவர்கள்

உள்ளடக்கப்படாத வேற்றுக் கிரகவாசிகள் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றார்களோ தெரியவில்லை.

P. ஜைனுல் ஆபிதீன், கருத்தியல் ரீதியாக மற்றவர்களை வெல்வதற்குப் பதிலாக, மானத்தோடு விளையாடி, அவர் தன்னுடைய இயக்கத்தை கட்டமைத்தார். இதே வழிமுறையை சில தவ்ஹீத் பள்ளி நிர்வாகங்களும் போலித் தவ்ஹீத்வாதிகளும் செய்துள்ளனர். இவ்வாறான, அநாகரிக அணுகுமுறைகளால் இவர்களுக்கும் P.ஜைனுல் ஆபிதீனுக்கும் பெரிய வேறுபாடுகள் இல்லை என்பது புலனாகிறது.

ஒரு கருத்து முன்வைக்கப்படும்போது, அதை நாகரிகமாகக் கலந்துரையாட தகைமையற்றோர்தான் குறுக்கு வழிகளைக் கைக் கொள்வர். தனக்குப் பிடிக்காத அல்லது தெரியாத இஸ்லாத்தின் சில கருத்துக்களைச் சொன்னதற்காக மார்க்கம் அல்லாத வகுப்புகளில் கூட கலந்து கொள்ளத் தடை விதித்துவிடுகின்ற போக்கும் சில பாமரத் தன்மை நிறைந்த பள்ளி நிருவாகிகளிடம் காணப்படுகிறது. ஒரு கருத்தியலை எதிர்கொள்ளத் திராணியற்றவர்கள் குறும் புத்தியை வெளிப்படுத்துகின்றனர். பிரதேசவாதத்தைக் கற்பித்து, பிரிவினையைத் தோற்றுவித்து, அவர்களே எல்லாவிதமான அநியாயத்தையும் செய்து விட்டு, அடுத்தவர்கள் மீது வீண்பழி சுமத்துகின்ற ஒரு மோசமான விரோதப் போக்குத் தொடர்கிறது. இந்த ஜாஹிலிய்யத் மாற வேண்டும். நபி (ஸல்) அவர்களை எதிர்த்து பத்ரில் போரிட்ட சில எழுத்தறிவாளர்கள் கைதானார்கள். அவர்களை நபியவர்கள் தனது தோழர்களுக்குக் கற்பிப்பதை ஈட்டுத் தொகையாக்கி, அதன் பின்னர் விடுதலை செய்தார்கள். இத்தகைய வரலாறு இவர்களுக்கு எப்படித் தெரிய நியாயம் இருக்கப்போகிறது. இஸ்லாமிய ஒழுக்க ஞானத்தை விட ஜாஹிலிய்யப் பண்புகள் அதிகமாகத் தெரிந்துள்ளது. எனவேதான், தகுதியுள்ளவர்களை பொறுப்புகளுக்கு நியமிக்குமாறு இஸ்லாம் வலியுறுத்துகிறது. அறிவீனர்கள் தலைமை ஏற்கும் போது, ஒரு சமூகமே தவறாக வழிநடாத்தப்பட்டு, பல இழப்புகளைச் சந்திக்க நேரிடுகிறது.

இதேபோல், மற்றொரு போக்கையும் இவர்களிடம் காணக் கூடியதாக இருக்கின்றது. பள்ளியை நிருவகிக்கும் பொறுப்புகளில்

செல்வந்தர்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றனர். பல்வேறு குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் பள்ளிகளை ஆக்கிரமித்துக் கொண்டு, படித்தவர்களுக்கும் மார்க்கம் தெரிந்தவர்களுக்கும் இடம் கொடுக்காமல் தடுத்து வருகின்றனர். பல வருடங்களாக இவர்களும் மார்க்க அறிவீனர்களாக இருந்த கொண்டு, சிந்திக்க மறுக்கும் அறிவீனமான ஒரு சமூகத்தையும் வளர்த்துக் கொண்டிருப்பது எதிர்கால இஸ்லாமிய உம்மத்திற்கு மிகப்பெரிய ஓர் ஆபத்தை விளைவிக்கும் என்பதை ஏனோ உணர மறுக்கின்றார்கள். இவ்வாறான, பலவீனமான விடயங்களை சரி செய்ய முயற்சி செய்வோரை விரோதிகளாகப் பார்க்க ஆரம்பித்துவிடுகின்றனர். ஸலாம் கூட சொல்ல மறுக்கின்றனர். இவ்வாறான, இறுகிய மனநிலைப் போக்கால், இயக்க கட்டமைப்பைத் தாண்டிய புலமை நிலையில் பலரால் பங்களிப்பு வழங்க முடியாமல் போயுள்ளமை துரதிஷ்டமே!

நவீன கொள்கை குழப்பம் என்ற உரையில் அப்பாஸ் அலி அவர்கள், பீஜே பற்றிக் குறிப்பிடும் போது, “அல்லாஹ்வின் தூதர் குறிப்பிட்ட ஹதீஸ்கள், நல்லறிஞர்களால் பல நூறு ஆண்டுகள் ஸஹீஹானது என ஏற்கப்பட்டு வந்தவற்றை அதில் குழப்பம் உள்ளது; இதில் அசிங்கம் இருக்கிறது என்று தவ்ஹீத், குர்ஆன் – சுன்னா என்ற பெயரில் நபி மொழிகள் பற்றிய தவறான நம்பிக்கையை மக்கள் மத்தயில் ஏற்படுத்திவருகின்றார்.

நான் நிராகரித்தவை ஹதீஸ்கள் இல்லை; நான் ஹதீஸ் என்றால்தான் அது ஹதீஸ் ஆகும். ஸஹாபாக்கள், தாபியீன்கள் தபவுத்தாபியீன்கள், நல்லவர்கள் ஹதீஸ் என்று நம்பியவற்றை, பலமான சாட்சிகளுடன் பதிவு செய்த ஹதீஸ்களை நான் நம்ப மாட்டேன் என்று பல ஹதீஸ்களை மறுத்து, அவற்றைக் கேலி செய்து, தன் மீது குருட்டு நம்பிக்கை வைத்துள்ள அப்பாவிகளை நம்பவைத்து, படுமோசமான, ஆபத்தான, குரோத உணர்வையும் இயக்க வெறியையும் ஊட்டி வளர்த்து வந்தவரின் உண்மை நிலையை அல்லாஹ் இப்போது வெளியே கொண்டுவந்து இருக்கின்றான்.

அல்லாஹ்வின் மார்க்கத்தில் சந்தேகத்தை உருவாக்கி, சஹாபாக்கள் மீது தவறான எண்ணத்தை ஏற்படுத்தி, அவர்கள் பற்றி

மக்கள் வைத்திருந்த நல்ல எண்ணங்களில் சிக்கலை உண்டாக்கி, தான் மட்டுமே நல்லவன் என்று வாதிட்டு வந்த அவருடைய இயல்பான பண்புகளும் தன்மைகளும் ஒன்றுவிடாமல் முழுமையாக வெளிப் பட்டுள்ளன. இன்று பாலியல் குற்றச்சாட்டில் சிக்கி தவிக்கிறார். அல்லாஹு‘தஆலா இன்று அவரை அடையாளப்படுத்தி இருக்கின்றான்.”

அப்பாஸ் அலி அவர்கள் ஏன் இவருக்கு இந்த இழிநிலை? என்ற ஓர் உரையிலும் P.ஜைனுல் ஆபிதீன் மீது கடுமையான கண்டனங் களை முன்வைத்துள்ளார்.

“அவர் மிகவும் ஆணவம் பிடித்தவர். எத்தனை பேருடைய மானத்தைக் கூறுபோட்டு, சந்தி சிரிக்க வைத்தார்; எத்தனை பேரை கண்ணீர் வடிக்க வைத்தார். பலருடைய மனைவிமாரை பொது மேடைகளில் இழிவுபடுத்தி, பொதுவெளிகளில் அசிங்கமாகப் பேசி இருக்கிறார். இவர் எப்படிப்பட்டவர் என்பதை அல்லாஹ் வெளிப்படுத்தி விட்டான். பலபேருடைய “பத்வா”தான் இன்று அவரைத் தலைகுனிய வைத்துள்ளது. அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான விவகாரங்களை நடுச்சந்திக்கு கொண்டு வந்து, அவமானப்படுத்திய இவருக்கு இன்று உலகில் யாருக்கும் ஏற்படாத இழிவும் இழப்பும் ஏற்பட்டுள்ளது. அடுத்தவர்களைக் கேவலப்படுத்தி வந்த அவரை, இன்று அல்லாஹ் கேவலப்படுத்திவிட்டான்.

கொள்கையே தலைவன் என்று கோசம் போட்டுக் கொண்டு, தலைவனே கொள்கை என்று வாழ்ந்து கொண்டிருந்தார்கள். உண்மையில் PJவின் கொள்கைகளையே அவரது சீடர்கள் தலைவனாகக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் உண்மையான கொள்கையை தலைவனாகக் கொண்டிருக்கவில்லை என்பது உலகறிந்த உண்மை.”

இவரது சூனியக் கருத்தால் பெருமளவு விமர்சனத்திற்கு ஆளானார். ஏகத்துவவாதிகள் மீதும் அவர் கொள்கை ரீதியான குற்றச் சாட்டுக்ளைச் சுமத்தினார். நான் மறுக்கும் ஹதீஸ்களை ஏனைய தவ்ஹீத்வாதிகள் ஏற்பதால் அவர்களைப் பின்பற்றித் தொழ முடியாது என்று பள்ளிக்குத் தொழுவதற்கு வருகை தராத பீஜே கருத்து வெளியிட்டார்.

அரபு நாடுகளில் குறிப்பாக சவூதியில் அந்நிய நாட்டவர்கள் தனிப் பள்ளி அமைத்துத் தொழ முடியாது. அங்கெல்லாம் தொழில் புரியும் ஜைனுல் ஆபிதீனின் சீடர்கள் அங்குள்ள பள்ளிகளில் அந்த இமாம்களைப் பின்பற்றித்தான் தொழுகின்றார்கள். இவர் மறுக்கும் ஹதீஸ்களை அங்குள்ள இமாம்கள் மறுக்கவில்லை. குறிப்பாக இவரது சூனிய நிலைப்பாட்டுக்கு எதிராக அவர்கள் உள்ளனர். இலங்கை, தென்னிந்தியாவில் போன்று இவரின் சீடர்கள் தனி ஜும்ஆவை அங்கு ஆரம்பிக்க முடியாது. அதனால், அங்குள்ள இமாம்களைப் பின்பற்றித் தொழுது வருகின்றனர். ஏன் இந்த இரட்டை நிலை என்று கேள்வி கேட்கப்பட்ட போது, நமது சூனியக் கொள்கைப் பிரசாரம் சென்றடைந்து, அதை ஏற்காதவர்களைத்தான் நாம் முஷ்ரிக் என்கின்றோம். அவர்களைத்தான் பின்பற்றித் தொழமாட்டோம் என்கின்றனர்.

P.ஜைனுல் ஆபிதீன் என்பவர் தனக்கு அரபு மொழி பேசத் தெரியாது என்று சவூதி அரேபிய அறிஞருக்கு எழுதிய கடிதத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இவருக்கு அரபு மொழியில் கடிதமும் எழுதத் தெரியாது. அதனால், கடாரில் பணிபுரியும் ஒரு மதனிதான் அரபுக் கடிதங்களை எழுதிக் கொடுக்கின்றார். இப்படி நிலைமை இருக்க, இவர் எப்போது அரபு மக்களுக்கு தனது ஹதீஸ் மறுப்புக் கொள்கையைக் கொண்டு செல்வார்? மறுமை நாள் வரும் முன்னர் இது சாத்தியமாகுமா?

இவரது கருத்திலுள்ள ஆபத்தான போக்குகளை நிதானமாக அவதானத்திற்குள்ளாக்கிப் பாருங்கள். 1440 ஆண்டுகளாக இஸ்லாம் உலகளவில் வாழ்ந்து வருகிறது. இத்தனை காலம் பாதுகாக்கப்பட்டது இஸ்லாம் அல்ல. நான் சொல்பவைதான் தூய இஸ்லாம். நான் சரி என்பவை மட்டுமே ஹதீஸ்கள். நான் மறுப்பவை ஹதீஸ்கள் அல்ல. எனது கருத்தை ஏற்காதவர்கள் முஷ்ரிக்கள் என்ற வாதம் புதிய நபித்துவ வாதத்திற்கு நிகரானது. மறைமுகமாக இவர் ஆபத்தான ஒரு வழிக்கு நகர்ந்து கொண்டிருக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

துன்யாவின் கவர்ச்சி உங்களைத் தடம் புரள வைக்கும்; அதனால், நான் ஏழ்மை நிலையில் வாழ்கின்றேன் என்றார் அன்று.

அரபுப் பணம் தவ்ஹீத் பிரசாரத்திற்கு பெரிய முட்டுக்கட்டை என்றார். அஹ்லுல் ஹதீஸ் இமாம் தாயத்து, தகடு எழுதி கொடுக்கின்றார்; பேய் விரட்டுகிறார். இவ்வாறு, அடிப்படையில் இருந்து விலகுவார்கள் என்று 2005 இல் இலங்கையில் உரையாற்றும் போது அவர் குறிப்பிட்டார். இவரது இயக்க வெறித்தனத்தாலும் வக்கிர நடவடிக்கையாலும் ஹாமித் பக்ரி போன்ற பலர் என்ன நிலைக்கு ஆளாகியுள்ளனர். அரபுப் பணத்தால் தஃவா செய்பவர்கள்தான் பல கூறாகப் பிரிந்துள்ளார்கள், உள்நாட்டு (அஜமி)ப் பணப் பிரியர்கள் பிரியமாட்டார்கள். அவர்கள் பரிசுத்தவான்கள் என்றெல்லாம் எத்தனை எகுத்தாளமாகப் பேசினார். “அஜமிப் பணத்தால்” வளர்ந்த இவரது இயக்கம் பல கூறாக எப்படிப் பிரிந்தது? அஜமிப் பணத்திற்கு அடிமைப்பட்ட இயக்கவாதிகள் எப்படி இவரைத் தூக்கி வெளியே போட்டார்கள்? எதற்காக வெளியே துரத்தினார்கள்?

இவரது இயக்கம் நற்பணி செய்யும் என்று மக்கள் நம்பி பணம் கொடுத்தார்கள். இயக்கம் ஓரளவு செல்வாக்குப்பெற ஆரம்பித்தவுடன் இவர்களிடம் இஸ்லாம் போதிக்கும் பல நற்பண்புகள் காணாமல் போய்விட்டன. நல்ல ஒழுக்கப் பண்புகளை மறந்து, இன்று பல கூறாகப் பிரிந்து, தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தஃவாவை விட அடுத்தவனை தாக்குகின்ற ஓர் இழிந்த போக்குத் தான் காணப்படுகின்றது. இனி ஒருவன் இவரின் பேச்சைக் கேட்டு தவ்ஹீதுக்கு வரமாட்டான். அந்தளவு இவரினதும் இவர் வளர்த்த குழுக்களினதும் நடவடிக்கை படு மோசமானது என மக்கள் வெறுக்க ஆரம்பித்துவிட்டனர். மார்க்க அறிஞர், இயக்கத்தின் ஸ்தாபகர் இவ்வளவு கீழ்த்தரமாக ஆபாசப் பேச்சு பேசுகின்றார் என்றால், இனி இவர் எப்படித் தவ்ஹீத் பிரசாரம் செய்ய முடியும்? எந்த முகத்தோடு வெளியே வரமுடியும் என்று மக்கள் கேட்கின்றனர். இவர் சொல்லும் தவ்ஹீத் எப்படி இனி மக்களிடம் போய்ச்சேரும்? அன்று அவர் மற்றவர்கள் மீது வைத்த விமர்சனங்கள் இன்று அவர் மீது எழுந்துள்ளன.

“ஸகரிய்யா ஸாஹிப் முதலில் சில குர்ஆன் வசனங்களை எழுதுவார். அடுத்து சில ஹதீஸ்களை எழுதுவார். இவர் குர்ஆன் – ஹதீஸ் அடிப்படையில் தான் இதை எழுதியுள்ளார் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்துவார். அதன்பிறகு சிறப்புகள்

என்ற பெயரில் தனது சொந்தச் சரக்குகளை விற்க ஆரம்பித்து விடுவார்” என்று பீஜே, “ஸகரிய்யா ஸாஹிப் பற்றி விமர்சனம் செய்துள்ளது போன்று, இவரும் இஸ்லாத்தை அதன் தூய வடிவில் சொல்ல வந்துள்ளேன் என்று பீடிகை போட்டு, மிகவும் தந்திரமாக எவருக்கும் சந்தேகம் வாரத வகையில் பல நச்சுக்கருத்துகளை மக்கள் மத்தியில் விதைத்துள்ளார். இஸ்லாத்தின், தவ்ஹீதின் பெயரால் பலரது மானத்தோடு விளையாடியுள்ளார். தவறான கருத்துக்களைப் பரப்பியுள்ளார்.

பெரிய பெரிய இமாம்கள் கூறியதையெல்லாம் தவறெனத் தெரிந்தால், விட்டு விட வேண்டும் என்று பிரசாரம் செய்தார். எவ்வளவு பெரிய இமாமும் தவறுக்கு அப்பாற்பட்டவர் அல்லர் என்பதைப் போதித்து வந்த இவர், உண்மையை ஏற்க வேண்டும் என்பதை விட, யாரும் இவரைக் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது என்பதிலும், இவரின் அறிவையும் ஆய்வையும் குறைத்து இடைபோட்டுவிடக் கூடாது என்பதிலும் உள்ள அக்கறையை வெளிப்படுத்திவருவது தெளிவாகத் தெரிகின்றது.

அன்று உமர் அலி, அவரையும் அவர் கொள்கை சார்ந்தோரையும் தவிர மற்ற உலக முஸ்லிம்கள் அனைவரையும் காபிர் என்று நிறுவுவதற்கு என்ன வாதங்களை முன்வைத்தாரோ, அதே வாதங்களை இன்று பீஜே முன்வைக்கின்றார். அதைப் புரிந்து கொள்வதற்காக, உமர் அலியுடன், பீஜே செய்த விவாதம் தொடர்பான கட்டுரையை இதில் தந்துள்ளேன்.

P.ஜைனுல் ஆபிதீன் அல்ஜன்னத்தில் எழுதிய இரண்டு விடயங்கள் தொடர்பாக அவருக்கு இலங்கையிலிருந்து எழுதப்பட்ட இரண்டு மடல்களுக்கு அவர் அளித்த பதில்களையும் நான் இதில் எடுத்துக்காட்டி இருக்கின்றேன். ஒரு மறுப்பு எப்படி அமைய வேண்டும். மறுப்புக்கு மறுப்பு எப்படி எழுதப்பட வேண்டடும் என்ற பாடத்தை இதில் கற்றுக் கொள்ளலாம். எனவே, இதனோடு தொடர்புபடுவேர் இதற்காகப் புண் படத் தேவையில்லை. ஏனெனில், இவை அப்போது அல்ஜன்னத்தில் வெளிவந்தவை. அத்தோடு, பத்திரிக்கைத் துறையில் உள்ளவர்கள் எப்படி ஒரு விடயத்தை அணுகவும் வாசகர் மடல் களுக்குப் பதில் அளிக்கவும் வேண்டும் என்ற பாடமும் அதில் உள்ளது.

முதல் பாகத்தில் சில அமைப்புகளுக்கும் இயக்கங்களுக்கும் பீஜே சார்பு நிலையில் அப்போது எழுதப்பட்ட மறுப்புக்களையும் நான் எடுத்துக்காட்டி இருந்தேன். அதற்காக யாரும் வருத்தப்படவில்லை. எனவே, நியாயமாக இதை நோக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மறுப்பு எழுதுகிற பொழுது எதிர்வாதம் எவ்வாறு வைக்கப்படும்? அதற்கு எவ்வாறு பதில் அளிக்க வேண்டும்? அறிவு முதிர்ச்சியோடு எவ்வாறு அணுக வேண்டும்? என்பதைப் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

P.ஜைனுல் ஆபிதீன் ஆபாச உரையாடலில் சிக்கிக் கொண்டது போன்று, அவரது இயக்கத்தில் வேறு சிலரும் பல்வேறு சமாச் சாரங்களில் சிக்கியுள்ளனர். அவர்களிடம் இப்போது ஜைனுல் ஆபிதீன் நடந்து கொள்ளும் முறை வேறு. இனி அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ள முடியாத நிலையில் இவர் சிக்கிக் கொண்டுள்ளார்.

ஜைனுல் ஆபிதீனை எதிர்ப்பவர்களிலும் இத்தகைய பாரதூரமான தீமைகளைச் செய்தவர்கள் சிலர் சிக்கினர். அவர்கள் பிரசாரப் பணியிலிருந்து முற்றாக ஒதுங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர்களின் ஆபாச உரையாடல்களைக் கள்ள முகவரிகளில் வெளியிட்டு, அவமானப்படுத்தினார்.இதற்காக சில இலங்கை முகவர்களையும் பயன்படுத்தினார்.

P.ஜைனுல் ஆபிதீன் பற்றிய விமர்சனங்களையும் சமகாலத் துக்குத் தேவையான அவரின் பொருளாதாரம் பற்றிய கோட்பாடுகள், பரிணாமவாதம், ஜிஹாத் பற்றிய கோட்பாடு, இயக்கங்கள் பற்றி அவர் கொண்டுள்ள நிலைப்பாடு, அவர் மேற்கொண்ட விவாதத்தின் தாக்கங்கள் பற்றிய சில விடயங்களையும் நான் எடுத்துக் காட்டி யிருக்கின்றேன். ஒரு மனிதனுடைய குறைகளை மாத்திரம் பேசுகின்ற விடயங்களை மையப்படுத்தி இருக்கக் கூடாது; நிறைகளும் சொல்லப்பட வேண்டும் என்பதற்காக வேண்டி, இரண்டு விதமான அம்சங்களையும் நான் இங்கே சுட்டிக் காட்டி இருக்கின்றேன்.

அத்தோடு, தவ்ஹீத் அமைப்புக்களிடமும் இயக்கங்களிடமும்

காணப்படும் சில குறைபாடுகளையும் விமர்சனத்திற்கு உட்படுத்தி யுள்ளேன். மாற்றப்பட வேண்டிய, எனது அவதானத்திற்குரிய பல அம்சங்களைச் சுட்டிக்காட்டி, எனது கோரிக்கையாக அவற்றை முன்வைத்துள்ளேன். சில அணுகுமுறைகளில் பீஜேவிற்கும் மற்ற தவ்ஹீத் வாதிகளுக்கும் வேறுபாடு தென்படவில்லை. இரு பக்கமும் நாகரிக வரம்பெல்லை மீறப்பட்டுள்ளதை வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளேன்.

இந்தியாவில் ஏற்பாடாகியிருந்த இஸ்மாயீல் ஸலபியின் மார்க்க உரை நிகழ்ச்சியை, P.ஜைனுல் ஆபிதீன் தனது இயக்கத் தொண்டனை வைத்தே தடைசெய்தார் என்ற புகார் எழுந்தது. இது அவரின் கோழைத்தனமாகப் பார்க்கப்பட்டது. இதே போன்ற ஒரு மருத்துவ ஆலோசனை நிகழ்ச்சியை நாம் ஏற்பாடு செய்த போது, உள்ளூர் தவ்ஹீத்வாதிகளில் ஒரு பிரிவினர் பொலீஸை அழைத்து வந்து தடை செய்தார்கள்; பல இடையூறுகளை ஏற்படுத்தினார்கள். ஒரு தடவை அனுமதி அளித்துவிட்டு, பின்னர் நிகழ்ச்சியும் தடைசெய்தானர்.

விஞ்ஞான வகுப்பிற்கு வரும் மாணர்களுக்குத் தொழ ஏற்பாடு செய்யப்பட்ட கட்டடத்தை அநாவசியப் பள்ளி என்று பிரதேச செயலகத்திலும் பவ்த்த விகாரையான பன்சலையிலும் முறைப்பாடு செய்து, வழக்கும் தொடுத்து, பல இலட்சம் ரூபாவையும் கால நேரத்தையும் நாசம் பண்ணிய பயனற்ற வேலையையும் செய்தனர். இதனால், பின்னர் ஏற்படப் போகும் பின்விளைவுகளைப் பற்றி கொஞ்சமும் சிந்திப்பதில்லை. இந்த சந்தர்ப்பத்தைப் பயப்படுத்தி பீஜேவாதிகள் அந்த நிலையத்தையும் தனியாள் உடமைகளையும் அபகரித்துக் கொண்டனர். பல தடவைகள் கோரிக்கை வைத்தும் மீள ஒப்படைக்காமல், வைக்கோலைக் காவல் புரியும் ஐயறிவுக் காவலாளி போன்று அவர்களும் பயன்படுத்தாமல் மற்றவர்களுக்கும் இடம் விடாமல் உள்ளனர்.

இனவாத உணர்வுள்ள அந்நியனிடம் சென்று போட்டுக் கொடுப்பது, தப்பான எண்ணங்களை ஏற்படுத்துவது, மொட்டை நோடிஸ்கள் வெளியிடுவது பிரதேசவாதம் பேசுவது என்பன கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும். சில பள்ளி நிர்வாகிகளை

பின்னே இருந்து சிலர் தங்கள் சுயநலனிற்காக இயக்கி, இலாபம் அடைகின்றனர். இவ்வாறான, சிலரின் தவறான அணுகு முறைகளின் விளைவுகள் ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் அந்நிய மக்களின் நடவடிக்கைகளில் பிரதிபலித்தது. மற்றவர்களுக்கு எதிராக முற்பகல் செய்யும் விவகாரங்கள் பிற்பகல் செய்தவர்களுக்கே வினையாக வந்து விடும் என்பதை உணர வேண்டும். இன்னும், இது போன்ற பல அநியாயங்கள் மனதில் கனத்துக் கொண்டிருக்கின்றன. அவை வெளிப்படையாகப் பேசப்பட வேண்டிவை.

P.ஜைனுல் ஆபிதீனின் தவறுகளை மட்டும் விமர்சிப்பதில் நியாயமில்லை. தவறுகள் எங்கிருந்து வந்தாலும் அவை விமர்சிக்கப்பட்டு, திருத்தப்பட வேண்டும். தவ்ஹீத்வாதிகள் தங்கள் தவறுகளைத் திருத்த வேண்டும். ஏனைய அமைப்புகளும் இயக்கங்களும் வஹிக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஒற்றுமையுடன் சிந்தித்து செயற்பட வேண்டும் என்ற காரணத்திற்காகவே நான் அவதானித்த பாரிய சில தவறுகளை எழுதியுள்ளேன். இதற்காக யாரும் வருத்தப்படத் தேவையில்லை. சுய பரிசீலனை செய்து, திருத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

எனவே, ஏகத்துவவாதிகள் தங்கள் தவறுகளை விட்டுத் திருந்த வேண்டும். எல்லா நிலைகளிலும் இஸ்லாம் போதிக்கும் அழகிய வழிமுறைகள் மூலமே பிரச்சினைகளை அணுக வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். பீ.ஜைனுல் ஆபிதீன் வேகமாக வளர்ந்து வந்தார்; அதே வேகத்தில் விழுந்துவிட்டார். ஏகத்துவப் பிரசாரம் மிகவும் திட்டமிட்ட முறையில் அவதானத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். P.ஜைனுல் ஆபிதீனும் இன்னும் சிலரும் தொடராக விட்ட பாரதூரமான தவறுகளை, மற்ற தவ்ஹீத்வாதிகள் விடக் கூடாது என்ற ஆதங்கத்தினாலேயே சில விடயங்களைக் குறிப்பிட்டுள்ளேன். அவற்றை விமர்சனங்களாகக் கொள்ளாமல் அறிவுரையாக மட்டும் எடுத்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.

# கோட்பாடுகள்

கொள்கையும் கோட்பாடுகளும்

பொருளாதாரக் கோட்பாடு

பரிணாமவாதக் கோட்பாடு

ஜிஹாத் பற்றி கோட்பாடு

வெளிநாட்டு நிதிக் கொள்கை

இயக்கங்கள் பற்றிய நிலைப்பாடு

# கொள்கையும் கோட்பாடுகளும்

P.ஜைனுல் ஆபிதீனின் கொள்கை ஆரம்பத்தில் அல்குர்ஆனும் சுன்னாவும் மட்டும் என்றிருந்தது. வஹீ மட்டுமே இஸ்லாம் என்பதை போதித்த அவர், பின்னர் தனது சுய விளக்கங்களை புகுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறார். அல்லாஹ்வைப் பற்றியும் அவனது வல்லமை, பண்புகள் என்பன பற்றியும் எளிமையாக விளக்கிய அவர், அல்குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் சொல்லப்பட்டுள்ள அல்லாஹ்வின் பண்புகளில் சிலவற்றிற்கு மாற்று விளக்கம் கூறினார் என்றும் மலக்குகள் விடயத்திலும் இவரது சில கருத்துக்களில் தவறான அணுகுமுறை உள்ளதாக விமர்சனங்கள் எழுந்தன.

இதனால், அவரது அல்லாஹ் பற்றிய அகீதாவில் சில விடயங்களில் அஷ்அரிய்யாக்களின் போக்கு வெளிப்படுவதாகவும் இன்னும் சில விடயங்களில் முஃதஸிலாக்களின் போக்கு வெளிப்படுவ தாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. அத்தோடு, மலக்குகள் விடயத்திலும் இஸ்லாமிய அகீதாவிற்கு மாற்றமாகப் பேசியுள்ளதாகவும் சில மார்க்க அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அல்லாஹ் தன் மீது ஆற்றல் பெற மாட்டான் என்று யூனுஸ் நபி எண்ணிக் கொண்டு, கோபத்துடன் போனார் என்று ஓர் உரையில் குறிப்பிடுகின்றார். ஒரு நபி இப்படி அல்லாஹ்வின் சக்தியை குறைத்து மதிப்பிடுவாரா? என்று ஜைனுல் ஆபிதீனின் கருத்துக்களுக்குக் கண்டனம் எழுந்தது. இதன் மூலம் நபிமார்கள் தொடர்பான இஸ்லாமிய அகீதாவிற்கு மாற்றமான கருத்தை வெளிப்படுத்தி யுள்ளார். இறை நம்பிக்கை சார்ந்த விடயங்களில் தெளிவற்ற போக்கு அவருக்கு இருந்துள்ளதால்தான் சில விடயங்களில் தடுமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்று மறுப்புகளும் வெளியிடப்பட்டன.

இதேபோல், யூஸுஃப் நபி, தாவூத் நபி, மூஸா நபி போன்ற சில நபிமார்கள் விடயத்தில் அவர் முன்வைத்த சர்ச்சைக்குரிய கருத்துக்கள் அவரது நபிமார்கள் பற்றிய அகீதாவில் தெளிவற்ற போக்கைப்

பிரதிபலிப்பதாக கருத்துக்கள் வெளியிடப்பட்டன. அத்தோடு வழிகெட்ட சில கொள்கைப் பிரிவினரின் தவறான கொள்கைகைகளை முழுமையாக அல்லாமல் சிறிதளவு பிரதிபலித்தார் என்றும், அதனாலேயே முன்னைய நல்லறிஞர்களின் அகீதாவிலிருந்து விலகிப்போனார் என்றும் அவரது முரண்பட்ட புதிய போக்குகளின் மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அதுமாத்திரமன்றி, அந்நியப் பெண்ணுடன் நபியவர்கள் தனித்திருந்தார்களா? என்ற சர்ச்சையில் ஈடுபட்டு வந்த PJவின் குழு, ஒரு பெண்ணின் மடியிலே ஓர் ஆண் சயனித்திருப்பது போன்று ஏகத்துவம் மாத இதழில் படம் ஒன்றை வெளியிட்டது. இதை ஏன் வெளியிட்டனர்? இது சித்திரித்தது யாரை? ஏன் அந்த இதழ் கண்டனத்திற்கு உள்ளானது? ஏன் அப்பக்கத்தை அகற்றிவிட்டு விற்பனை செய்தனர்? எனினும், பல இதழ்கள் மக்களைச் சென்றடைந்துவிட்டன.

2017களில் ஜைனுல் ஆபிதீன் ஓர் அந்நிய பெண்ணுடன் ஆபாசப் பேச்சில் ஈடுப்பட்டதாகக் குரல் பதிவுகள் வெளிவந்தன, அவை விவாதத்தையும் சலசலப்பையும் தோற்றுவித்தன. அவரே அந்த உரையாடலை தான் மேற்கொண்டதாக ஒத்துக் கொண்டதால், அவரது ஜமாஅத் அவர் மீது நடவடிக்கை எடுத்தது. இதை அவர்களது இணையதளம் பகிரங்கமாக அறிவித்தது. அந்த ஆபாச உரையாடல் நித்தி, பிரேமாநந்தா போன்ற ஆபாச சாமிகளையே விழுங்கிவிடும் அளவு படு கேவலமானது; பயங்கரமானது என்று அவரது முன்னாள் சகாக்கள் குமுறினர். இவர்கள் வெளியிட்ட கார்டூன் போன்று, செம ஸ்பீடான அந்த ஆபாச உரையாடலை சித்திரிக்கும் ஜைனுல் ஆபிதீனை கார்டூன் வடிவில் வெளியிட்டால், அதை அவர் பொருந்திக் கொள்வாரா என்று இப்போது அவரது முன்னைய முகாமிலிருந்து கேள்வி எழுப்பப்படுகிறது.

அதே போன்று, “ஹதீஸ் மறுப்பு ஓர் இறை நிராகரிப்பு” என்று தலைப்பிட்டு உரையாற்றிக் கொண்டே, அவர் முன்னர் ஹதீஸ் என்று ஒத்துக் கொண்ட சிலவற்றை பின்னர் ஹதீஸ் இல்லை என்று மறுத்தார்.

சமகாலத்தில் அனைத்துத் தவ்ஹீத் அமைப்புகளும் அனைத்து அறிஞர்களும் ஏன் அவர் உருவாக்கிய ஆலிம்களே அவரை வழிகேடன், பொய்யன், மாற்றி மாற்றிப் பேசுபவன் என்று உதறித் தள்ளிய பின்னும், “தான் மட்டுமே நேரான தவ்ஹீத்வாதி” என்று அவர் புலம்பிக் கொண்டுள்ளார்.

வரலாற்றில் தோன்றிய நல்லறிஞர்கள், ஸஹாபாக்கள் மீது மிகுந்த அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்தியுள்ளார்கள். அவர்களது காலத்தில் நடந்த சில கசப்பான வரலாற்று நிகழ்வுகளை அணுகுபவர்களிடம் அது ஓர் இரத்தம் தோய்ந்த வரலாறு. அல்லாஹ் நமது கரங்களைப் பாதுகாத்தவிட்டான். ஏன் நாக்கைப் போட்டு அதை நக்குகின்றீர்கள்? என்று கண்டித்தார்கள். ஆனால், ஜைனுல் ஆபிதீன் சில போது, ஸஹாபாக்களைக் கொச்சைப்படுத்தியுள்ளார். அல்லாஹ் பொருந்திக் கொண்ட ஸஹாபாக்கள் மீது மதிப்பை குறைக்கும் வகையில் சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தினார். அந்த ஸஹாபிக்கு இது விளங்கியிருக்குமா?, அது தெரியுமா? என்றெல்லாம் நாவடக்கமின்றி தவறான விமர்சனங்களை முன்வைத்தார் என்று கடுமையாக கண்டிக்கப்பட்டார். ஸஹாபாக்களைப் பின்பற்றக் கூடாது என்று வலுவாகப் பிரசாரம் செய்த அவர், தனது விளக்கத்தையே சரி என்று வாதிட்டுவந்தார். சில சந்தர்ப்பங்களில் ஸஹாபாக்களின் நடை முறைகளையும் நல்லறிஞர்களின் கருத்துக்களையும் ஆதாரமாகக் காட்டினார் என்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

சில மார்க்க விடயங்களை அவர் விளங்கிய மாதிரியே ஏனையோரும் விளங்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அவருக்கு முரண்பாடாகத் தெரிந்த ஹதீஸ்களை மறுத்தார். அதை அவரது இயக்கத்தின் கருத்தாக மாற்றினார். அரபி, மற்றும் அஜமிப் பணத்தில் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்த புலமையற்ற அவரது இயக்கப் பிரசாரகர்களை அதை ஏற்கும் நிர்ப்பந்த நிலையை உண்டாக்கினார். ஒற்றை மனிதனுக்குக் கட்டுப்படுவதுதான் மார்க்கம் என்ற மிகவும் வழிகெட்ட ஷீஆக்களின் கைஸானிய்யாக் குழுவின் கோட்பாடு போன்று, அவர் எதை ஹதீஸ் என்கிறாரோ அதை ஏற்கவும், அவர் மறுப்பதை அவர்களும் மறுக்கவும் ஆரம்பித்துள்ளனர். இதற்குச் சிலர் முரண்பட்டபோது, அவர்களை இயக்கத்தை விட்டும் நீக்கினார். அவர்கள் மீது பொய்க் குற்றங்களை சுமத்தி, மக்கள் மத்தியில்

தப்பெண்ணங்களை ஏற்படுத்தினார். இதற்காக இணையம், சமூக வலைத்தளங்களை அதிகளவு பயன்படுத்தினார். இவரது இந்தப் போக்குக் காரணமாக நன்கு படித்த, பட்டம் பெற்ற, அரபி மொழிப் புலமையும் ஆய்வுத் திறனும் உள்ளவர்கள் ஆரம்பத்திலேயே அவரை விட்டு நீங்கிவிட்டனர் என்று சில கட்டுரைகள் கூட வெளியாகின. "இவரைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று பத்து ஆண்டுகளுக்கு முன்னரே சில இணையத் தளங்களில் உரைத் தொகுப்பொன்றும் உலாவியது.

P.ஜைனுல் ஆபிதீன் முறைசார் கற்கை நெறியைப் பெற்ற, இஸ்லாமியப் பின்னணியைக் கொண்ட ஒரு நெறிப்படுத்தப்பட்ட அறிஞர் அல்லர் என்பதை அவர்கள் ஆரம்பத்திலேயே புரிந்து தூரமாகிவிட்டனர். சுயமான ஆய்வும் சிந்தனைத் திறனுமற்ற ஒரு சிலர் மட்டும் அவருடன் எஞ்சியுள்ளனர் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். சில தக்லீத்வாதிகள் அவரது எழுத்தையும் இன்னும் சில அறிஞர்களது எழுத்துக்களையும் உரைகளையும் கொப்பியடித்து எழுதியும் பேசியும் வருகின்றனர். இவ்வாறான, இழிந்த நடவடிக்கை தொடர்பாக ஏகத்துவ இதழிலேயே ஷம்சுல் லுஹா எழுதியும் இருந்தார். இதை ஒரு விவாதத்தில் நஸ்ரி ஸலபி எடுத்துக் காண்பித்து, தக்லீத்வாதிகளை வாயடைக்க வைத்தார்.

நபி (ஸல்) அவர்களிடம் பாடம் கற்ற ஸஹாபாக்களுக்கு மத்தியில் சில கருத்து முரண் இருந்ததாக வாதிட்டார். பல சட்டங்கள் தெரியாமல் இருந்தனர் என்று நையாண்டி செய்தார். ஆனால், அவரது இயக்கவாதிகள் மட்டும் ஒத்த கருத்தில் உள்ளதாகப் பறைசாற்றினார். இந்த நிலை ஒற்றை மனிதனுக்குக் கட்டுப்படும் தக்லீதினால் மட்டுமே சாத்தியமானது. இது, தரீக்கா, ஷைக், முரீது, மத்ஹப், ஷீஆக் கோட்பாடுகளில் மட்டுமே சாத்தியமானது. அந்த வழிகெட்ட போக்கை இவர் தனது இயக்கத்திற்குள் அமுல் படுத்தியுள்ளார் என்றும் இது அவரது ஆணவப் போக்கையும் முரண்பட்ட நிலையையும் எடுத்துக்காட்டுகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. P.ஜைனுல் ஆபிதீனிடம் ஒரு நல்ல அறிஞனுக்குரிய இலக்கணமும் இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியப் பின்னணியும் போதுமான அளவு வெளிப்பட வில்லை என்று பல ஆண்டுகளுக்கு முன்னரே விமர்சனங்கள் எழுந்தன.

அவர் இயக்க ரீதியாக செயற்பட ஆரம்பித்த போது, இயக்கத்திற்கு என்று சட்டங்களை உருவாக்கினார். அந்த சட்ட விதிகளை இஸ்லாத்தின் மூலாதாரங்கள் போன்று அவரது இயக்கவாதிகள் பின்பற்ற ஆரம்பித்தனர். மாற்றுக் கருத்துச் சொல்லப்பட்டபோது, இது ஜமாஅத் நிலைப்பாடு என்று சுதந்திரமான சிந்தனைக்கும் ஆய்வுக்கும் இடமில்லாமல் அவரது கருத்தை வலுக்கட்டாயமாகத் திணித்தார்.

பாலியல் ரீதியான குற்றவியல் விடயங்களுக்கு இந்தியா, இலங்கை போன்ற பல நாடுகளில் இஸ்லாமியத் தண்டனையை வழங்க முடியாது. எனவே, இவரது இயக்க அங்கத்தவர்கள் பாலியல் சேட்டையில் ஈடுபடும் போது, இவரது இயக்க சட்ட விதியில் அதற்கான ஷர்த்துகள் ஆரம்பத்தில் போதுமானதாக இருக்கவில்லை. அல்தாபி மீதான நடவடிக்கையின் பின்னர் அந்த சட்டத்தை மாற்றினார்கள். அல்தாபிக்கு வைத்த பொறியில் P.ஜைனுல் ஆபிதீன் வசமாகச் சிக்கிக் கொண்டார் என்று அவரது முன்னாள் சகாக்கள் எள்ளி நகையாடு கின்றார்கள். பலரது மானத்தோடு விளையாடி, ஸஹாபாக்களையும் தூற்றியவருக்கு ஏற்பட்ட இழி நிலையைப் பார்த்தீர்களா என்று இன்னும் சிலர் கருத்து வெளியிடுகின்றனர்.

இயக்கத்தை வளர்க்க நபியின் மீதும் பொய் சொல்லத் துணிந்தார். அவரது இயக்க மாநாடுகளுக்கு 500 பேர் வந்தால், 5000 பேர் கலந்து கொண்டதாக, மிகைப்படுத்திப் பொய் சொல்வதாக அவரே ஓர் உரையில் குறிப்பிட்டு, தனது பொய்களுக்கு நபியைக் கூட ஆதாரம் காட்ட முற்பட்டார். இதன் மூலம் தனது தரங்கெட்ட இயக்கக் கொள்கையை வெளிப்படுத்தி, நபியவர்கள் யுத்த தந்திரத்தை கடைப்பிடித்த நிகழ்வை, தவறான முறையில் சித்திரித்து, தனது தரங்கெட்ட இயக்க செயற்பாட்டிற்கு, அதை உதாரணம் காட்டி, தூய நபியின் கண்ணியத்தை சிதைக்க முனைந்தார் என்று அவர் மீது விமர்சனம் கடுமையானபோது, மாற்று விளக்கம் சொல்லி மழுப்ப ஆரம்பித்தார். தனது இயக்க நிலைப்பாட்டை நிலை நிறுத்த எந்த ரேஜ்சுக்கும் செல்லும் தன்மையுள்ளவர் இவர் என்பதை அவரது வாயாலேயே வெளிப்படுத்தினார் என்று பல கண்டனக் குரல்கள் வலுவாக எழுந்தன.

40 ஆண்டுகள் தொடராகப் பல நூறு உரைகளை ஆற்றினார்; கட்டுரைகளை எழுதினார். நூல் வெளியீட்டில்தான் அவரது பிழைப்பும் தங்கியிருந்தது என்பதை அவரே வெளிப்படுத்தியுமுள்ளார். மூன் பப்ளிகேஷன் மூலம் அவரது நூல்களை வெளியிட்டு, விற்பனை செய்து, பொருள் ஈட்டினார். மற்றவர்கள் நூல்கள் வெளியிட்டு, விற்பனை செய்தால் அதை அவரது பரிவாரம் குறைகண்டது. நூல் வியாபாரம் பண்ணுவதாகக் கூக்குரலிட்டது.

அவர் சொல்வதுதான் மார்க்கம். அவருக்குத் தவறு வருமா என்றெல்லாம் சிலர் சிந்திக்கவே முற்பட்டனர். இவரைவிட அறிஞர் இல்லை என்பது போல் சிலர் வாதிட்டனர். ஜைனுல் ஆபிதீன் எதை ஹதீஸ் என்று கூறுகின்றாரோ அதுவே அவரது முகல்லிதுகளுக்கு ஹதீஸாகத் தெரிந்தது. அவர் மறுப்பவற்றை முகல்லிதுகளும் மறுத்தனர். இது ஷீஆக்களின் இமாமியத்தை கோட்பாட்டைவிட ஆபத்தான போக்காக வளர்வதாக சில அறிஞர்களால் ஆரம்பத்திலேயே எச்சரிக்கப்பட்டது.

அவரது பல ஆக்கங்களில் முன்னைய அறிஞர்களின் பல கருத்துக்களை தனது கருத்துப் போன்று எளிய தமிழில் முன் வைத்தார். பாமர மக்கள் அவற்றை ஜைனுல் ஆபிதீனின் கருத்தாகவே நினைத்தனர். இவரது இலக்கியத் திருட்டு அரபி மொழி அறிந்தவர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. ரிஸ்வான் மதனி போன்றவர்கள் இவரது இலக்கியத் திருட்டைக் கண்டுபிடித்து கண்டனம் வெளியிட்டனர். இவரை முஜத்திதாகப் பார்க்க முடியாது. இவரும் ஒரு முகல்லித்தான். எனினும், இவருக்கும் முகல்லிதுகள் உள்ளனர் என இணையக் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

**வெளிநாட்டு நிதி :** 2005 களுக்கு முன்னர் அரபு நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியினால் நடந்த மாநாடுகள், விவாதங்களில் பங்கேற்றார். அதைப் பெற முடியும் என்று கருத்து வெளியிட்டார். அண்மைக் காலங்களில், அரபிப் பண அடிமைகள் என்று அவரது இயக்கம் சாராத தவ்ஹீத்வாதிகளை அவரும் அவரது முகல்லிதுகளும் தூற்றி வருகின்றனர். அவரது பல தாயிகளுக்கு அரபி தெரியாது. அதனால், அரபியிடம் பணம் பெறமுடியாதே என்ற ஏக்கத்தில் இந்தப் பழம் புளிக்கும் என்ற நரிக் கோட்பாட்டைக் கடைப்பிடித்துக் கொண்டு,

அஜமிப் பணக்காரர்களுக்குப் பல்லிளித்துப் பணம் பெற்றனர். எப்படியோ பணம் பெற்று, தஃவா செய்துகொண்டு, அவர்கள் மட்டும்தான் தூய தஃவா செய்வதாக அடுத்தவர்களைத் தூற்றிக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் சிலர் அரபிப் பணத்தை மற்ற தவ்ஹீத் மவ்லவிகள் மூலம் பெற்றும் வருகின்றனர். இவரது இயக்கம் அரபுப் பணம் பெற்றுள்ளது. அதற்கான சான்றுகளும் உள்ளன. எனினும், அரபுப் பணத்தால் தஃவா பாதிக்கப்படுவதாகவும் பல பிரிவுகள் உண்டாகிவிட்டதாகவும் தான் இயக்கும் இயக்கம் வலுவானதாக இருப்பதற்கு வெளிநாட்டு நிதிப் புறக்கணிப்பும் ஒரு காரணம் என்றும் பரப்புரை செய்து, அப்பாவி மக்களை நம்பவைத்தார். அதுவெல்லாம் வெற்றுப் பிரசாரம் என்பதை இன்று மக்கள் புரிய ஆரம்பித்துவிட்டனர்.

இலங்கையில் இவரது கொள்கைச் சுவட்டில் இயங்கும் இரண்டு வெவ்வேறான நிருவாகத்தின் கீழ் இரண்டு சிறிய Groups உள்ளன. பிரிவினையின் பின்னர், கல்முனையிலுள்ள பள்ளியை யார் ஆக்கிரமிப்பது என்ற தெருச் சண்டையில் ஈடுபட்டு, புனிதமான வெள்ளிக்கிழமையன்று யார் ஜும்ஆ செய்வது என்ற சர்ச்சையில் ஒரே மிம்பர் மேடையில் இரண்டு குழுக்களின் பிரசங்கிகளும் ஏறி, அமர்ந்து மிம்பரில் சண்டை போட்டுக் கொண்ட காணொளி, “அண்ணனின் அஜமிப் பண அடிமைகளின் அவலங்களைப் பாருங்கள்” என்ற நகையாடலுடன் சமூக வலைத்தளங்களில் வைரலாகியது.

தூய்மைவாதம் பேசி, “அஜமிப் பணத்தால்” இயக்கிய அவரது இயக்கம் இன்று எத்தனையாகப் பிரிந்து, தங்களுக்குள் மோதிக் கொள்கின்றன என்பதை அனைவரும் பார்த்துக் கொண்டுள்ளனர். லுஹா,அல்தாபி,பாக்கர், NTF என்று எத்தனை உடைவுகளும் ஓட்டைகளும் ஏற்பட்டுள்ளன.

எனினும், அரபு நாட்டு நிதியால் இயங்கும் பல இயக்கங்கள் மீது சில விமர்சனங்கள் உள்ளன என்பதை நான் மறுக்கவில்லை. எனினும், அவை பல கல்விக் கூடங்களையும் பல நற்பணிகளையும் செய்து வருகின்றன. ஜைனுல் ஆபிதீனின் இயக்கம் எங்கும் அந்த அமைப்புகளின் தரத்திற்கு உயரவில்லை. அரபு நாட்டு நிதி பெறும் அனைவர் மீதும் விரல் நீட்டி குற்றம் சுமத்தினார். தானும் தனது

இயக்கமும்தான் உலகிலேயே பரிசுத்தவான்கள் என்று குரல் உயர்த்திப் பேசிவந்தார். அந்த எச்சில் காய முன்னர் அவரது உருவாக்கமான அஜமிப் பண நிறுவனங்களின் தில்லுமுல்லுகளை அவரே தற்போது அம்பலப்படுத்துகின்றார். மாறி மாறி இவர்கள் வசைபாடுவதையே இப்போது இலக்காகக் கொண்டுள்ளனர். இதனால், "வெளிநாட்டு நிதியும் வேதம் ஓதும் சாத்தான்களும்" என்று மற்றவர்களால் எள்ளி நகையாடும் நிலை தோன்றியுள்ளது.

அவர் உருவாக்கிய தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்திற்குள் இருந்த ஒரு சிறு பரிவாரம் P.ஜைனுல் ஆபிதீனைக் காப்பாற்றி வந்தது. எனினும், அவரது முன்னைய இயக்கத்திற்குள் தொடக்கத்திலிருந்த பலர் P.ஜைனுல் ஆபிதீனை விரும்பவில்லை என்பது இப்போது வெளிப்படுத்தப்படுகிறது. அவர் தவறை ஒப்புக் கொண்டு பலம் குன்றியதால்தான் இலகுவாக நீக்கிவிட்டு, அந்த இயக்கம் பயணத்தைத் தொடர்கிறது. அவர் பலமுடனிருந்திருந்தால் முட்டி மோதியிருப்பார். ஆனால், 12 ஆண்டுகள் பலசாலியாக பவனி வந்த அவர், சிறிது காலம் வெட்கித்து ஒதுங்கி வாழ்ந்தார். எப்படியோ இப்போது மீண்டும் வெளியே வர முயற்சிக்கின்றார். அதற்கு இடம் வழங்கக் கூடாது என்றும் கண்டனக் குரல்கள் உயர்கின்றன. கடந்த காலங்களில் விழுந்த போதெல்லாம் எழுந்தார். அந்த தைரியம் அவரிடம் இருந்தது. ஆபாச ஆடியோவின் பின்னர் அந்த தைரியம் தொடருமா என்று பொருத்திருந்தான் பார்க்க வேண்டும்! எனினும், கடந்த காலம் போன்று மக்கள் அவரை நம்பத் தயாரில்லை.

**இயக்கங்கள் பற்றிய நிலை :** ஜைனுல் ஆபிதீன் துவக்கத்தில் பல இயக்கங்களுடன் தொடர்புகளைப் பேணி வந்தார். அவரது நூல்களை யும் உரைகளையும் ஜமாஅத்தே இஸ்லாமி போன்ற இயக்கங்கள் பாராட்டின. அவர் கடந்த காலங்களில் இயக்கங்களின் நலவுகளைப் பாராட்டினார். குறைகளை அழகிய முறையில் விமர்சித்தார். அதனால், அவர் பல இயக்கங்களாலும் மதிக்கப்பட்டார். இயக்கம் ஆரம்பித்து தலைவரான பின்னர், எல்லா இயக்கங்களையும் அதன் தலைவர் களையும் தரக் குறைவாக விமர்சனம் செய்தார் என்று விசனம் தெரிவிக்கப்பட்டன.

அவர் தப்லீக் ஜமாஅத் தொடர்பாக இவ்வாறு எழுதினார்.

“தப்லீக் ஜமாத் என்ற பெயரில் உலகெங்கும் வியாபித்திருக்கின்ற இயக்கம் முஸ்லிம்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை உண்மை முஸ்லிம்களாக வாழச் செய்யும் உயர் நோக்கில் தோற்று விக்கப்பட்ட இயக்கமாகும்.

பெயரளவில் மாத்திரம் முஸ்லிம்களாக இருந்து கொண்டு அல்லாஹ்வை மறந்து வாழ்ந்த மக்களையும், சமாதி வழிபாடுகளிலும் தனிநபர் வழிபாட்டிலும் மூழ்கிக்கிடந்த மக்களையும், இஸ்லாமியக் கடமைகள் இன்னதென்று அறியாமல் அவற்றை அலட்சியப்படுத்தி வாழ்ந்த மக்களையும் கண்டு பெரியார் இல்யாஸ் (ரஹ்) அவர்கள் கவலைப்பட்டு துவக்கிய இயக்கமே தப்லீக் இயக்கமாகும்.

இந்த இயக்கம் புத்துயிர் பெற்ற பிறகு சமாதிகளில் மண்டியிட்ட வர்கள், அல்லாஹ்வின் சன்னதியில் சிரம் பணியலானார்கள். பூட்டிக் கிடந்த இறையில்லங்கள் தொழுகையாளிகளால் நிரப்பப்பட்டன. நபி (ஸல்) அவர்கள் பற்றிய மதிப்பு மக்களின் உள்ளங்களில் அதிகமாகியது.

இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள மக்கள் தங்களின் பொருளையும், உழைப்பையும் தியாகம் செய்கின்ற நிலை ஏற்பட்டது. மவ்லவிகள் மட்டுமே மார்க்கத்தைச் சொல்லத்தக்கவர்கள் என்ற நிலை இந்த ஜமாத்தின் எழுச்சியினால் ஓரளவாவது மாறியது. இதெல்லாம் இந்த இயக்கத்தினால் சமுதாயத்திற்கு கிடைத்த நற்பயன்கள். அதில் ஈடுபாடு கொண்ட மக்களின் நோக்கத்தில் இன்றளவும் குறைகாணமுடியாது.

ஆனாலும், பெரியார் இல்யாஸ் (ரஹ்) அவர்களின் புதல்வர் யூசுப் (ரஹ்) ஆகியோரின் மறைவிற்குப் பிறகு, இந்த இயக்கத்தின் மார்க்க அறிஞர்கள், தப்லீகின் உயர் நோக்கத்திலிருந்து அதைத் திசை திருப்பும் பணியில் ஈடுபடலானார்கள்.

மனிதர்களுக்கும், பெரியார்களுக்கும் அளவு கடந்த மரியாதை செய்யும் அளவுக்கு மக்களின் மூளைகளை சலவை செய்யலானார் கள். மீண்டும் சமாதிவழிபாட்டுக்கும் தனிமனித வழிபாட்டுக்கும் மக்களை இழுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபடலானார்கள்.

இந்தப் பணியைச் செய்தவர்களில் முதலிடத்திலிருப்பவர் உ.பி மாநிலம் சஹாரன்பூரைச் சேர்ந்த ஸகரிய்யா சாஹிப் என்பவர். காலம் சென்ற இவர் தனக்கும் அப்போதைய ஹஜ்ரத்ஜீக்கும் மத்தியில் நிலவிய மாமன் மருமகன் என்ற உறவைப் பயன்படுத்தி, தான் எழுதிய நூல்களை தப்லீகின் தஃலீம்களில் படிக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தினார்.

குர்ஆனையும், நபிவழியையும் கற்பிப்பதற்காக தோற்றுவிக்கப்பட்ட இந்த இயக்கத்தில் இவர் எழுதிய கற்பனைகளும், கதைகளும் படிக்கப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது.

குர்ஆனை விட அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு பள்ளிவாயில்கள் தோறும் படிக்கப்படுகின்ற இவரது தஃலீம் தொகுப்பு, தப்லீக் ஜமாத்தினருக்குக் கிடைத்த புதியவேதமாக ஆகிவிட்டது.

தப்லீக் ஜமாத்தில் நல்ல சிந்தனையாளர்களும் உண்மையை அறிய விரும்புபவர்களும் கணிசமாக இருக்கிறார்கள் என்று நாம் நம்புவதால், தஃலீம் தொகுப்பில் காணப்படுகின்ற அபத்தங்களையும் பொய்களையும் கற்பனைக் கதைகளையும் அடையாளம் காட்ட விரும்புகின்றோம்.

தொழுகையின் சிறப்பு, ஸதகாவின் சிறப்பு, ரமலானின் சிறப்பு என்றெல்லாம் பலவேறு தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்ட இவரது நூலில் மிகவும் தந்திரமாக எவருக்கும் சந்தேகம் வாரத வகையில் நச்சுக் கருத்துகள் பல புகுத்தப்பட்டுள்ளன. ஸகரியா சாகிப் முதலில் சில குர்ஆன் வசனங்களை எழுதுவார். அடுத்து சில ஹதீஸ்களை எழுதுவார். இவர் குர்ஆன் – ஹதீஸ் அடிப்படையில் தான் இதை எழுதியுள்ளார் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்துவார். அதன்பிறகு சிறப்புகள் என்ற பெயரில் தனது சொந்தச் சரக்குகளை விற்க ஆரம்பித்து விடுவார்.

ஆரம்பத்தில் உள்ள சில பக்கங்களில் இவர் மக்கள் உள்ளங்களில் நல்ல இடத்தைப் பெற்று விடுவதால் அடுத்தடுத்து இவர் அளக்கும் கப்ஸாக்களை பாமர உள்ளங்கள் கண்டு கொள்வதில்லை. எனவேதான், தஃலீம் தொகுப்புகளில் மலிந்துள்ள அபத்தங்களை

நாம் இனம் காட்ட வேண்டியுள்ளது. அதிலுள்ள அபத்தங்கள் அனைத்தையும் எழுதுவதென்றால் பல ஆயிரம் பக்கங்களில் எழுத வேண்டும். ஆகவே, சிந்தனையாளர்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் ஒரு சில அபத்தங்களை மட்டும் நாம் இனம் காட்டுகிறோம்" (2012 : 3-4) என்று குறிப்பிட்டு சில விடயங்களை விமர்சித்துள்ளார். இது அறிவுபூர்வமான அணுகுமுறை என்று அப்போது பாராட்டப்பட்டார். தவ்ஹீத் சிந்தனைக்கு முன்னர், தப்லீகில் 280 நாட்கள் சென்றுள்ளார். இதை அவரே தனது வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் சில ஹதீஸ்களை மறுக்க ஆரம்பித்தவுடன், ஹதீஸ் கலை இமாம்களின் பணி தொகுத்தல் மட்டும் என்றார். இவருக்கு மட்டும்தான் மதிப்பீடு செய்யும் தகைமை உண்டு என்பது போல் பரப்புரை செய்து வருகிறார். பல விடயங்களில் நேர்மையற்ற "ஹிஸ்பிய்யத்" என்ற இயக்கவாதத்தை வலுவாகக் கடைப்பிடித்தார். இவ்வாறான இவரது நேர்மையற்ற போக்கை ஆரம்பத்திலேயே அறிந்த பல ஆலிம்கள் அவருடன் விவாதிப்பதைத் தவிர்த்தனர். ஆரம்பத்தில் விவாதத்திற்கு அவர் அழைப்பு விடுத்த போது, பலர் கண்டு கொள்ளவில்லை. இப்போதும் கண்டு கொள்ளவில்லை. ஏனெனில், அவர் போன்ற பாலியல் சேட்டையில் மாட்டிய பலரை இணைத்துக் கொண்டு களம் இறங்கியுள்ளார். எனவே, அவரைக் கண்டு கொள்ளக் கூடாது என்று பல அறிஞர்கள் கூறி வருகின்றனர்.

கடந்த காலங்களில்,விவாதம் செய்ய வருமாறு அழைத்தோரைக் கண்டு அஞ்சிய அவரது பரிவாரம், நாங்கள் குற்றம் சுமத்தியோருடன் விவாதிக்க முடியாது என்றனர். அவர்களுக்குத் தகுதி இல்லை என்று அலட்சியம் செய்தனர். இதன் மூலம் அவர்களது வங்குரோத்து நிலையை மறைத்தனர். P.ஜைனுல் ஆபிதீனுடைய ஆபாச ஆடியோ வெளியாகி, அவர் இயக்கத்திலிருந்து தூக்கி எறியப்பட்டவுடன், அதேவாதத்தை அவரது முன்னாள் சகாக்கள் தெரிவிக்கின்றனர். நாங்கள் எங்கள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட சாக்கடைகளுடன் விவாதிக்க மாட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

எனவே, P.ஜைனுல் ஆபிதீன் இப்போது எப்படியாவது

யாருடனாவது விவாதித்து, மீள் நுழைவைப் பெற வேண்டும் என்று துடியாய்த் துடிக்கின்றார். முன்னர் இவர்கள் விவாதிக்கமாட்டோம் என்று அடம் பிடித்தோருடன் எல்லாம் எப்படியாவது விவாதிக்க வேண்டும் என்று தவிக்கின்றனர். ஆனால், அவரை யாரும் கண்டுகொள்ளத் தயாரில்லை.

இவர் செய்தவைகள் காம லீலைகள் மட்டுமல்ல. பெரிய அநியாயங்களும்தான். தஃவா செய்ய ஆவலாய் அவரது இயக்கத்தினுள் நுழைந்தோர் பலரை, இயக்க வரையறைக்குள் சிக்க வைத்து, கட்டுப்படுத்தி, பள்ளி சொத்தபகரிப்புச் செய்து, தொழக் கட்டிய பள்ளிக்குள் கட்டப்பஞ்சாயத்தை நடாத்தி, பொய் வழக்குப் பதிவு செய்து, நண்பர்களைப் பிரித்து, பல நல்ல உலமாக்களைப் பகைக்க வைத்து செய்த அநியாயங்கள், அராஜகங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

**எளியமையான திருமணம் :** வரதட்சணையைக் கண்டித்து பல உரைகளை ஆற்றிய அவர், எளியமையான திருமணத்தை வலியுறுத்தி வருகின்றார். அத்தோடு, வலீமா மட்டுமே இஸ்லாத்தில் உள்ளது. பெண்வீட்டு விருந்து இஸ்லாத்தில் இல்லை. அவ்வாறு பெண் வீட்டில் வைக்கப்படும் விருந்தும் ஒரு வரதட்சணைதான் என்று பிரசாரம் செய்து வருகின்றார். இவரது இந்தக் கருத்திற்கு அன்ஸார் தப்லீக்கி போன்ற சில இலங்கை உலமாக்கள் மாற்றுவிளக்கம் கொடுத்து, பெண்வீட்டு விருந்து வைக்கலாம் என்று கூறிவருகின்றனர். பெண்வீட்டு விருந்தைப் புறக்கணிக்கும் கணிசமான ஒரு எண்ணிக்கையினர் இலங்கையிலும் உள்ளனர்.

# பொருளாதாரக் கோட்பாடு

இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாடே உலகின் பொருளாதார விடுதலைக்கு வழி என்று ஆணித்தரமாக வாதங்களை முன்வைத்து தொடர் உரையாற்றினார். அதை நூல் வடிவிலும் வெளியிட்டார். இன்று உலகில் முரண்பட்ட இரு பார்வைகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டு, இஸ்லாத்தின் பொருளாதாரக் கோட்பாட்டை விளக்கியுள்ளார். அதில், இன்றைய நவீன பொருளாதாரக் கோட்பாடுகளை விமர்சனம் செய்துள்ளார்.

“பொருளாதாரத்தைக் குறித்து இரண்டு வகையான பார்வைகள் உலக மக்களிடம் உள்ளன.சொத்துக்களைத் திரட்டு வதிலும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வதிலும் ஒருவர் ஈடுபட்டால், அவர் ஆன்மிகத்தில் உயர்ந்த நிலையை அடைய முடியாது. கடவுளின் அன்பையும் அருளையும் பெற வேண்டு மென்றால் இவ்வுலகின் வசதி வாய்ப்புக்களைத் துறந்து விட வேண்டும்; இறைவனுக்காக வாழ வேண்டும். அதுதான் உயர்ந்த நிலையென்பது ஒரு பார்வை.

பொருளாதாரத்தைத் திரட்டுவதற்காக உழைக்காமல், பிச்சை எடுத்துப் பிழைப்பு நடத்தும் போலி ஆன்மிகவாதிகளின் பார்வை இவ்வாறு இருப்பது ஆச்சரியமானதல்ல. பொருள் திரட்டுவதில் ஈடுபடுவோர் கூட இந்தக் கருத்தில் இருக்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியமான உண்மை.

பொருளாதாரத்தைத் திரட்டுவதற்காக, உழைக்காத ஆன்மிகவாதிகள் நம்மை விட உயர்ந்தவர்கள்; நாம் தாழ்ந்தவர்கள் என்று அதிகமான மக்கள் கருதிக் கொண்டு தம்மைத்தாமே தரம் தாழ்த்திக் கொள்கிறார்கள்.

நம்மால் கடைப்பிடிக்க முடியாவிட்டாலும், பொருளாதாரத்தை வேண்டாம் என்று உதறித் தள்ளியவர்கள் நம்மை விட உயர்ந்தவர்கள் என்று இவர்கள் நினைக்கின்றனர்.

இஸ்லாத்தின் பெயரைச் சொல்லி, மக்களை ஏமாற்றும் சூஃபிகள் எனும் போலி ஆன்மிகவாதிகளும் இந்தக் கருத்தை முஸ்லிம்களிடம் விதைத்து, மார்க்க அறிவு இல்லாத முஸ்லிம்களை நம்பச் செய்துள்ளனர். இதனால்தான் பொருளாதாரத்தை வெறுப்பதாகக் காட்டிக் கொள்ளும் நபர்களை மகான்கள் என்றும் ஞானிகள் என்றும் கருதி அவர்களை மதிக்கின்றனர்.

பொருளாதாரம் குறித்து ஒரு பார்வை இப்படி என்றால் இன்னொரு பார்வை இதை விட மோசமானதாக அமைந்துள்ளது.

வாழ்வு என்பது முழுக்க முழுக்கப் பொருளாதாரம்தான்; பொருளாதாரத்தை எவ்வளவு சேர்க்க முடியுமோ சேர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு எந்த நெறிமுறைகளையும் பேணத் தேவை இல்லை. மானத்தை விற்றால்தான் பணம் கிடைக்கும் என்றால், அதையும் செய்யத் தயங்கக் கூடாது. பொருளாதாரம் திரட்டுவதற்கு நாம் தேர்ந்தெடுக்கும் வழிமுறையால் மற்றவர்களின் உரிமையும், நலனும் பாதிக்கப்பட்டால் அது பற்றி நாம் கவலைப்படத் தேவை இல்லை என்று இவர்கள் நினைக்கின்றனர்.

பொருளாதாரத்தைத் திரட்டுவதில் மட்டுமன்றி அதை அனுபவிப்பதிலும் எந்த நெறிமுறைகளையும் நாம் பார்க்க வேண்டியதில்லை. பொருளாதாரத்தைப் பயன்படுத்தி அனுபவிக்க முடிந்த அனைத்தையும் அனுபவித்து விட வேண்டும்; மற்றவர்களின் நலன் இதனால் பாதிக்கப்படுவது பற்றி நாம் கவலைப்படத் தேவை இல்லை என்றும் இவர்கள் நினைக்கின்றனர்.

முறைகேடாக பொருளாதாரத்தைச் செலவிடுவதால் தமது ஆரோக்கியமோ, நலனோ பாதிக்கப்படுவது பற்றியும் இவர்களுக்குக் கவலை இல்லை. இந்தக் கருத்துடையவர்கள்தான் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். பொருளாதாரம் இல்லாதவர்களும்கூட மனதளவில் இந்த நிலைபாட்டில்தான் உள்ளனர்.

ஆனால், இஸ்லாம் பொருளாதாரத்தினால் விளையும் நன்மைகளையும் சொல்கிறது. அதனால் ஏற்படும் தீமைகளையும் சொல்கிறது. இரண்டையும் இணைத்து எவ்வாறு நடந்து கொள்வது

சிறந்தது என்ற வழிகாட்டுதலையும் தெளிவாகச் சொல்கிறது." என்று தனது "இஸ்லாத்தின் பார்வையில் பொருளாதாரம்" (2015 ப:11–12) என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

**பங்குச் சந்தை வியாபாரம் :** பங்குச் சந்தை முறைமை பற்றி அவரது பொருளாதாரக் கோட்பாட்டில் விளக்கியுள்ளார். அது ஹராமான வியாபாரம் என்றும் குறிப்பிடுகின்றார். "நாம் ஒரு கம்பெனியில் பங்குதாரர் என்றால் அந்தக் கம்பெனியின் தயாரிப்பு, கொடுக்கல் வாங்கல் அனைத்திலும் நமக்கும் பொறுப்பு உண்டு.

அந்தக் கம்பெனியில் நாம் சேர்ந்தால் நம்முடைய பங்கு ஹலாலான தொழிலில் இடப்பட்டுள்ளதா? அல்லது ஹராமான தொழிலில் இடப்பட்டுள்ளதா? என்பது தெரியாது. ஆகுமான தொழில் என்று உறுதியாகத் தெரியாத வரை அதில் நாம் முதலீடு செய்வது கூடாது.

ஒரு வியாபாரத்தில் கூட்டு சேர்பவர்கள் அந்த வியாபாரத்தின் மொத்த கணக்கு வழக்குகளைப் பார்ப்பதற்கு உரிமை பெற்றவர்கள். ஆனால், ஷேயர் மூலம் கூட்டு சேர்ந்தவர்களுக்கு இந்த உரிமை வழங்கப்படாது. எந்தத் தொழிலில் முதலீடு செய்யப்பட்டது? எவ்வளவு செலவானது,? எவ்வளவு இலாபம் வந்தது? என்ற எந்த விபரத்தையும் இவர்களால் அறிந்து கொள்ள முடியாது.

எனவே, முற்றிலும் ஹராமான, மக்களை ஏமாற்றும் மோசடி வியாபாரமாகிய பங்குச் சந்தையில் முஸ்லிம்கள் பங்குகளை வாங்கவோ, விற்கவோ கூடாது" (P.ஜைனுல் ஆபிதீன் :2015) என்று பங்குச் சந்தை வியாபாரம் தொடர்பான கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

# பரிணாம வாதக் கோட்பாடு

மனிதன் பரிணாம வளர்ச்சியின் மூலம் உருவானவன் என்ற டார்வினியக் கோட்பாட்டை, கடவுளை மறுப்பதற்கு பலர் பயன் படுத்துவதால், அது பற்றி இஸ்லாமியப் பார்வையை முன்வைத்தார். அத்தோடு, மனித இனத்தின் தோற்றம் பற்றியும் முதல் இனப் பெருக்கம் தொடர்பாகவும் விளக்கியுள்ளார்.

"பரிணாம வளர்ச்சியின் மூலம் உருவானவன் தான் மனிதன் என்பது டார்வினின் தத்துவம். கடவுளை மறுப்பதற்கு இந்தத் தத்துவம் உதவுவதால், டார்வினின் கொள்கையைச் சிலர் ஏற்றிப் போற்றுகிறார்களே தவிர, அது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மை அல்ல. வெறும் அனுமானமேயாகும். சில உயிரினங்கள் காலப் போக்கில் வேறு உயிரினமாக வளர்ச்சி பெற்று வந்தன. பல கோடி ஆண்டுகளில் குரங்கு என்ற இனமாக ஆனது. அதன் பின்னர் பல கோடி ஆண்டுகளுக்குப் பின் குரங்கு பரிணாம வளர்ச்சி பெற்று, மனிதன் என்ற படைப்பு உருவானது என்பதுதான் டார்வினின் கொள்கை!

எந்தக் குரங்காவது மனிதனாக மாறியதைப் பார்த்து விட்டு, டார்வின் இப்படி முடிவு செய்தானா என்றால் நிச்சயமாக இல்லை. குரங்குக்கும், மனிதனுக்கும் இடையே உருவ அமைப்பில் மிகுந்த ஒற்றுமை இருப்பதுதான் டார்வினின் இந்த அனுமானத்துக்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

அறிவியல் அறிவு குறைவாக இருந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் இதை நம்பினால் அதில் ஆச்சரியமில்லை. ஆனால், இன்றைய அறிவியல் உலகில் அதை நம்புவது பைத்தியக்காரத் தனமாகவே இருக்கும்."

மனிதன் எந்தப் பிராணியிலிருந்தாவது பரிணாமம் பெற்றான் என்று கூறுவதாக இருந்தால், பன்றியிலிருந்து பரிணாமம் பெற்றான்

என்று கூறுவதே அதிகப் பொருத்தமாகும். டார்வின் கூறுவது போல் உடலமைப்பை அடிப்படையாகக் கொள்வதை விட உள்ளுறுப்புகளின் அமைப்பை அடிப்படையாகக் கொள்வது அறிவியலுக்கு அதிக நெருக்கமுடையதாகும்.

இன்றைய மனிதன் மரபணுச் சோதனையிலும் முன்னேறி விட்டான். ஜீனோம் இரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டான்.

ஜீனோம் கண்டு பிடிப்புக்குப் பின் முழு மனித குலமும் ஒரு ஆப்பிரிக்கத் தாயிலிருந்து தோன்றியவர்கள்தான் என்பதைக் கண்டு பிடித்துவிட்டனர்.

மனிதன் ஒரு தாய் ஒரு தந்தையிலிருந்து பிறந்தவன் என்ற தத்துவம் உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்த உதவும். குலம், இனம், நிறத்தின் பெயரால் மனிதனுக்கிடையே ஏற்றத் தாழ்வு கற்பிப்பதைத் தடுக்கும். ஆனால், டார்வினின் தத்துவத்தைத் தாங்கிப் பிடிப்பது மனித குலத்துக்குக் கேடு விளைவிக்கும்" என்று குறிப்பிடுகிறார்.

மனிதனின் இரத்தம், இதயம், ஈரல், சிறுநீரகம் போன்ற உள் அமைப்புகளும், மரபணுக்களும் மனிதன் தனி இனம் என்பதையும். எந்த இனத்திலிருந்தும் அவன் பரிணாமம் பெற்றிருக்க முடியாது என்பதையும் சந்தேகமற நிரூபித்த பின்பும் டார்வின் உளறலை தூக்கிப் பிடிப்பவர்கள் சிந்தனையாளர்களாக இருக்க மாட்டார்கள்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**மனிதகுலத் தோற்றம் பற்றிய எண்ணக் கரு:** மனித குலத் தோற்றம் குறித்து அறிவை இழந்த பகுத்தறிவாளர்கள் என்ற தனது கட்டுரையில், முகநூலில் இஸ்லாத்தை விமர்சிக்கும் நோக்கில் கடவுள் மறுப்பாளர்களால் எழுப்பட்ட ஒரு கேள்விக்கு பதில் அளித்துள்ளார். "ஆதம் என்ற ஆண், ஹவ்வா என்ற பெண் ஆகிய இருவர் மூலம் தான் மனித குலம் பெருகியதாக முஸ்லிம்கள் கூறுகிறார்கள். கிறித்தவர் களும் அவ்வாறே கூறுகிறார்கள்.

அப்படியானால், உடன் பிறந்த அண்ணன் தங்கைகள் மத்தியில் தான் உடலுறவு கொண்டு இருப்பார்கள். இவ்வளவு கேவலமாக மனிதப் பிறப்பு பற்றி பேசும் உங்கள் கடவுள் யோக்கியனா?

இதுதான் அந்த வாதத்தின் சாரம்சமாகும். பக்கம் பக்கமாக இவர்கள் எழுதியுள்ள அனைத்து வாதங்களும் இந்த ஒரு பாராவுக்குள் அடக்கமாகி விடும்.

இதில் முஸ்லிம் பெயர்களிலும் சிலர் பதிவிட்டு, கிண்டல் அடிக்கும் Comments களும் அடக்கம். ஆனால், அவர்கள் முஸ்லிம்களாக இருக்க வாய்ப்பில்லை என்று தான் நாம் கருதுகிறோம்.

அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் இஸ்லாமிய அடிப்படையும், அறிவியல் ஞானமும் இல்லாமல் அவர்கள் வளர்க்கப் பட்டது இதற்குக் காரணமாக இருக்கலாம். எது எப்படி இருந்தாலும் இக்கேள்விக்கு விடையளிக்கும் கடமை நமக்கு உள்ளது.

**மனித குலத்தின் தோற்றம் பற்றி உலகில் நிலவும் கருத்துக்கள் என்ன?**

**1. பரிணாம வளர்ச்சி:** பரிணாம வளர்ச்சி மூலம் மனிதன் உருவானான் என்ற டார்வினின் கொள்கை கூறுகிறது.

(இதற்கு நிகரான மடமை வேறு இல்லை என்பதை அவர் விளக்கியுள்ளார். கடவுள் மறுப்பாளர் யாரும் இது குறித்து நம்மிடம் விவாதிக்க விரும்பினால் நாம் இன்றைய அறிவியல் கண்டுபிடிப்பின் துணை கொண்டு டார்வின் கொள்கை தவறு என்று நிரூபித்துக் காட்டுவோம்) என்று சவால் விட்டுள்ளார்.

**2. இந்து மதக் கொள்கை:** அடுத்து மனிதன் படைக்கப்பட்டது குறித்து இந்துக்களின் நம்பிக்கை.கடவுளின் தலையில் இருந்து படைக்கப் பட்டவன், தோளில் இருந்து படைக்கப்பட்டவன், தொடையில் இருந்து படைக்கப்பட்டவன், பாதத்தில் இருந்து படைக்கப்பட்டவன் என்று நான்கு வகைகளாக மனிதனைப் பிரிக்கிறார்கள். இந்த நம்பிக்கையை கடவுள் மறுப்பாளர்கள் ஏற்க மாட்டார்கள். அவர்கள் ஏற்றாலும் இதே கேள்வி இருக்கவே செய்யும்.

மேற்கண்ட நான்கு நிலைகளில் படைக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் ஒருதாய் ஒரு தந்தையிலிருந்து பிறந்தவர்கள் தான்; அனைவரும் கடவுளிடமிருந்து நேரடியாகப் படைக்கப்பட்டவர்கள் அல்லர். கடவுள் நான்கு ஜோடிகளைப் படைத்தார். அந்த ஜோடிகளில்

இருந்து அந்தப் பிரிவு பல்கிப் பெருகியது என்பதுதான் இதன் கருத்தாகும். இந்த நம்பிக்கைப்படியும் உடன் பிறப்புக்கள் மத்தியில் தான் துவக்கத்தில் இணைதல் ஏற்பட்டு இருக்கும்.

எனவே, இந்த நம்பிக்கை உள்ளவர்களும் இக்கேள்வியைக் கேட்க முடியாது.

**3. ஜீனோம் மரபணு ஆய்வு:**

அடுத்ததாக இன்றைய ஜீனோம் என்ற மரபணு ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட தத்துவம். ஜீனோம் எனும் மரபணு ஆய்வு குறித்து சில ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்ட நவீன ஆய்வு குறித்து இந்தியா டுடேயில் ஜீனோம் ரகசியம் என்று சிறப்பிதழ் போடப்பட்டது.

அந்த ஆய்வு கூறுவதுதான் மனித குல உற்பத்தி குறித்து செய்யப்பட்ட இறுதியான ஆய்வு.

இந்த ஆய்வு என்ன கூறுகிறது?:

உலக மக்கள் அனைவரும் ஒரு ஆப்ரிக்கத் தாய்க்கும், ஒரு ஆப்ரிக்கத் தந்தைக்கும் பிறந்தவர்கள் தான்; அந்த ஒரு ஜோடியில் இருந்துதான் மனித குலம் பல்கிப் பெருகியது என்பது தான் அந்த ஆய்வு.

இப்போது முகநூல் போராளிகள், பகுத்தறிவாளர்கள் என்றால் நவீன மரபணு ஆய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட இந்த முடிவை ஏற்க வேண்டும்.

இஸ்லாத்தை மறுப்பது போல் இதை அவர்கள் மறுக்க முடியாது. இன்று மரபணு ரகசியம் கண்டுபிடிக்கப்பட்டு அந்த ஆய்வின் முடிவு சொல்வது என்ன? இஸ்லாம் சொன்னதைத் தான் மரபணு ஆய்வும் அப்படியே சொல்கிறது. அதாவது அண்ணன், தங்கைகள் வழியாகத் தான் மனித குலம் முதலில் பல்கிப் பெருகியது என்பது தான் அந்த உண்மை.

இக்கேள்வி கேட்போர் பகுத்தறிவாளர்கள் என்றால், மனித இனம் ஆப்ரிக்காவிலிருந்து பரவி உலகெங்கும் நிறைந்திருக்கிறது

என்பதே உண்மை (தகவல்: 28.7.2007 விடுதலை நாளிதழ்) என்ற கட்டுரையைப் பார்க்கட்டும்.

மனித இனத்தின் மூல இடமே ஆப்ரிக்காதான்; மண்டை ஓடுகளை ஆய்வு செய்து பெற்ற உண்மை. (உலக மனிதரின் தாய் ஓர் ஆப்ரிக்கப் பெண் தினமணி - அக்டோபர் 22, 1988.) இந்தக் கட்டுரையையும் வாசிக்கட்டும். பகுத்தறிவாளர்கள் ஏற்கும் திராவிடர் கழகத்தின் (http://www.unmaionline.com/new/1420) உண்மை இணைய தளத்திலும் இந்தக் கண்டுபிடிப்பைக் குறித்த விபரத்தைக் காணலாம்.

ஆக, இஸ்லாம், கிறித்தவம், டார்வினிசம், இந்துமதம், நவீன கண்டுபிடிப்பான ஜீனோம் மரபணு ஆகிய எந்தக் கோட்பாட்டை ஏற்றாலும், அண்ணன் - தங்கைகள் மத்தியில் தான் துவக்கத்தில் உடலுறவு நிகழ்ந்துள்ளது என்பது உறுதியாகிறது.

இஸ்லாத்துக்கு எதிராக இவர்கள் எந்தக் கேள்வியைக் கேட்டார்களோ, அந்தக் கேள்வி எழ முடியாத வேறு கோட்பாட்டை இவர்கள் ஆதாரத்துடன் நிறுவிக்காட்டட்டும். அல்லது வாய் மூடி மௌனம் காக்கட்டும்."

இது குறித்து அவரது திருக்குர்ஆன் தமிழாக்கத்திலும் விளக்கம் அளித்துள்ளார். "ஆதமின் பிள்ளைகள் உடன் பிறப்புகளைத் திருமணம் செய்தார்களா? இவ்வசனங்களில் (4:1, 7:26, 7:27, 7:31, 78:35, 7:172, 7:189, 17:70, 36:60, 39:6) இறைவன் ஒரு ஜோடி மனிதரை மட்டுமே நேரடியாகப் படைத்தான் என்றும், மனித குலம் முழுவதும் அவ்விருவரின் வழித்தோன்றல்களே என்றும் கூறப்படுகிறது.

ஆதம், ஹவ்வா ஆகிய இருவர் வழியாகவே மனித குலம் தோன்றியது என்பது தான் இஸ்லாத்தின் கோட்பாடு. இந்த இருவரைத் தவிர வேறு ஜோடிகள் ஏதும் இறைவனால் நேரடியாகப் படைக்கப்படவில்லை என்பதால், அண்ணன் தங்கைகளுக்கிடையே தான் திருமண உறவு நடந்திருக்க முடியும். அண்ணன், தங்கைகளுக்கிடையே திருமணம் செய்யலாமா என்று இப்போது

கேட்டால் கூடாது என்றுதான் விடை கூறுவோம். ஒரே ஒரு ஜோடி மட்டுமே உலகில் படைக்கப்பட்டிருந்த நிலையில் அண்ணன் தங்கைகளுக்கிடையே திருமணம் செய்து கொள்ள அல்லாஹ் அனுமதித்தான். மனிதகுலம் பல்கிப்பெருகிட இது தேவையாக இருந்தது. அவன் அனுமதித்தபோது, அவ்வாறு திருமணம் செய்தவர்கள் குற்றவாளிகளாக மாட்டார்கள்.

அப்படியானால், ஒரு ஜோடியை மட்டும் படைக்காமல் இரண்டு ஜோடி மனிதர்களைப் படைத்து இதைத் தவிர்க்க இயலுமே என்று சந்தேகம் எழலாம்.

இறைவன், ஒரு ஜோடி மூலம் மனித குலத்தைப் பரவச் செய்ததற்கு முக்கியமான காரணம் உள்ளது. ஒட்டுமொத்த மனித வர்க்கமும் ஒரே தாய் தந்தையிலிருந்து உருவானால் தான் பிறப்பின் அடிப்படையில் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் வாசல் முற்றாக அடைக்கப்படும். சகோதரத்துவ உணர்வையும், உயர்ந்தவர்–தாழ்ந்தவர் என்ற பாகுபாடின்றி மனிதர்கள் அனைவரும் பிறப்பால் சமமானவர்கள் என்ற சமத்துவத்தையும் இது ஏற்படுத்துகின்றது" என்று மறுப்பளித்து, என்று மனித குலத்தின் தோற்றத்தில் ஒரு தாய், ஒரு தந்தைக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை விபரித்துள்ளார்.

# ஜிஹாத் பற்றிய கோட்பாடு

இன்று மிகப்பெரும் எதிர்வினையைத் தோற்றுவித்துள்ள இஸ்லாமிய ஜிஹாத் கோட்பாடு பற்றி அவர் பேசியும், எழுதியும் உள்ளார். "உலகில் பெரும்பாலான முஸ்லிம்களாலும், முஸ்லிம் அல்லாதவர்களாலும் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்ட விடயங்களில் ஒன்று ஜிஹாத் என்பதாகும். ஜிஹாத் என்ற சொல்லுக்கு உழைத்தல், பாடுபடுதல், ஆய்வு செய்தல், அசத்தியத்தைத் தட்டிக் கேட்டல் எனப் பல அர்த்தங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் ஆயுதம் ஏந்திப் போர் செய்தல் ஆகும்.

இந்த அர்த்தத்தில் அமைந்த ஜிஹாத் ஓர் அரசாங்கத்தின் கீழ் தான் செய்ய வேண்டும். அரசாங்கம் இல்லாமல் குழுக்களாக ஒன்று சேர்ந்து செய்வது ஜிஹாதில் சேராது. இதனைப் பின்வரும் வசனத்திலிருந்து தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

மூஸாவுக்குப் பின்னர் இஸ்ராயீலின் மக்களில் (உருவான) ஒரு சமுதாயத்தைப் பற்றி நீர் அறியவில்லையா? எங்களுக்கு ஒர் ஆட்சியாளரை நியமியுங்கள்! அல்லாஹ்வின் பாதையில் போரிடுவோம் என்று தமது நபியிடம் கூறினர். உங்களுக்குப் போர் கடமையாக்கப்பட்டால் போரிடாமல் இருக்க மாட்டீர்கள் அல்லவா? என்று அவர் கேட்டார். எங்கள் ஊர்களையும், பிள்ளைகளையும் விட்டு நாங்கள் வெளியேற்றப்பட்டிருக்கும் போது அல்லாஹ்வின் பாதையில் போரிடாமலிருக்க எங்களுக்கு என்ன வந்தது? என்று அவர்கள் கூறினர். அவர்களுக்குப் போர் கடமையாக்கப்பட்ட போது அவர்களில் சிலரைத் தவிர (மற்றவர்கள்) புறக்கணித்தனர். அநீதி இழைத்தோரை அல்லாஹ் அறிந்தவன்.

தாலூத் என்பவரை அல்லாஹ் உங்கள் ஆட்சியாளராக நியமித்துள்ளான் என்று அவர்களின் நபி அவர்களிடம் கூறினார். எங்கள் மீது அவருக்கு எப்படி ஆட்சியதிகாரம் இருக்க முடியும்? அவரை விட ஆட்சிக்கு நாங்களே தகுதியானவர்கள். அவருக்குப்

பொருள் வசதியும் வழங்கப்படவில்லை என்று அவர்கள் கூறினர். உங்களை விட அவரை அல்லாஹ் தேர்வு செய்து விட்டான். அவருக்கு கல்வி மற்றும் உடலை (வலுவை) அதிகமாக வழங்கியிருக்கிறான். தான் நாடியோருக்கு அல்லாஹ் அதிகாரத்தை வழங்குவான். அல்லாஹ் தாராளமானவன்; அறிந்தவன் என்று அவர் கூறினார். (திருக்குர்ஆன் 2:246, 247)

மேற்கண்ட இரு வசனங்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் சென்ற ஒரு நபியின் வரலாற்றுச் செய்தியைக் கூறுகின்றன. அந்த நபியின் சமுதாயத்தவர் எதிரிகளால் சொல்லொணாத துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டு ஊரை விட்டும் விரட்டப்பட்டிருந்தனர். ஊரை விட்டு விரட்டப்பட்டிருந்தாலும் அந்த நபியின் தலைமையில் அவர்கள் எதிரிகளை எதிர்த்துப் போரிடவில்லை.

இந்த நேரத்தில் எதிரிகளை எதிர்த்துப் போரிடுவதற்கு தங்களுக்கு ஒரு மன்னரை நியமிக்குமாறு அந்த நபியிடம் அவரது சமுதாயத்தவர் வேண்டினார்கள். இந்த வேண்டுகோளுக்குப் பிறகு இறைவன் தாலூத் என்பவரை மன்னராக நியமித்து போர் செய்வதை அவர்கள் மீது கடமையாக்கினான் என்பது இவ்வசனங்கள் கூறும் வரலாறு.

இவ்வரலாற்றில் மிக முக்கியமான இரண்டு சட்டங்கள் பெறப்படுகின்றன. படை திரட்டி யுத்தம் செய்வதென்றால் அதற்கு ஓர் ஆட்சியும், மன்னரும் இருப்பது அவசியம் என்பது இதில் பெறப்படும் முதலாவது சட்டம். ஏனெனில், அந்தச் சமுதாயம் மிகப் பெரும் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தும், போர் செய்வதற்கான எல்லா நியாயங்களும் இருந்தும் அவர்கள் போர் செய்யவில்லை.

அவர்களுக்குத் தலைமை தாங்கிய நபியும் போர் செய்யவில்லை. மாறாக ஒரு மன்னரை நியமிக்குமாறு இறைவனிடம் கோரிக்கை வைத்து, இறைவன் மன்னரை நியமித்த பிறகுதான் அவர்கள் போரிட்டுள்ளார்கள். போர் செய்வதற்கு ஆட்சியோ, மன்னரோ அவசியம் இல்லை என்றால் அவர்களின் கோரிக்கையை ஏற்று மன்னராக ஒருவரை இறைவன் நியமித்திருக்க மாட்டான்.

இறைத் தூதர்கள், உலகில் ஆட்சியைப் பிடிப்பதற்காக அனுப்பப்பட்டவர்களல்லர். மாறாக, தமது சமுதாயத்தை ஓரிறைக்

கொள்கையை நோக்கியும், ஒழுக்கத்தை நோக்கியும் அழைப்பதற் காகவே அனுப்பப்பட்டனர் என்பது இந்நிகழ்ச்சி யிலிருந்து பெறப்படும் இரண்டாவது சட்டமாகும். ஏனெனில், இந்த நிகழ்ச்சியில் ஓர் இறைத்தூதர் உலகில் இருக்கும் போதே இறைத்தூதர் அல்லாத இன்னொருவரை இறைவன் மன்னராக நியமிக்கிறான். அந்த இறைத் தூதரும் அம்மன்னரின் கீழ் போரிடும் நிலையையும் ஏற்படுத்து கின்றான். நபியையே மன்னராக இறைவன் நியமிக்கவில்லை.

சிறிய இயக்கத்தை அமைத்துக் கொண்டு, அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வோம் என்று, மக்களை மூளைச் சலவை செய்து, ஆயுதம் தாங்கி, வன்முறையில் ஈடுபடுவோர் ஜிஹாத் செய்பவர்கள் அல்லர் என்பது இவ்வசனங்களில் இருந்து தெளிவாகத் தெரிகிறது.

ஓர் இறைத்தூதர் தலைமையில் உருவான சமுதாயமாக இருந்தாலும் கூட, ஆட்சி அமைக்காமல் போர் செய்யக் கூடாது என்று இவ்வசனம் தெளிவாகச் சொல்வதே இவர்களின் வாதம் தவறு என்பதற்குத் தக்க சான்றாகும். பின்வரும் ஹதீஸும் போர் செய்வதற்கு ஆட்சியும், ஆட்சித் தலைவரும் அவசியம் என்பதற்கு மிகப்பெரும் சான்றாகும்.

“இமாம் (இமாம் என்றால் ஆட்சித் தலைவர்) என்பவர் ஒரு கேடயமாவார்! அவருக்குப் பின்னால் நின்று மக்கள் போராடுவார்கள். அவரையே மக்கள் அரணாக ஆக்கிக் கொள்வார்கள். அவர் அல்லாஹ்வின் அச்சத்தை ஏவி, நீதமாக நடந்தால் அதற்குரிய கூலி அவருக்குக் கிடைத்து விடும். அதற்கு மாறானதை அவர் சொன்னால் அந்தப் பாவத்தில் அவருக்குப் பங்கு கிடைக்கும் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (رضي الله عنه) நூல் : புகாரி 2957

ஜைனுல் ஆபிதீன், சமகால உலகில் மிகவும் சர்ச்சைக்குறிய விடயமாக நோக்கப்படும் பல விடயங்களில் அவர் அதிக கவனம் செலுத்தி வந்தார். இஸ்லாமியப் போர்கள் மற்றும் ஜிஹாத் குறித்து இன்னும் விரிவாக அவரது அல்குர்ஆன் மொழிபெயர்ப்பில் விளக்கியுள்ளார். இஸ்லாம் குற்றச்சாட்டுகளும் பதில்களும் என்ற அவரது நூலிலும் விரிவாகப் பேசியுள்ளார்.

# இணையதளம்


P.ஜைனுல் ஆபிதீன் தமிழ் நாடு தவ்ஹீத் ஜமாஅத்தில் இருக்கும் போது, அந்த ஜமாஅத்திற்கு ஒரு தனியான இணைய தளம் இருந்தது. எனினும், அவர் onlinepj.com என்ற இணையதளத்தை தனது தனித்துவ விடயங்களுக்காக இயக்கி வந்தார்.

முகப்பு, திருக்குர்ஆன், நூல்கள், வீடியோக்கள், கொள்கை, குடும்பவியல், பொருளாதாரம், வரலாறு, கட்டுரைகள், வணக்கங்ள், தவ்ஹீத் வரலாறு, கல்வி, ஹதீஸ் கலை, பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், புதியவைகள் என பிரதான தலைப்புகளுக்குள் பல்வேறு உட்தலைப்புகளும் காணப்பட்டன.

இப்போது இதன் பெயரை மாற்றி தமிழ் நாடு தவ்ஹீத் ஜமாஅத் இயக்கி வருகிறது. அதனால், இவர் தற்போது தனக்கென்று முகநூல் பக்கத்தையும் தனியான ஓர் இணைய தளத்தையும் துவக்கியுள்ளார். அவரது onlinepj.com இணைய தளம் 2017 வரை செல்வாக்கு மிக்கதாகக் காணப்பட்டது.

பல்வேறு அம்சங்களை அது உள்ளடக்கி, விரிந்த வாசிப்பைப் பெற்றிருந்தது. அவர் மீதான நம்பிக்கை மக்கள் மனதில் வற்ற ஆரம்பித்ததால், அண்மைக் காலங்களில் அவரது இணையதளம் பெருமளவு செல்வாக்கை இழந்துள்ளதாக புள்ளிவிபரத் தரவுகள் வெளியாகியுள்ளன. சில வருடங்களுக்கு முன்னர் அவரது இணையதளத்தில் ஓர் ஆக்கம் வெளியாகியிருந்தது. "உலகில் உள்ள அனைத்து இணையதளங்களையும் ஆய்வு செய்து அதற்கு மதிப்பீடு அளிக்கும் அலெக்ஸா நிறுவனத்தின் பார்வையில் onlinepj.com மற்றும் சில இணைய தளங்களின் மதிப்பீட்டைப் பார்க்கலாம்.

*தமிழ் நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்* (TMMK): தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் அதிகார பூர்வமான இணைய தளம் உலக இணைய தளங்களில் எட்டு இலட்சத்து ஆயிரத்தி அறு நூற்றி


Results:

| Website | Alexa Rank | Rank By Country | Ranking Graph |
|---|---|---|---|
| islamkalvi.com | 61101 | Switzerland #673<br>Sri Lanka #453<br>Saudi Arabia #3,319 | |
| onlinetntj.com | 971734 | – | |
| tntj.net | 1767069 | – | |
| onlinepj.in | 3537296 | – | Alexa Rank not available<br>Not enough traffic data. |
| tmmk.in | 4334951 | – | Alexa Rank not available<br>Not enough traffic data. |

நாற்பத்தி எட்டாவது (8,01,648) இடத்தில் உள்ளது.

இந்தியாவில் உள்ள இணைய தளங்களில் இந்த இணைய தளம் இரண்டு லட்சத்தி முப்பத்தி ஒன்றாயிரத்தி இரு நூற்றி நாற்பத்தி நான்காவது (231,244) இடத்தில் உள்ளது.

**ஜம்மிய்யது அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் (JAQH):** ஜாக் என்ற இயக்கத்தின் அதிகாரபூர்வமான இந்த இணைய தளம் உலக இணைய தளங்களில் நாற்பத்தி ஒன்பது லட்சத்தி அறுபத்தி மூன்றாயிரத்து அறு நூற்று முப்பத்தி நான்காவது (49,63,634) இடத்தில் உள்ளது.

அதாவது த.மு.மு.க.வை விட நாற்பத்தி ஒரு லட்சம் பின்தங்கியுள்ளது. இந்தியாவில் இதற்கு Rank எதுவும் இல்லை.

**islamkalvi.com:** இஸ்லாம் கல்வி என்ற இணைய தளம் உலக அளவில் மூன்று லட்சத்தி முப்பத்தி ஏழாயிரத்து இரு நூற்றி முப்பத்தி மூன்றாவது இடத்தில் உள்ளது. (3,37,233) இந்தியாவில் இந்த


இணைய தளம் ஐம்பத்தி எட்டாயிரத்து முன்நூற்று இருபத்து மூன்றாவது (58,323) இடத்தில் உள்ளது.

**onlinepj.com** இணைய தளம் உலக இணைய தளங்களில் ஒரு லட்சத்து 31 ஆயிரதது151 வது (13151) இடத்தில் உள்ளது.

அதுபோல், இந்தியாவில் உள்ள இணைய தளங்களில் 14691 பதினான்காயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்றாவது இடத்தில் உள்ளது.

onlinepj இணைய தளத்தை தினமும் சராசரியாகப் பார்ப்பவர்கள் ஐயாயிரம் பேர் என அவரது அப்போதைய வெப்மாஸ்டர் அப்பாஸ் ஒரு கட்டுரையில் (2016 களில்) குறிப்பிட்டிருந்தார்.

P.ஜைனுல் ஆபிதீனை, ததஜ நீக்கிய பின்னர் onlinepj.in என்ற இணைய தளத்தை தற்போது ஆரம்பித்துள்ளார்.முன்னர் அவரது இணையதளம் போன்று, onlinepj.in மக்களிடம் வரவேற்பைப் பெறவில்லை. இலங்கையிலும் பிற நாடுகளிலும் இஸ்லாம் கல்விக்கு வாசிப்பு அதிகரித்துள்ளது. அதன் ஆசிரியர்களில் ஒருவராக அண்மையில் என்னையும் நியமித்திருக்கின்றார்கள். தற்போதைய ஒப்பீட்டுத் தரவரிசையை பின்வருமாறு அவதானிக்கலாம்.



# வெளிநாட்டுப் பயணங்கள்

சிங்கப்பூர், இலங்கை, துபாய், மலேசியா, சவுதி அரேபியா போன்ற பல நாடுகளுக்குச் சென்றுள்ளார். மலேசியாவில் கைது செய்யப்பட்டு பின்னர் வெளியேற்றப்பட்டார். இலங்கை, துபாய் போன்ற நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டார். அவர் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட போது, மார்க்க அறிஞருக்கு நாவடக்கம் வேண்டும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை சமநிலை சமுதாயம் சஞ்சிகை வெளியிட்டது. இலங்கை சுனாமியினால் பல அழிவுகளை சந்தித்த பின்னர், 2005களில் அவரது இறுதி வருகை இடம் பெற்றது. அவர் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.அவரது வருகை, உரைகள் தொடர்பாக சத்தியக் குரல்,அல் ஹஸனாத் போன்றவற்றில் விமர்சனக் கட்டுரைகள் வெளிவந்தன. அதற்கு சில மறுப்புப் பிரசுரங்களும் வெளிவந்தன. 2005களின் பின்னர் இலங்கை அரசாங்கம் அவரை சர்ச்சைக்குரியவராக நோக்கி, அவருக்கு விசா வழங்க மறுத்துவருகிறது. இலங்கையிலுள்ள எல்லா இயக்கங்களும் அவரது வருகையை விரும்பவில்லை எனக் காரணங்கள் கூறப்படுகின்றன.

# இலங்கை வருகை

1992ம் ஆண்டு P.ஜைனுல் ஆபிதீன் முதல் தடவையாக இலங்கை வந்தார். இலங்கை ஏகத்துவப் புத்துயிர்ப்பிலும் எழுச்சியிலும் அவரது வகிபாகம் முக்கியத்துவமுடையது.

இலங்கையில் ஒலி – ஒளி நாடாக்கள் மூலமும் அந்நஜாத், புரட்சி மின்னல், அல்முபீன், அல்ஜன்னத் போன்ற மாத இதழ்கள், நூல்கள் மூலமும் முன்னரே அவர் அறிமுகமாகியிருந்தார்.

“அல்லாஹ்வின் பேரருளால் இலங்கையில் 1940களில் ஏகத்துவ பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டாலும், தமிழ் பேசும் உலகில் 1980களில் தவ்ஹீத் எழுச்சி ஏற்பட்டது எனலாம். இதில் பல தனிப்பட்டவர் களுக்கும் அமைப்புகளுக்கும் பெரும் பங்கு உள்ளது. இருப்பினும், ஏகத்துவ எழுச்சியில் சகோதரர் P.ஜைனுல் ஆபிதீனிற்கு பெரும் பங்கு உள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை” என எஸ்.எச்.எம். இஸ்மாயீல் ஸலபி (2015:9) குறிப்பிடுகின்றார்.

“இலங்கையில் ஏகத்துவப் பரம்பலில் P.ஜைனுல் ஆபிதீனுடைய பணி முக்கிய பாத்திரம் வகிக்கிறது. அவரது எழுத்தும் பேச்சும் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. தவ்ஹீத் கோட்பாடு, இலங்கையில் 1940கள் முதல் எழுச்சி பெற்று, வளர்ந்து வந்தது. இதற்கு துவக்க காலத்தில் முக்கிய பங்களிப்பாற்றிய அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களின் கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாத உறுதியான நிலைப்பாடுதான் காரணமாக அமைந்தது.”

தமிழ்நாட்டில் ஏகத்துவ எழுச்சி ஏற்படுவதற்குப் பல தசாப்தங் களுக்கு முன்னரே இலங்கையில் அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களால் ஏகத்துவப் பிரசாரம் துவக்கப்பட்டது. எகிப்தில் ஜம்மிய்யத்து அன்சாரிஸ் சுன்னா முஹம்மதியாவை ஆரம்பித்த வருடன் பக்ரி (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்ட நட்பால், அதே பெயரில் இலங்கையில் ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். மூடத் தனங்களில்

மக்கள் மூழ்கிக் கிடந்த போது, இலங்கையில் ஏகத்துவப் பிரசாரத்தைத் துவக்கிவைத்த அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களின் துணிவு வியக்கத்தக்கது. அன்ஸாருஸ் ஸுன்னா முஹம்மதியா என்ற இயக்கத்தை உருவாக்கிய அப்துல் ஹமீத் பக்ரி என்ற செயல் வீரர், சொற்பமான சில ஆதரவாளர்களை வைத்தே சமாதி வழிபாடு களையும் மூடச் செயற்பாடுகளையும் எதிர்த்தார். பித்அத்களை ஒழிக்கப் பாடுபட்டார். அதற்காக பல இன்னல்களை அனுபவித்தார்.

அப்துல் ஹமீத்பக்ரி அப்போதைய அவரது அறிவு ஆளுமைக்கு ஏற்ப, அவர் காலத்து முக்கிய பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தினார். குறிப்பாக சமாதி வழிபாடு–கந்தூரி ஆகிய ஷிர்க் ஒழிப்பில் தனது முக்கிய பங்களிப்பை ஆற்றினார்.

இஸ்லாத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து வரும் சவால்களை முறியடிக்கவும், விவாதக் களங்களில் துணிவுடன் வாதாடவும், எழுத்தால், பேச்சால் சவால்களை முறியடிக்கக் கூடிய ஆளுமைகள் இலங்கை தஃவா வரலாற்றில் கள நிலை வேண்டி நிற்கிறது. பன்முகஇஸ்லாமிய ஆளுமைகள் இன்னும் போதியளவு வெளிவரவில்லையே என்ற மக்கள் ஏக்கமும் கவனிக்கத்தக்கது.

இந்த வெற்றிடத்தை P.ஜைனுல் ஆபிதீன் அவர்களே நீண்டகாலம் நிரப்பி வந்தார். இலங்கையில் மூத்த உலமாக்களால் முகங் கொடுக்க முடியாது போன பல பிரச்சினைகளை அவர் இலங்கை வந்து எதிர்கொண்டார்; முறியடித்தார்.

1990 களில் உமர் அலியுடைய பைஅத் போட்பாடு, இலங்கை ஏகத்துவ தஃவா வரலாற்றில் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இலங்கை மக்கள் நல்ல ஆளுமையுடைய தலைவரை எதிர பார்த்திருந்தனர். அப்போதுதான் உமர் அலி வெளிவந்தார். அவரிடம் பல திறமைகள் இருந்தன. நல்ல பிரசாரகராக அறிமுகமானார். நாவன்மையால் இளைஞர்களை இலகுவாக கவர்ந்து ஈர்த்தார். “இலங்கைப் பீ.ஜே.” என்று கூட வர்ணிக்கப்பட்டார்.

எனினும், அசத்தியத்தின் மீது தனது ஆளுமையைக் கட்டமைத்ததால், அது மக்களிடம் பின்னாளில் வலுவிழக்க ஆரம்பித்தது. அவரது கனவுக் கோட்டையை P.ஜைனுல் ஆபிதீன்,

“பைஅத் ஓர் ஆய்வு” என்ற உரை, விவாதம் ஆகியன மூலம் தவிடு பொடியாக்கி விட்டார். இங்குதான் P.ஜைனுல் ஆபிதீனுடைய ஆளுமையை முதலில் நேரடியாகக் காணும் சந்தர்ப்பம் இலங்கை மக்களுக்குக் கிட்டியது.

இலங்கையில் தென்னிந்தியாவை விட மதீனாவில் படித்த உலமாக்கள் நிறைந்திருந்தார்கள். ஆனால், உமர் அலியுடன் விவாதிக்க யாரும் அப்போது முன்வரவில்லை. அது உமர் அலிக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியது.

அப்போது நான் ஸலபிய்யாவில் இரண்டாம் வருட மாணவன். ஸலபிய்யா வளாகத்தில் மூன்று நாள் மாநாடு நடை பெற ஏற்பாடுகள் நடைபெற்றன. ஓர் அந்தி நேரம் இந்திய உலமாக்கள் வந்து இறங்கினார்கள். P.ஜைனுல் ஆபிதீன் வருகின்றார் என்று அப்போது எனது ஆசான் முஸ்தபா மவ்லானா (ரஹ்) அவர்கள் சொன்னார்கள். அப்போது, அவரைப் பார்க்க ஆவலாக இருந்தேன்.

அவர் பற்றி எனது கற்பனையில் ஏதேதோ நிழலாடியது. அவரைப் பற்றி ஒரு கற்பனைச் சித்திரம் எனது மனக்கண்ணில் வரைந்தேன். பார்க்க ஓடினேன். விமான நிலையத்திலிருந்து வேனில் வந்து, பறகஹதெனிய பள்ளி முன்னுக்கு இறங்கினார். கோட் சூட் போட்ட ஒருவர் இறங்கினர். அவர்தான் P.ஜைனுல் ஆபிதீன் என்று நினைத்தேன். அப்போது மவ்லானாவிடம் கேட்டபோது, அவர் செய்யித் முஹம்மத் மதனி என்றார். இறுதியாக மிக எளிமையான பேக்குடன் P.ஜைனுல் ஆபிதீன் அமைதியாக இறங்கினார். அவரிடம் எனக்கு அதிகமாகப் பிடிப்பது அவரது எளிமைப் பண்புதான். உணவு, உடை, உரை, எழுத்து, நடை, பாவனை,வாழ்க்கை முறை அனைத்திலும் எளிமை. அந்த எளிமைதான் அவரை நீண்டகாலம் மதிக்க வைத்துள்ள பண்பாகக் கருதப்படுகிறது.

தென்னிந்தியாவிலிந்து வந்திருந்த அனைவரையும் விட அவரது உரைதான் மக்களை அதிகம் ஈர்த்தது. வெள்ளிக் கிழமை சமூக ஒற்றுமை என்ற மகுடத்தில் அவர் உரையாற்ற மிம்பரில் ஏறிய போது, மக்கள் முண்டியடித்துக் கொண்டு முன்னே வந்து அமர ஆரம்பித்தனர். இதைத் தடுக்கும் முகமாக அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனீ அவர்கள் எழுந்து, மக்களை நோக்கி, இது ஜனாஸா

தொழுகையல்ல; ஜ"ம்ஆத் தொழுகை. எழுந்து ஸப்ஸப்பாக அமருங்கள் என்று கூறினார்.

அதுவரை, இலங்கை மக்கள் P.ஜைனுல் ஆபிதீன் அவர்களைப் பார்த்ததில்லை. அதுதான் அவரது இலங்கைக்கான முதல் விஜயம். அரபு நாடு சென்றவர்கள் அறிந்திருந்தார்கள். எனினும், அவரது எழுத்தும் பேச்சும் மக்களிடம் அவரது ஆளுமையை அடையாளப் படுத்தியிருந்தது என்பதற்கு இந்த நிகழ்வு ஆதாரமாக உள்ளது.

P.ஜைனுல் ஆபிதீன் அவர்கள் இதுவரை இலங்கைக்கு 5 தடவைகள் தஃவாவுக்காக வருகை தந்துள்ளார். 1990க்கு சற்று நெருக்கமான நேரத்தில் ஸலபிய்யாக் கலாபீடத்தில் ஆசிரியராக இருந்த உமர் அலி என்பவர், அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனியுடன் பல விவகாரங்களில் முரண்பட்டுப் பிரிந்து சென்று, ஜமாஅத்துல் முஸ்லிமீன் என்ற தனி இயக்கத்தை உருவாக்கினார்.

உமர் அலி, பறகஹதெனியவில் அமைந்துள்ள ஸலபியாக் கலாபீடத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் போது, நல்ல தவ்ஹீத் பிரசாரகராக இருந்தார். அவர் ஜமாஅதுல் முஸ்லிமீன் என்ற இயக்கத்தை உருவாக்கி தன்னை அமீராகப் பிரகடனம் செய்தார். தன்னிடம் பைஅத் செய்யாத அனைவரையும் காஃபிர்கள் என்று பகிரங்கமாகப் பிரசாரம் செய்தார்.

1990ம் ஆண்டு இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இரண்டு விடயங்கள் அதிர்வுகளை ஏற்படுத்தின. அதில் ஒன்று புலிப் பயங்கரவாதிகளால் வடமாகாண முஸ்லிம்கள் பலவந்தமாக 24 மணி நேரக் கெடுவிதிக்கப்பட்டு, தாயக மண்ணிலிருந்து வெளியேற்றப் பட்பட்டு, சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டனர்.

மற்றையது, ஜம்மிய்யத்து அன்சாரி சுன்னா முஹம்மதியாவி லிருந்து பிரிந்து சென்ற உமர் அலியின் இயக்கப் பிரசாரம். இதுதான் தவ்ஹீத்வாதிகளுக்கு மத்தியில் ஏற்பட்ட முதல் பிரிவினை என்று கூறப்படுகிறது.

P.ஜைனுல் ஆபிதீன் அவர்கள் இலங்கைக்கு முதல் தடவை வருகை தருமுன்னர் நடைபெற்ற இந்நிகழ்வு அன்ஸாருல்

ஸுன்னாவை மட்டுமல்ல, அனைத்து இலங்கைத் தவ்ஹீத் வாதிகளையும் அதிர வைத்தது. மக்கள் உமர் அலியின் கவர்ச்சியான பேச்சின் பக்கம் கவர்ந்திழுக்கப்பட்டனர்.

உமர் அலியின் பிரசாரம் இலங்கையில் சூடு பிடித்த போது, மக்கள் உமர் அலியின் அணியில் இணைவதைத் தடுக்கும் முகமாக 1992 ம் ஆண்டு 11ம் மாதம் 6,7,8 ஆகிய தினங்களில் அன்ஸாருஸ் ஸுன்னா முஹம்மதிய்யா 03 நாள் தொடர் மாநாட்டை பறகஹதெனியவில் ஏற்பாடு செய்தது. இம்மாநாட்டில் P.ஜைனுல் ஆபிதீன் கலந்து கொள்வதையிட்டு, அன்ஸாருஸ் ஸுன்னா "இலங்கையில் பீ.ஜே." என்ற சுவரொட்டிகளை நாடு முழுவதும் ஒட்டி விளம்பரம் செய்தது.

P.ஜைனுல் ஆபிதீன், அம்மாநாட்டில் மூன்று நாட்களும் மூன்று முக்கிய தலைப்புகளில் சிறப்புறையாற்றினார். மூன்றாம் நாள் இறுதி அமர்வில் பைஅத் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் பைஅத் என்றால் என்ன? பைஅத் யாரிடம் செய்ய வேண்டும்? எப்போது செய்ய வேண்டும்? ஒரு சிலர் நம்மைக் காஃபிர் என்று குருட்டுத் தனமாக உளறுவதால் நாம் காஃபிராகிவிட மாட்டோம் என்பதை ஆணித்தரமாக அவர் தெளிவுபடுத்திய போது, மக்கள் மயக்கம் தெளிந்து, உண்மையை உணர்ந்தனர். இந்த உரையின் பின்னர்தான் அன்ஸாருஸ் சுன்னா கூட பெருமூச்சுவிட்டது என்று அப்போது பலர் கருத்துத் தெரிவித்தனர்.

P.ஜைனுல் ஆபிதீன் கலந்து கொண்ட இம்மாநாடு பற்றி உண்மை உதயத்தில் அப்போது கட்டுரை வெளியிடப்பட்டது. "இந்திய நாட்டிலிருந்து சிறப்புப் பேச்சாளராக வருகை தந்திருந்த "அல்ஜன்னத்" இஸ்லாமிய கொள்கை விளக்க மாத இதழின் ஆசிரியர், இஸ்லாமிய உலகில் பீ.ஜே. என அழைக்கப்படும் மவ்லவி P.ஜைனுல் ஆபிதீன் (உலவி) அவர்களின் குத்பாப் பிரசங்கத்துடன் முதன் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாயின. "சமூக ஒற்றுமை" என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட பேருரையில், முஸ்லிம்கள் மத்தியில் பல பிரிவுகளும் குழுக்களும் தோன்றியுள்ளதனால் சமூகம் எவ்வாறு நலிவடைந்து செல்கின்றது என்பதையும், இன்றைய கால கட்டத்தில் வேற்றுமைகளை மறந்து முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும் என்பதையும் அழகு தமிழில் விபரித்தார்கள். அல்லாஹ்வின் அடியார்கள் இப்பிரசங்கத்தை உன்னிப்பாகக் கவனித்ததை அவதானிக்க முடிந்தது.

முதலாம் நாள் இறுதி அமர்வில் அறிஞர் P.ஜைனுல் ஆபிதீன் அவர்கள், "பித்அத் ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது உரையில் பித்அத்துக்கள் தோன்றக் காரணம், அவற்றை மக்கள் நம்புவதனால் ஏற்படும் தீய விளைவுகள், அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிவகைகள் என்பன பற்றி அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களுடன் ஹாஷ்யங்களைக் கலந்து கவர்ச்சிகரமாக விளக்கினார்கள். இச்சொற்பொழிவு அங்கு கூடியிருந்த அடியார்களின் உள்ளத்தில் சுருக்கெனப் பாய்ந்து, பூரண தெளிவை ஏற்படுத்தியதை அவதானிக்க முடிந்தது. அங்கு கூடியிருந்த அரபிக் கலாசாலைகளிலிருந்து சமூகமளித்திருந்த மாணவர்கள் இந்த நூற்றாண்டில் இப்படியானதொரு அறிஞர் பெருமகனைக் காண்பதரிது என வாய்விட்டுக் கூறினார்கள். (இந்த உரை, உரை நடையிலேயே நூலாக்கப்பட்டு, புத்தகமாக வெளியிடப் படுகிறது. இந்த உரையும் நூலும் 18 ஆண்டுகள் கடந்தும் இன்று வரை சவுதி ஜாலியாத்களில் இலவசமாக விநியோகிக்கப்பட்டுவருகிறது.)

**இரண்டாம் நாள்:** காலை உணவின் பின்னர் அறிஞர் P.ஜைனுல் ஆபிதீன் அவர்கள் "அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத் ஒரு விளக்கம்" எனும் தலைப்பில் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்கள். அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத் எனும் பெயர் யாருக்குரியது? அது எப்பொழுது தோன்றியது? அப்பெயர் தோன்றுவதற்குக் காரணம் என்ன? எனும் கேள்விகளுக்கு வரலாற்று ரீதியாக விளக்கமளித்தார்கள். இன்று இப்பெயரைத் தாங்கிப் பிடித்திருப்பவர்களெல்லாம் ஷீஆக்களின் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டவர்களாகவே காணப்படுவதற்கான ஆதாரங்களை அவரது உரையின் போது அடுக்கிக் கொண்டே சென்றார்கள். இறுதியாக, அல்குர்ஆனையும், சுன்னாவையும் அதன் தூயவடிவில் விளக்கி, அமல் செய்பவர்களே "சுன்னத் வல் ஜமாஅத்" பெயருக்குத் தகுதியானவர்கள் எனக் கூறித் தமது பிரசங்கத்தை முடித்தார்கள்.

**மூன்றாம் நாள்:** "பேரறிஞர் அல்ஜன்னத் ஆசிரியர் "P.ஜைனுல் ஆபிதீன்" அவர்கள் இன்று இலங்கை முஸ்லிம்கள் சிலர் மத்தியில் தினவெடுத்துள்ள "பைஅத்" பிரச்சினை பற்றி "பைஅத் பற்றிய சரியான இஸ்லாமியக் கண்ணோட்டம்" என்ற தலைப்பில் உருக்கமான – தெளிவானதொரு உரையை நிகழ்த்தினார்கள். அவர் தமது

உரையில் பைஅத் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? பைஅத் யாரிடம் செய்ய வேண்டும்? ஒரு தலைவருக்குரிய பண்புகள் யாவை? என்பன பற்றி உருக்கமாக விளக்கினார். இவ்வுரை, சில இளைஞர்களின் மத்தியில் படர்ந்திருந்த "பைஅத்" பற்றிய மாயத்திரையை அடியோடு சுருட்டி வீசியதை அவதானிக்க முடிந்தது.)

அவரது ஆளுமையை இலங்கையில் பலர் அறிந்திருந்தனர். அதனால்தான் அவருடன் பல தென்னிந்திய உலமாக்கள் வந்திருந்தபோதும், இலங்கையில் 50 வருட பழைமைவாய்ந்த "பழுத்த – மூத்த உலமாக்கள்" பலர் இருந்தபோதும், உமர் அலியின் புதிய போக்குகளைத் தோலுரித்துக் காட்டும் பைஅத் ஓர் ஆய்வு என்ற உரையை பீ.ஜைனுல் ஆபிதீனுக்கு வழங்கினர்.

இலங்கையில், 1990 களில் உமர் அலிவுடைய பிரச்சினை ஏற்பட்ட போது, அவரது வாதங்களை முறியடிக்க முடியாத நிலையில்தான் இங்குள்ள உலமாக்கள் இருந்தனர். அப்போது, இவர்கள் பைஅத் பற்றிப் பேச P.ஜைனுல் ஆபிதீனைத்தான் நாடினர். அவர் அறிவுப்பூர்வமாகவும் பைஅத் பற்றிய வரலாற்றுப் பூர்வமாகவும் உரையாற்றி, உமர் அலியின் பக்கம் திரண்ட மக்களை தடுத்து நிறுத்தினார். விவாதமும் செய்து, உமர் அலியை அவர் வாயாலேயே தோல்வியை ஒத்துக்கொள்ளச் செய்தார். விவாதத்தின் போது, இடைநடுவில் "இதற்கு நான் பதில் அளித்தால் மாட்டிக்கொள்வேன்" என்று உமர்அலி கூறினார். அப்போது, அரங்கத்தில் இருந்த அனைவரும் சிரித்துவிட்டனர்.

உமர் அலி, அன்ஸாருஸ் சுன்னாவிலிருந்து பிரிந்து போன போது, அவர் முன்வைத்த பைஅத் வாதங்களுக்கு பதில் அளிக்கத் தகுதியான எந்த உலமாவும் இலங்கையில் அப்போது இருக்கவில்லை என்று இந்திய உலமாக்களால் நோக்கப் பட்டது. உமர் அலி அனைவரையும் காஃபிர் என்று பகிரங்கமாகக் கூறியபோது, அதை முறியடிக்க இலங்கை உலமாக்கள் யாரும் அவருடன் விவாதிக்க முன் வரவில்லை. P.ஜைனுல் ஆபிதீன் 'பைஅத் ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் உரையாற்றித் தெளிய வைக்கும் வரை அனைவரும் மயக்கத்திலேயே இருந்தனர்.

# உமர் அலியுடன் பைஅத் விவாதம்

P.ஜைனுல் ஆபிதீன், முதல் தடவை இலங்கை வந்தபோது இலங்கையில் உமர் அலியின் பிரசாரம் சூடு பிடித்திருந்தது. பறகஹதெனியாவில் மாநாட்டில் உரையாற்றிய P.ஜைனுல் ஆபிதீன், ஏத்தாளைப் பள்ளியிலும் உரையாற்ற வருகை தந்தார். அந்தப் பள்ளியும் உமர் அலியின் பள்ளியும் அடுத்தடுத்து அமைந்துள்ளன. எந்த இடத்தில் உமர் அலியும் அவரது குழுவும் உள்ளதோ,அந்த இடத்திற்கு P.ஜைனுல் ஆபிதீன் உரையாற்றச் சென்றார்.

1992-11-10 அன்று ஏத்தாளை மஸ்ஜிதுர் ரஹ்மானில் ஏற்பாடாகி இருந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்ற வருகை தந்த உலமாக்களை, கடிதம் மூலமும் நோட்டீஸ் மூலமும் உமர் அலி அழைத்தார். ஒலிபெருக்கி மூலமும் அழைப்பு விடுத்தார். P.ஜைனுல் ஆபிதீன், உமர் அலியின் அழைப்புக்கு பதிலளித்தார். அதன் பின்னர் நடைபெற்ற இருவருக்குமிடையிலான விவாதம் என்பன பற்றி 1993 ஆகஸ்ட் மாத அல் ஜன்னத்தில் *மயக்கம் தெளிந்தது* என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதப்பட்டது. அக்கட்டுரையின் முக்கிய சில பகுதியை இங்கு தருவது விவாதப் பின்னணியைப் புரிந்து கொள்ளத் துணை செய்யும் எனக் கருதுகின்றேன்.

“கடந்த சில ஆண்டுகளாக எமது நாட்டில் தவ்ஹீத் பிரசாரத்தில் தேக்கம் ஏற்படும் அளவுக்கு எம்மிடையே சில கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. எம்மிடையே ஒரு தாயியாக இருந்த உமர் அலியாரும் சிலரும் நாங்கள் சிலருமாகப் பிரிந்து இயங்கும் நிலை ஏற்பட்டது. எங்களுக்கு மத்தியில் நல்லுறவு ஏற்பட குர்ஆன் - ஹதீஸ் அடிப்படையில் முயற்சிகள் செய்யப்பட்டதும் உண்டு. அதன் தொடர்பாகப் பலமுறை இரு தரப்பும் சந்தித்துக் கதைத்துக் கொண்டதும் உண்டு.

உமர் அலியார் சில ஆண்டுகளுக்கு முன்பதாக ‘ஜமாஅத்துல் முஸ்லிமீன்’ என்று ஒரு ஜமாஅத்தை ஸ்தாபிதம் செய்து கொண்டு, அதற்குத் தம்மையே அமீராகவும் அறிவித்துக் கொண்டார். தம்மிடம்

பைஅத் செய்து, முஸ்லிம் ஜமாஅத்தில் இணையாதவர்கள் காபிர்கள் என்று சொன்னார்.

"யார் பைஅத் இல்லாமல் மரணிக்கிறாரோ அவர் அறியாமைக் கால மரணத்தைத் தழுவுகிறார்" என்ற ஒரு ஹதீஸை வைத்துக் கொண்டு, தமது ஜமாஅத்தைச் சேராதவர்கள் அனைவரையும் – மொத்த உலக முஸ்லிம்களையுமே – காபிர்கள் என்றார். "ஜமாஅத்துல் முஸ்லிமீனையும் பற்றிப் பிடித்துக் கொள்" என்று வருகின்ற ஹதீஸையும் உமர் அலியார் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தத் தொடங்கினார்.

முஸ்லிமில் வரும் ஹதீஸில் பைஅத் என்று கூறப்படுவது தம்மிடம் பைஅத் செய்வது தான் எனவும் ஜாஹிலியத்தில் மரணிப்பது என்பது காபிர்களாக மரணிப்பது எனவும் உமர் அலியார் விளக்கம் அளித்துத் தமது நாவன்மையால் சிலரை நம்பச் செய்தார். அவரது பேச்சை நம்பி எம்முடனிருந்த சகோதரர்களில் சில நூறு பேர் அவருடன் இணைந்தனர். எங்களில் சிலர் சிந்தனையை முற்றாக அவரிடம் அடகு வைத்த பரிதாப நிலையை நாங்கள் காண நேர்ந்தது.

தம்மிடம் பைஅத் செய்த ஜமாஅத்தினர் தவிர அனைவரும் காபிர்கள் ஆனதால், காபிர்களின் வசமுள்ள கஃபாவுக்கு ஹஜ் செய்யச் செல்லக் கூடாது என்று சென்னது மிகப் பெரிய கொடுமை.

நிலைமை இப்படியிருக்க, ஜம்யிய்யது அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யாவின் அழைப்பின் பேரில் முஅஸ்கருக்கு (மாநாட்டிற்கு) இந்தியாவிலிருந்து எமது நாட்டிற்கு வருகை தந்த உலமாக்களை தஃவத் என்ற முறையில் கடிதம் மூலமும் நோட்டீஸ் மூலமும் உமர் அலியார் அழைத்தார். 1992-11-10 ஆம் திகதி தமது ஊரான ஏத்தாளையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசவந்த இந்திய உலமாக்களைத் தம்முடன் கதைக்க வருமாறு கடிதம் மூலமும் ஒலிபெருக்கி மூலமும் அழைப்பு விடுத்தார். அல்ஜன்னத் ஆசிரியர் P.ஜைனுல் ஆப்தீன், உமர் அலியாரின் அழைப்புக்கு பதிலளித்தார்.

"நாங்கள் ஒரு ஜமாஅத்தின் அழைப்பில் வந்துள்ளோம் அவர்களால் எங்கள் நிகழ்ச்சிகள் முன்னரே ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன. நாங்கள் இந்தியா சென்றதும் எங்களுக்கு உமர் அலியார்

அழைப்பு அனுப்பினால், எங்கள் செலவில் வந்து, பகிரங்கமாக விவாதிக்கத் தயார் என்று அந்த கூட்டத்திலேயே P.ஜைனுல் ஆப்தீன் பதிலளித்தார்.

அதன் பின்னர், 1993-07-14 புதன்கிழமை புத்தளம் நகர சபை மண்டபத்தில் விவாதம் நடைபெற்றது. உமர் அலி தம் விவாதத்தில் “யார் பைஅத் இன்றி மரணிக்கின்றாரோ அவர் அறியாமைக்கால மரணத்தைத் தழுவுகிறார்“ என்று முஸ்லிமில் வரும் ஹதீஸையும் அஹ்மதில் வரும் இதே கருத்துள்ள இன்னொரு ஹதீஸையும் முன் வைத்து, பைஅத் அவசியம் எமது ஜமாஅத்தில் பைஅத் செய்யாத ஜைனுல் ஆப்தீன் உட்பட அனைவரும் காபிர்கள் என்று தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

இதற்கு பதிலளிக்கும் போது, ஜைனுல் ஆப்தீன் பல கேள்விகளை எழுப்பினார். அவற்றில் ஒரு கேள்விக்கும் உமர் அலியார் பதில் கூறவில்லை. அவரது கேள்வியின் சாரம் பின்வருமாறு அமைந்திருந்தது.

நபியவர்கள் இவ்வாறு உமர் அலியிடம் நேரடியாகக் கூறவில்லை. இப்னு உமர் (ﷺ) அவர்களிடம் இதைக் கூறினார்கள். அவர் நாஃபிவு என்பவரிடம் கூறினார். அவர் ஸைத் பின் முஹம்மதிடம் கூறினார். அவர் ஆஸிம் என்பாரிடம் கூறினார். அவர் முஆத் என்பாரிடம் கூறினார். அவர் உபைத் என்பாரிடம் கூறினார். அவர் முஸ்லிம் என்பாரிடம் கூறினார் என்ற வரிசையிலேயே இந்தச் செய்தி முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

இவர்களெல்லாம் யார்? உண்மையிலேயே உலகத்தில் வாழ்ந்தவர்களா? கற்பனைப் பாத்திரங்களா? உண்மையிலேயே உலகத்தில் வாழ்ந்தவர்கள் என்றால், அதை எப்படி அறிந்து கொண்டீர்கள்? பைஅத் செய்யாதவர்கள் ஜாஹிலிய்யத்தான - அதாவது காபிரான - மரணத்தை தழுவுவார்கள் என்பதை அறிவிக்கும் இவர்கள் பைஅத் செய்தவர்கள்தானா? பைஅத் செய்யாத சிலரும் இவர்களில் உள்ளனர். பைஅத் செய்யாதவர் காபிர் என்ற உங்கள் வாதப்படி இவர்களும் காபிராகிவிட்டனர். காபிர்கள் வழியாக இது அறிவிக்கப்படுகிறது - (உங்கள் கருத்துப்படி)

இதைக் கூறியவர்களே காபிர்கள் எனும் போது, அவர்கள் கூறிய இந்தச் செய்தியை நீங்கள் எப்படி நம்பினீர்கள்? பைஅத் செய்யாத அவர்கள் காபிர்கள் அல்லர் என்பது உங்கள் பதிலானால், பைஅத் செய்யாவிட்டால் காபிராக மாட்டார்கள் என்பதை நீங்களே ஒப்புக் கொண்டவராவீர்கள்.

அல்லது இந்தச் செய்தியை நபியவர்களிடம் கேட்டீர்களா? நீங்களே கேட்கவில்லையானால் சரித்திரத்தின் துணை கொண்டே நபிமொழி என்று நீங்கள் அறிந்ததாகச் சொன்னால், நீங்களே சரித்திரத்தை ஏற்றுவிட்டீர்கள். சரித்திரத்தை ஏற்பவன் காபிர் என்ற உங்கள் வாதப்படி, உங்களுக்கே அந்தப் பட்டத்தைச் சூட்டிக் கொண்டீர்கள். ஹிஜ்ரி 40க்குள் நடந்த சம்பவங்களை நபியின் முன்னறிவிப்புடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களை கூறினால் அது சரித்திரம் என்று நிராகரித்த நீங்கள், ஹிஜ்ரி 200ஆம் ஆண்டில் வாழ்ந்த முஸ்லிம் என்பவரை, அவர் நல்லவர் என்பதை எப்படி ஏற்றீர்கள்?

இந்தக் கேள்விக்கு விடை கூறாமல் அடுத்த விஷயத்திற்கு செல்ல முடியாது என்பதில் ஜைனுல் ஆப்தீன் உறுதியாக இருந்தார். இவற்றுக்கு பதில் சொல்வதில்லை என்பதில் உமர் அலியும் உறுதியாக இருந்தார். இவற்றுக்குரிய நேரடியான பதிலில் அவரது சாயம் வெளுத்து விடும் என்ற அச்சத்தில் “அல்லாஹ்வின் மீது ஆணையாக இது நபிமொழி தான்” இப்படித்தான் கடைசி வரை கூறினாரே தவிர பதில் கூறவில்லை. ஒரு கட்டத்தில் இவற்றுக்கு பதில் சொன்னால் “நான் மாட்டிக் கொள்வேன்” என்று கூறியதும் சபையே கொல்லென்று சிரித்தது.

உமர் அலியார் பதில் சொல்லாமல் மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார். “இந்த ஜமாஅத்தில் பைஅத் செய்யாதவர்கள் காபிர்கள். எனவே, பைஅத் செய்து கொண்டு முஸ்லிம் ஜமாஅத்தில் நுழையுங்கள். குர்ஆன்–ஸுன்னாவை ஆதாரம் என்று ஏற்றுக் கொண்டு இப்போது இந்த ஹதீஸைச் சொன்னவர் காபிரா முஸ்லிமா என்கிறார். எங்களது தலையங்கம் நீங்கள் காபிரா? இல்லையா? என்பதுதான். இவர் வரலாற்றை எடுக்கிறார். நான் இதற்குப் பதில் சொன்னால் பிடித்துக் கொள்வார்’

என்றார். ஜைனுல் ஆப்தீன் தமது அடுத்த உரையில் "வரலாற்றைச் சொல்வது ஷிர்க் என்று உமர் அலி கூறியதன் அடிப்படையில் வரலாற்று ரீதியாக உள்ள தொடரில் ஹதீஸைச் சொன்னதால் தாங்கள் முஷ்ரிக்குகள் என்பதை ஒப்புக் கொண்டார் என்றார்.

உமர் அலி மீண்டும் பேசும் போது, நபி (ஸல்) காலத்தில் ஒருவர் இஸ்லாத்தை ஏற்பதாக இருந்தால் நாயகம் அவர்களிடம் நேரில் வந்து "நீங்கள் அல்லாஹ்வின் தூதர்' என்று முன்னிலை யாகத்தான் கூறவேண்டும். அது போல் ஒருவர் இஸ்லாத்தை ஏற்க வேண்டுமானால் அமீராகிய என்னிடம் நேரில் வந்து கூற வேண்டும் இல்லாவிட்டால் அவர் முஸ்லிமே இல்லை என்பதாகக் கூறினார்.

"அப்படியானால் உமர் அலியாகிய உங்களிடம் நேரில் வந்து நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்று கூற வேண்டுமா? உங்களை இறைத் தூதராக பிரகடனம் செய்கிறீர்களா?" என்று ஜைனுல் ஆப்தீன் கேட்டதற்கு – திரும்பத் திரும்பக் கேட்டதற்கு – உமர் அலி பதிலும் கூறவில்லை மறுக்கவும் இல்லை.

ஃபாதிமா (ரழி) பைஅத் செய்யாத சம்பவம் பற்றிய ஹதீஸ் புகாரியில் இடம் பெற்றதாக P.ஜைனுல் ஆபிதீன் கூறியதற்கு, அது பொய்யான செய்தி என்றார், உமர் அலி. உடனே, ஜைனுல் ஆப்தீன் "பொய்யும் மெய்யும் கலந்துள்ள புகாரி முஸ்லிமிலிருந்து மெய்யானவற்றை எப்படி கண்டறிந்தீர்கள். அறிவிப்பாளர்களின் சரித்திரத்தை வைத்தா? அல்லது உங்களுக்கு தனியாக வஹீ வந்ததா? வரலாற்றின் துணையால் இவற்றை நபிமொழி என்றால் உங்கள் வாதப்படி நீங்கள் காபிராகி விடுவீர்கள். வரலாறு தேவையில்லை என்றால் நபிமொழி என்று எதைச் சொன்னாலும் நம்புவீர்களா? கைத்தடி வைத்துக் கொள்வது மூஃமினுக்கு அடையாளம் என்றும் ஹதீஸ் உள்ளது. அதன்படி உங்களிடம் கைத்தடி இல்லாததால் உங்களை காபிர் என்று சொல்லலாமா? இந்த ஹதீஸ் சரியானது இல்லை என்று நீங்கள் சொல்வதாக இருந்தால், எப்படி இந்த முடிவுக்கு வந்தீர்கள்" என்று ஜைனுல் ஆப்தீன் கேட்டதற்கு, உமர் அலியிடம் இருந்து எந்த பதிலும் இல்லை.

காலை 8 மணி முதல் மாலை 9 மணிவரை விவாதம்

நடக்குமென ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், பகல் 11 மணிக்கே பதில் இல்லாமல் விழித்த உமர் அலியார் முபாஹலாவுக்கு அழைத்தார். தொடர்ந்து ஜைனுல் ஆப்தீன் தொடுத்த ஒவ்வொரு கேள்விக்கும் முபாஹலாவுக்குத் தயாரா என்று கேட்டு விவாதத்தை முடிப்பதிலேயே உமர் அலி குறியாக இருந்தார்.

விவாதத்தின் போதே மக்கள் உண்மையை விளங்கிக் கொண்டனர். என்றாலும், முபாஹலாவைக் காரணம் காட்டி அவர் மக்களை ஏமாற்றக் கூடாது என்பதற்காக P.ஜைனுல் ஆபிதீன் அதையும் ஏற்றார்.

முபாஹாவுக்கு அழைப்பதற்கு சத்தியத்தில் இருக்கும் தங்களுக்கே உரிமை இருப்பதாக் கூறி இந்தியாவிற்கு அழைத்தார். உமர் அலி அழைப்பை ஏற்று நாம் இலங்கை வந்தது போல் தமது அழைப்பை ஏற்று அவர் இந்தியா வர வேண்டும் என்று கூறியபோது உமர் அலி பல காரணங்களைக் கூறித் தட்டிக் கழிக்கப் பார்த்தார். அவற்றுக்கு விளக்கம் கூறிய பின் தம்மிடம் பணம் இல்லை என்றார். கொழும்பு தவ்ஹீத் ஜமாஅத், உமர் அலிக்கு அவரது குடும்பத்துக் குமாகப் போக்கு வரத்துச் செலவை ஏற்றனர். இந்தியாவிற்கு உமர் அலி எப்போதும் வரலாம். நாம் தயாராக இருப்பதாக P.ஜைனுல் ஆபிதீன் அறிவித்த உடன், ஐந்து மணிக்கே விவாதம் முடிவுக்கு வந்தது.

P.ஜைனுல் ஆபிதீன் தரப்பில் மவ்லவி அப்துல் வதூத் ஜிப்ரி, அன்ஸார் மவ்லவி, ஸைபுல்லாஹ் ஹாஜா, எம்.ஐ. சுலைமான் ஆகியோரும் உமர் அலி தரப்பில் நதீர் மவ்லவி, அஸ்லம், நைரோஸ், ரஃபீக் ஆகிய மவ்லவிகளும் கலந்து கொண்டனர். மொத்தத்தில் உமர் அலியின் பிடியில் சிக்கியிருந்த பலர் மயக்கம் தெளிந்தனர். பலர் அவரிடம் செய்த பைஅத்தை முறித்துக் கொண்டதாகவும் எம்மிடம் தெரிவித்தனர். அல்ஹம்துலில்லாஹ்! இந்த விவாதம் முழுமையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (அல்ஜன்னத்,ஆகஸ்ட் 1993 ப: 3-9)

**உமர் அலியின் தயக்கமும் தட்டிக்கழிப்பும்:** புத்தளம் நகர மண்டபத்தில் நடைபெற்ற விவாதத்தில் P.ஜைனுல் ஆபிதீன் அவர்கள் உமர் அலியிடம் கேட்ட கேள்விகளுக்கு “நான் பதில் அளித்தால் மாட்டிக் கொள்வேன்” என்று கூறிய உமர் அலி முபாஹலா என்ற பூச்சாண்டி காட்டி தப்பிக்க முனைந்தார்.

விவாதம் முடிந்த சில நாட்களில் உமர் அலி தனது ஆதரவாளர்களை தக்க வைப்பதற்காக கிட்டத்தட்ட ஒன்பது ஆடியோ கெஸட் வெளியிட்டார். அது விவாதத்தில் நான் மாட்டிக் கொள்வேன் என்று கூறியதைவிட தமாசாக இருந்தது. அசகாயசூரன் போன்று வாய்ச்சவடால் விட்ட உமர் அலி, முபாஹலா செய்ய இந்தியா செல்லவில்லை. விவாதத்தின் பின்னர் இருவருக்குமிடையே பல கடிதப் போக்கு வரத்துகள் நடந்தன.அவர் P.ஜைனுல் ஆபிதீனிற்கு அனுப்பிய கடிதங்களையும் அவற்றிற்கு P.ஜைனுல் ஆபிதீன் எழுதிய பதில்களையும் உமர் அலி அவர்கள் ஏத்தாளையில் உள்ள அவரது பள்ளிக்கு முன்னாலுள்ள அவரது விளம்பரப் பலகையில் தொங்கவிடுவார்.

நான் ஸலபிய்யாவில் மாணவனாக இருக்கும் போது, அங்கு எனது உறவினர் வீட்டுக்கு விடுமுறையில் செல்லும் போது, அவற்றைப் படிப்பதுண்டு. அப்போதெல்லம் உமர் அலி ஏன் தயங்குகின்றார் என்ற கேள்வி எழும்.

உமர் அலிக்கு எனது குடும்பத்தோடு நெருக்கம் இருந்தது. பைஅத் பிரசாரத்தைத் துவக்கு முன்னர், அவர் ஸலபிய்யாவில் ஆசிரியராக இருந்த போது, எங்கள் வீட்டுக்கு ஒருதடவை எனது தந்யைப் பார்க்க வந்திருந்தார். அப்போது என்னை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு, நீங்கள் எல்லாம் வஹ்ஹாபியாக மாறிவிட்டீர்கள்; நாங்கள் திருத்த வந்துள்ளோம் என்று நகைச்சுவையாகக் கூறினார். அவர் எங்கள் ஊருக்க வரும் போது, எனது தந்தையால் தவ்ஹீத் பிரசாரம் சூடுபிடித்திருந்தது. அவரும் அங்கு பிரசாரத்திற்கே வந்தார்.

நான் பள்ளியில் விரல் ஆட்டியதற்காக சிகரட்டால் முகத்தில் சுடப்பட்டேன். அப்போது, எனக்கு வயது எட்டைக் கூடத் தாண்ட வில்லை. எங்கள் குடும்பத்தை ஊரைவிட்டே ஒதுக்கி வைத்திருந் தார்கள். எனது தந்தை தாக்கப்பட்டு, எங்கள் குடும்பமே மக்கா வாழ்க்கையை அனுபவித்த நேரம் அது. அந்த இக்கட்டான சூழலில் உமர் அலி எங்கள் ஊருக்கு வந்து பல இடங்களில் உரையாற்றி, மக்களின் ஐயங்களுக்குப் பதில் அளித்தார்.

எனது பாட்டனை, உமர் அலி அடிக்கடி சந்தித்து, அவரிடம் பைஅத் செய்யுமாறு வலியுறுத்தி வந்தார்.அவர் ஏகத்துவக்

கொள்கையில் தெளிவாக இருந்ததால் பைஅத் செய்யாமலேயே வபாத்தாகிவிட்டார். முபாஹலா பற்றி அவர் என்னிடம் பேசிய நினைவு உண்டு. உமர் அலியின் தயக்கம் அவரை இதிலிருந்து காப்பாற்றிய காரணங்களில் ஒன்று என நான் நினைக்கின்றேன். P.ஜைனுல் ஆபிதீன் அவர்கள் உமர் அலி அவர்களுக்கு கடிதம் மூலமாகவும் அல்ஜன்னத் மாத இதழிலும் பகிரங்க அழைப்பு விடுத்துக் கொண்டே இருந்தார். உமர் அலி தயக்கத்தால் தட்டிக்களித்துக் கொண்டே இருந்தார்.

பல மாதங்கள் ஆனபின்னரும் அவர் வரத் தயங்கிக் கொண்டிருந்த போது, அல்ஜன்னத்தில் P.ஜைனுல் ஆபிதீன் "உமர் அலியே வருக! தயக்கமா தட்டிக்கழிப்பா" என்று அல்ஜன்னத் : நவம்பர், 1993 ப: 17) ல் பகிரங்கமாக பின்வரும் அழைப்பை விடுத்திருந்தார்.

"உமர் அலியே வருக! கடந்த ஜுலை மாதம் இலங்கையில் உமர் அலியுடன் விவாதம் நடந்ததும் விவாதத்தின் இடையிலேயே முபாஹலாவுக்கு அவர் அறைகூவல் விடுத்ததும் அதை நான் ஏற்றதும் அனைவரும் அறிந்ததே.

நான் இலங்கையை விட்டுப் புறப்படும் முன் "இந்தியாவில் எந்த இடத்திலும் எந்த நாளிலும் முபாஹலாவுக்காக நீங்கள் வரலாம்; பதினைந்து நாட்களுக்கு முன் எனக்குத் தெரிவித்து விட வேண்டும்" என்று கடிதம் எழுதி அவரிடம் சேர்ப்பித்து விட்டு, அவரும் அவரது குடும்பத்தாரும் இந்தியா வந்து செல்லும் செலவுக்கு பொறுப்பாளர்களை நியமனம் செய்து விட்டு வந்தேன்.

மாதங்கள் பல உருண்டோடியும் உமர் அலி வந்த பாடில்லை. வரும் எண்ணமும் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இடம் நாள் உட்பட எல்லா விஷயத்திலும் முடிவு செய்யும் அதிகாரத்தை அவரிடமே வழங்கி எழுதிக் கொடுத்திருந்தும் "ஒப்பந்தம் செய்யாத தால் வர இயலவில்லை" என்று மழுப்பல் கடிதம் அனுப்பியிருக்கிறார். நாம் கையெழுத்திட்டு, ஆட்கள் வழியாக நேரில் சமர்பித்த கடிதத்தையே ஒப்பந்தமாக எடுத்துக் கொண்டு அவர் வந்திருக்க வேண்டும்.

அவரது வழியில் அவருக்கே நம்பிக்கையில்லாத நிலையில், முபாஹலாவைச் சந்திக்க அவர் தயங்குகிறார் என்பது இதன் மூலம் நிரூபணமாகின்றது. அவரை நம்பிய அவரது சகாக்கள் யாரேனும் இருந்தால், அவரை நிர்ப்பந்தம் செய்து, இந்தியாவுக்கு அனுப்பி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர் மறுத்தால், அவர் தமது கொள்கை தவறு என்பதை ஒப்புக் கொள்ளுமாறு அவரது சகாக்கள் நிர்ப்பந்திக்க வேண்டும். அதற்கும் மறுத்தால் அவரை இனம் கண்டு கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவரை வரவழைக்கும் வகையில் கடிதப் போக்கு வரத்துக் களையும் தொடர்ந்து நடத்தி வருகிறோம் என்பதை இலங்கைச் சகோதரர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். முபாஹலா அழைப்பை நான் ஏற்றுக் கொண்டதால் இவ்விளக்கம் அவசியமாகிறது.

அன்புடன்,
P.ஜைனுல் ஆபிதீன்.

இந்த அழைப்புக்கும் உமர் அலி பதில் அளிக்கவில்லை. இவர் தயங்குகின்றார் இனி இவரை அழைத்துப் பயன் இல்லை என்பதால் P.ஜைனுல் ஆபிதீன், உமர் அலியை அழைப்பதை விட்டு விட்டார். அந்த அறிவிப்பையும் அல்ஜன்னத்தில் பகிரங்கமாகவே வெளியிட்டிருந்தார்.

1992 ஆம் ஆண்டு பறகஹதெனிய மாநாடு முடிந்த பின்னர் நாடு சென்றுவிட்டு, உமர் அலியின் சவாலை எதிர் கொள்வதற்காக இரண்டாவது தடவை உமர் அலியுடனான விவாதத்திற்காக P.ஜைனுல் ஆபிதீன் 1993 இல் மீண்டும் இலங்கை வந்தார்.

அந்த விவாதத்தின் விளைவு அந்தக் கொள்கை வளர்ச்சி தடுக்கப்பட்டு, உமர் அலியை ஒரு நூறு பேருடன் மட்டுப்படுத்தி விட்டது.

“இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்டது. இன்னும் உமர் அலி முபாஹலாவிற்குச் செல்லவில்லை.முபாஹலா செய்யும் நிலையில் இன்று இருவரும் இல்லை. எனினும், அந்த விவாதத்தின் விளைவால் உமர் அலியின் கோட்டை சரிந்து போனது.”

அன்று, உமர் அலி என்பவர் தன்னிடம் பைஅத் செய்யாதவர்

அனைவரும் காபிர் என்றார். இன்று அது போன்ற ஒரு குருட்டு வாதத்தை முன்வைத்து, அதே P.ஜைனுல் ஆபிதீன் அவரது ஹதீஸ் மறுப்பை ஏற்காதோரை முஷ்ரிக் என்று வாதிட்டு வருகின்றார். இதனால், அவர் இஸ்லாமிய உம்மத்திற்கு மத்தியில் பெரும் சர்ச்சைகளையும் சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளார்.

**மருதமுனை விவாதம்:** 1994களில் ஏ.எல்.பத்ருத்தீன் என்ற ஹுஃப்புல் அவ்லியா என இலங்கை மக்களால் அழைக்கப்படும் கந்தூரியை ஆதரிக்கும் அணியுடன் விவாதம் செய்வதற்காக அன்ஸார் சுன்னாவின் அழைப்பில் மூன்றாவது தடவை P.ஜைனுல் ஆபிதீன் இலங்கை வந்தார்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மருதமுனை என்ற ஊரில் 31.01.1994, 01.02.1994 ஆகிய இரண்டு நாட்கள் அந்த விவாதம் நடை பெற்றது.

பின்வரும் நான்கு தலைப்புகளில் அந்த விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- ✍ அல்லாஹ் அல்லாதவர்களுக்காக, கந்தூரிகளில் அறுக்கப்பட்ட பிராணிகள் உண்பது ஹலாலா? ஹராமா?
- ✍ நடைமுறையிலுள்ள கத்முல் குர்ஆனும் கப்ராளிகளும்?
- ✍ மவ்லூது ஓதலாமா?
- ✍ கந்தூரி மற்றும் நினைவு நாட்கள் கொண்டாடலாமா?

இந்த விவாத Audio,Video பதிவுகள் என்னிடம் இல்லை. அதனால், இந்த விவாதத்தின் தன்மையை என்னால் முழுமையாக விவரிக்க முடியவில்லை.

இந்த விவாதத்தை நேரடியாகப் பார்த்த நண்பர் ஒருவர் பல ஆண்டுகளுக்கு முன்னருள்ள அந்த விவாதக் கள நினைவுகளை தனது நினைவுப்பட்டறையிலிருந்து கொஞ்சம் விபரித்தார்.

இன்று, P.ஜைனுல் ஆபிதீன் விவாதத்தில் கடைப்பிடிக்கும் ஒற்றைக்கு ஒற்றை என்ற நிலை அன்று இருந்திருக்குமென்றால் நன்றாக இருந்திருக்கும்.

அத்தோடு, ஏகத்துவ எதிரணியினர் அரபி இலக்கண சட்டங்களைக் கேட்ட போது, P.ஜைனுல் ஆபிதீன் தெளிவாகப் பதில் அளித்தார். அரபி இலக்கண விதிகளில் ஆழமான புலமை அவருக்கு உண்டு என்றும் கூறினார்.

எதிரணியினர் என்ன கேள்வி கேட்டனர். அதற்கான P.ஜைனுல் ஆபிதீனுடைய பதில்கள் என்ன என்று ஒளி-ஒலி நாடாக்கள் கிடைக்காததால் இங்கு விவரிக்க முடியவில்லை. P.ஜைனுல் ஆபிதீன் சந்தித்த விவாதங்கள் பற்றி தனித் தலைப்பில் எழுதி உள்ளேன்.

இந்த விவாதம் முடிந்த பின்னர் P.ஜைனுல் ஆபிதீன் தென்னிந்தியா சென்ற பின்னர், "இரு சாராரும் விவாதம் பற்றிய சர்ச்சைகளில் ஈடுபடக் கூடாது. விவாத விடியோவைப் பார்த்துக் கொள்ளவும்" என்று அல்ஜன்னத் மாத இதழில் ஓர் அறிக்கை விட்டிருந்தார்.

**BMICH விவாதம் :** அஹ்லுஸ் ஸுன்னத்வல் ஜமாஅத் என்போர் யார்? என்ற தலைப்பில் இந்த விவாதம், ஷபாப் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் வீடியோக்கள் இலங்கை விவாதம் என்ற தலைப்பில் இணைய தளங்களில் உள்ளன.

✍ 2001 ஆம் ஆண்டு ஷபாப் ஏற்பாடு செய்த BMICH விவாத்தில் கலந்து கொள்ள வந்த P.ஜைனுல் ஆபிதீன் விவாத்தின் பின்னர் பறகஹதெனி ஜம்இய்யாவின் அழைப்பை ஏற்று அங்கு பல்லின மக்களுக்கு மத்தியில் முஸ்லிம்கள் என்ற தலைப்பில் 22-07-2001 அன்று உரையாற்றினார். அது வரை நடந்த மாநாடுகளில் அங்கு காணாத மக்கள் கூட்டத்தை அன்று பறகஹதெனியவில் காண முடிந்தது. அவரது உரையின் துவக்கம் பெரும் வரவேற்பைப் பெற்றாலும் உரையின் இறுதிப் பகுதி இயக்கங்களை கடுமையாக விமர்சித்ததால் அவர் விமர்சனத்துக்கு ஆளானார்.

பல்லின மக்களுக்கு மத்தியில் முஸ்லிம்கள் என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரையின் பின்னர், உஸ்தாத் மன்சூர் நளீமி அவர்களுடன் சந்திப்பு நிகழ்ந்து. அது வீடியோவில் பதிவும் செய்யப்பட்டது. இந்த சந்திப்பின்போது, பைஅத், அவர்களின் இரகசிய

செயற்பாடு தொடர்பாகப் பேசப்பட்டது. நாங்கள் பைஅத் வாங்கவில்லை. ஓர் உறுதி மொழி வாங்குகின்றோம் என்று உஸ்தாத் மன்சூர் கூறினார். அதற்கு P.ஜைனுல் ஆபிதீன் பதில் அளிக்கும் போது, உறுதி மொழி வாங்குவதற்குத் தான் அரபியில் பைஅத் என்று அழைக்கப்படும் என்று கூறினார். உஸ்தாத் மன்சூர், P.ஜைனுல் ஆபிதீனின் தர்ஜமா தொடர்பாக விமர்சனம் செய்திருந்தார். அவரது இணையதளத்தில் அதற்கும் P.ஜைனுல் ஆபிதீன் மறுப்பளித்துள்ளார்.

திஹாரியில் அவர் ஆற்றிய உரையில் மத்ஹப் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. அஹ்மதில் பதிவாகியுள்ள முதல் ஹதீஸில் மத்ஹப் என்றால் கக்கூஸ் என்று அர்த்தம் உள்ளது என்றார். இது மத்ஹப் ஆதரவாளர்களால் கண்டிக்கப்பட்டது. எனினும், அவர் குறிப்பிட்டது பொய்யல்ல; உள்ளதைத்தான் குறிப்பிட்டார்.

மீள்பார்வை இச்சந்திப்புத் தொடர்பாக இவ்வாறு விமர்சனம் செய்தது. *"மத்ஹப் என்றால் கக்கூஸ் (மலசலகூடம்) என்று கூறி மக்கள் மனதில் மத்ஹப் பற்றிய மரியாதையை மலினப்படுத்தி விடுகிறார்கள். அதைவிட ஒருபடி மேலே சென்று மத்ஹபில் யூத கிறிஸ்தவ சதி என்று கூறி இஸ்லாத்தின் சட்டப் பாரம்பரியத்தை அழித்தொழிக்கும் முயற்சி நடக்கிறது. இதன் தொடராய் அந்த மத்ஹபுகளின் இமாம்கள் தூற்றப்படுகிறார்கள். அவர்கள் பற்றிய மதிப்புணர்வு மக்கள் மனங்களில் இருந்து அப்புறப்படுத்த ப்படுகிறது. தொடராய் மற்றொரு வேலையும் நடக்கிறது. அந்த மத்ஹபுகளை சார்ந்து நிற்கும் கிராமங்களின் இன்றைய மவ்லவி மார்களும் கொச்சைப்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் மீது மக்கள் வைத்திருந்த கண்ணியம் அழிக்கப்படுகிறது. இளைஞர்கள் அவர்களுக்கு எதிராக தூண்டப்படுகிறார்கள். அவர்களது பேச்சை கேட்கவோ, கட்டுப்படவோ கிராம மக்கள் தயாராக இல்லை. மவ்லவி என்ற ஒரு தலைமையின் கீழ் ஒன்று திரண்டிருந்த கிராம மக்கள் சிதறடிக்கப்படுகிறார்கள்.*

*மத்ஹபுகள் அவசியமற்றதாகக் காண்பது என்பது முஸ்லிம் சமூகம் தனது வரலாற்றை வேண்டாம் என்பதாகும். இன்றைய உலகின் கலாசார அறிவியல் போட்டியில் வெற்றி*

*பெறுவதற்கு அந்த பழைய பாரம்பரியங்கள் துணை நிற்கப் போகின்றன. வரலாறு இல்லாத பாரம்பரியங்கள் இல்லாத ஒரு சமூகம் எதிர் காலத்தில் எழுந்து நிற்கப் போவதில்லை. மத்ஹபுகள் எனும் இஸ்லாத்தின் இந்த சட்டப் பாரம்பரியம் வேறு எந்த சமூகத்திற்கும் வாய்த்திராத ஒரு பொக்கிஷம். அதனை முஸ்லிமல்லாதோரே ஏற்றுக் கொள்கின்றனர். சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த இலங்கையைச் சேர்ந்த வீரமந்திரி என்பவர், இஸ்லாமிய சட்ட பாரம்பரியத்தை மறந்து விட்டு நவீன உலக சட்டம் செல்ல முடியாது. ஏனெனில், அப்போது ஒரு சிறகிழந்த பறவை போல் தான் சட்டம் காணப்படும் என்பதாக குறிப்பிட்டார்.*

*நிகழ்கால எதிர்கால சட்ட உருவாக்கத்திற்கு மத்ஹபுகள் எனும் அந்த சட்ட பாரம்பரியம்தான் அத்திவாரமாக அமைகிறது. இஸ்லாம் ஒரு சட்டமாக, சமூகமாக, அரசியலாக வளர்வதை இஸ்லாத்தின் எதிரிகள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். எனவே, இஸ்லாத்தின் அனைத்துப் பாரம்பரியங்களும் அழித்தொழிக்கப்பட்டால், அதற்கு நிச்சயமாய் எதிர்காலம் இல்லாது போய்விடும். எதிரிகளின் இந்த அபிலாசஷையை நிறைவு செய்வது போல் தான் மத்ஹபுகளுக்கு எதிரான பிரசாரம் காணப்படுகிறது. (மீள்பார்வை செப்டெம்பர் : 2004, இதழ் : 97 ப:17)*

வீரமந்திரி இஸ்லாமியச் சட்டப் பாரம்பரியம் என்று குறிப்பிட்டாரே தவிர,மத்ஹப் சட்டங்கள் என்று அவர் குறிப்பிடவில்லை. மத்ஹப் ஓர் அறிஞரின் கருத்து. அது இஸ்லாம் அல்ல. இஸ்லாம் என்பது அல்குர்ஆனும் ஹதீசும் மட்டும்தான். ஓர் அறிஞரின் கருத்தைப் பிடித்துக் கொண்டு தொங்கக் கூடாது என்று அண்மையில் ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் குறிப்பிட்டார்.

நான்கு தடவை நிறுவனங்களின் அழைப்பில் வருகை தந்த P.ஜைனுல் ஆபிதீன் இனி எந்த அரபு நாட்டு நிதி பெறும் நிறுவனங்களின் அழைப்பையும் ஏற்பதில்லை என்ற புதிய நிலைக்கு வந்திருந்தபோது, 2005 களில் கொழும்பு சகோதரர்கள் சிலர் மாற்று மத

சகோதரர்களுக்கு இஸ்லாத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கில் அழைத்தனர். அதில், சகோ. அஸ்கர் அலி, சகோ. எம்.ஏ.ஸராப்தீன் அலி, சகோ.வஸ்னி ஆகியோர் முக்கியமானவர்கள்.

இதுவரை இலங்கையில் மாற்றாருக்கு இஸ்லாம் அறிமுகம் செய்யப்படவில்லை. எனவே, இந்தியாவில் பெரும் வரவேற்பைப் பெற்ற இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம் நிகழ்ச்சி இலங்கையிலும் நடத்தப்பட வேண்டும் என்று சகோ.சராப்தீன், சகோ.அஸ்கர் அலி போன்றோர் சென்னை சென்று வேண்டிய போது, அவ்வழைப்பை ஏற்று P.ஜைனுல் ஆபிதீன் வருகை தந்தார். இவரது வருகைக்கான முழு செலவையும் சகோ. நஸ்லுனும் சகோ.அஸ்கர் அலியும் பகிர்ந்துகொண்டனர். இதில், நியாஸ் ஹாஜியார், Dr.ரயீசுத்தீன் ஷரயீ போன்றவர்களது பங்களிப்பும் முக்கியமானது. எனினும், தற்போது, இவர்கள் யாரும் P.ஜைனுல் ஆபிதீனுடன் இல்லை.

2005ஆம் ஆண்டு P.ஜைனுல் ஆபிதீன் இலங்கைக்கு மேற்கொண்ட தஃவா சுற்றுப் பயணம் இலங்கை ஏகத்துவ வரலாற்றில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது. இடத்திற்கேற்ப பொருத்தமான தலைப்பிடப்பட்டு பகிரங்கமாக சொற்பொழிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அனைவரும் புரியும் வகையில் அவர் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்க, இதுவரை இலங்கை தஃவா வரலாறு காணாத மக்கள் வெள்ளம் அலை மோதியது. அதன் விளைவாக இலங்கையில் அவருக்கு ஆதரவான ஒரு தளம் உருவாக்கும் பணி சூடு பிடிக்கத் தொடங்கியது. எனினும், அவரது வருகையும் உரைகளும் இலங்கையிலுள்ள பல இயக்கங்களின் விமர்சனத்திற்கு உள்ளானது. சத்தியக் குரல், அல்ஹஸனாத் போன்றவற்றில் பல விமர்சனக் கட்டுரைகள் வெளிவந்தன. அவரது ஆதரவுத் தளத்திலிருந்து அவற்றிற்கு மறுப்பாகத் துண்டுப் பிரசுரங்களும் வெளிவந்தன.

17-03-2005 அன்று அர்ஹம் மவ்லவி ஏற்பாடு செய்த புத்தளம் மாநாட்டில் ‘தியாகத்தில் வளர்ந்த ஏகத்துவம்’ என்ற தலைப்பில் உரையாற்றினார். இதில், பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

P.ஜைனுல் ஆபிதீன் கலந்து கொண்ட மாநாடுகளுக்குத்

திரண்ட மக்கள் கூட்டத்தைக் கண்டு கொதித்தெழுந்த அவருக்கு எதிரான குழு P.ஜைனுல் ஆபிதீனுடைய “விஸா”வைக் “கேன்ஸல்“ பண்ணி, அவரை வெளியேற்றினர். P.ஜைனுல் ஆபிதீனின் இலங்கை வருகை சத்தியப் போதனையில் ஏற்படுத்திய இந்த அசுர வளர்ச்சியையும் ஆர்வ மேலீட்டையும் கண்டு “கப்று வணங்கிகள்”, “பித்அத்வாதிகள்” போன்றவர்கள் சஞ்சலப்பட்டனர் என்று அவரது ஆதரவு வட்டாரம் குற்றம் சுமத்தியது.

1- புதுக்கடை - மீரானியாவீதி, 2- டவர் ஹோல் - இஸ்லாம் ஓர் எளிய மார்க்கம், 3- புத்தளம், 4-காத்தான்குடி, 5-மாவனல்லை, 6-அக்குரணை, 7- காலி ஆகிய 7 இடங்களில் பல பகிரங்க சொற்பொழிவுகள் நடந்து முடிந்தபோது, 8 வது இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம் என்ற முக்கிய நிகழ்ச்சிக்கு சிலரின் தூண்டுதலால் சந்திரிக்கா அரசாங்கம் தடை விதித்து, P.ஜைனுல் ஆபிதீன் அவர்களை வெளியேற்றியது. மாற்றாருக்கு இஸ்லாத்தைச் சொல்லவிடாமல் நிகழ்ச்சியை தடுத்த இந்நிகழ்வு பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

கொழும்பு தவ்ஹீத் ஜமாஅத் என்று இயங்கிக் கொண்டிருந்த சகோதரர்களின் அழைப்பிலேயே 2005ம் ஆண்டு P.ஜைனுல் ஆபிதீன் வருகை தந்தார். இது ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் என்று பெயர் மாற்றப்பட்டது. இவ்வியக்கத்தில் படித்த பண்பட்டவர்கள் இணையத் தயக்கம் காட்டினர். இணைந்த சிலர் அதன் முதிர்ச்சியற்ற போக்கைக் கண்டு விரைவாக வெளியேறினர். இலங்கை மக்களிடம் செல்வாக்கைப் பெறாத நிலையில், இன்று அது பல கூறாகப் பிரிந்து, தமிழ் நாட்டில் போன்று உட்பூசலும் அதிகார மோதலும் அதனுள் தொடர்கிறது.

உமர் அலி அன்ஸாருஸ் சுன்னாவை விட்டு பிரிந்து சென்ற பின்னர், குறிப்பாக 1990 களுக்குப் பின்னர், இலங்கையில் பல புதிய அமைப்புகள், வெளிநாட்டு நிதி பெறும் நிறுவனங்கள் என்பன உருவாகின. இன்று பல்வேறு அமைப்புகளும் பிரிவுகளும் தோற்றம் பெற்றுள்ளன. தவ்ஹீத் அமைப்புகள் பிரிந்து செயல்படுவதில் P.ஜைனுல் ஆபிதீனின் அணுகுமுறைகளும் பிரசாரமும் பெரும் தாக்கம் செலுத்தியுள்ளது. அத்தோடு, வேறு காரணங்களும் உள்ளன.

# பத்வா
# கருத்தும் மாற்றுக் கருத்தும்

## ஜும்ஆவுக்கு முன் சுன்னத்
## ஜின் பற்றிய நிலைப்பாடு

# ஜும்ஆவுக்கு முன் சுன்னத்

1994 ஒக்டோபர் மாத அல்ஜன்னத் இதழில் குறுக்கு விசாரணைப் பகுதியில் ஒரு வாசகரின் குறுக்கு விசாரணைக்குப் பதில் அளிக்கும் போது, ஜும்ஆவுக்கு முன்னர் உள்ளது சுன்னத்தான் என்று P.ஜைனுல் ஆபிதீன் பதில் அளித்திருந்தார். அது பெரிய அளவு தவ்ஹீத் முகாமுக்கு வெளியே இருந்தவர்களால் விமர்சிக்கப்பட்டது. அதே போல் அப்துல் வதூத் ஜிப்ரி அவர்களாலும் விமர்சிக்கப்பட்டது. பிஜேவிற்கு விளக்கம் கேட்டு மடல் எழுதிவிட்டு, அவரது பதில் வர முன்னர் தனது வான்சுடரில் அதை அப்துல் வதூத் ஜிப்ரி வெளியிட்டிருந்தார்.

இந்த நேரத்தில் நான் ஸலபிய்யாவில் 4 ஆம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தேன். எங்களில் சில மாணவர்கள் இருவருக்கும் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதினர். அதாவது இருவரும் பத்திரிகைப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டு, ஓர் இடத்தில் அமர்ந்து விரிவாகப் பரஸ்பரம் விவாதித்து, முடிவை பொது மக்களுக்கு அறிவியுங்கள் என்று அக்கடிதத்தில் வலியுறுத்தியிருந்தனர்.

அந்த மடல் கிடைத்தவுடன் இது தொடர்பாக ஸலபிய்யா மாணவர்களுக்கு விளக்கமளிக்க அப்துல் வதூத் ஜிப்ரி அவர்கள்,ஸலபிய்யா கலாபீடத்திற்கு வந்தார். அப்போது, மணவர்கள் பல கேள்விகளைக் கேட்டனர். நானும் ஒரு கேள்வி கேட்டேன். அவரது பதில் அப்போது எனக்குத் திருப்தியளிக்கவில்லை.

இந்த இடத்தில் ஜும்ஆவிற்கு முன் சுன்னத் உண்டா என்று P.ஜைனுல் ஆபிதீன், அப்துல் வதூத் ஜிப்ரி அவர்களுக்கு பதிலளித்திருந்தார். அந்த விளக்கங்களை நோக்குவதற்கு முன்னர் முக்கிய சில விடயங்ளைப் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

ஊருக்குப் பயந்து உண்மையை மறைக்கலாமா? என்று அப்துல் வதூத் ஜிப்ரிக்கு, P.ஜைனுல் ஆபிதீன் அளித்த பதில், அப்போது ஆய்வை

வேண்டி நிற்கின்ற என் மாணவ மன நிலையில் அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

அப்போது, பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியிலும் அல்ஜன்னத் விரிவான வாசிப்பைப் பெற்றிருந்தது. ஏன் எல்லாத் தளத்திலும் அது வாசிக்கப்பட்டது. அதற்குக் காரணம் P.ஜைனுல் ஆபிதீனுடைய இலகுவாகப் புரிய வைக்கும் எளிய நடை, தர்க்கரீதியான விமர்சனம், துணிவாகக் கருத்தை முன்வைக்கும் பாங்கு என்பன என்று கூறலாம்.

நீண்டகாலம் சரியானது என நம்பி நாம் செய்து வந்த ஒரு விடயம் பித்அத், அல்லது ஆதாரப் பலமற்றது என்று தெரிய வந்தால், உடனே மாற்றுகின்ற தன்மை தவ்ஹீத் இயக்க முகாம்களிலுள்ள அதிகமானவர்களிடம் இல்லை. இப்போது ஏன் பிரச்சினையைக் கிளப்புவானே என்று அல்லாஹ்வுக்கு அஞ்சுவதை விட, மக்களின் விமர்சனத்திற்கு அஞ்சுவதை அதிகமான தாயிகளிடம் கூட நான் பார்த்துள்ளேன். துவக்க காலத்தில் P.ஜைனுல் ஆபிதீன் இவர்களின் நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டார். அப்போது,அவரது பத்வாக்கள் மற்றவர்களால் விமர்சிக்கப்பட்டாலும்,சுதந்திரமான சிந்தனைத் தளத்திலிருந்து வெளிவருகிறது என்பதை மறுக்க இயலாது.

ஆரம்ப காலத்தில் மிகப் பெரிய சவால்களை எதிர் கொண்டு, துணிவாக தஃவா செய்த அப்துல் வதூத் ஜிப்ரியிடமிருந்து இந்தப்பதிலை P.ஜைனுல் ஆபிதீன் எதிர்பார்க்கவில்லை. எனினும், இலங்கை உலமாக்களிடம் காணப்பட்ட தயக்கத்தை, அவர் நன்கு விளங்கி வைத்திருந்தார் என்பதற்கு ஜும்ஆவிற்கு இரண்டு பாங்கு என்ற தவறான நிலைப்பாட்டை மாற்றுவதற்குச் சிலர் முரண்பட்டதை அவர் சுட்டிக் காட்டியமை புலப்படுத்துகிறது.

இன்றும் பல தவ்ஹீத் பிரசாரகர்களிடமும், பள்ளி நிர்வாகிகளிடமும் பல்வேறு விடயங்களில் தயக்கம் உள்ளது. தொப்பி போடாவிட்டால் ஜும்ஆ செய்ய விடாத தவ்ஹீத் பள்ளிகள் பல உள்ளன. தொப்பியை சுன்னத்தாக இவர்கள் பார்ப்பதே இதற்குக் காரணம். மிகவும் வலியுறுத்தப்பட்ட சுன்னாவான தாடி வைக்காத பலர்

இவர்களது நிருவாகத்தில் உள்ளனர்.இந்த நிலைமைகளை P.ஜைனுல் ஆபிதீன் பெருமளவு மாற்றியமைத்தார். அதனால், அவர் இளைஞர்களிடம் வரவேற்பைப் பெற்றார்.

இனி ஊருக்குப் பயந்து உண்மையை மறைக்கலாமா? என்ற பொதுத் தலைப்பில் ஜும்ஆவிற்கு முன் சுன்னத் உண்டா? என்று P.ஜைனுல் ஆபிதீன், அப்துல் வதூத் ஜிப்ரிக்கு அளித்த பதிலின் முக்கிய சில பகுதிகளை இங்கு தருவது கூடுதல் விளக்கத்தைத் தரும் என்று கருதுகின்றேன். அத்தோடு, ஒரு விடயத்ததை எப்படி மறுக்க வேண்டும்; மறுப்புக்கு எப்படிப் பதில் அளிக்க வேண்டும் என்ற முறைமையையும் இதில் கற்றுக் கொள்ள முடியும்.

ஜும்மாவுக்கு முன் தொழப்படும் இரண்டு ரக்அத் ஜும்மாவின் முன் ஸுன்னத் என்பதா? பள்ளிவாசலில் நுழைந்த உடன் தொழும் தஹிய்யதுல் மஸ்ஜித் என்பதா? என்ற சர்ச்சை பல ஆண்டுகளுக்கு முன்னர் தவ்ஹீத் சகோதரர்கள் மத்தியில் ஒரு விவாதப் பொருளானது. அப்போது நடந்த அந்த சர்ச்சையைக் கீழே தந்துள்ளோம்.

ஜும்ஆவுக்கு முன்னால் ஸுன்னத் தொழுகை உண்டு என நாம் எழுதியதை அனைவரும் அறிவீர்கள். இதில் உடன் பாடில்லாத வர்களில் இலங்கை நண்பர், மவ்லவி அப்துல் வதூத் ஜிப்ரியும் ஒருவர். நாம் எழுதியதை மறுத்து நமக்கு ஒரு மடல் வரைந்திருந்தார். அந்த மடலை அல்ஜன்னத்தில் வெளியிடச் செய்து, அதற்கு நாம் அளிக்கும் விளக்கத்தை அறிந்து கொள்வதற்குக் கூட நண்பருக்குப் பொறுமையில்லை என்பதா? அல்லது இதற்கு வேறு நோக்கம் ஏதும் இருக்கும் என்பதா? நமக்குப் புரியவில்லை.

நோக்கம் எதுவானாலும் செய்யப்பட்ட விமர்சனத்துக்கு விளக்கம் அளிக்கும் கடமை நமக்கு உள்ளது. எனவே, அது பற்றி விளக்குவது இந்த விஷயத்தில் கூடுதல் தெளிவைத் தரும் என்பதால் அதற்கு விளக்கமளிக்கின்றோம்.

**அப்துல் வதூத் ஜிப்ரியின் கடிதம் :** சகோதரர் பி. ஜெய்னுல் ஆப்தீன் (பி. ஜைனுல் ஆப்தீன் இல்லை) அவர்களுக்கு,

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாதுஹு.

1994 ஒக்டோபர் ஜன்னத்தில் ஜும்ஆவுக்கு முன்னால்

இரண்டு ரகஆத் ஸுன்னத் உண்டு என்பதாக எழுதியிருந்தீர்கள். இது இலங்கையில் குர்ஆன், ஸுன்னா வழியிலுள்ளோருக்கு இரண்டு வகையான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை நாம் செயல்படுத்தி வந்தது பிழையானது என்றொரு சந்தேகம். வஹ்ஹாபிகள் இப்படித்தான். நடந்து வந்த செயலொன்றை ஆய்வெதுவுமின்றி அவசரப்பட்டு "பித்அத்" என்று கூறித் தடுப்பார்கள். சிறிது காலம் சென்றபின் தடுத்தது தவறு, ஆதிகாலத்தில் இருந்து வந்ததுதான் சரியானது என்று கூறி, பழைய நிலைக்குத் திரும்புவார் கள். இப்பொழுது தடுத்துக் கொண்டிருப்பவற்றில் அடுத்தடுத்து எதை வாபஸ் வாங்குவார்களோ? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றெல்லாம் குர்ஆன் – ஸுன்னா பிரசாரத்துக்கு எதிரணி யிலுள்ளோர் கதை அளக்கவும், மறைமுகமாக மக்களைத் தூண்டி விடவும் இடம் உண்டாகி விட்டது.

அண்மையில் குர்ஆன் ஸுன்னா வழியிலுள்ளோருக்கு எதிராக மிம்பர்களை முழக்குவதற்குக் கிடைத்த பெறுமதி மிக்க ஓர் ஆயுதமாக ஆகிவிட்டது எனலாம்." என்று துவங்குகிறது அவரது கடிதம். கடிதத்தின் இறுதியிலும் இதே கருத்தைப் பின்வருமாறு கூறுகிறார்: –

உங்களுடைய சர்ச்சையால் ஏற்பட்ட விளைவு என்ன தெரியுமா? உங்களது ஜன்னத்தை மையமாக கொண்டு குத்பா ஓதுகிறார் ஒரு கதீப். மிகப்பெரியதொரு பள்ளிவாசலில் ஆயிரக் கணக்கான மக்கள் மத்தியில் அந்த குத்பா ஓதப்படுகிறது. ஒரு காலத்தில் ஜும்ஆவுக்கு முன்னால் ஸுன்னத் இல்லை என்றார்கள். அதனை சரியென நம்பி சில நல்ல மனிதர்கள் தொழுவதை விட்டு விட்டார்கள். இப்பொழுது பழைய நிலைக்கு மீண்டும் உண்டு என்று சொல்கிறார்கள். இந்த நல்ல மனிதர்களின் கடந்த கால அமல்களை வீணாக்கியவர்கள் இவர்களுக்கு என்ன கைமாறு செய்யப் போகிறார்கள்?

இவர்கள் இப்படித்தான் ஆய்வின்றி அவசரப்பட்டு நடப்பதைக் கூடாதெனத் தடுப்பார்கள். பின்னர் முட்டிக் கொண்டு தலை கவிழ்ந்தவர்களாக தங்களது முடிவை மாற்றிக் கொள்வார்கள்.

இத்தகையோர் விஷயத்தில் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மக்கள் எச்சரிக்கப்படுகின்ற தொனி எவ்வாறிருக்கின்றது பார்த்தீர்களா? இது குழப்ப வெறியைத் தூண்டுவதாகத் தோன்றவில்லையா? - கடிதத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் குறிப்பிடும் வாசகங்கள் இவை.

**P.ஜைனுல் ஆபிதீனின் பதில்:** அன்புள்ள நண்பர் அப்துல் வதூத் ஸாஹிப் அவர்களே! அஸ்ஸலாமு அலைக்கும்.

மார்க்கம் என்ன சொல்கிறதோ அதை அப்படியே ஏற்க வேண்டும்; மார்க்கம் சொல்லாதவை எவ்வளவு காலம் அமுலில் இருந்தாலும், எத்தகைய அறிஞர்கள் அதைக் கூறியிருந்தாலும் அதை நிராகரிக்க வேண்டும் என்பதைப் பிரசாரம் செய்து வரும் உங்களிடமிருந்து இது போன்ற வாதத்தை நான் எதிர்பார்க்க வில்லை.

பெரிய பெரிய இமாம்கள் கூறியதையெல்லாம் தவறெனத் தெரிந்தால், விட்டு விட வேண்டும் என்று கூறக் கூடிய நீங்கள் - எவ்வளவு பெரிய இமாமும் தவறுக்கு அப்பாற்பட்டவர் அல்லர் என்பதைப் போதிக்கக்கூடிய நீங்கள் - இப்படி எழுதுவதை முரண்பாடாகக் கருதாதது எனக்கு வியப்பை ஏற்படுத்துகிறது. உண்மையை ஏற்க வேண்டும் என்பதை விட, யாரோ உங்களைத் தவறாகக் கருதி விடக் கூடாது என்பதிலும், உங்களின் அறிவையும் ஆராய்ச்சியையும் குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது என்பதிலும் உள்ள அக்கறை உங்கள் கடிதத்தில் தெரிகின்றது.

நீங்கள் மக்களுக்கு ஒரு சட்டத்தைக் கூறி, மக்களும் அதைச் செயல்படுத்த ஆரம்பித்த பின் அந்தச் சட்டம் தவறெனத் தெரிந்தால் கூட உங்கள் முடிவை மாற்றிக் கொள்ள மாட்டீர்கள் என்பது உங்கள் கடிதத்திலிருந்து தெரிய வருகின்றது.

ஜும்ஆவுக்கு முன்னால் ஸுன்னத் உண்டா? இல்லையா? என்ற பிரச்சினையில் நான் எழுதியது தவறு என்று ஒரு வாதத்துக்காக ஏற்றுக் கொண்டால் கூட, உங்களின் இந்த வாதங்கள் படு பயங்கரமான தவறுகளாகும். இஸ்லாமிய அடிப்படையையே தகர்க்கக் கூடியவை என்பதில் சந்தேகம் இல்லை.

குர்ஆன் ஸுன்னாவுக்கு எதிரானவர்களின் விமர்சனத்துக்கு அஞ்சுவதை விட்டு விட்டு அல்லாஹ்வுக்கு அதிகம் அஞ்சுங்கள் என்று உங்களுக்கு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எத்தனையோ கொள்கைப் பிரச்சினைகளை மக்களுக்கு விளக்கிய நீங்கள், நமக்கு எதிரானவர்களின் இந்த விமர்சனத்திற்கு – முட்டாள் தனமான இந்த விமர்சனத்துக்கு – உரிய விளக்கம் அளிப்பதே கடமை என்பதை ஏன் உணரவில்லை?

“எவ்வளவு பெரிய அறிஞருக்கும் தவறுதல் ஏற்படலாம் என்பதே எங்கள் அடிப்படைக் கொள்கையாக இருக்கும்போது, எங்களிடம் தவறு ஏற்படாது என்று எப்படிக் கூற முடியும்? என்று எதிரிகளுக்கு விளக்கம் சொல்லுங்கள்!

“சுய கௌரவம் பார்த்து, நாங்கள் கூறியதில் பிடிவாதமாக இருக்க மாட்டோம். தவறெனத் தெரிந்தால், உடனேயே அதைத் திருத்திக் கொண்டு, பகிரங்கப் படுத்துவோம்“ என்று எதிரிகளுக்கு விளக்கம் சொல்லுங்கள்!

“எதை எங்களின் பலவீனம் என்று கூறுகிறீர்களோ, அதுவே எங்கள் பலம். நாங்கள் கூறுவதில் எங்களுக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது என்பதை நிரூபிப்பதற்காக அல்லாஹ் சில தவறுகளை எங்களிடம் ஏற்படச் செய்கிறான். நாங்கள் தவறெனத் தெரிந்ததும் திருத்திக் கொள்கிறோமா? அல்லது மக்களின் விமர்சனத்திற்கு அஞ்சி உண்மையை மறைக்கப் போகிறோமா? என்று சோதிக்கிறான். நாங்கள் தவறைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு திருத்திக் கொள்வோம்” என்று எதிரிகளுக்குப் பதில் சொல்லுங்கள்!

இவ்வாறு பதில் சொல்வதை விட்டு விட்டு, உண்மையை ஏற்கத் தயங்கி, மக்களின் விமர்சனத்தைச் சான்றாக்குகிறீர்கள்.

இலங்கை நிலைமையை நீங்கள் சுட்டிக் காட்டிச் சில விபரங்களை எழுதியுள்ளீர்கள். அது பற்றிப் பின்னர் விளக்குகிறேன். இலங்கை நிலைமைக்கும் தமிழக நிலைமைக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன.

ஏகத்துவக் கொள்கைப் பிரசாரம் தமிழகத்தை விடப் பல ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் தீவிரமாக நடைபெற்றது. இதன் காரணமாக, உங்களின் தவ்ஹீத் முன்னோர்கள் செய்யாத எந்த ஒன்றையும் செய்யவோ, அவர்கள் செய்ததை விட அதிகமாகச் செய்யவோ உங்களிடம் பெருமளவு தயக்கம் இருப்பதை நேரிலேயே கண்டவன் நான்.

இலங்கையில் உள்ள தவ்ஹீத் பள்ளிகளில் ஜும்ஆவுக்கு இரண்டு பாங்குகள் சொல்லப்பட்டு வந்தன. அதற்கு ஆதாரம் இல்லை என்று தெரிந்தும், தவ்ஹீத் முன்னோர்கள் தடுக்காத ஒன்றை எப்படித் தடுப்பது? மக்கள் நம்மை என்ன நினைப்பார்கள்? என்பன போன்ற தயக்கமே நீங்கள் இரண்டு பாங்குகளைத் தடுக்காமலிருந்ததற்குக் காரணம். ஒரு சில பள்ளிகளிலாவது இரண்டு பாங்குகள் நிறுத்தப்பட தமிழகத்திலிருந்து நாங்கள் மூன்று தடவை இலங்கைக்கு வரவேண்டிய நிலை இருந்தது.

இதை நான் குறிப்பிடக் காரணம் என்னவென்று புரிகிறதா? உங்களிடம் மட்டுமன்றி மொத்த இலங்கைத் தவ்ஹீத் சகோதரர் களிடமும் (மிகச் சிலர் தவிர) இந்த மனப்பான்மை இருக்கிறது. தாம் தவறாகச் செய்துவிட்ட ஒன்றைத் திருத்தினால், மக்கள் விமர் சிப்பார்களே என்று அஞ்சும் நிலையையே ஏற்படுத்தியுள்ளீர்கள்.

பெரும் பெரும் இமாம்கள் கூறியதில் தவறு இருக்கலாம். அவர்களுக்கே கதீம் (பழைய முடிவு) ஜதீத் (புதிய முடிவு) என்று இரு வேறு கருத்துக்கள் இருந்துள்ளன என்று கூறி விட்டு, எங்கள் கூற்றில் தவறு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று எண்ணுவது சரி தானா என்று சிந்தியுங்கள்!

உண்மைக்கு ஏற்றவாறு உங்கள் மனோ விருப்பத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர, உங்கள் மனோ இச்சைக்கு ஏற்றவாறு தான் உண்மை இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது என்ன நியாயாம்?

எங்களைப் பொருத்தவரை நாங்கள் போதித்தவை தவறு என்று தெரிய வந்தால், பகிரங்கமாக அதை ஒப்புக் கொள்வோம். எங்களுடன் இருப்பவர்கள் எங்களிடமிருந்து இதனால் விலகினாலும்;

வர இருந்தவர்கள் இதன் காரணமாக வரத் தயங்கினாலும்; ஜும்ஆ மேடைகள் எங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டாலும்; எங்களுக்குக் கவலையில்லை. எங்களின் நிலை மட்டுமில்லை; தமிழகத்தில் உள்ள தவ்ஹீத் வாதிகளின் நிலையே இதுதான்.

இலங்கையிலிருந்து இது சம்பந்தமாக உங்களைப் போல் பலர் எழுதியுள்ளனர். “இது வரை செய்தவை தவறு என்று ஏற்றால் எந்த முகத்துடன் மக்களைச் சந்திப்பது?” என்பது தான் அத்தனை கடிதங்களின் சாரமாக உள்ளது.

இவ்வாறு சிந்திக்கக் கூடிய – பேசக் கூடிய – எழுதக் கூடியவர்கள் மத்ஹபிலேயே இருந்திருக்கலாம். அங்கு தான் மாற்றத்திற்கு இடமில்லை. தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டால் அதை ஏற்கும் போக்கு இல்லை. தாங்களின் முன்னோர்கள் கூறியதை எப்பாடுபட்டாவது நிலை நிறுத்தும் போக்கு அங்கு தான் உள்ளது. தவறை ஒப்புக் கொண்டால், நமது கௌரவம் என்னாவது என்ற சிந்தனை அங்குள்ள ஆலிம்களிடம் தான் உள்ளது. தாங்கள் செய்து வந்தது தவறாகவே இருக்க முடியாது; தங்கள் முன்னோர்களான அறிஞர்களிடம் எந்தத் தவறும் ஏற்பட முடியாது என்பவை மத்ஹபுக்கே சொந்தமானவை.

அந்தப் போக்கை நீங்களும் மாற்றிக் கொண்டு, மற்றவர் களிடமிருந்தும் மாற்ற முயலுங்கள்! “இனி மேலாவது சர்ச்சைக்குரிய பிரச்சினை எதனையாவது எழுதும் போது சில அறிஞர்களுடன் ஆலொசனைகள் செய்து எழுதும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுமாறு ஆலோசனை கூறுகிறேன்” என்று கடிதத்தின் முடிவில் கூறியிருக்கிறீர்கள்.

நான் எவரிடமும் ஆலோசனைகள் செய்யாமல், தன்னிச்சை யாக எழுதியதாக – நீங்கள் அறியாத ஒன்றை அறிந்ததாகக் – குற்றம் சாட்டுகிறீர்கள். அடுத்து, ஆலோசனை செய்துவிட்டு எழுதினால், எந்தத் தவறும் ஏற்படாது என்ற நம்பிக்கை உங்களுக்கு இருப்பதை உங்களின் இந்தப் போக்கு காட்டுகின்றது.

மத்ஹபுகளை நியாயப்படுத்தி சவூதி அரசிலிருந்து ஒரு ஃபத்வா வந்ததைப் பார்த்திருப்பீர்கள். அது பல அறிஞர்கள் – நீங்கள் ஒப்புக் கொள்ளக் கூடிய பல அறிஞர்கள் – பரிசீலனை செய்து தான்

வெளியிடப்பட்டது. மக்களின் விமர்சனத்திற்கு அஞ்சி, முடிவை மாற்றிக் கொள்ள விரும்பாதவர்களில் ஆயிரம் பேரிடம் ஆலோசனை செய்வதை விட, அல்லாஹ்வுக்கு அஞ்சி, தவறைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளக் கூடிய தனி ஒருவரின் கருத்தில் தவறுகள் குறைவாக இருக்கும்.

மக்களின் விமர்சனத்துக்கு முக்கியத்துவம் தரக் கூடிய உங்களிடமே ஆலோசனை கேட்டால் – தவறைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளக் கூடாது என்பது உங்கள் உள் மனதிலேயே இருப்பதால், என்ன ஆலோசனை கூறுவீர்கள்? இப்போது பிரச்சினையைக் கிளப்ப வேண்டாம் என்பதைத் தவிர, வேறு எந்த ஆலொசனை யையும் கூற மாட்டீர்கள். எனவே தான், இத்தகைய மனப்போக்கு இல்லாதவர் களிடம் மட்டும், அவ்வப்போது, சர்ச்சைக்குரிய விஷயங்களில் ஆலோசிக்கிறேன். உங்களின் கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்ட அடிப்படைக் கோளாறைச் சுட்டிக் காட்டவே இந்த விளக்கம். இனி ஜும்ஆவின் முன் ஸுன்னத் பற்றி நீங்கள் எழுதிய மறுப்பை ஆராய்கிறேன்"(அல்ஜன்னத்,மே : 1995,ப:9-14) ஜும்ஆவுக்கு முன்னர் ஸுன்னத் இருக்க முடியாது என்ற அப்துல் வதூத் ஜிப்ரியின் வாதம்ஆதாரப் பலமற்றது என்று P.ஜைனுல் ஆபிதீன் வாதிட்டிருந்தார்.

மரியாதைக்குரிய நண்பர் அவர்களே! என்று அவரை விழித்து, ஆதாரங்கள் சிலவற்றை முன்வைத்துவிட்டு, ஜும்ஆவுக்கு முன் ஸுன்னத் இல்லை என்பதை நீங்கள் தெளிவான சான்றுகளின் அடிப்படையில் நிரூபித்தால் அதை ஏற்க நான் தயாராக உள்ளேன் என்று அழுத்தமாக எழுதி, இரண்டாவது தொடரை ஜைனுல் ஆபிதீன் முடித்திருந்தார்.

மீண்டும் அப்துல் வதூத் ஜிப்ரி ஒரு பதில் எழுதியுள்ளார். அது பற்றி P.ஜைனுல் ஆபிதீன் சட்டை செய்யவில்லை. ஏன் என்று அவரது மாணவர் எம்.ஐ. சுலைமானிடம் கேட்டபோது, அவரது வாதங்களை நிறுவக் கூடிய ஆதாரங்களை அப்துல் வதூத் ஜிப்ரி முன்வைக்க வில்லை. அதனால், P.ஜைனுல் ஆபிதீன் அதைக் கண்டு கொள்ள வில்லை என்று அவர் இலங்கை வந்திருந்த போது என்னிடம் கூறினார்.

ஜும்ஆவுக்கு முன்னர் உள்ளது ஸுன்னத்தா? தஹ்யத்துல் மஸ்ஜிதா? என்ற சர்ச்சை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

# ஜின் பற்றிய நிலைப்பாடு

அல் ஜன்னத் மாத இதழை தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து, இலங்கையில் விற்பனை செய்யும் பணியை ஜம்இய்யது அன்ஸாரிஸ் ஸுன்னத்தில் முஹம்மதிய்யாவின் அஸ்ஸலபிய்யா புத்தக நிலையம் மேற்கொண்டு வந்தது.

நீண்டகாலமாக ஜம்இய்யது அன்ஸாரிஸ் ஸுன்னத்தில் முஹம்மதிய்யா 'உண்மை உதயம்' என்ற இதழை வெளியிட்டு வருகிறது. அத்தோடு, அல்ஜன்னத் மாத இதழையும் புலமைப் பரிசில் பெறும் பல்கலைக்கழக மாணவர்கள், விதவைகள் என்போருக்கு அது அன்பளித்தும் வந்தது.

இலங்கையைச் சேர்ந்த மவ்லவி தவ்பீக் மஹ்மூத் என்பவர் மதீனாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த போது, அங்குள்ள ஓர் இடத்தில் உரையாற்றியுள்ளார். அவரது உரையில் குறிப்பிடப்பட்ட ஒரு விடயம் தொடர்பாக சகோதரர் முஹம்மது அலி சீனி என்பவர் அல்ஜன்னத்திற்கு கேள்வி ஒன்றை எழுதினார். இதுதான் அந்தக் கேள்வி : "நபி ﷺ அவர்களுடன் போரில் ஈடுபட்டிருந்த – புதிதாகத் திருமணமான நபித்தோழர் வீடு சென்று திரும்புவதற்காக அனுமதி கேட்கிறார். வீட்டு வாசலில் அவரது மனைவி நிர்வாண கோலத்தில் நிறபதைக் கண்டு அவளைக் கொல்ல வாளை உருவுகிறார், அதற்கு அவர் மனைவி, "சற்றுப் பொருங்கள்! வீட்டினுள்ளே என்னை விபச்சாரத்திற்காக ஒருவன் அழைக்கிறான். ஆகவே, இந்தக் கோலத்தில் நான் ஓடி வந்தேன்" என்றார். உருவிய வாளுடன் உள்ளே சென்றவர், ஒரு பாம்பைக் காணுகிறார்; அதைக் கொன்றும் விடுகிறார்.

போர் முடிந்து திரும்பி வந்த நபி ﷺ அவர்கள் அதைக் கேள்விப்பட்டு, அந்த நபித்தோழரை அழைக்கிறார்கள். உங்கள் வீட்டுக்கு வந்தது பாம்பு அன்று; அது ஜின்; அதைக் கொன்றதால் அதே இடத்திலேயே உமக்கும் மரணம் வரும் என்கிறார்கள். அது போலவே ஸஹாபியும் சில வருடங்கள் கழித்து அவர் வீட்டிலேயே மரணம் அடைந்தார்.

இந்தச் சம்பவத்தை மதீனாவில் உள்ள இஸ்லாமியப் பல்கலைக்கழகத்திலிருந்து வந்து, உரையாற்றிய இலங்கை மவ்லவி மஹ்மூத் தவ்பீக் என்பவர் குறிப்பிட்டார். இது ஆதாரப் பூர்வமான செய்தியா?" –முஹம்மது அலி சீனி, புகைரா, KSA.-

இதற்குப் P.ஜைனுல் ஆபிதீன் பின்வறுமாறு பதில் அளித்திருந்தார்: "இது அர்த்தமற்ற கட்டுக் கதை! மதீனாவில் உள்ள இஸ்லாமியப் பல்கலைக் கழகத்திலிருந்து இறக்குமதி செய்யப் பட்டாலும் அதை நம்பக் கூடாது. சவூதியில் உள்ள இஸ்லாமியக் கல்விக் கூடங்கள் வந்த வழியே திரும்பிச் செல்ல ஆரம்பித்துள்ளதை சமீபகாலமாக நாம் கண்டு வருகிறோம். மத்ஹபுகள் அவசியம் தான், தராவிஹ் 20 ரக்ஆத்துக்கள் தான் என்றெல்லாம் அங்கிருந்து வெளியாகும் பத்வாக்களும் இது போன்ற கட்டுக் கதைகளும் இதை உறுதி செய்கின்றன." (அல்ஜன்னத். பார்க்க பக்:36 ஜுன், ஜுலை 1996)

மேற்கண்டவாறு ஜைனுல் ஆபிதீன் அளித்த பதிலை, அஷ்ஷைக் அபூபக்கர் சித்தீக் மதனி பின்வருமாறு மறுத்து, அல் ஜன்னத்திற்கு ஒரு மடல் எழுதினார். இலங்கையிலிருந்து ஒரு மடல் என்று அதை அல் ஜன்னத்தில் வெளியிட்டு பதிலும் அளித்திருந்தார், P.ஜைனுல் ஆபிதீன்.

இலங்கையிலிருந்து ஒரு மடல்: அல்ஜன்னத்தில் எழுதப்பட்ட ஒரு செய்தி குறித்து இலங்கை ஜம்இய்யத்து அன்ஸாரிஸ் ஸுன்னத்தில் முஹம்மதிய்யாவிலிருந்து வந்த ஒரு கடிதத்தையும் அது பற்றிய நமது விளக்கத்தையும் கீழே தந்துள்ளோம்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

தஃவாப் பணியில் ஈடுபடுகின்ற தாங்கள் உடல், உள, ஆன்ம நலம் பெற்று வாழப் பிரார்த்தனைகள். தங்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வருகின்ற அல்ஜன்னத் இதழ் தமிழ் பேசும் முஸ்லிம்களில் அல்குர்ஆன் – அஸ்ஸுன்னாவின் அடிப்படையில் வாழ வேண்டுமென்ற ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இருந்தும் சில விடயங்களில் உங்களது எழுத்தோட்டங்கள்

சத்தியத்தை நேசிக்கின்றவர்களது மனதைப் புண்படுத்தும்படி அமைந்து விடுகின்றது. இவை, கட்டாயம் தவிர்ந்து கொள்ளப்படல் வேண்டும் என்பதை சகோதர வாஞ்சையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

1996 ஜுன், ஜுலை அல்ஜன்னத் இதழில் கேள்வி பதில் பிரிவில் 36ம் பக்கத்தில் முஹம்மது அலி சீனி, புகைரா, KSA. கேட்ட கேள்விக்கு அளித்திருக்கிற பதிலைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறோம்.

குறிப்பிட்ட விடயம் ஆதாரமற்ற கட்டுக் கதை எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். அத்தோடு, மதீனா இஸ்லாமியப் பல்கலைக் கழகம், சவூதியிலுள்ள பல்கலைக்கழகங்கள் என்பவற்றைத் தரக் குறைவாக விமர்சித்துள்ளீர்கள். இது, அந்தக் கேள்விக்குரிய பதிலில் வர வேண்டியதுமில்லை. அத்துடன் மவ்லவி முஹம்மத் தவ்பீக் உரையாற்றிய விடயம் – கேள்வி கேட்டவர் எழுதிய விதத்தில் அல்லாத கொஞ்சம் வித்தியாசமாக ஸஹீஹ் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது. விடயத்தைப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும்.

எந்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவெடுக்காமல், நிதானமாகச் சிந்தித்து எழுதுவது அல்ஜன்னத்தின் வளர்ச்சிக்கும் இஸ்லமிய தஃவாவின் வெற்றிக்கும் பேருதவியாக அமையும் என்பதைக் கூறிக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
அமீர், அபூபக்கர் சித்தீக் மதனீ.

இது தான் அந்த மடல். இந்த மடலுடன் ஸஹீஹ் முஸ்லிமில் இடம் பெற்றதாகக் கடிதத்தில் கூறப்படும் ஹதீஸின் ஜெராக்ஸ் (Copy) ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

தாங்கள் இரண்டு விடயங்களை உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள்! நல்ல எண்ணத்தில் தாங்கள் சுட்டிக் காட்டிய விடயங்களுக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முதலாவது விடயம், மதீனாவில் உள்ள பல்கலைக் கழகங் களைத் தரக் குறைவாக விமர்சனம் செய்ததாக நீங்கள் குறிப்பிட்டிருப்பது.

மிகப் பெரிய இமாம்கள், பெரியார்கள், தவறான கருத்தைக் கூறியதாகத் தெரிய வரும் போது, தாட்சண்யமின்றி கடந்த பத்து வருடங்களில் விமர்சித்துள்ளோம். அத்தகைய விமர்சனங்களை ஏகத்துவவாதிகள் அனைவரும் மறுப்பின்றி அங்கீகரித்துக் கொண்டோம். மதீனாப் பல்கலைக்கழகம் குறித்து சில தவறுகளைச் சுட்டிக் காட்டும் போது மட்டும், அதற்காக வேதனைப்படுவதை நாம் சரி என ஏற்க முடியாது.

மதீனாவில் உள்ள பல்கலைக்கழகம் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவையல்ல. நமக்கு நெருக்கமானவர்கள் என்பதற்காகத் தவறுகளைச் சுட்டிக் காட்டாமலும் இருக்க முடியாது.

இது இன்று நேற்று எடுக்கப்பட்ட முடிவன்று. ஆரம்பம் முதலே அல்ஜன்னத்தின் நிலைப்பாடு இதுதான். "தவறுகள் எவரிடமிருந்து வந்தாலும் அந்தத் தவறுகளை மட்டும் தாட்சண்யமின்றி விமர்சிப்போம். தவறிய மனிதார்களைத் தரக் குறைவாக விமர்சிக்க மாட்டோம்" என்பதைச் சபதம் ஏற்போம் என்ற தலைப்பில் அடிக்கடி வெளியிட்டு வருவதையும் தாங்கள் அறிவீர்கள்.

தராவீஹ் 20 ரக்ஆத்கள் என்று மதீனாவிலிருந்து பத்வா வந்தது உண்மை. மத்ஹபுகளைப் பின்பற்ற வேண்டும் என்று அதிகாரப்பூர்வமாக பத்வா கொடுத்ததும் உண்மை. நீங்களும் நாமும் பிரசாரம் செய்து வரும் கொள்கைக்கு இவை எதிரானவை என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

நீங்களும் அங்கே தஃவாப் பணியில் ஈடுபட்டுள்ள மதனிகளும் அங்கே படித்த காலத்தில், மத்ஹபுகள் கூடாது என்றே உங்களுக்குப் போதிக்கப்பட்டு வந்தது. எட்டு ரக்ஆத்கள் என்பதை அங்கிருந்து தான் தெளிவாகக் கற்று வந்தீர்கள். அந்த நிலை இன்று மாறி விட்டது. வந்த வழியே திரும்பிச் செல்கிறது என்ற உண்மையைத் தான் நாம் எழுதினோம்.

இது போன்ற விமர்சனம் தரக் குறைவானது என்றால், மத்ஹபு வாதிகள், தர்காவாதிகள், தரீக்காவாதிகள் ஆகியோரின் தவறுகளை மட்டும் சுட்டிக் காட்டுவது எவ்வகையில் நியாயம்? நமக்கு வேண்டப் பட்டவர்களின் தவறுகளைக் கண்டு கொள்ளாமல், வேண்டப்

படாதவர்களின் தவறுகளை மட்டும் விமர்சிப்பதில் நமக்கு உடன் பாடில்லை.

அந்தக் கேள்விக்குரிய பதிலில் அது வரவேண்டியதில்லை எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். கேள்வி கேட்டவர் ஓர் ஆலிம் இப்படிக் கூறுகிறார் என்று குறிப்பிட்டால், மதீனாப் பல்கலைக் கழகத்தைப் பற்றி நாம் குறிப்பிட்டிருக்க மாட்டோம். மதீனாவில் படித்த ஆலிம் என்று கேள்வி கேட்டவர் குறிப்பிட்டுள்ளார். மதீனாவில் படித்தவர் கூறுவதால் அது சரியாகத்தான் இருக்க முடியும் என்ற கருத்தை இது தருகிறது. அதை அகற்றுவது அந்த இடத்தில் அவசிய மாகின்றது. அதனால் தான் மதீனா பல்கலைக்கழகத்தைப் பற்றி நாம் குறிப்பட வேண்டியதாயிற்று.

மதீனாப் பல்கலைக்கழகத்தில் படித்து, குர்ஆன் ஹதீஸை நிலை நாட்டும் போராட்டத்தில் ஈடுபட்டு, தியாகம் செய்பவர்களைக் குறித்து அந்த விமர்சனம் செய்யப்படவில்லை. **அங்கே இன்று தரம் குறைந்து விட்டது என்று தான் விமர்சனம் செய்யப்பட்டது. அதற்காக யாரும் புண்பட வேண்டியதுமில்லை; புண்படவும் கூடாது.**

இரண்டாவதாக நீங்கள் சுட்டிக்காட்டுவது பதிலில் கூறப்பட்ட விடயம் குறித்ததாகும்.

ஜின்கள் இருப்பதிலோ, அவை பல்வேறு வடிவங்களில் வீடுகளில் வரும் என்பதிலோ நமக்கு இரண்டாவது கருத்தில்லை. அதை நாம் என்றுமே மறுத்ததில்லை. ஆதாரப்பூர்வமான பல ஹதீஸ்கள் இது பற்றிக் கூறுவதால் யாரும் மறுக்க முடியாது. ஜின் ஒன்று, ஒரு பெண்ணை விபச்சாரத்திற்கு வற்புறுத்தியதாகவும், அதனிடமிருந்து தப்பித்து, அந்தப் பெண் நிர்வாணமாக ஓடி வந்ததாக வும், அந்த மவ்லவி பேசியதாகக் கேள்வியில் கூறப்பட்டுள்ளது.

மேலும், எந்த இடத்தில் அந்த ஜின்னை நபித்தோழர் கொன்றாரோ, அதே இடத்தில் மரணம் வரும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாகவும் அந்த மவ்லவி பேசியதாகக் கேள்வியில் கூறப்பட்டுள்ளது. இது பற்றித் தான் கேள்வியும் கேட்கப்பட்டுள்ளது. நீங்கள் அனுப்பிய ஜெராக்ஸில் இந்த விபரம் அறவே இல்லை.

பாம்பு வடிவில், ஜின் வீட்டில் வந்ததும் பயந்து கொண்டு, அந்தப் பெண் வெளியே வந்ததாகவும், கணவர் உள்ளே சென்று பாம்பைக் கொல்வதற்காக ஈட்டியால் குத்தினார். அது அவரைத் தாக்கியது, இருவரும் இறந்து விட்டனர் என்று தான் அந்த ஹதீஸ் கூறுகிறது.

“அந்த மவ்லவி உரையாற்றிய விதத்திலல்லாது கொஞ்சம் வித்தியாசமாக” ஹதீஸில் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். இது கொஞ்சம் வித்தியாசமாகும் என்று யாரும் கருதமாட்டார்கள். ஜின் ஒன்று, பாம்பு வடிவில் வந்தது என்பதற்கும் மனித வடிவில் வந்து பெண்ணை நிர்வானப்படுத்திப் பலவந்தம் செய்தது என்பதற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் உள்ளது.

பாம்பை அவர் கொன்று, அவர் உயிருடன் இருந்ததாகக் கூறுவதும், அவர் இறந்து விட்டார் என்று கூறுவதும் கொஞ்சம் வித்தியாசம் அல்ல; நேர் முரணானது.

“எந்த இடத்தில் பாம்பைக் கொன்றாயோ அதே இடத்தில் உனக்கு மரணம் வரும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறுவது கொஞ்சம் வித்தியாசம் அல்ல. நபி (ஸல்) அவர்கள் பெயரால் இட்டுக் கட்டப்பட்ட பச்சைப் பொய்யாகும்.

இந்த விடயங்களைக் குறித்துத் தான் இட்டுக்கட்டப்பட்ட கற்பனை என நாம் விமர்சனம் செய்தோம். ஹதீஸில் உள்ளதைத் தான் பேச வேண்டுமே தவிர, அதில் இல்லாததை – கை, கால் வைத்துப் பேசக் கூடாது. அவ்வாறு பேசுவோர் யாராக இருந்தாலும் நாம் விமர்சனம் செய்து தான் ஆகவேண்டும். இதை மறுக்க மாட்டீர்கள் என்று நம்புகிறோம். (அல்ஜன்னத் :ஆகஸ்ட்:1996)

அவர் ஜாக்கில் இருந்த போது, என்னவன் உன்னவன் என்ற வேறுபாடு அவரது எழுத்தில் வெளிப்படவில்லை. எழுத்து நேர்மையையும் பத்திரிகை தர்மத்தையும் அவர் கண்டிப்பாக கடைப்பிடித்தார். யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யமின்றி விமர்சித்தார். சஞ்சிகையின் விற்பனை சரிவைப் பற்றி அவர் சற்றும் சட்டை செய்யவில்லை.

அல் ஜன்னத் மாத இதழ் ஆயிரக்கணக்கில் இலங்கையில் விற்பனையாகிக் கொண்டிருந்த போது, அதை இறக்குமதி செய்தவர்களை அவர் விமர்சிக்கவும், தவறைச் சுட்டிக்காட்டவும் பின்நிற்கவில்லை; தயங்கவும் இல்லை என்று அப்போது பலர் சிலாகித்தனர். எனினும், அவர் இவ்வாறு விமர்சித்திருக்கக் கூடாது என்றும் சில அவதானிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த விமர்சத்தை அவர் எழுதிய பின்னும் அவரைப் பெருந்தன்மையுடன் 2001ல் ஜம்இய்யத்து அன்ஸாரிஸ் ஸுன்னத்தில் முஹம்மதிய்யாவின் மாநாட்டுக்கு அழைத்தது. அவரும் வந்து கலந்து கொண்டதோடு, 22-07-2001 அன்று சொற்பொழிவும் ஆற்றினார்.பல்லின மக்களுக்கு மத்தியில் முஸ்லிம்கள் என்ற தொனிப்பொருளில் அவர் ஆற்றிய உரையின் இறுதிப் பகுதியை நான் எழுத்துவடிவில் தொகுத்தேன். “நாம் எதில் ஒன்றுபட்வேண்டும்?” என்ற தலைப்பில் செப்டெம்பர் 2001 உண்மை உதயத்தில் (பக்கம் 15-17) கட்டுரையாக வெளிவந்தது.

# விவாதங்களும் விதண்டாவாதங்களும்

## விமர்சனங்களையும் கண்டனங்களையும் தோற்றுவித்த விவாத அணுகுமுறைகள்

# விவாதங்கள்

P.ஜைனுல் ஆபிதீனிடம் காணப்படும் எழுத்தாற்றல், பேச்சாற்றல் போன்ற அதே அளவு திறமை அவரின் விவாதத்திலும் உள்ளது. அவரது பிரசாரத்தின் துவக்க காலத்தில் அவர் சந்தித்த விவாதக் களங்கள் பெரும் தஃவா ஊடகமாகக் காணப்பட்டது. விவாதத் திறனாற்றல், பலரை அவரது முகாமிற்குள் வசீகரித்து, ஐக்கியப்படுத்தியது. பலதரப்பட்ட கொள்கை உடையவர்களோடும் சவால் விட்டு, பல்வேறுபட்ட தலைப்புகளில் விவாதங்கள் செய்தார்.

இறுதி நபித்துவம் முற்றுப் பெறவில்லை என்ற காதியானிய சிந்தனை உடையவர்களுடன் 1994ம் ஆண்டு **“மிர்ஸா குலாம் நபியா? பொய்யனா?” “இறுதி நபித்துவம்”, “ஈஸா நபி மரணித்து விட்டார்களா?”** ஆகிய தலைப்புகளில் P.ஜைனுல் ஆபிதீன் விவாதித்துள்ளார். பரேலவிஸம், சூபித்துவம், மத்ஹப் போன்ற சிந்தனை உள்ளவர்களுடன் மவ்லித், மீலாத், தர்கா வழிபாடு, மத்ஹப் எனும் சட்டக்கலையை பின்பற்றுதல் போன்ற கொள்கைகள், அவற்றை ஆதரிப்போரின் செயல்களை விமர்சனத்துக்கு உட்படுத்தி, பல்வேறு காலப்பகுதிகளில் விவாதம் செய்துள்ளார். **மௌலித் ஓதுவது கூடுமா? மத்ஹபுகளை பின்பற்றலாமா? இறைவன் உருவமற்றவனா? மரணித்த இறைநேசர்களிடம் உதவி தேடுவது இணைவைப்பு இல்லையா? இமாம்களின் உதவியில்லாமல் குர்ஆன்– ஹதீஸை அறிய முடியுமா? திருக்குர்ஆனில் எழுத்துப் பிழைகள் இடம் பெற்றுள்ளனவா?** போன்ற தலைப்புகளிலும் விவாதம் செய்துள்ளார்.

அதுமட்டுமன்றி, திருக்குர்ஆனுக்கு ஒரு புதிய தமிழாக்கத்தை விளக்கக் குறிப்புகளுடன் வெளியிட்டிருந்தார். அந்த தமிழாக்கம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் குறிப்பாக அறிஞர்கள் மத்தியில் ஒரு கலவையான விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது. அதை சிலாகித்து ஒரு சாராரும், அந்த தமிழாக்கத்தில் இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு முரணான பல்வேறு மொழியாக்கங்களும், விளக்கக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளதாக மற்றும் ஒரு சாராரும் விமர்சனங்களை

முன்வைக்கத் துவங்கினர். எனவே, இது குறித்து P.ஜைனுல் ஆபிதீன் தமிழாக்கத்தில் தவறுகளா? என்ற தலைப்பில் ஒரு விவாதம் இடம் பெற்றது.

P.ஜைனுல் ஆபிதீனை தஃவாக் களத்தில் பல வருடங்களாக கடுமையாக எதிர்த்து வந்த சைபுத்தீன் ரஷாதி என்பவருடன் தனது தஃவா வாழ்க்கையை விமர்சனத்திற்கு உட்படுத்தி, மார்க்கத்தில் பொய் சொல்பவர் பீ.ஜேயா? ரஷாதியா? என்ற தலைப்பில் விவாதம் செய்தார். அத்தோடு,மாற்று மதத்தவர்களுடன் பல்வேறு தலைப்புகளில் விவாதங்களை மேற்கொண்டுள்ளார். கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த பல குழுக்களுடன் இவ்வாறு விவாதங்களை செய்துள்ளார்.

கிறிஸ்தவர்களுடன் : 1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கிறித்தவ மதப் போதகர் ஜெபமணி என்பவருடனும், 2012 ஆம் ஆண்டு SAKSHI APOLOGETICS NETWORK (SAN) என்ற கிருத்துவ அமைப்பினருடன் P.ஜைனுல் ஆபிதீன், பைபிள் இறைவேதமா? என்ற தலைப்பில் விவாதம் செய்துள்ளார்.

நாத்திகர்களுடன்: இறைவன் இருக்கின்றானா? குர்ஆன் இறை வேதமா? நாத்திகர்களின் மூட நம்பிக்கை ஆகிய மூன்று தலைப்புகளில் சென்னையில் 2009 அக்டோபர் 11, 12 ஆகிய இரு தினங்கள் கடவுள் மறுப்பாளர்களுடன் விவாதம் நடைபெற்றது.

உமர் அலியுடன்: 1993-07-08 ஆம் திகதி P.ஜைனுல் ஆபிதீன், மவ்லவி ஸைபுல்லாஹ் ஹாஜா, எம்.ஐ. ஸுலைமான் , முஹம்மது உஸ்மான் கான் ஆகியோருடன் இலங்கை வந்தார். விவாத ஒப்பந்த விதியில் 1993-07-13ம் திகதி உமர் அலியும் P.ஜைனுல் ஆபிதீனும் கையெழுத்திட்டனர். நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்துவதற்காக அனஸ் மாஸ்டர் அவர்கள் இரு தரப்பினராலும் நடுவராக ஏற்படுத்தப்பட்டார். 1993-07-14 அன்று புதன்கிழமை புத்தளம் நகர சபை மண்டபத்தில் விவாதம் நடைபெற்றது. இது பற்றி விரிவாக தனித் தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

மருதமுனை விவாதம்: 1994களில் மவ்லவி ஏ.எல்.பத்ருத்தீன் என்ற ஹுப்புல் அவ்லியா என இலங்கை மக்களால் அழைக்கப்படும்

கந்தூரியை ஆதரிக்கும் அணியுடன் விவாதம் செய்வதற்காக P.ஜைனுல் ஆபிதீன் இலங்கை வந்தார். அன்ஸார் சுன்னாவின் ஏற்பாட்டில் 4 தலைப்புகளில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில், மருதமுனை என்ற ஊரில் 31.01.1994 - 01.02.1994 ஆகிய இரண்டு நாட்கள் அந்த விவாதம் நடை பெற்றது.

**BMICH விவாதம்:** 21-07-2001 அன்று இலங்கையில் BMICH ல் அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத்தும் இஷாஅத் அஹ்லுஸ் ஸுன்னா அமைப்பிற்குமிடையில் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் யார்? என்ற தலைப்பில் நடந்த விவாதத்திலும் பீஜே கலந்து கொண்டார்.

**காதியானிகளுடன்:** கோவை மாநகரில்,"ஈஸா நபி மரணித்து விட்டார்களா?" என்ற தலைப்பில் 19-11-1994 அன்றும், "இறுதி நபித்துவம்" என்ற தலைப்பில் 22-11-1994 அன்றும், "மிர்ஸா குலாம் நபியா? பொய்யனா?" என்ற தலைப்பில் 25-11-1994 அன்றும் P.ஜைனுல் ஆபிதீன் காதியானிகளுடன் விவாதித்துள்ளார்.

**அப்துல்லாஹ் ஜமாலி குழுவுடன்:** அப்துல்லாஹ் ஜமாலியுடன் அதிகளவில் விவாதம் செய்துள்ளார். தர்காவுக்குச் செல்லலாமா? மவ்லிது ஓதலாமா? மத்ஹபைப் பின்பற்றலாமா? இறந்தவர்களிடம் உதவி தேடலாமா? ஆகிய தலைப்புகளில் குமரி மாவட்டம் களியக்காவிளையில் 03-06-2007 அன்று ஷேக் அப்துல்லா ஜமாலி குழுவுடன் P.ஜைனுல் ஆபிதீன் விவாதம் செய்தார்.

இறைவனுக்கு உருவம் உண்டா? என்ற தலைப்பில் P.ஜைனுல் ஆபிதீனுக்கும் ஷேக் அப்துல்லாஹ் ஜமாலிக்கும் சென்னையில் 17-18-07-2010 அன்று பகிரங்க விவாதம் நடைபெற்றது.

ஷிர்க் மற்றும் பித்அத்வாதிகள் யார்? என்ற தலைப்பில் 23-24.07.2010 சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்கள் சென்னையில் P.ஜைனுல் ஆபிதீனுக்கும் ஷேக் அப்துல்லாஹ் ஜமாலிக்கும் இடையில் விவாதம் நடந்தது.

**ஸகாத் விவாதம்:** ஒரு தடவை ஸகாத் கொடுத்த பொருளுக்கு வருடா வருடம் மீண்டும் ஜகாத் கொடுக்க வேண்டுமா? என்ற தலைப்பில் P.ஜைனுல் ஆபிதீனுக்கும், மவ்லவி நூர் முஹம்மது பாகவி அவர்களுக்கும் 10-11-02-2007 அன்று மதுரையில் இரண்டு நாட்கள் பகிரங்க விவாதம் நடைபெற்றது. விவாத முடிவில் பார்வையாளர்கள் இரு அறிஞர்களிடமும் கேள்வி கேட்கும் நடைமுறை இந்த விவாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**சூனியக்காரர்களு(அகோரி குழுவு)டன் ஒப்பந்தம்:** P.ஜைனுல் ஆபிதீன், தனக்கு சூனியம் செய்து, அதனால் வீழ்த்த முடியாது என்று தனது இயக்கக் குழுவுடன் ஒரு விபரீத ஒப்பந்தம் செய்து, பரபரப்பை ஏற்படுத்தினார்.இது, பத்திரிகைகளிலும் பரபரப்புச் செய்தியானது.

இவ்வாறு, இவர் சந்தித்த விவாதம் தொடர்பாக “கப்ரு வணங்கிகளிடம், காதியானிகளிடம், கிறித்தவர்களிடம், குர்ஆன் மட்டும் போதும் என்ற குருட்டு சிந்தனை உடையவர்களிடம், குர்ஆனுக்கு முரணான ஹதீஸ்களையும் ஏற்க வேண்டும் என்பவர்களிடம், ஜகாத், பிறை போன்ற மார்க்கச் சட்டங்களில் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களிடம் என பல்வேறு விவாதக் களங்களைச் சந்தித்த தவ்ஹீத் ஜமாஅத், அண்மையில் தன் பாதையில், தன் அனுபவத்தில், தன் பயணத்தில் இது வரை சந்தித்திராத, கண்டிராத நாத்திக வாதிகளிடம் ஒரு விவாதக் களத்தைச் சந்தித்தது.

பகுத்தறிவுவாதிகள் (?) இவர்கள்! இவர்களிடம் மோத முடியுமா? முட்ட முடியுமா? இவர்களை எதிர்த்து வாதம் செய்ய முடியுமா? என்று இந்த நூற்றாண்டில் நினைப்பதற்கே பயந்து கொண்டிருந்தது இஸ்லாமியச் சமுதாயம்!

இப்ராஹீம் நபியின் பாதையில் இவர்களையும் இந்த ஜமாஅத் சந்திக்கும் வகையில் அவர்களைச் சந்திக்கு அழைத்தது; சந்தித்தது. அவர்கள் செய்வது பகுத்தறிவு வாதம் அல்ல! பைத்தியக்கார வாதம் என்று நிறுவி, நிரூபித்து அவர்களை சந்தி சிரிக்க வைத்தது. அவர்கள் கொண்ட கொள்கையில் அவர்களையே சந்தேகிக்க வைத்தது” என லுஹா குறிப்பிட்டுள்ளார்.

அழகிய விவாதம் செய்யுங்கள் என்று அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. ஆரம்ப நாட்களில் அவர் மிதவாதியாகச் செயற்பட்டார். கிறிஸ்தவ பாதிரி ஜெபமணியுடன் விவாதம் செய்யும் போது, அவர் விவாதத்தின் இடை நடுவே விட்டு விலக முனைந்த போது, சட்டையைப் பிடித்து இழுத்து வைத்து விவாதிப்பேன் என்று ஒரு கட்டத்தில் P.ஜைனுல் ஆபிதீன் ஆக்ரோஷமாகக் குமுறினார். ஆனால், கமாலுத்தீன் மதனி அவர்கள் இது தவறான வழி, அல்லாஹ் அழகிய முறையில் விவாதிக்குமாறு அறிவுறுத்துகின்றான் என்று பீ.ஜேவிற்கு அறிவுரை சொல்லி, அவரை நெறிப்படுத்தினார். அன்று அவருடன் மார்க்கம் படித்த, பண்பட்டவர்கள் இருந்த போது, விவாதக் களம் நெறிப்படுத்தப்பட்டது. அவை மக்களிடம் தாக்கமும் செலுத்தியது.

தனி இயக்கம் கண்டு, தலைமைப் பதவிக்கு வந்த பின்னர், தெளிவில்லா தோருக்குப் புரிய வைத்து, தெளிவுபடுத்துவதை விடுத்து, கேவலப்படுத்துவதை அவரது விவாதக் களங்களில் அதிகமாக அவதானிக்க முடிந்தது. இதற்குக் காரணம் அவர் படித்த உலமாக்களை விடுத்து, பண்படாதவர்களை தன்னோடு இணைத்துக் கொண்டு, தனது பயணத்தை ஆரம்பித்து, இன்று விபரீதமான விளைவுகளை சந்தித்துள்ளார் என்பது வேதனையான விடயமாகும்.

மாற்று மத சகோரர்கள் என்று விழித்து, இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம் என்ற நிகழ்ச்சியை அவர் நிதானமாக நடத்திய விதம் இஸ்லாம் பற்றிய அழகிய புரிதலை ஏற்படுத்தி, இன நல்லிணக் கத்தைக் கட்டி எழுப்பியது. தமிழகத்தில் Dr. K.V.S. ஹபீப் முஹம்மதின் மானுட வசந்தம் நிகழ்ச்சியும் Dr.ஸாக்கிர் நாயக்கின் மத ஒப்பீட்டாய்வும் படித்த வர்க்கத்திடம் வரவேற்பைப் பெற்றிருந்தது.

எனினும், P.ஜைனுல் ஆபிதீனுடைய விவாத அணுகுமுறையில் சில போது, மிகக் கடினமாக நடந்து கொண்டார். அந்நிய சகோதரர்களிடம் அவர் காட்டிய பண்பை முஸ்லிம்களிடம் வெளிப்படுத்த பல தடவைகள் தவறியுள்ளார். அவருடன் ஆரம்ப நாட்களில் உழைத்த, முதிர்ச்சியுள்ள உலமாக்கள் இருந்த போது, அவர் நெறிப்படுத்தப்பட்டார். அவர் அனைவரையும் புறக்கணித்து, தனித்து இயங்க ஆரம்பித்த பின்னர், ஆலிம்களுக்கு அவரது இயக்கத்தில் கவ்ரவம் குறைக்கப்பட்டது. முதிர்ச்சியற்றவர்கள் சூழ்ந்து

கொண்டார்கள். அநாகரிக தஃவா வழிமுறையைப் பின்பற்ற தூண்டப்பட்டார். அந்த வழிமுறையை இளைஞர்கள் விரும்புவார்கள் என்று ஆர்வமூட்டப்பட்டார். தூற்றுவதையும் இழிவுபடுத்துவதையும் தனி நபர் தாக்குதலையும் தனது தஃவாவின் புதிய அணுகு முறையாக ஆரம்பித்தார். இது அவரது மதிப்பை வெகுவாகக் குறைத்தது.

விவாதக் களத்தில் அவரும் அவரது இயக்கக் குழுவினரும் நடைமுறைப்படுத்திய இதுபோன்ற வரம்பு மீறிய செயற்பாடு, பின்னர் அவர்களுக்கே எதிரானதாக அமைந்த கசப்பான உண்மையை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. மாற்றுக் கருத்துள்ளவர் களிடம் அவர்களது தவறான சிந்தனையை புரிய வைப்பதில் அவர் காட்டிய முனைப்பைவிட, எதிரியை குறுக்கு வழியில் வீழ்த்தி, அவர்களை மட்டம் தட்டி, தான் மேன்மை பெற வேண்டும், அப்போதுதான் மக்கள் மத்தியில் நம் கருத்து நிலை நாட்டப்படும் என்ற நிலைக்கு மாறியதன் விளைவு, ஒரு கட்டத்தில் கிறித்தவ குழுக்களுடன் நடைபெற்ற விவாதங்களை அவர்களே வெளியிட முடியாத அளவுக்கு இழுக்கை ஏற்படுத்தியது. இது குறித்து P.ஜைனுல் ஆபிதீன் TNTJ விலிருந்து வெளியேற்றப்படுவதற்கு முன்னர் ஒரு வீடியோவில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆபாசத்தை மூலதனமாகக் கொண்டு மத்ஹப், கிறிஸ்தவ விவாதக் களத்தைக் கொதி நிலையில் நகர்த்திய P.ஜைனுல் ஆபிதீனுக்கு, இனி அவற்றைப் பற்றி வாய் திறக்க முடியாத அளவு அவரின் பச்சை Audio ஆப்பாக அமைந்துவிட்டதாக அவரது முன்னாள் சகாக்கள் தெரிவிக்கின்றனர்.

# தடம்புரண்ட தடையங்கள்

ஸகாத்

ஹதீஸ் மறுப்பு

சூனியக் கொள்கை

இரட்டை வேடம்

ஸலபுகள் பற்றிய இரட்டை நிலைப்பாடு

# திசை மாறிய பயணம்

P.ஜைனுல் ஆபிதீன், அல்குர்ஆன் – ஸுன்னா பிரசாரத்தின் மூலம் தமிழ் உலகில் முற்போக்கான பல்வேறு துறை சார்ந்த மாற்றங்களையும் பணிகளையும் ஆற்றியுள்ளார். எனினும், அவரது கொள்கையிலும் சிந்தனைப் போக்கிலும், நடவடிக்கைகளிலும் முன்னைய நல்லறிஞர்களின் புரிதல் நிலையில் இருந்து மாறுபட்ட தன்மை வெளிப்பட ஆரம்பித்த போது, துவக்க காலத்திலேயே சில உலமாக்கள் அவற்றைக் கண்டு விமர்சிக்க ஆரம்பித்தனர். அவர்களில் ரஹ்மத்துல்லாஹ் இம்தாதி, அபூ அப்துல்லாஹ், அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி, Dr. நுபார் பாரூக் (ரஹ்), அஷ்ஷெய்க் முபாரக் மஸ்வூத் மதனி, ரிஸ்வான் மதனி, எஸ்.கமாலுத்தீன் மதனி போன்றவர்கள் முக்கியமானவர்கள். அபூ அப்துல்லாஹ் அவர்கள் அந்நஜாத் மாத இதழிலும் தனி இணைய தளத்திலும் கடுமையான விமர்சனங்களை எழுதி வந்தார். இஸ்லாம் கல்வி என்ற இணையதளத்தில் பீஜே,ததஜ என்று தனித் தலைப்பில் பல்வேறு அறிஞர்களின் விமர்சனங்கள் உள்ளன.

இயக்க நலன் சார்ந்த கொள்கை வகுப்பை வெளிப்படுத்தி, பல முரண்பட்ட கருத்துக்களை முன்வைத்து, இன்று பலரது பலத்த விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளார். **“ஹதீஸ் கலை, தப்ஸீர் கலை, பிக்ஹ் கலை போன்ற துறைகளில் போதிய அறிவின்மையால்தான், P.ஜைனுல் ஆபிதீன் குர்ஆன், ஹதீஸ் மற்றும் பிக்ஹ் போன்ற விளக்கங்களில் முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களைச் சொல்லியுள்ளார்”** என ரிஸ்வான் மதனி குறிப்பிடுகின்றார்.

நாம் முதல் பாகத்தில் அவரது நல்ல செயற்பாடுகள் பலவற்றை குறிப்பிட்டிருந்தோம். இங்கு அவர் மீது முன்வைக்கப்படும் பல்வேறு பாரதூரமான விமர்சனங்களைக் குறித்துப் பேசப்படுகிறது. அவரும் அவரது ஆதரவாளர்களும் மற்றவர்களை விமர்சிப்பதில் அவர்கள் கடைப்பிடித்த அநாகரிக வழிமுறையை நாம் விரும்ப வில்லை. கொள்கை, பண்பாடு ரீதியாக அவர் மீது எழுந்துள்ள குற்றச்

சாட்டுக்களை முன்வைத்துள்ளோம். இது, தனிமனித தாக்குதல் அல்ல என்பதை ஊன்றிப் பதிவு செய்கின்றோம். அவரது போட்டோவை அட்டையில் இட்டுவிட்டோம் என்று அவரது தக்லீத் முகாம் நம்மீது விரல் நீட்டியது. மற்றவர் அனுமதியின்றி அவர் எத்தனை பேருடைய வீடியோக்களை சமூக வலைத்தளங்களிலும் கள்ள முகவரியிலும் வெளியிட்டார்; அநாமதேய வழியில் அசிங்கப்படுத்தினார். அப்போ தெல்லாம் இந்த தக்லீத் பக்த கோடிகள் எங்கே இருந்தார்கள் என்று நாம் கேட்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இத்தனை அசிங்கங்களுக்குப் பின்னும் பக்தி சிரத்தையோடு முகநூலில் அவருக்காக அவஸ்தைப்பட்டு அசிங்கமாக சில அறிவிலிகள் குரல் எழுப்புவதையும் மற்றவர்களை அநாகரிகமாகத் தாக்குவதையும் பார்க்கும் போது, அருவருப்பாக உள்ளது. அவரைப் போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு இலக்கான சிலர் மற்றவர்களை விரல் நீட்டி குற்றம் சுமத்திவருகின்றனர். இத்தனை இழிவு வந்த பின்னரும் இன்னமும் இந்தக் கூட்டம் திருந்தவில்லை.திருந்துவதற்கான ஆன்மிக வழிகாட்டலை அவர் வழங்கவில்லை என்பதை அவர்களின் பதிவுகள் புலப்படுத்துகின்றன. அண்மைக்கால அவரது சொற்ப எண்ணிக்கையுடைய ஆதரவுத் தளத்தை அவதானிப்போர் மேற்சொன்ன விசனத்தை வெளிப்படுத்துகின்றனர்.

P.ஜைனுல் ஆபிதீன் தொடர்பாகவும் அவரது சிந்தனைப் போக்கு தொடர்பாவும் சவுதி அரேபிய அறிஞர்களுக்கு முபாரக் மதனியும் எம்.எம்.Zaky மதனியும் இணைந்து மடல் மூலம் தெரிவித்தனர்.

“தமிழகத்தில் P.ஜைனுல் ஆபிதீன் என்று ஒருவர் இருக்கிறார். இவர் இலங்கையிலும் இந்தியாவிலும் பிரபலமானவர். முஸ்லிம்களிடமும் முஸ்லிம் அல்லாதவரிடமும் பிரபலமானவர். குர்ஆன் – சுன்னாவின் பால் அழைப்பதிலும் பித்அத்தை ஒழிப்பதிலும் இவருக்குப் பெரும் பங்கு உண்டு.

எழுத்து, பேச்சு, விவாதம், கருத்தரங்கம் என்று பல் துறைகளில் இவருக்கு ஆற்றல் உண்டு. கப்ர் வணங்கிகளுடனும் காதியானி களுடனும் கிறித்தவர்களிடமும் இவர் விவாதங்கள் பல நடத்தியுள்ளார்.

இவரது பேச்சுக்கள் குறுந் தகடுகளாகவும் ஒளிப் பேழை களாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன. பாமர மக்கள் மத்தியில் இவருக்குப் பெரிய வரவேற்பு உள்ளது.

இவர் திருக்குர்ஆனைத் தமிழாக்கம் செய்துள்ளார். சில வசனங்களுக்கு விளக்கக் குறிப்புகளும் கொடுத்துள்ளார். இதில் சில தவறுகளை நாங்கள் காண்கிறோம். அவற்றுள் சில பின்வருமாறு,

1. அல்லாஹ் மேகத்தில் வருவான் என்பதற்கு அல்லாஹ்வின் தண்டனை வரும் என்று விளக்கம் கொடுத்துள்ளார்.
2. ஹாரூத் - மாரூத் மலக்குகள் அல்ல. ஷைத்தான்கள் என்று எழுதியுள்ளார்.
3. ஸாத் அத்தியாயத்தில் 34 வது வசனத்தில் அவரது சிம்மாசனத்தில் ஒரு முண்டத்தைப் போட்டோம் என்று மொழிபெயர்க்காமல் அவரை ஒரு சடலமாகப் போட்டோம் என்று எழுதியுள்ளார். சுலைமான் நபி ஓர் இரவில் நூறு மனைவியருடன் உடலுறவு கொண்டதாக வரும் ஹதீஸ்களை மறுத்துள்ளார்.
4. ரசூல், நபி என்பதற்கிடையே எந்த வேறுபாடும் இல்லை என்று எழுதியுள்ளார்.
5. ஆதம் (عليه السلام) அவர்கள் சொர்க்கத்திலிருந்து வெளியேற்றப் பட்டார்கள் என்று எழுதாமல், ஒரு தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்று எழுதியுள்ளார்.
6. சிஹ்ர் – சூனியம் என்பது கற்பனை என்கிறார்.
7. நபி அர்களுக்கு சூனியம் செய்யப்பட்டதாக புகாரியில் இடம் பெற்ற ஹதீஸை மறுக்கிறார்.
8. நம்பகமானவர்கள் வழியாக அறிவிக்கப்படும் ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரணாக இருந்தால், அதை மறுக்க வேண்டும் என்கிறார். இத்தகைய ஹதீஸ்கள் சுமார் 50 உள்ளன எனக் கூறுகிறார்.
9. பத்து தடவை பாலூட்டினால் தான் தாய் பிள்ளை உறவு ஏற்படும் என்று நபிகள் நாயகம் மரணிக்கும் வரை குர்ஆனில் ஒரு வசனம் இருந்தது என்று ஆயிஷா (ரலி) அறிவிக்கும் ஹதீஸையும் இவர் மறுக்கிறார்.
10. ஸாலிம் என்ற இளைஞருக்கு பாலூட்டு, அவர் உன் பிள்ளையாகி

விடுவார் என்று ஹுதைபா (ரழி) அவர்களின் மனைவியிடம் நபிகள் நாயகம் (ஸல்) கூறியதாக வரும் ஹதீஸையும் இவர் மறுக்கிறார்.

11. முடிச்சுக்களில் ஊதும் பெண்கள் என்பது சூனியக்காரர்களைக் குறிக்காது. ஷைத்தானையே குறிக்கும் என்று எழுதியுள்ளார்.
12. பெண்கள் முகத்தை மறைக்க எந்த ஆதாரமும் இல்லை என்கிறார். இதனால், ஒழுக்கக் கேடுகள்தான் ஏற்படும் என்கிறார்.
13. குர்ஆனை எடுத்து எழுதிய நபித் தோழர்கள் சில எழுத்துப் பிழைகளை விட்டுள்ளனர். அது அப்படியே உள்ளது எனக் கூறி, சில ஆதாரங்களையும் கூறுகிறார்.
14. குர்ஆனின் ஓரத்தில் ஸஜ்தா என்றும் மற்றும் சில வார்த்தைகளும் பின்னால் எழுதப்பட்ட பித்அத் என்று கூறி இவ்வாறு செய்தவர்களைக் கண்டிக்கிறார்.
15. நிச்சயமாக என்பதை அறவே தவிர்த்துவிட்டார்.

இவரது திருக்குர்ஆன் தமிழாக்கத்தில் நாங்கள் கண்ட தவறுகள் இவை. இவை தவிர அவரது உரைகளிலும் நூல்களிலும் இன்னும் பல தவறுகளைச் செய்துள்ளார். உதாரணத்துக்காக சில. இவை மட்டுமல்லாமல் இன்னும் உள்ளன.

1. இறைவன் முதல் வானத்திற்கு இறங்குகிறான் என்பதற்கு நேரடிப் பொருள் செய்யவில்லை.
2. இஜ்மாவையும் கியாஸையும் அறவே மறுக்கிறார்.
3. சலபிக் கொள்கையை மறுத்து கிண்டல் செய்கிறார். அவர்கள் தக்லீது செய்பவர்கள் என்கிறார்.
4. மனித உடலுக்குள் ஜின்கள் நுழைவதையும் இவர் மறுக்கிறார்.
5. நபி (ஸல்) அவர்கள் மரணித்த பின் அவர்களை யாரும் கனவில் காண முடியாது என்கிறார்.
6. பலவீனமான ஹதீஸ்கள் துணைச் சான்றுகள் மூலம் சரியான ஹதீஸ் என்ற நிலைக்கு உயரும் என்பதையும் மறுக்கிறார்.
7. தாடியைக் கத்தரிக்க எந்த அளவும் நிர்ணயிக்கப்படவில்லை என்கிறார்.
8. ஆடைகளைத் தரையில் இழுபடும்படி தொங்க விடுவது எந்தத்

தவறுமல்ல என்கிறார்.

9. ஒரு பொருளுக்கு ஒரு தடவை தான் ஜகாத் என்கிறார். ஒரு தடவை ஜகாத் கொடுக்கப்பட்ட பொருளுக்கு மீண்டும் ஜகாத் இல்லை என்கிறார்.

10. ஜும்ஆவுக்கு முன் சுன்னத் உண்டு என்கிறார்.

11. குழந்தையாக இருந்த போது, நபிகள் நாயகத்தின் இதயம் பிளக்கப்பட்டதை மறுக்கிறார். அது குர்ஆனுக்கு முரண் என்கிறார்.

இவரது இத்தகைய தவறுகளை நேருக்கு நேராகவும் எழுத்து வடிவிலும் சகோதர தாயிகள் அவருக்குச் சுட்டிக் காட்டிய பின்னரும் தன் நிலையில் நீடிக்கிறார். எதிர் கருத்துச் சொல்பவர்களை விவாதத்துக்கு, அல்லது முபாஹலாவுக்கு அழைக்கிறார்.

இவருக்கு இருக்கும் பேச்சாற்றல் காரணமாக இவர் கூறுவதை பாமர மக்கள் நம்புகின்றனர். அதனடிப்படையில் தங்களிடம் இது குறித்து சில விளக்கங்களை எதிர் பார்க்கிறோம்.

1. இவருடன் நாங்கள் எப்படி நடந்து கொள்வது?

2. குர்ஆன் ஹதீஸ் பக்கம் மக்களை அழைப்பதற்காக இவர் பாடு படுவதாலும் பித்அத்களை ஒழிக்கப் பாடுபடுவதாலும் இவரைப் பற்றி மக்கள் மத்தியில் பேசக் கூடாது. அது தான் சமுதாயத்துக்கு நன்மை என்று சலபி உலமாக்கள் சிலர் கூறுகின்றனர். இது சரியா?

3. எவ்விதத் தவறும் இல்லாமல் மன்னர் பஹத் செலவில் ஒரு தமிழாக்கம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் இவரது தமிழாக் கத்தை விற்பதும் வாங்குவதும் கூடுமா? அவரது தமிழாக்கம் ரகசியமாக சவூதி அரேபியாவில் விற்கப்படுகிறது. இது பற்றி தங்களின் மேலான விளக்கத்தை எதிர்பார்க்கிறோம்." என்று அந்தக் கடிதத்தில் மதனிகள் குறிப்பிட்டிருந்தனர்.

அந்தக் கடிதத்தில் மதனிகள் குறிப்பிட்ட சில விடயங்களை P.ஜைனுல் ஆபிதீன் பின்னர் மாற்றியுள்ளார்.

“புகார் அனுப்பியவர்கள் வழியாக எனக்கு இரண்டு மடல்களை அனுப்பி என்னிடம் சேர்ப்பிக்கும் படியும் இந்தப் புகார் கடிதத்தையும் P.ஜைனுல் ஆபிதீனுக்கு அனுப்ப வேண்டும் என்றும் புகார் எழுதியவர்களுக்கு சவூதி அரசு உத்தரவிட்டது. இதன் பின்னர் புகார் அனுப்பியவர்களில் ஒருவரான முபாரக் மதனி என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சவூதி அரசு உங்களுக்கு சில தகவல்களைத் தெரிவிக்க பணித்துள்ளது. உங்கள் பெக்ஸ் (Fax) நம்பர் வேண்டும் என்று கேட்டார். யாருக்கும் தெரியாமல் அவர் எழுதிய புகார் கடிதத்தை அவர் வழியாகவே எனக்கு அல்லாஹ் கிடைக்கச் செய்தான்.” என்று P.ஜைனுல் ஆபிதீன் குறிப்பிடுகின்றார்.

மதனிகளின் மனுவைத் தொடர்ந்து, P.ஜைனுல் ஆபிதீனுக்கு ராபிதாவின் பொதுச் செயலர் ஹஜ் செய்வதற்காக ஓர் அழைப்பிதழை அனுப்பினார்.

பெறுநர்: பேராசிரியர் ஜைனுல் ஆபிதீன்,

உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும்.

இவ்வாண்டு ஹஜ்ஜுக்கு உங்களை அழைக்கிறோம். உங்களை உபசரிக்கும் செலவு எங்களுடையது. பயணச் செலவு உங்களுடையது. ஜனவரி 1, 2006 முதல் ஜனவரி 16, 2006 வரை விருந்தினராக இருப்பீர்கள். இஹ்ராம் நிய்யத்துடன் பிரவேசிக்க வேண்டும். சவூதி வருகை பற்றி ஒரு வாரம் முன்பு பெக்ஸ் மூலம் தெரிவிக்கவும்.நீங்கள் ஒருவர் மட்டுமே வரலாம்.

இந்த ஹஜ் அழைப்பில் ஹஜ் கிரியை முடியும் வரை இஹ்ராமுடன் தங்க வேண்டும் என்று எழுதப்பட்டிருந்தது. விவாதித்தல் பற்றி எந்த விபரமும் காணப்படவில்லை. ஹஜ் முடிந்த பின் எங்கே விவாதிப்பது அதற்கான கால அளவு எதுவுமே இதில் குறிப்பிடப்பட வில்லை. ஏனெனில், சவுதி உலமாக்கள் மாற்றுக் கருத்துள்ளவர்களுடன் விவாதம் செய்யும் இயல்பு கொண்டவர்கள் அல்லர். அரபுலகில் செல்வாக்குப் பெற்ற பல அரபு நாட்டு அறிஞர்களுக்கு மறுப்புகள் அளித்து உரைகள், நூல்கள் என்பன வெளியிட்டுள்ளனர். அறிஞர் அல்பானி (ரஹ்) அவர்கள், அறிஞர் அப்துல்லாஹ் பின் பாஸ் (ரஹ்) அவர்களுக்கு ரூகூவின் பின்னர் கைகளை நெஞ்சில் கட்டுதல்

தொடர்பாக மறுப்பளித்துள்ளார். யூசுப் அல்கர்ளாவிக்கு ஹாதி அல் மத்கலி மறுப்பளித்துள்ளார்.

எனினும், அவர்கள் போன்று P.ஜைனுல் ஆபிதீன் அரபு மொழியை சரளமாகப் பேச முடியாதவர். இதை அவரே சவுதி அறிஞருக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். அரபுலகில் அவரது நூல்கள் வாசிப்பைப் பெறவில்லை. இந்தியாவின் வேறு மாநிலங்களில் உள்ள உலமாக்கள் அரபு மொழியில் எழுதிய சில நூல்கள் சவுதி அரேபியாவின் சில பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டமாக உள்ளன. ஆனால், அரபு மக்களிடம் P.ஜைனுல் ஆபிதீன் செல்வாக்குப் பெறவில்லை. எனினும், கடந்த காலத்தில் அவர் மேற்கொண்ட சில சேவைகளுக்காக ஹஜ் வாய்ப்வை வழங்கினர். ஆனால், P.ஜைனுல் ஆபிதீன் வாழ்வுரிமை மாநாடு உள்ளது என்றும், இப்போது தன்னால் வர இயலாது என்றும் அவரது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

**கரண்டைக் காலுக்குக் கீழ் ஆடை:** 1995 களில் அவரது சில பத்வாக்கள் விமர்சனத்திற்கு உள்ளாகின. Trouser ஐ கரண்டைக் காலுக்குக் கீழ் அணியக் கூடாது என்ற ஹதீஸ் நிலைக்கு அவர் மாற்று விளக்கம் கூறினார். "பேண்டைப் (Trouser) பொறுத்தவரை அந்த உடையின் அமைப்பை பெரும்பாலும் கரண்டைக்கு கீழ் அமைவதுதான். இதில் பெருமை அடித்தல் என்பதற்கு இடமே இல்லை. அனைவரது பேண்ட்களும் இவ்வாறு அமைந்திருப்பதால் பெருமை அடிக்க முடியாது. எனவே, பேண்ட் கரண்டைக்குக் கீழ் இருந்தாலும் அதை அணிவதில் தவறில்லை." (அல்ஜன்னத், ஜுன் :1995 ப:8) என்ற இவரது நிலைப்பாடு இலங்கை உலமாக்களால் ஏற்கத் தயக்கம் காட்டப்பட்டது.

**அல்லாஹ் அடிவானத்திற்கு இறங்குதல்:** இது தொடர்பாக புகாரியில் இடம்பெறும் நபிமொழி தொடர்பாக P.ஜைனுல் ஆபிதீன் மாற்று விளக்கம் அளித்தார். அவரின் இக்கருத்திற்கு கடுமையான எதிப்புகள் எழுந்தன.

**"அல்லாஹ்வின் பண்புகளில் ஒன்றே அவன் இறங்குகிறான்"** என்பது. அல்லாஹ் இறங்குகிறான் என்பதை நபி ﷺ அவர்கள் பின்வருமாறு உறுதிப்படுத்துகிறார்கள்.

ஒவ்வொரு இரவிலும் மூன்று பகுதியின் கடைசிப்பகுதியில் எங்கள் இறைவன் அடிவானத்திற்கு இறங்குகிறான். (இறங்கி) என்னை யார் அழைக்கிறானோ அவனுக்கு நான் விடையளிக்கி ன்றேன். என்னிடம் யார் கேட்கிறானோ அவனுக்கு நான் கொடுக்கிறேன். யார் என்னிடம் பாவமன்னிப்புக்கோருகிறானோ அவனது பாவங்களை நான் மன்னிக்கிறேன் (என்று கூறுகிறான்.) அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி), நூல்கள்: புகாரி, முஸ்லிம்.

இமாம் தஹபி ரஹிமஹுல்லாஹ் தனது அல்- உலுவ்வு என்ற நூலில், இந்த ஹதீஸ் பற்றி சொல்லும் போது, அல்லாஹ் இறங்குவது பற்றிய ஹதீஸ்களை நான் ஒரு புத்தகத்தில் தொகுத்துள்ளேன். அவை, முதவாதிர் (எந்த ஆய்வுகளுமின்றி நம்பப்படவேண்டிய) தரத்தில் அமைந்த செய்தியாகும் என உறுதிப்படுத்துகிறேன். (ப:100)

இது போலவே, இந்த செய்தி முதவாதிர் எனும் தரத்தில் உள்ளது என்பதை இப்னு தைமியா (ரஹ்) அவர்களும், இப்னு அப்தில் பர் (ரஹ்) அவர்களும் உறுதிப்படுத்துகின்றனர். முக்தஸருஸ் ஸவாஇகில் முர்ஸலா எனும் நூலில், இமாம் இப்னுல் கய்யிம் அல்- ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸை 28 ஸஹாபாக்கள் அறிவித்துள்ளதாக குறிப்பிடுகிறார். (ப: 457)

இவ்வாறு, மிகுந்த நம்பகத்தன்மைக்குரிய இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் எங்கள் இறைவன் இறங்குகிறான் என்று சொல்கிறார்கள். அதை எந்த கருத்துமாற்றங்களும், திரிபுகளும் செய்யாமல் நம்புவதே ஒவ்வொரு இறைவிசுவாசியினதும் கடமையாகும். ஆனால், சிலர் “இறைவன் இறங்குகிறான் என்றால் இறைவன் தானாக இறங்குவதில்லை. இரவின் மூன்று பகுதியின் கடைசிப்பகுதியில் எழுந்து இறைவனிடம் இறைஞ்சி மன்றாடுப வர்களுக்கு இறைவனின் விசேட பார்வையும், அவனது அருளும் இறங்குகிறது என்று கருத்துத் திரிபு செய்கின்றனர்” (http://www.asrc.dharussalam.org/2018) என்று அவரது கருத்துக்கு எதிர்க் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

# ஸகாத்

ஒரு பொருளுக்கு ஒரு தடவை ஜகாத் கொடுத்து விட்டால் அதற்கு மீண்டும் மீண்டும், வருடா வருடம் ஜகாத் கொடுக்கத் தேவையில்லை. கொடுத்த பொருளுக்கு ஸகாத் கொடுக்க வேண்டும் என்று எந்த ஆதாரமும் இல்லை என்பது P.ஜைனுல் ஆபிதீனின் நிலைப்பாடு. அவரது இந்த நிலைப்பாட்டிற்காக, P.ஜைனுல் ஆபிதீன் ஓர் இந்திய உளவாளி என்று சில இயக்கங்கள் சந்தேகித்தன. அவரது ஸகாத் போன்ற சில பத்வாக்களை விமர்சித்து, இதற்குப் பின்னால் யாரோ இருக்கின்றனர் என்ற கருத்தை மீள்பார்வை போன்ற பத்திரிகைகள் வெளிப்படுத்தின. ஆனால், அதற்கான எந்த ஆதாரத்தையும் அவர்கள் சமர்பிக்கவில்லை.

2004 ஆம் ஆண்டுகளில் P.ஜைனுல் ஆபிதீனின் ஸகாத் பற்றிய கருத்தை சமூக மன்றில் முன்வைத்தார். “இஸ்லாம் மிகவும் வலியுறுத்திக் கூறும் ஐந்து கடமைகளில் ஒன்றாக ஜகாத் எனும் கடமை அமைந்துள்ளது. ஜகாத்தை வலியுறுத்தும் ஏராளமான திருக்குர்ஆன் வசனங்களும், நபிமொழிகளும் உள்ளன.

ஸகாத் கட்டாயக் கடமை என்பதில் முஸ்லிம் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு ஏதும் இல்லாவிட்டாலும் ஜகாத் உட்பிரிவுச் சட்டங்கள் பலவற்றில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன.

- ☞ எந்தெந்த பொருட்களில் ஜகாத் கடமையாகும்?
- ☞ மற்றும் வெள்ளி நகைகளுக்கு ஜகாத் கடமையில் விதி விலக்கு உள்ளதா?
- ☞ குடியிருக்கும் வீடு, பயன்படுத்தும் வாகனங்கள் ஆகியவை ஜகாத்திலிருந்து விதி விலக்குப் பெறுமா?
- ☞ அழுகும் பொருட்கள் மற்றும் இதர விளை பொருட்களில் எவற்றுக்கு ஜகாத் உண்டு?

என்பன போன்ற பல்வேறு சட்டங்களில் அறிஞர்களிடையே முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன.

இவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இவை திறந்த மனதுடன் தான் விவாதிக்கப்பட்டு வருகின்றன. மாற்றுக் கருத்துடையவர்களை இஸ்லாத்தின் விரோதிகளாகப் பார்க்கும் மனப் போக்கு இருந்ததில்லை. திருக்குர்ஆனையும், நபிவழியையும் மட்டுமே இஸ்லாத்தின் மூல ஆதாரங்களாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்ட தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத், “சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் எத்தனை காலம் நடைமுறையில் இருந்தாலும் அது திருக்குர்ஆன் மற்றும் நபிவழியில் அமைந்துள்ளதா? என்பதை ஆய்வு செய்யும் கடமையும் உரிமையும் உண்டு” என வலியுறுத்தி வருகின்றது.

அந்த அடிப்படையில் தான், “ஒரு தடவை ஜகாத் கொடுக்கப் பட்ட பொருளுக்கு மீண்டும் மீண்டும், வருடாவருடம் ஜகாத் கொடுக்க வேண்டுமா?” என்பதையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டோம். இவ்வாறு ஆய்வு செய்த போது தவ்ஹீத் ஜமாஅத் அறிஞர்கள் மத்தியில் ஆரம்பத்தில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் எழுந்தன. கடந்த மூன்று ஆண்டுகளாக அறிஞர்கள் மத்தியில் பல்வேறு அமர்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன.

ஒவ்வொரு கருத்துடையவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு ஆதாரமும், ஒவ்வொரு வாதமும் திறந்த மனதுடன் பரிசீலனை செய்யப்பட்டன. இறுதியாக, கடந்த 29.08.2005 அன்று கடைய நல்லூரில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், “ஒரு தடவை ஜகாத் கொடுக்கப்பட்ட பொருளுக்கு மீண்டும் மீண்டும் ஜகாத் கொடுப்பது கடமையில்லை“ என்ற கருத்து தான் சரியானது என அனைத்து அறிஞர்களும் ஒத்த கருத்துக்கு வந்தனர்.”(2006:3-4)

ஜகாத் தொடர்பாக இக்கருத்தை அவர் எடுத்து வைத்த போது, “இவர் மதம் மாறி விட்டார்” என்று சிலர் ஃபத்வா வெளியிட்டார்கள்.

இலங்கையிலும் அவரது புதிய ஸகாத் கோட்பாடு எதிர்ப்புக்குள்ளானது. முரப்பி என்ற புனைப் பெயர் கொண்டவர் இது குறித்து மீள்பார்வையில் எழுதியிருந்தார்.

“இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை உண்டு பண்ணிய ஒரு கருத்துதான் ஸகாத் ஆயுளில் ஒரு தடவை மாத்திரம்

கொடுத்தால் போதுமானது என்பது. அதாவது குறித்த ஒரு தொகை செல்வத்தில் ஸகாத் கொடுபட்டால் அடுத்த வருடம் அந்த செல்வத்தை விடவும் மேலதிகமாக இருந்தால் அந்த மேலதிக செல்வத்திற்கு மாத்திரமே கொடுத்தல் வேண்டும். அடிப்படை செல்வம் ஸகாத் கடமையாகும் நிலையை அடைந்து இருப்பினும் சரியே. இப்படி ஓர் இஜ்திஹாத் தோன்ற முடியமா? அப்படி தோன்றுவதை அனுமதிக்க முடியுமா? என்ற கேள்விகளுக்கு அப்பால் இந்த சிந்தனை சமூகத்தில் உண்டு பண்ணும் எதிர்மறை பாதிப்பை பற்றி சற்று சிந்தித்தல் வேண்டும்." (மீள்பார்வை செப் 2004 இதழ் 97 பக்:17)

**இவரது இக்கோட்பாட்டுக்குப் பின்னால் வேறு ஏதேனும் சக்திகள் இருக்குமோ என்றும் மீள்பார்வை ஐயம் தெரிவித்தது.** "முஸ்லிம்களை வறுமையை விட்டு எழுந்து கொள்ள விடாமல் தடுக்கின்ற முஸ்லிம்களின் பாரிய பொருளாதார சக்தியை அடித்து வீழ்த்த நினைக்கின்ற இத்தகைய கருத்துக்களை எல்லாம் இதுவும் ஓர் இஜ்திஹாத் என்று பார்க்கத் தோன்றவில்லை. முஸ்லிம் சமூகத்தின் அடிப்படையையே ஆட்டம் காணச் செய்கின்ற இந்தக் கருத்துக்கள் ஒரு தூய்மையான இஜ்திஹாதாக இருக்க முடியாது. இவற்றுக்குப் பின்னால் ஏதேனும் இருக்குமா? என்று கூட சந்தேகிக்கத் தோன்றுகிறது. (மீள்பார்வை செப்:2004 இதழ் 97 ப:17)

**இக்கருத்துக்கு எந்த முகாந்தரமும் இல்லை. இயக்க முரண்பாட்டை வலுக்க வைக்கும் கருத்தாக மீள்பார்வையின் விமர்சனம் அமைந்துள்ளது என P.ஜைனுல் ஆபிதீனின் ஆதரவு முகாம் குற்றம் சுமத்தியது. முஸ்லிம் சமூகத்தின் பாரம்பரிய ஸகாத் நடைமுறைக்கு மாற்றமாக P.ஜைனுல் ஆபிதீனின் கருத்து காணப்பட்டாலும் அவர் ஆய்வின் மூலமே இக்கருத்தை முன்வைத்தார் என்பதை ஜகாத் ஓர் ஆய்வு என்ற நூல் தெளிவுபடுத்துகிறது என அவர்கள் தெரிவித்தனர்.**

**இவ்வாறு, இவரது ஜகாத் பற்றிய புதிய சிந்தனைக்கு எதிராக பிரசாரம் மேலும் வலுத்தது. அவர் வைத்த சில வாதங்களை மட்டும் மாற்றிக் கொண்டார். "ஓர் தடவை ஜகாத் கொடுக்கப்பட்ட பொருளுக்கு மீண்டும் மீண்டும் ஜகாத் கொடுப்பவர்கள் ஏழையாகி விடுவர்" என்பன போன்ற காரணங்களைக் கூறக் கூடாது. "ஒருவருக்கு ஒரு பொருள்**

கிடைத்தால் ஓர் ஆண்டு நிறைவடையும் வரை அப்பொருளுக்கு ஜகாத் இல்லை என்ற கருத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ்கள் அனைத்தும் பலவீனமானவையாக உள்ளன.ஆயினும், ஒரேயொரு ஹதீஸ் மட்டும் ஆதாரப்பூர்வமாக உள்ளது என்று சில அறிஞர்கள் கூறி வந்தனர்.

ஆனால், ஆய்வின் இறுதியில் அந்த ஒரு ஹதீஸும் பலமானது அல்ல என்பது தான் சரியான நிலை என்றும் முடிவு செய்யப்பட்டது. ஜகாத் கொடுக்கப்பட்ட பொருளுக்கு, மீண்டும் மீண்டும் கொடுக்கத் தேவையில்லை என்ற முடிவின் காரணமாக ஜகாத் கடமையான அனைவரும் ஜகாத் கொடுப்பார்கள் என்ற வாதத்தையும் எடுத்து வைக்கக் கூடாது" (2006:5,6)

ஸகாத் தொடர்பாக ஜைனுல் ஆபிதினின் புதிய கருத்திற்கு எதிராக சமரசம், அல்ஹஸனாத் போன்ற இதழ்கள் பிலால் பிலிப்ஸ் போன்ற சிலரது கருத்துக்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டன.

ஸகாத் கொடுக்கப்பட்ட பொருளுக்கு மீண்டும் மீண்டும், வருடா வருடம் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடுடைய மதுரையைச் சார்ந்த மௌலவி, ஹாஃபிழ், நூர் முஹம்மது ஃபாஜில் பாகவி அவர்களுடன் 10.02.07 மற்றும் 11.02.07 ஆகிய இரு தினங்கள் மதுரையில் P.ஜைனுல் ஆபிதீன் விவாதம் நடத்தினார். சில கட்டுரைகளையும் ஜகாத் ஓர் ஆய்வு என்ற நூலையும் எழுதியுள்ளார். ஸகாத் தொடர்பான இரண்டு விதமான கருத்துக்கள் பற்றிய பல ஆக்கங்கள் இணைய தளங்களில் உலா வருகின்றன.

P.ஜைனுல் ஆபிதீன் ஜகாத் தொடர்பான தனது ஆய்வை முன்வைத்தார். அதை ஏற்கவும், தக்க ஆதாரங்களுடன் மறுக்கவும் யாருக்கும் உரிமையுண்டு. ஆனால், எந்த ஆய்வினாலும் அது தவறு என்று மறுத்துரைக்காமல், அந்த ஆய்வின் பின்னால் வேறு யாரோ இருக்கின்றார்கள் என்று வீணான சந்தேகங்களை எழுப்புவது எந்த வகையிலும் நியாயமற்றது. இத்தகைய இயக்க சார்பு நிலை விமர்சனம் எந்த வகையிலும் பொருத்தமானதாக ஆய்வு நிலை மனங்கள் நோக்காது என்பதை 'முரப்பி' புரிந்து கொள்ள வேண்டும் என்று பலர் குறிப்பிட்டனர். ஸகாத் தொடர்பான பாரம்பரியக் கருத்தியலையே அதிகமான முஸ்லிம்கள் பின்பற்றி வருகின்றனர்.

# ஹதீஸ் மறுப்பு

P.ஜைனுல் ஆபிதீன் தனது தஃவாப் பணியில் தனித்து விளங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அதனால்தான் அவர் எல்லா இயக்கங்களுடனும் முரண்பட்டார்.அவர் சேர்ந்து பயணித்த எல்லா உலமாக்களுடனும் மோதினார்.எல்லா இயக்கங்களையும் விமர்சித்தார். மற்றவர்களிலிருந்து ஏதாவது வித்தியாசமாகச் சொல்லி, தன்னையும் தன் கருத்து சார்ந்தோரையும் தனித்து அடையாளப் படுத்தி, அதன் மூலம் இலாபம் அடைய முனைந்துள்ளார் என்பதை அவர் கடந்து வந்த பாதை தெளிவாகப் புலப்படுத்துகிறது என அவரை நன்கு அறிந்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.

2000ம் ஆண்டுகளில் ரமழான் மாதத்தில் மறை கூறும் இறைத் தூதர்கள் என்ற தொடர் சொற்பொழிவை நிகழ்த்தினார். அதில், ஸாலிம் தொடர்பான பால் குடி ஹதீஸை மறுத்தார். இது அவ்வளவு பெரிதாக உலமாக்களிடம் கவன ஈர்ப்பைப் பெறவில்லை. அதனால், விமர்சனமும் எழவில்லை. எனினும், ஸலபுஸ் ஸாலிஹீன்களின் மரபுக்கு மாற்றமான இவரது போக்கை ஆரம்பம் முதலே Dr. நுபார் பாரூக் (ரஹ்) அவர்கள் எச்சரித்து வந்தார்.

இவருக்கு முன்னர் சில இஸ்லாமிய அறிஞர்கள் சில ஹதீஸ்களை மறுத்துள்ளனர். அவர்களின் கருத்தை ஏற்காதோரை அவர்கள் கேவலப்படுத்தவில்லை.இயக்க ரீதியாகத் தாக்கவில்லை. P.ஜைனுல் ஆபிதீன் தனது கருத்தை ஏற்காதோரையும் மறுப்பு வெளியிட்டோரையும் சமூக ஊடகங்கள் மூலம் கடுமையாகத் தாக்கினார். அவர்களது சொந்த விவகாரங்களை வீதிக்கு இழுத்தார். தனிமனிதத் தாக்குதலையும் தனிப்பட்ட விமர்சனங்களையும் செய்தார். இவரது புதிய சூனியக் கருத்தை ஏற்காதோரை காபிர் என்று பத்வா வழங்கினார். இவரது மாநாடு ஒன்றில் சில இலங்கை தவ்ஹீத் உலமாக்களை வழிகெட்டோர் என்று புகைப்படம் வைத்து இழிவுபடுத்தினார். அதன் விளைவை இன்று அவர் அனுபவிக்க நேர்ந்துவிட்டது என்று அவர்கள் சார்பான பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும், மற்றவர்களது மான விடயத்தில் P.ஜைனுல் ஆபிதீன் எல்லை மீறி அநாகரிகமாக நடந்து கொண்டது போன்று, அவரது மான விடயத்தில் அவரால் பாதிக்கப்பட்ட மற்ற யாரும் அவர் போன்று தரம் தாழ்ந்து நடந்து கொள்ளவில்லை. அவரது பச்சை ஆடியோ போன்ற மிக இழிவான, ஆபாச உரையாடல் ஒன்று அவரை எதிர்ப்பவர்களில் யார் ஒருவருடையதாவது ஜைனுல் ஆபிதீனிடம் அல்லது அவரது பரிவாரத்திடம் கிடைத்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை அவரது கடந்த கால நடவடிக்கைகளை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும் யாரும் இலகுவில் புரிந்து கொள்வார்கள். சாதாரண விடயங்களைக் கூட வெட்டிக் கொத்தி, மற்றவர்களின் மானத்தோடு விளையாடும் இக்கயவர் குழு இந்த மாதிரி சமாச்சாரங்களை எப்படி எல்லாம் பயன்படுத்துவார்கள்!

"தமிழ் உலகில், நபி (ﷺ) அவர்களுக்கு சூனியம் செய்யப்பட்டதாக வரும் ஆதாரபூர்வமான ஹதீஸே முதலில் இவரால் மறுக்கப்பட்டது. பின்னர் அதற்கு உலமாக்கள் மத்தியில் கண்டனமும் விமர்சனமும் எழுந்ததால், அதை நியாயப்படுத்த இன்னும் பல ஹதீஸ்களை மறுக்க ஆரம்பித்தார்.

இஸ்லாமிய வரலாற்றில் ஹதீஸ்களை மறுப்போர் ஆரம்ப காலந்தொட்டே உருவாகிவிட்டனர். சிலர் ஹதீஸ்களை முழுமையாக மறுக்கின்றனர். இவர்கள் இன்றுவரை "அஹ்லுல் குர்ஆன்" என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். மற்றும் சிலர் குர்ஆனில் இல்லாத புதிய சட்டங்களைத் தரும் ஹதீஸ்களை மறுத்தனர். மற்றும் சிலர் "ஆஹாத்" எனும் வகை சார்ந்த ஹதீஸ்களில் ஹலால், ஹராம், அகீதா பற்றிப் பேசும் ஹதீஸ்களை மறுத்தனர். மற்றும் சிலர் அல்குர்ஆனுக்கு முரண்படுவதாகத் தோன்றும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மறுத்தனர்.

ஹவாரிஜ்கள், முஃதஸிலாக்கள் போன்றோர், இந்த வகையில் பல்வேறு ஹதீஸ்களை மறுத்து வந்தனர். நவீனகால அறிஞர்கள் பலரும் இந்தத் தவறில் வீழ்ந்துள்ளனர். முஹம்மத் அல் கஸ்ஸாலி எனும் இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பைச் சேர்ந்த அறிஞர் இவ்வகையில் பல ஹதீஸ்களைப் பகுத்தறிவு ரீதியில் ஆய்வு செய்து மறுத்துள்ளார். பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமியின் ஸ்தாபகர் அபுல்

அஃலா மவ்தூதி (ரஹ்) அவர்கள் குறித்தும் இத்தகைய விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவ்வாறே முஹம்மத் அப்துஹு போன்ற அறிஞர்களும் பல அறிவிப்புக்களை மறுத்துள்ளனர்.

இவர்களது ஹதீஸ் துறை சார்ந்த இத்தகைய விமர்சனங்கள் பாமர மக்களிடம் எந்தத்தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இவர்களை நேசிக்கும் சகோதரர்களும் இவர்களது இத்தகைய கருத்துக்களை மக்கள் மன்றத்திற்குக் கொண்டுவரவில்லை. இவர்கள் சார்ந்த அமைப்பைச் சேர்ந்த பலரும் இவர்களின் இத்தகைய கருத்துக்களின் தாக்கத்திற்குக் கூட உட்படவில்லை.

"ஆயினும், தமிழ் உலகில் இத்தகைய கருத்துக்கள் பரவலாக பாமரர்கள் மத்தியிலும் கூட இடம் பிடித்ததற்கு இந்தக் கருத்தை முன்வைத்த அறிஞர் P.ஜைனுல் ஆப்தீன் உலவி அவர்களின் தனிப்பட்ட செல்வாக்கே காரணமாகும்.

இவர் கடந்த பல ஆண்டுகளாக குர்அன், சுன்னாவை மிகத் தீவிரமாகப் பிரசாரம் செய்துவருபவர். சமூக எதிர்ப்புக்கள் எதையும் கவனத்திற் கொள்ளாது துணிச்சலாக களப்பணி ஆற்றிவருபவர். அல்லாஹ் இவருக்கு வழங்கியிருக்கும் அபரிமிதமான நாவன்மை, வாதம் செய்யும் வலிமை, எதையும் எவரும் புரியும் வண்ணம் இலகுவாக விளக்கும் ஆற்றல் என்பன பாமர மக்களிடம் இவருக்குப் பெருத்த செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளை, வழிகெட்ட காதியானி போன்ற அமைப்புக ளுடன் அவர் விவாதம் செய்தமையும் அவர் நடத்தி வரும் "இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம்" நிகழ்ச்சியும் தவ்ஹீத் வட்டாரத்தையும் தாண்டி பெரியதோர் இமேஜை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது.

இந்த வகையில் இவரது கருத்துக்கள் உடனுக்குடன் பல்லாயிரம் மக்களைச் சென்றடைகின்றன. இவர் மீது மக்கள் அபரிமிதமான நம்பிக்கை வைத்திருப்பதால் அவர் கூறுவதுதான் சரி என்ற மனநிலைக்குக் கூட பலரும் வந்துள்ளனர். இந்த வகையில் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் பலவற்றை மறுக்கும் இவரது சிந்தனை தமிழ் பேசும் முஸ்லிம்கள் மத்தியில் பரவலாகத் தாக்கம் செலுத்தியுள்ளது." -எஸ்.எச்.எம். இஸ்மாயில் ஸலபி : 2010-

2010 களில் இஸ்மாயில் ஸலபி, அவரை விமர்சிக்கும் போது, P.ஜைனுல் ஆபிதீனுக்கு செல்வாக்கு இருந்தது. 2017 களின் பின்னர் அவரது செல்வாக்குக் குறைந்து,2018 களில் அவரது ஜமாஅத்தி லிருந்தே நீக்கப்பட்ட பின்னர் அவரது கருத்துக்களும் அநாதரவான அநாதை நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது என்று இன்றைய பிரசாரக் கள நிலவரத்தை அவதானிப்போர் குறிப்பிடுகின்றனர்.

ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மறுக்கலாம் என்ற அவரது சிந்தனைப் பள்ளியில் பயிற்சி பெற்று, அவரது முகாமில் வளர்ந்த திறமையான மாணவர் ஒருவர் தற்போது, அவர் மறுக்கும் எந்த ஹதீஸையும் மறுக்கக் கூடாது என்று குரல் எழுப்பியுள்ளார். இது, P.ஜைனுல் ஆபிதீனின் புதிய சிந்தனைப் பள்ளிக்கு பெரும் தோல்வியையும் புதிய தலைவலியையும் ஏற்படுத்தியுள்ளது. "குர்ஆன் - சுன்னா: இவை இரண்டும் முஸ்லிம்களின் இரண்டு கண்கள். இவற்றில் ஒன்றை இழந்தாலும் ஒற்றைக் கண் உடையவனாக தான் ஒரு முஸ்லிம் வாழ நேரிடும். அப்போது அவன் முஸ்லிம் என்ற பண்பை இழக்கின்றான்" (2015) என மவ்லவி அப்பாஸ் அலி Misc குறிப்பிடுகின்றார்.

இவரது புதிய சிந்தனையை நவீன குழப்பம் என்று அவர் சாடியுள்ளார். "தமிழக முஸ்லிம்களிடமும் தற்போது நவீன கொள்கை குழப்பங்கள் புகுத்தப்பட்டு வருகின்றன. மார்க்க அறிஞர்கள் என தங்களை அறிமுகம் செய்து கொண்ட சிலர் இந்த வேலையை மிகச் சாதுரியமாக செய்து வருகின்றனர். ஆதாரப்பூர்வமான நபிமொழிகளும் குர்ஆனுக்கு முரண்படும் என்பது அவர்களின் தற்போதைய பிரதான வாதம்." (2015) முன்னர் இவரது இந்த சிந்தனையில் அவர் சிக்குண்டிருந்ததாகவும் தற்போது அதிலிருந்து தெளிவு பெற்று விலகிவிட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

"இப்படி ஒரு தவறான சிந்தனையில் நானும் ஒரு காலத்தில் இருந்தேன். இது குறித்து அதிகமாக பேசியும் எழுதியும் இருக்கிறேன். ஹதீஸ்கள், குர்ஆனுக்கு முரண்படுமா என்ற தலைப்பில் 15-02-2008 ஆம் ஆண்டில் ஒரு நூலும் எழுதினேன். இது எனது அறியாமைக் காலப் புரிதல் என்று கூடச் சொல்லலாம். ஆனால், இச்சிந்தனையில் நான் பயிற்றுவிக்கப் பட்டேனே தவிர, நானாகப் பயிலவில்லை. தற்போதுதான் இவ்விஷயத்தில்

விழிக்கும் திறனை இறைவன் எனக்கு அளித்துள்ளான்." "பிறரின் தூண்டுதலால் ஆதாரப்பூர்வமான நபிமொழிகள் குர்ஆனோடு மோதும் என்ற ஆய்வில் இருந்த எனக்கு, ஆதார பூர்வமான நபிமொழிகள் ஒருபோதும் குர்ஆனுடன் மோதாது என்றே விடை கிடைத்தது. நான் பெற்ற தெளிவை பிறருக்கும் எடுத்துரைக்கும் நோக்கில் நீண்ட ஓர் ஆய்வை மேற்கொண்டேன். **(2015) எனக் குறிப்பிடுகின்றார்.**

"இறுதி நபித்துவம் முற்றுப்பெறவில்லை. மிர்ஸா குலாம் அஹ்மதுவும் ஒரு நபி" **என்று அன்று காதியானிகள் வாதிட்டனர். இதற்காக அவர்கள் சில ஹதீஸ்களை மறுத்தனர். அப்போது, இந்தியக் காதியானிகள், இப்போது P.ஜைனுல் ஆப்தீன் ஹதீஸ்களை மறுக்கும் நிலைப்பாட்டில் தான் இருந்தனர். அவர்கள் குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை ஏற்க முடியாது என எழுதிய போது, அதை மறுத்து, P.ஜைனுல் ஆப்தீன் எழுதி வந்தார். விவாதக் களத்திலும் பதில் அளித்தார்.இன்று, அதே P.ஜைனுல் ஆப்தீன் "காதியானிகளின் கல்லறைப் பயண நிலைக்கு மாறிவிட்டார்" என்று அவர் மீது விரல் நீட்டப்படுகிறது.**

"...குர்ஆனுக்கு முரண்படும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மறுக்க வேண்டும் என்ற அவரது நிலையும் அவரது பிரசாரமும் அவரிடம் அண்மையில் ஏற்பட்ட மாற்றமாகும் என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆரம்ப காலப் பிரசாரத்தில் அவரிடம் இந்த நிலை இருக்கவில்லை.

அவரது கருத்துக்கள் மறுக்கப்படும் போது, அப்போது எதிர்க்காதவர்கள் இப்போது எதிர்க்கிறார்கள் என்றால், மார்க்கத்திற்காக அல்ல தனிப்பட்ட கோபத்திற்காக எதிர்க்கிறார்கள் என்று தப்புப் பிரசாரம் செய்யப்படுவதுண்டு. அது தவறு, இவரது இந்தக் கருத்து அவரது புதிய நிலைப்பாடு என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

அத்துடன், பல தவ்ஹீத் அழைப்பாளர்கள் கொள்கையில் இருந்து தடம் புரண்டுவிட்டதாகவும் அவர் மட்டுமே அன்றிலிருந்து இன்று வரை கொள்கையில் தடம் புரளாமல் உறுதியாக இருப்பதாகவும் பேசப்படுகின்றது. இது தவறு. ஹதீஸ் துறையில் அவரிடம்தான் தடம்புரள்வு ஏற்பட்டது என்பதையும் உணர்த்தும் கடமையில் இருப்பதால் இது குறித்து சிறிது விளக்க வேண்டிய அவசியமுள்ளது.

அறிஞர் P.ஜைனுல் ஆப்தீன் அவர்கள் காதியானிகளுடன் ஒரு விவாதம் செய்தார்கள். அந்த விவாதத்தின் மூலம் தமிழ் உலகில் காதியானிகளின் கொட்டம் அடக்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ். இதற்காக அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இந்தக் காதியானிகளுடன் விவாதம் தொடர்பாகக் கடிதப் பரிமாற்றம் நடந்தது. அந்தக் கடிதங்கள். காதியானிகளின் கல்லறைப் பயணம் என்ற தலைப்பில் 1988 அக்டோபர் அல் ஜன்னத் இதழுடன் இணைத்து வெளியிடப்பட்டது.

அப்போது, காதியானிகள் இப்போது இவர் இருக்கும் நிலைப்பாட்டில் தான் இருந்தனர். அவர்கள் குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை ஏற்க முடியாது என எழுத, அதை மறுத்து P.ஜைனுல் ஆப்தீன் அவர்கள் பல இடங்களில் எழுதியிருக்கின்றார்கள்.

உதாரணமாக: ஆதாரபூர்வமான ஸனதுகளுடன் உள்ள ஹதீஸ்கள் என்று ஏற்கப்படும் ஹதீஸ்களை எக்காரணம் கொண்டும் மறுக்கக் கூடாது.

இவ்வாறே, 27-05-1988 தேதியிட்ட கடிதத்தில் இரண்டாவது அம்சமாக "திருக்குர்ஆனுக்கு ஹதீஸ் முரண்படும்" என்ற உங்கள் கூற்று ஏற்க முடியாது. ஆதாரபூர்வமான எந்த ஹதீஸையும் மறுக்கவே கூடாது என்பது எங்களின் நிலை. திருக்குர்ஆனுடன் எந்த ஆதாரபூர்வமான ஹதீஸ்களும் முரண்படுகின்றது என்று நீங்கள் கூறினால் முரண்படவில்லை என நாம் நிரூபிப்போம்..." என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அந்தக் கடிதங்களில் பல இடங்களில் குர்ஆனுக்கு ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் முரண்படாது. சுமார் 50 ஹதீஸ்கள் அளவில் முரண்போல் தோன்றும் ஆனால் முரண் இல்லை என்று தான் அன்று கூறி வந்தார்.

இவ்வாறே, 2001ல் P.ஜைனுல் ஆபிதீன் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட சுனன் திர்மதி வெளியிடப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பில் "அல்குர்ஆனும் ஆதாரபூர்வமான நபிமொழிகளும் என்ற தலைப்பில் முழுமையாக ஹதீஸ்களை மறுப்பவர்களுக்கு அழகானதொரு மறுப்பை P.ஜைனுல் ஆபிதீன் அவர்கள் அளித்துள்ளார்கள்.

அதிலே, ஹதீஸை மறுப்பவர்கள் நான்கு பிரதான காரணங்களை முன்வைத்து மறுப்பவர்கள் என்று குறிப்பிடுகின்றார்.

**அவையாவன:**

1. **ஹதீஸ்களில் முரண்பாடுகள் உள்ளன.**
2. **குர்ஆனுடன் ஹதீஸ்கள் முரண்படுகின்றன.**
3. **ஹதீஸ்களைப் பின்பற்ற வேண்டுமென்று கூறுவோர் பல கூறுகளாகப் பிரிந்து விட்டனர்.**
4. **குர்ஆனைப் போல் ஹதீஸ்கள் பாதுகாக்கப்படவில்லை.**

என்றெல்லாம் காரணங்கள் கூறியே ஹதீஸ்களை நிராகரிக்கச் சொல்கின்றனர். ஹதீஸ்களைப் புறக்கணிக்க வேண்டும் என்பதற்கு இவர்கள் கூறும் இந்தக் காரணங்களை குர்ஆன் விசயத்திலும் கூற இயலும். இது பற்றி இங்கு விரிவாக அலசுவோம் என்று தொடர்கிறது அவ்விளக்கம். (சுனன் திர்மிதி நூல் அறிமுகம் A25)

மொத்தமாக ஹதீஸ்களை மறுப்பதற்குக் கூறப்பட்ட நான்கு காரணங்களில் மூன்றாவது காரணம் தவிர மற்றைய மூன்று காரணங் களையும் கூறி இன்று P.ஜைனுல் ஆபிதீன் ஆபிதீன் அவர்கள் ஆதாரபூவமான ஹதீஸ்களை மறுக்கின்றார்.

இதில் அச்சப்பட வேண்டிய மற்றுமொரு அம்சமுண்டு. இந்த குறைகளைக் குர்ஆன் விசயத்திலும் கூற முடியம் என்று வேறு குறிப்பிட்டுள்ளார்கள். இது ஹதீஸுடன் மட்டும் நிற்குமா? குர்ஆனுக்கும் தாவுமா? என்று அச்சப்பட வேண்டியுள்ளது. இவர் இவ்வளவுடன் நின்று கொண்டாலும் இவருக்குப் பின்னால் இதே அடிப்படையில் வருபவர் குர்ஆன் விசயத்திலும் கூட ஐயம் எழுப்ப வாய்ப்புள்ளதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இதுவரை நாம் குறிப்பிட்டதிலிருந்து குர்ஆனுக்கு முரண்படும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மறுக்க வேண்டும் என்ற அவரது தவறான நிலைப்பாடு 2002க்குப் பின்னர்தான் அவரிடம் எற்பட்ட கொள்கைத் தடம்புரள்வே தவிர இருபது வருட பிரசாரத்தில் கிடையாது என்பதைப் புரிந்திருப்பீர்கள்.

அடுத்தாக ஆரம்பத்தில் குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை மட்டும் குர்ஆனைப் பாதுகாப்பதற்காக மறுக்க வேண்டும் எனக் கூறியவர்கள் பின்னர் விஞ்ஞானத்திற்கு முரண்படுகிறது என்ற காரணத்தினாலும் ஹதீஸ்களை மறுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்” (2010) **என இஸ்மாயில் ஸலபி விமர்சிக்கின்றார்.**

# சூனியக் கொள்கை

இஸ்லாமிய உலகில் பாரம்பரியமாக நிலவி வந்த சூனியக் கருத்தையே 2002ம் ஆண்டுவரை P.ஜைனுல் ஆபிதீன் பிரதிபலித்தார். அல்குர்ஆனுக்கு சில ஹதீஸ்கள் முரண்படுகிறது என்ற சிந்தனையில் சிக்கிய பின்னர் சூறா பகராவின் 102 ஆம் வசனத்திற்கு விளக்கம் அளித்தார். அவரது மொழி பெயர்ப்பிலும் தனது கருத்திற்க்கு ஏற்றாற்போல் பல மாற்றங்களைச் செய்தார். இது மற்ற உலமாக்களால் அவதானிக்கப்பட்டு, அவர் கடுமையான விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டார்.

"ஆரம்பத்தில், P.ஜைனுல் ஆபிதீன் அவர்கள் பில்லி சூனியம் என்ற பெயரில் 2:102 வசனத்திற்கு விளக்கமாக ஒரு கட்டுரையை எழுதினார்கள். பின்னர் அது பில்லி சூனியம் என்ற பெயரில் தனிப் புத்தகமாக வெளிவந்தது.

அப்போது சூனியம் இருக்கின்றது. ஆனால், அதன் மூலம் நினைத்ததை யெல்லம் செய்ய முடியாது. அல்லாஹ்வுடைய நாட்டம் இருந்தால் அதன் மூலம் பாதிப்பு ஏற்படும். சூனியத்தின் அதிகபட்ச பாதிப்பு கணவன்-மனைவிக்கிடையில் பிரிவை ஏற்படுத்துவது போன்ற கருத்துக்களை முன்வைத்து, நபி (ﷺ) அவர்களுக்கு சூனியம் செய்யப்பட்டதைச் சரிகண்டு எழுதியிருந்தார். நபியவர்களுக்கு சூனியம் செய்யப்பட்டதால் அவரது தூதுத்துவத்தில் அது எந்தப் பாதிப்பையும் எற்படுத்த வில்லை என்றும் எழுதியிருந்தார்.

பின்னர், நபி (ﷺ) அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டதாக வரும் ஹதீஸை பல்வேறு வாதங்களை முன்வைத்து மறுத்து வருகின்றார். அதேவேளை, சூனியம் என்று ஒன்றில்லை. சூனியத்திற்கு எந்தத் தாக்கமுமில்லை என்று நேரடியாக குர்ஆனுக்கு முரணாகவே எழுதியும் பேசியும் வருகின்றார். இதைப் பார்க்கும் போது ஹதீஸ்கள் கூட குர்ஆனுக்கு முரண் என்பதற்காக அல்லாமல் தனது பகுத்தறிவிற்கு முரண்படுகிறது என்பதற்காகத்தான் மறுக்கப்பட்டு

வருகின்றதோ என்ற ஐயம் எழுகின்றது" (2010) என இஸ்மாயீல் ஸலபி ஐயம் தெரிவிக்கின்றார்.

"காலப்போக்கில் சகோதரரின் சிந்தனையிலும், மார்க்க விடயங்களை அணுகுவதிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. ஆதாரப்பூர்வமான பல ஹதீஸ்களை தவறான கோணங்களில் அணுகி அவற்றை மறுக்க ஆரம்பித்தார். நபித்தோழர்கள் குறித்துத் தவறான விமர்சனங்கள் செய்யத் தொடங்கினார். அல்லாஹ் நாடினால் சூனியத்தால் பாதிப்பு ஏற்படும் என்ற உண்மையான நிலைப்பாட்டில் இருப்பவர்களை முஷ்ரிக்குகள் என ஃபத்வா கொடுக்க ஆரம்பித்தார். அவரின் இத்தகைய கருத்துக்களால் ஏகத்துவ வாதிகளுக்கு இடையில் பிளவு உண்டானது. உள்நாட்டுக் குழப்பங்கள் உருவெடுத்தன. எதிரும் புதிருமான வாதப் பிரதிவாதங்கள் அரங்கேறின" (2015) என இஸ்மாயீல் ஸலபி கண்டிக்கின்றார்.

"அகிலத்தாருக்கு அருளாக அனுப்பப்பட்ட இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நேரடியாக மார்க்கத்தை கற்று, பண்பட்ட, சங்கைமிகு நபித்தோழர்கள், நபி (ஸல்) அவர்களுக்குப் பின் இம்மார்க்கத்தில் கொள்கை குழப்பம் எதையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, தீனை அவர்களும் கடைபிடித்து, மற்றவர்களுக்கும் அப்படியே எடுத்துரைத்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு தலைமுறையிலும் வந்த நல்லவர்கள் அடுத்த தலைமுறையினருக்கு மார்க்கத்தைப் போதித்து, மார்க்கம் இன்று அல்லாஹ்வினால் பாதுகாக்கப்பட்ட நிலையில், எந்த கூடுதல் குறையுமின்றி நம்மை வந்தடைந்துள்ளது.

ஆனால், அல்லாஹ்வும் அவன் தூதரும் கூறிய அடிப்படையில் மார்க்கத்தை விளங்காமல் தன் அறிவிற்கு ஏற்றவாறு மார்க்கத்தை மாற்றி, புதுக் குழப்பங்களை நபித்தோழர்களுக்குப் பின் வந்த சிலர் ஏற்படுத்தினர். அவ்வாறே, இன்றும் சிலர் குர்ஆனுக்கு விளக்கமாக அமைந்துள்ள ஆதாரப்பூர்வமான நபிமொழிகளை மறுத்து, தன் சுய கருத்துக்களை குர்ஆனுக்கு விளக்கமாக கொடுத்தும், கொள்கையில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர். "இந்த நவீன கொள்கைக் குழப்பவாதிகள் நபிமொழிகளை மறுப்பது மட்டுமல்லாமல், ஹதீஸ்களின் படி வாழும்

உலக முஸ்லிம்களை முஷ்ரிக்கள் என்றும் கூறி வருகின்றனர். "குர்ஆனுடன் நபிமொழிகள் மோதுவதாக இவர்கள் சித்திரிப்பது அறியாமையும் வழிகேடும் ஆகும். இஸ்லாமிய வரலாற்றில் இந்த வேலையை வழிகேடர்கள் செய்து வந்தனர். இஸ்லாமிய அறிஞர்கள் அன்றும் இன்றும் இதை வன்மையாகக் கண்டித்துள்ளனர். எனவே, ஆதாரப்பூர்வமான எந்த நபிமொழியும் குர்ஆனுவுடன் ஒரு போதும் முரண்படாது" (2015 : 5,6) என அஷ்ஷைக் கே. முஹம்மத் இக்பால் மதனீ குறிப்பிடுகின்றார்.

"இஸ்லாத்தின் மூலாதாரங்களைக் களங்கப்படுத்தி, உலகில் குழப்பத்தை ஏற்படுத்தும் சதித் திட்டங்கள், நீண்டகாலமாகவே நேரடியாகவும் மறைமுகமாகவும் தீட்டப்பட்டு வருகின்றன. சரியான ஹதீஸாக இருந்தாலும் தங்களின் சிற்றறிவுக்கு ஒத்துப் போகவில்லை என்பதால் அது குர்ஆனுக்கு முரணானது, அதை தூக்கி எறிய வேண்டும், அதை நம்பக் கூடாது என்ற முற்கால குழப்பவாதிகளின் சிந்தனையில், தற்போது தமிழகத்திலும் சிலர் சிக்கியுள்ளனர். அவர்கள் நாளுக்கு நாள் ஒவ்வொரு ஹதீஸாக நிராகரித்து வருகின்றனர். இவர்களின் இப்போக்கு முற்றிலுமாக நபிவழி தொகுப்புக்களைப் புறக்கணிக்கும் நிலைக்கு மக்களை இழுத்துச் செல்கிறது அதுமட்டுமல்லாது, அறிவுக்குப் பொருந்தாத விஷயங்கள் திருக்குர்ஆனிலும் உள்ளன என இவர்கள் வாதிடும் நிலையை மிக விரைவில் உருவாகிவிடும்.

இவர்கள் நிராகரிக்கும் நபிமொழிகளை மற்றவர்களும் நிராகரிக்க வேண்டும். இல்லை என்றால், அவர்கள் அனைவரும் இணைவைப்பாளர்கள். எனவே, அவர்களுக்குப் பின்னால் தொழுவது கூடாது என பகிரங்கமாக மக்களிடம் பிரசாரம் செய்தும் வருகின்றார்"(2015 :7) என P.ஜைனுல் ஆபிதீனுடன் நீண்ட காலம் பயணித்த எஸ்.கமாலுத்தீன் மதனி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

"பிரச்சினைகள் நபிமொழிகளில் ஒருபோதும் இல்லை. மனிதனின் தவறான புரிதலில் தான் இருக்கிறது. இந்த நவீன குழப்பவாதிகளின் செயல், ஒரு கட்டத்தில் ஒட்டுமொத்த நபிமொழி களையும் நிராகரிப்பதற்கான ஆபத்தான வழியை வகுக்கும். இவர்களில் பலர் இந்த உண்மை நிலையை உணராமலேயே

இச்செயலுக்குத் துணை நிற்கின்றனர். இவர்களின் மூர்க்கத்தனம் நபிமொழிகளை நம்பி வாழும் முஸ்லிம்களை முஷ்ரிக்குகள் இணை வைப்பாளர்கள், இவர்களுக்கு பின்னால் நின்று தொழக் கூடாது என்று பத்வா கொடுக்கும் அளவிற்கு சென்றுவிட்டது. நாளுக்கு நாள் புற்றுநோய் போல் இவர்களின் நோய் அதிகரித்து வருகிறது.

உண்மையில், இந்த ஹதீஸ் மறுப்புக் கொள்கைக்கு பின்னால் குர்ஆன் இல்லை. ஒரு தனி மனிதனின் சுய சிந்தனையே உள்ளது. இதை மனோ இச்சை என்றும் கூறலாம். இவர்களுடன் இணைந்து செயற்படுபவர்கள், மெஸ்மரிசம் செய்யப்பட்டவர்கள் போல் உள்ளார்கள் என்றாலும் மிகையாகாது. அல்லாஹ் நாடினால் மட்டுமே இவர்களை இக்கொள்கையிலிருந்து வெளிக் கொண்டு வர இயலும்.

அறிஞர்களிடம் தவறுகள் நிகழும் என்ற யதார்த்தத்தை அறியவேண்டும். தவறு நிகழ்ந்து விட்டால் அந்த தவறை மறைப்பதற்கு இன்னும் பல தவறுகள் செய்வது ஒரு முஃமினின் பண்பாகாது. செய்த தவறுக்குப் பரிகாரம் தேடுவது தான் சிறந்த வழி.

இஸ்லாமிய பிரசாரப் பணியில் தங்களை அர்ப்பணித்து வந்த இஸ்லாமிய அறிஞர்கள் தங்களையும் அறியாமல் தவறுகள் நிகழ்ந்தபோது, இவ்வாறே நடந்து, ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தி உள்ளனர்"(2015) என P.ஜைனுல் ஆபிதீனினால் ஆய்வாளர் என்ற பாராட்டைப் பெற்ற அவரது மாணவர் மவ்லவி அப்பாஸ் அலி Misc குறிப்பிடுகின்றார். P.ஜைனுல் ஆபிதீனின் சிந்தனை முகாமிலிருந்து அவருடன் முரண்பட்டு, வெளியேறி, **"சூனியம்...! நபி மொழி நிராகரிப்பின் நவீன கொள்கைக் குழப்பங்கள்"** என்ற நூலையும் எழுதியுள்ளார்.

புதிய சூனிய நிலைப்பாடு, P.ஜைனுல் ஆபிதீனுக்கு ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரே சூனியம் செய்யப்பட்டவர் போல், அவரது கருத்தில் குழம்பிப் போய் உள்ளார் என்று அவரது முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி விமர்சிக்கப்பட்டுள்ளார்.

**மூன்று நிலைப்பாடுகள் :** "அவர்கள் மக்களுக்கு சூனியத்தைக் கற்றுக் கொடுத்தார்கள்" என்று அல்லாஹ் சொல்லிவிட்டு அவர்களிடமிருந்து கணவன்-மனைவிக்கிடையில் பிரிவினையை உண்டு பண்ணக்

கூடியதை மக்கள் கற்றனர் என்றால், கணவன்-மனைவிக்கிடையில் பிரிவினையை உண்டு பண்ணுவதும் சூனியத்தின் ஒரு வகை என்று அர்த்தம் எடுக்காமல் அல்லாஹ்வை மிஞ்சிப் போகின்றனர் இந்த "ப(F)" விடயத்தில் செய்யப்பட்டுள்ள தில்லுமுல்லுகளையும் சற்றுக் கவனியுங்கள்.

சூனியம் இருக்கிறது. அதற்குப் பாதிப்பு உண்டு என்று ஆரம்பத்தில் எழுதிய போது, இந்த "ப(F)"வுக்கு வழங்கிய அர்த்தத்தைக் கவனியுங்கள். திருக்குர்ஆன் (பீஜே இன்) விளக்கம் பக்கம்: 85-86

இதைக் கற்று காபிராகிவிடாதீர்கள் என்று சொல்லியும் கேட்காமல் கற்றனர் என்ற அர்த்தத்தில் அப்படியிருந்தும் என்று மொழிபெயர்த்துள்ளார். பின்னர் சூனியத்திற்குத் தாக்கம் இல்லை என்று எழுதும் போது "பில்லி சூனியம்" புத்தகத்தின் 55 ஆம் பக்கத்தில் இந்த "ப(F)"வுக்கு அப்படியிருந்தும் என்று அர்த்தம் செய்வதைத் தவறான மொழிபெயர்ப்பு என்று அடையாளப் படுத்தியுள்ளனர்.

இதே நூலின் 57 ஆம் பக்கத்தில் சரியான மொழிபெயர்ப்பு என்ற தலைப்பில் இந்த "ப(F)"வுக்கு அர்த்தம் செய்யாமல் விட்டார். அவரது தர்ஜமாவிலும் அப்படித்தான் செய்தார். இப்போது அந்த "ப(F)"வுக்கு "எனவே" என்று அர்த்தம் செய்துள்ளார்.

ஒரு "ப(F)" விடயத்தில் மூன்று நிலைப்பாடு! பாதிப்பு இருக்கிறது என்று கூறும் போது அப்படி இருந்தும் என்பது அர்த்தம். பாதிப்பு இல்லை எனும் போது இந்த மொழிபெயர்ப்பு பிழை. "ப(F)"வுக்கு அர்த்தம் செய்யாமல் இருப்பதே சரி! இப்போது அல்லாஹ் நேரடியாகக் கூறியதை மறுப்பதற்கு "ப(F)"வுக்கு "எனவே" என்ற மொழி பெயர்ப்பும் வழங்கி மாறிக் கொண்டே செல்கின்றார். இப்படியெல்லாம் குர்ஆனில் விளையாடிவிட்டு, "கவனமாக ஆராய்ந்தால்", "ஆழமாக ஆராய்ந்தால்" நாம் சொல்வதுதான் சரி என்று கூறி தான் மட்டும்தான் கவனமாக ஆராய்வதாகத் தனது கூட்டத்தை நம்பவைத்தும் வருகின்றார். அத்துடன், கவனமாக ஆராய்பவர் என தனக்குத் தானே சிறப்புப் பட்டம் வேறு வழங்கிக் கொள்கின்றார்" என்று இஸ்மாயில் ஸலபி குற்றம் சுமத்துகின்றார்.

P.ஜைனுல் ஆபிதீன் எப்போதும் ஒரு வாதத்தை முன்வைக்கும் முன்னர் எதிர்க் கேள்விகள் என்னவெல்லாம் எழுப்பப்படும் என்று அவற்றை தன்னிடமே கேட்டு, அனைத்திற்கும் பதில் கிடைத்தால்தான் அந்த வாதத்தை வைப்பதாக பல தடவைகள் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவரது பல வாதங்களில், நிலையற்ற போக்குக் காணப்படுகிறது. சொற்ப நாட்களிலேயே பல நிலைப்பாட்டுக்குச் சென்று விடுகின்றார் என்று குற்றம் சாட்டப்படுகின்றார்.

# இரட்டை வேடம்

P.ஜைனுல் ஆபிதீன் தனது இயக்கத்தைக் கட்டமைக்கவும் காப்பாற்றவும் பல சந்தர்ப்பங்களில் இரட்டை வேடம் போட்டுள்ளார் என்பதை பல ஆதாரங்களுடன் இப்போது அவரது முன்னாள் சகாக்களே அம்பலப்படுத்திவருகின்றனர். அவரது இயக்கத்தை விட்டு வெளியேறியோரையும், அவரது ஆன்மிக வறுமை நிலையைக் கண்டித்தோரையும் கருத்துக்களை விமர்சித்தோரையும் வன்மையாகத் தாக்கினார். அவர்களது மானத்தை சீடிக்குள் சுருட்டி, இயக்க ரீதியாக விற்பனை செய்தார். விசாரணைகள் என்ற பெயரில் எடிட் கடிங் என்று எல்லா விதமான வெறுக்கத்தக்க வழிமுறைகளையும் கையாண்டு, அடுத்தவர்களின் மானத்தை விற்று தனது இயக்கத்திற்கு பொருளீட்டினார். அதில் அவரும் பயன் பெற்றார். இது விடயமாக “இயக்க நலனிற்கும் இஸ்லாமிய வழிமுறைக்குமிடையில் மாற்று மேடை” என்ற எனது கட்டுரையில் 2016 களிலேயே நான் தெளிவுபடுத்தியிருக்கின்றேன்.

2006களில் ரிஸ்வான் மதனி அவர்கள் ஜைனுல் ஆபிதீன் மற்றவர்களின் புனிதமான மானத்தோடு விளையாடுகின்றார் என்று எச்சரித்து, உண்மை உதயத்தில் கட்டுரை ஒன்றையும் எழுதினார். நட்பு ரீதியாக ஒருவர் அமானிதமாச் சொன்ன அந்தரங்கமான குடும்ப விவகாரங்களைக் கூட மனக்கசப்பு ஏற்பட்ட பின்னர், அவற்றைப் பகிரங்கமாகப் பேட்டியில் குறிப்பிட்டு, சீடிக்குள் சுருட்டி, இயக்க ரீதியாக விற்பனை செய்தததை அவர் அக்கட்டுரையில் வன்மையாகக் கண்டித்திருந்தார்.

“தமிழ் உலகில் இன்று பல்வேறு இயக்கங்கள் தஃவாக் களத்தில் பிரசாரம் செய்து வருகின்றன. ஒவ்வொரு இயக்கத்திற்கும் அதன் நிறுவுனரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றாற்போல் கொள்கை வகுப்புக்களும் செல்நெறியும் கட்டமைக்கப்பட்டு, தொண்டர்கள் வழிநடத்தப்படுகின்றனர்.

சில இயக்கங்களின், நிறுவனங்களின் அதன் மேல்மட்டங் களின் மறுபக்கம் அதன் தொண்டர்களுக்குத் தெரிவதில்லை.

தெரிந்தால் அதில் பலர் இருக்க மாட்டார்கள். எனவே, பாமர நிலையிலுள்ள அப்பாவித் தொண்டர்களைத் தக்க வைக்க, அதன் சுய நலத் தலைவர்கள் ஏதாவது ஒரு யுக்தியை கையாண்டு, அதை மார்க்க நிலைபோன்று பிரகடனப்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் பிற மேடைகளில் பிரசாரம் செய்வது பற்றி P.ஜைனுல் ஆபிதீன் ஒரு கொள்கையை வகுத்து, பிற இயக்கங்களின் மேடைகளில் ஏறி, பிரசாரம் செய்யமாட்டேன் என்று கூறி வந்தார். இந்த நிலைப்பாட்டில் அவர் உண்மையாளராக இருக்க வேண்டும். ஆனால், அவர் இரட்டை வேடம் போட்டுள்ளார். அவர் ஒரு சந்தர்ப்பவாதி என்பதை நாம் அறிந்தது முதல் இது தொடர்பாக ஆய்வை மேற்கொண்டோம். அவ்வப்போது விமர்சனங்களையும் மேற்கொண்டோம்.

இன்று மாற்று மேடையில் ஏறமாட்டோம் என்று பிரசாரம் செய்யும் இவர் மாற்று மேடையினால்தான் மக்களை சம்பாதித்தார். தன்னை ஜனரஞ்சகப்படுத்தினார். ஏன்? சாக்கடை அரசியல் இயக்கங்களின் மேடைகளில் கூட ஏறியுள்ளார். அற்ப இலாபத்திற்காக அரசியல்வாதிகளை மேடை ஏற்றியும் உள்ளார். தனக்கு என்று ஒரு கூட்டம் வந்து சேர்ந்தவுடன் மாற்று மேடை மார்க்கத்தில் தடை என்பது போல் பேசிவந்தார். அதிலாவது உண்மையாளரா? என்றால் அதுவும் இல்லை. அற்ப நலனிற்காக அரசியல் வாதிக்கு பிரசாரம் செய்து மாட்டிக் கொண்டவர்களும் இவரோடு இருந்தனர்.

“பொதுவாக பிற இயக்கத்தினர் மேடையில் பிரசாரம் செய்வதால் சொற்பொழிவு நிகழ்த்துவோருக்கும் அதைக் கேட்கும் மக்களுக்கும் அவலங்கள் ஏற்படுமாம்” என்று ஒரு வாதத்தையும் இவரது பரிவாரம் முன்வைத்து வந்தது.

நாம் யாருடைய மேடையில் ஏறுகின்றோம் என்பது பிரச்சினையில்லை. நாம் என்ன சொல்கின்றோம் என்பதுதான் முக்கியம். இவ்வாறுதான் ஜைனுல் ஆபிதீன் பல வருடங்கள் பிரசாரம் செய்து வந்தார்.

P.ஜைனுல் ஆபிதீன் தனித்துவ மேடை காணாத 2001 இல்

“அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் என்போர் யார்?” (21-07-2001) என்ற விவாதம் கொழும்பி (BMICH) ல் நடைபெற்றது. அது முடிந்து மறுநாள் (22-07-2001) பறகஹதெனிய ஸலபிய்யா வளாகத்தில் நடைபெற்ற JASM மின் மாபெரும் மாநாட்டு மேடையில் ஏறும் போது, மேடையிலிருந்த பலர் முஸாபஹா செய்ததை அதே மேடையிலேயே கண்டித்தார். இதனால், அவருக்கு எந்தக் கேடும் வரவில்லை.

P.ஜைனுல் ஆபிதீன் மாற்று மேடை ஏறுவதில்லை என்ற தீர்மானத்தின் பின்னர் 2005ல் காத்தான்குடியில் நடைபெற்ற மாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள் “முஸ்லிம் மக்கள் ஒன்றியம்” என்ற அமைப்பினர். இந்த மாநாட்டில் இயக்கம் தொடர்பாக கேள்வி கேட்க வேண்டாம் என்று P.ஜைனுல் ஆபிதீன் மேடையில் இருக்கும் போதே, ஏற்பாட்டாளர்கள் பகிரங்கமாக அறிவித்தார்கள். அந்த இயக்கத்தின் பெனர்தான் அந்த மேடையில் கட்டப்பட்டிருந்தது. இது இன்று வரை பார்க்க முடியுமான வீடியோவில் பதிவாகியுள்ள காட்சி. அந்த வீடியோவை P.ஜைனுல் ஆபிதீன் இது வரை தனது இணைய தளத்தில் பதிவேற்ற வில்லை.

அடுத்து, தங்களது பலவீனங்களை மறைக்கும் ஒரு தந்திரமும் இதில் உள்ளது. குர்ஆன் மதுரசாவில் படிக்கும் குழந்தைக்குத் தெரிந்த விடயம் கூட கிதாபுக்கு ஜம்வு தெரியாத குதுபுல் அக்தாப் போன்ற கொபிபேஸ்ட் அரைகுறை ஆலிம்சாக்களின் அரைவேக்காட்டுத் தனத்தை மறைக்கவே பெரிதும் இதைக் கேடயமாகப் பயன்படுத்தி வருகின்றனர். அரைகுறைகளும் ஆன்மிக வறுமை வாயாடிகளும் தொடர்ந்து தரமான அறிஞர் குழுவுடன் சேர்ந்து மேடை ஏறினால் பலமான, பலவீன வண்டவாளம் தண்டவாளத்தில் ஏறிவிடும் அல்லவா? அதற்காக எடுத்த ஓர் எத்தனம்தான் இது. அதையெல்லாம் மறைக்கப் போடப்பட்ட ஒரு வளையம் இது.

ஆனந்த விகடனில் P.ஜைனுல் ஆபிதீனுடைய ஒரு பேட்டி வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அதே இதழின் அடுத்த பக்கத்தில் ஆபாசப் படம் பிரசுரமாகி வருகிறது; சினிமா செய்தி வருகிறது. இதை எதிர்த்து அவரால் எழுத முடிவதில்லை. எதிர்த்தால் பேட்டி வராது. அதுபோல், அல்குர்ஆன் சுன்னா மட்டும் என்ற நிலையிலுள்ள பொது மேடையில் நமக்குத் தரப்பட்ட தலைப்பில் நாம் பேசிவிட்டு வரவேண்டியதுதான். நமது கட்டுரை வெளிவரும்

பத்திரிகையில் மாற்றுக் கருத்துள்ளோரின் கருத்து இடம்பெற்றால், நாம் எப்படி அதற்குப் பொறுப்பில்லையோ, அதேபோல் மஸாயில்கள் விவகாரத்தில் மற்றவர் உரைக்கு நாம் பொறுப்பில்லை. இமயம் TV யில் ஷிர்க் ஒழிப்பு மாநாடு தொடர்பாக ஓர் உரை இடம் பெறுகிறது. அதற்கு அடுத்த நிகழ்ச்சி ஷிர்க்கிற்கான அழைப்பாக இருக்கிறது. சினிமா நிகழ்ச்சி ஒளிபரப்பின் போது, ஷிர்க் ஒழிப்பு மாநாட்டு விளம்பரம் எழுத்தில் கீழ்Barல் ஓடுகிறது.

TNTJவில், ஜைனுல் ஆபிதீன் அங்கத்துவம் வகிக்கும் போது, வளைகுடாவில் TNTJவின் மண்டலம் ஒன்றில் ஒரு தாயி ஜாலியாத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். ஜாலியாத்தில் சம்பளம் பெற்று வந்தார். சூனியத்தை நம்புபவன் முஷ்ரிக் என்ற நிலைப்பாட்டில் அவர் இருக்கவில்லை. TNTJ வுடைய பல விவகாரங்களில் அதிருப்தியுடன் இருந்தார். எனினும், அவர் தாயியாக இருக்கின்றார். ஏன் இந்த இரட்டை நிலை.

இந்தியா டுடே, தஸ்லிமா நஸ்ரினை ஆதரித்து எழுதிய போது, அதற்கு மறுப்பளித்தார், P.ஜைனுல் ஆபிதீன். எனினும், அதே பத்திகையில் பல வருடங்களின் பின்னர் அண்மையில் பேட்டியளித்தார். 2015ல் தாயி ஒருவர், கடாரில், ஸஹாபாக்கள் நட்சத்திரங் களைப் போன்றவர்கள் என்று ஓர் அரபி உரையாற்றும் போது, அந்த தாயி அந்த மேடையில் இருந்துள்ளார். அதே மேடையில் அவரும் உரையாற்றியுள்ளார்.

P.ஜைனுல் ஆபிதீன் ஏதாவது ஒரு காரணத்திற்காக ஒரு நிலைப்பாட்டை எடுப்பார். அதை ஜமாஅத்தின் நிலைப்பாடு என்பார்கள்.பின்னர் அது இஸ்லாத்தின் நிலைப்பாடு போன்று பரப்புரை செய்யப்படும். அதற்கு மாற்றமாக யாராவது கருத்து சொன்னால் முர்த்தத் பட்டமும் கொடுக்கப்பட்டுவிடும். அல்லது அவதூறு பரப்பப்படும். இத்தகைய ஈனத் தனமான பிழைப்புத்தான் அவரையும் அவரது பரிவாரங்களையும் இன்று இந்த இழிந்த நிலையில் கொண்டு போய் விட்டுள்ளது.

**தீமையைத் தடுக்க இயலாதா?** எங்கு தீமை, தவறான கருத்து இருந்தாலும் தைரியம் இருந்தால் கண்டிக்கலாம். தைரியம் இல்லாவிட்டால் உள்ளும், வெளியும் ஏன்? எங்கும் கண்டிக்க முடியாது.

வாய் கிழிய தைரியம் பேசும் இந்த இயக்கத்திலுள்ள பலர், அதன் பிரமுகர்களின் தவறை சுட்டிக்காட்ட தைரியம் அற்றவர்களாக உள்ளனர் என்பதை நாம் நேரிலேயே கண்டுள்ளோம். தவறை சுட்டிகக்காட்டியவர்களுக்கு அந்த இயக்கவாதிகள் என்ன செய்தார்கள் என்பதை இந்த உலகமே பார்த்தது. ஆனால், சிலரிடம் அவர்களது பருப்பு ஒன்றும் வேகவில்லை.

பல வருடங்கள் ஜைனுல் ஆபிதீனுடன் ஒன்றாகப் பணி புரிந்தோர் அவரது ஆன்மிக வறுமையை சகித்துக் கொண்டே அவருடன் பயணித்துள்ளனர். இன்று அதைச் சொல்லி வருத்தப்படுகின்றனர். ஜைனுல் ஆபிதீனை அதிகம் புகழ்ந்து எழுதியவர், ஷம்சுல் லுஹா. இன்று அதிகம் அவர்தான் தூற்றுகின்றார்.

இஸ்லாத்தில் நுழைந்த ஒருவர் TNTJ மாநிலத் தலைமைக்கு தாயிப் பயிற்சிக்காக இலங்கையிலிருந்து சென்றிருந்தவேளை, உணர்வில் பணியாற்றும் ஒரு முக்கிய புள்ளியின் சகோதரர் ஐங்காலத் தொழுகைக்கும் ஏன் ஜும்ஆவிற்கும் வருவதில்லை என்று கேட்டு, பள்ளிக்கு வருமாறு அழைத்துள்ளார். ஒரு முக்கிய பிரசாரகரின் சகோதரர் மாநிலத் தலைமையில் பணிபுரிகிறார். ஆனால், தொழாமல் இருக்கிறார் என்று புதிய முஸ்லிம் தொழ அழைக்கிறார். பூர்வீக முஸ்லிம் மறுக்கிறார். இதை ஆச்சரியத்துடன் நம்மிடம் குறிப்பிட்டார், ஏகத்துவம் பேசும் பலர் தொழாமல் TNTJ மாநிலத் தலைமையில் உள்ளனர். இதை கண்டிக்க தைரியம் இருக்கா? இயக்க நலனிற்காக அடுத்தவர்களைக் கண்டிப்பார்கள். குறைகளை நாகரிகமாகச் சுட்டிக் காட்டினால், நியாயமின்றி அநாகரிகமாகத் தண்டிப்பார்கள். உள்ளிருப்பவர்கள் இதைக் கண்டிக்க வக்கற்றவர்களாகத்தான் 2018 வரை இருந்தனர். பச்சை ஆபாச Audio சிக்கிய பின்னர்தான் அவர் மீதான மயக்கம் தெளிந்தது.

இவ்வாறான நிலைகளால், பல தாயிகள் பல விவகாரங்களில் உடன்பாடு இல்லாமல் இன்றும் இரட்டை நிலையில் பயணிக்கின்றனர். வெளியே வந்தால் ஏதாவது அவதூறு சொல்லிவிடுவார்கள் என்று அஞ்சி தவறான நிலையில் தொடர்ந்து உள்ளனர். என்றோ ஒருநாள் பூகம்பம் வெடிக்கும்" என்று நாம் 2016 களில் குறிப்பிட்டது 2018 இல் நடைபெற்றது. இன்று, முழு ததஜ மட்டுமல்லாமல் தமிழகமே அவரைப் புறக்கணித்துள்ளது.

# ஸலபுகள் பற்றிய இரட்டை நிலைப்பாடு

சவுதி அரேபியாவின் முப்தியும் கிபாருல் உலமாக்கள் அவையின் தலைவருமான அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் பின் முஹம்மது ஆலு ஷெய்க் அவர்களுக்கு P.ஜைனுல் ஆபிதீன் தனது கையெழுத்துடன் அனுப்பிய மடலை அவரது இணையதளத்தில் வெளியிட்டுள்ளார். அதில்,

(ولسنا ممن يخالف ويعادي عقائد سلفية التي تحرض على التمسك بكتاب الله وسنة رسوله صلى الله عليه وسلم)

"நாங்கள் அல்குர்ஆனையும் சுன்னாவையும் பற்றிக் கொள்ளுமாறு வலியுறுத்தும் ஸலபுகளின் அகீதாவுக்கு மாற்றமாகவோ முரணாகவோ செயற்படுபவர்கள் அல்லர்" **என்று அந்தக் கடிதத்தில் அரபுகளுக்கு ஒரு முகமும் அஜமிகளுக்கு இன்னொரு முகமும் காட்டப்பட்டுள்ளது!**

**P.ஜைனுல் ஆபிதீன் இதில் என்ன சொல்கிறார். ஸலபுகள், அல்குர்ஆனையும் சுன்னாவையும் பற்றிக் கொள்ளுமாறு வலியுறுத்துகிறார்கள். நாங்கள், அந்த ஸலபுகளின் அகீதாவுக்கு மாற்றமாகவோ, முரணாகவோ செயற்படுபவர்கள் அல்லர். நாங்கள் ஸலபுக் கொள்கையில்தான் இருக்கின்றோம் என்று அப்பட்டமாக எழுதியுள்ளார்.**

**எனினும், தமிழ் உலகில் அவர் ஸலபுகளை எந்தளவு திட்டித் தீர்த்துள்ளார்? ஆனால், நாங்கள் ஸலபு வழியிலுள்ளோர் என்று அரபுகளுக்கு வேறு ஒரு முகத்தைக் காட்டியுள்ளார். அந்த மடலை வெட்கமின்றி அவரது இணையதளத்திலும் வெளியிட்டிருந்தார். இந்த நாடகத்தைத் தெரியாத பக்தர்கள் என்ன ஆட்டம் போடுகின்றார்கள். இனியாவது இந்த சொற்ப தொகையினர் சிந்திக்க மாட்டார்களா?**

"அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: மனிதர்களிலேயே மிகவும் மோசமானவன் இரட்டை முகத்தான் ஆவான். அவன் இவர்களிடம்

செல்லும் போது, ஒரு முகத்துடனும் அவர்களிடம் செல்லும் போது, ஒரு முகத்துடனும் செல்கிறான்."

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி 7179

**அறிவிப்பாளர் சரியாக இருக்கின்ற ஹதீஸ்களை, ஹதீஸ் என்று நம்புபவர்களை முஷ்ரிக் – அவன் பின்னே தொழக் கூடாது என்று எந்த ஸலபு சொல்லியுள்ளார்?**

**இத்தகைய இரட்டை வேடத்திற்காகத்தான்** "உதட்டில் தேனும் உள்ளத்தில் தேளும் கொண்ட ஜமாஅத்" **என இவரது இயக்கத்தை பலரும் விமர்சித்து வந்தனர்.அறியாமல் இணைந்தவர்கள் பின்னர் பிரிந்தும் சென்றனர்.**

**மத்ஹப் மடமை நிறைந்தது; ஆபாசமிக்கது என்று விமர்சித்த இவர், தனது கருத்துக்களால் குருட்டு தக்லீதை வளர்த்து, மக்களை மடையர்களாகக் கருதி, ஏமாற்றும் ஒரு தவறான போக்கைக் கடைப்பிடித்துள்ளார்.**

**இவரது இந்த இரட்டை நிலைப்போக்கு கொள்கையில் மட்டுமன்றி ஒழுக்க நடவடிக்கைகளிலும்தான் என்பதை 2018 களில் அவரது தக்லீத் முகாமே கண்டுபிடித்து, அவரை வெளியில் தள்ளிவிட்டது.**

**சிதிலமடையும் சிந்தனைத்திறன்:** "அவர்கள் தமது இறைவனின் வசனங்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டால், அவற்றின் மீது செவிடர்களாகவும், குருடர்களாகவும் விழமாட்டார்கள்." (அல்குர் ஆன் 25:73)

**ஓர் இயக்கத்தின் நிருவாகியோ, தலைவனோ எதை உளறினாலும் செம்மறி ஆட்டுக் கூட்டத்தைப் போல் தலையாட்டிக் கொண்டிருக்கக் கூடாது. இரண்டு பக்க நியாயத்தையும் கேட்க வேண்டும். எதிலும் மாற்றுக் கருத்தையும் கேட்டு முடிவு செய்ய வேண்டும். ஏனெனில், நாவன்மைமிக்க நயவஞ்சகர்கள் அதிகரித்த காலம் இது.**

**இவர்கள் சொல்லும் கருத்து இதற்கு முன்னர் வரலாற்றில் பதியப்பட்டு, சத்தியத்தில் வெளிப்படையாக இருந்த அந்தக் கூட்டம் பற்றிய**

பதிவு எங்குமில்லையே என்ற கேள்விக்குப் பதில் அளிக்கும் போது, அந்தக் கூட்டம் இல்லைதான், நாங்கள் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இதே கருத்தைச் சொல்லியிருந்தால் எரித்து, அழித்திருப்பார்கள். ஆனால், இப்னு தைமிய்யா 700 ஆண்டுகளுக்கு முன்னர் புரட்சிகரமாகச் சொன்னது பதியப்பட்டுள்ளதாம்! என்னே அறிவு வாதம்?

எனவே, இஸ்லாத்தைவிட இயக்க நலனைக் காக்கப் போராடும் சந்தர்ப்பவாத இயக்க வெறியர்களின் பேச்சைக் கேட்டு, செல்லாக் காசாகிப் போய்விடாமல் அல்குர்ஆனையும், சுன்னாவையும் மட்டும் கொள்கையாகக் கொண்டு, இதய சுத்தியுடனும் ஒழுக்கத்துடனும் தக்லீத் அற்ற, ஆன்மிக செழுமையுள்ள தனித்தன்மையோடு செய்யப்படும் பிரசாரத்தில் மட்டும் பங்கேற்று இகபர வெற்றிபெற அல்லாஹ் நம்மனைவருக்கும் அருள் புரிவானாக!

சர்வாதிகார வழியில் இயக்கம் நடத்தும் அனைத்துத் தரப்பிற்கும் ஜெயலலிதாவின் மர்ம மரணத்தின் பின்னர் அ.இ.அ.தி.மு.க. அரசியல் சதுரங்க விளையாடல் முக்கிய பாடத்தைப் புகட்டியுள்ளது. அம்மா போனால் சின்னம்மா. அண்ணன் எப்ப போவான் திண்ணை எப்போது காலியாகும் என்று காத்திருக்கும் சின்னத் தம்பிகளின் சித்தப்பிரமையும் இது போன்றே அமையலாம் என்று நாம் எழுதிய மை காய முன்னர் 2018களில் அனைத்தும் நடந்தேறியதை தமிழ் உலகமே பார்த்தது.

**பொடி வைத்து எழுதி பிடிகொடுத்த பீ.ஜே.! :** P.ஜைனுல் ஆபிதீன் உருவாக்கிய தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்தினரது “மாற்றுமேடை” குறித்த நிலைப்பாடு குறையுள்ள, தவறான நிலைப்பாடு என்பதை அவர் உள்ளே இருக்கும் போதே விளக்கியிருந்தோம்.

அதற்குப் பதிலளிக்கப் புகுந்த P.ஜைனுல் ஆபிதீன் நேரடியாகப் பதில் எழுதாமல், கள்ள முகநூல் முகவரியில் பதில் அளித்திருந்தார். அதற்கும் நான் மறுப்பளித்தேன். “என் கட்டுரையை “முழுமையாகப் படித்துவிட்டு, நான் எழுதியது “முற்றிலும் பொய்” என்று புரிந்து, தவ்ஹீத் ஜமாஅத்தின் மீதுள்ள மதிப்பு அதிகரித்துவிட்டதாம்” என்று இயக்க வெறியுடன், அறிவுபூர்வமற்ற, ஆணவத் தன்மையுடன் எழுதியிருந்தார். இவரின் ஈனச் செயலால்

இயக்கத்தின் மதிப்பு அதிகரித்ததாலோ என்னவோ அவரைத் தூக்கி எறிந்துவிட்டார்கள் போல!

சரிந்து கொண்டிருந்த அவரது ஜமாஅத்தை தூக்கி நிறுத்த முயற்சித்து, முட்டுக் கொடுத்து, கள்ளப் பெயரில் “அநாமேதை”யாக எழுதிய சில மாதங்களில் அவரை அந்த ஜமாஅத் பச்சை ஓடியோவிற்காக தூக்கி எறிந்தது. அன்று அவர் அந்த ஜமாஅத்தின் அதிகாரத்தில் இருக்கும் போது, நாம் அந்த ஜமாஅத் மீது என்ன குற்றச்சாட்டுக்களை வைத்தோமோ, அவரை அந்த ஜமாஅத் நீக்கிய பின்னர், இன்று அவர் அதே குற்றச்சாட்டுக்களை வைத்துக் கொண்டிருக்கின்றார் என்பதுதான் வேடிக்கையானது. எனினும், நாம் அன்று வைத்த குற்றசாட்டுக்களை அவர் அப்போதே பொடி வைத்து எழுதிப் பிடிகொடுத்து மாட்டிக் கொண்டார்.

“மாற்று மேடை” ஏறுவதில்லை என்ற நிலையில் 2005இல் இலங்கை வந்த P.ஜைனுல் ஆபிதீன் காத்தான்குடி “முஸ்லிம் மக்கள் ஒன்றியம்” என்ற மாற்று அமைப்பினரின் மேடை ஏறினார். என்பது முற்றிலும் உண்மை! என ஒப்புக்கொண்டார். அங்கு நடந்த கேள்வி – பதில் நிகழ்வில், கேள்வி கேட்போர் இயக்கம் குறித்து எதுவும் கேட்க வேண்டாம் என்று மேடையில் கூறிய அறிவிப்பு முற்றிலும் உண்மை எனவும் ஏற்றுக்கொண்டார். அந்த வீடியோவை தனது onlineல் வெளியிட்டால் மாட்டிக் கொள்வோம் என்பதற்காகத்தான் வெளியிடாமல் வைத்திருக்கிறார் என்பதே முற்றிலும் உண்மை என்பதை ஒப்புக்கொண்டார்.

கடந்த வருடம் ( அதாவது 2015 இல்) கடார்(கத்தர்) சென்ற TNTJ மாநில பேச்சாளர் ஒருவர் அரபியுடன் மேடையேறியதோடு நிற்காமல், இவரது கொள்கைக்கு மாற்றமாக “சஹாபாக்களையும் பின்பற்ற வேண்டும்” என்று அரபி உரை நிகழ்த்திய போது, மரண மௌனம் காத்தது முற்றிலும் உண்மையே என்பதையும் ஏற்றுக் கொண்டார். அதற்கு நன்றி! நன்றி!!

இவரும், இவரது TNTJ யிலுள்ள முக்கிய நிருவாகிகளும் தொழுகை விசயத்தில் அசட்டைத்தனம் செய்வோர்தாம் என்பதை ஒப்புக் கொண்டார். இத்தனை விடயங்களையும் ஒப்புக் கொண்டதோடு,

இன்னும் நாம் குறிப்பிட்ட பல விடயங்களையும் ஒப்புக் கொண்டு, மரண மவ்னம் காத்த அந்த அநா“மேதை”தான், நான் எழுதியதில் ஒரு விடயம் மட்டும் மடமை என்றும் அதற்கு மரண அடி கொடுப்பதாக எழுதியிருக்கிறார்.

நாம் அடிக்கு மேல் அடித்த மரண அடியில் மரணமடைந்த மய்யித், திடீரென எழுந்து, ஒன்றுக்கு மட்டும் உளறி வைத்திருக்கிறது என்பது போல அரைவேக்காட்டுத்தனமாக எழுதியுள்ளார்.

அதாவது, சலபுக்கொள்கை வழிகேடானது என்று தமிழில் பிரசாரம் செய்துவிட்டு, சவுதி அறிஞருக்கு எழுதிய மடலில் நாங்களும் சலபிகள்தான். சலபுகளுக்கு எதிரிகள் அல்லர்! என்று எழுதி இரட்டை வேடம் போட்டுள்ளார் என்று எழுதியதற்கு பதிலளிக்கப் புகுந்தவர், “குர்ஆன் – ஹதீஸை பற்றிப் பிடிக்கச்சொல்லும் சலபுக்கொள்கைக்கு எதிரானவர்கள் அல்லர் என்று பொடி வைத்து எழுதியுள்ளார்” என்று உள்ளதை போட்டு உடைத்துள்ளார். தான் நயவஞ்கத்தனமாக நடப்பவன் என்பதை அவரே வெளிப்படுத்திய முதல் சந்தர்ப்பம் இந்தக் கடிதத்தில் அம்பலமானது.

**அவரது கடிதத்திலுள்ள முக்கிய பகுதி:**

"وأريد أولا أن أضع أمام فضـــيلتكم صورة لبعض الأمور الدراسية والدعوية , كما تعرفون أن المدارس التي تأسســـت لتعليم المناهج الدينية في جميع أنحاء البلاد في الهند كثيرة (لها منهج خاص لا تمت بصلة بمناهج الدراسية الحكومية, وتقوم بإدارتها الهيآت المحلية التابعة للمســـــــلمين أغلبها بتبرعات الداخلية ولا تدعمها الحكومة لامحلية ولا مركزية) وتكون مدة دراستها من سبع إلى تســـــع سنوات ويتخرج فيها عدد من الطلبة حاملين شهادة عالمية يســـتحق بها للإمامة والخطابة والتدريس في المدارس الإسلامية وأنا وزملائي قد تخرجنا في مثل هذه المدارس ولكن إن المدارس كلها تأسســت لنشــر البدع والخرافات بل حتى أعمال الشـــــرك وكنا نظن أن هذا هو الحق وأنه هو الإسلام الخالص وهكذا ربونا وأصــغوا آذاننا وأملؤوا قلوبنا ولكن نور الله يأبى إلا أن تتلألأ به قلوبنا وهدانا الله إلى نور التوحيد الخالص من شوائب الشـــــرك والبدع والخرافات وقد مهدت لنا الطريق الموصل إلى الحق الكتب القيمة لشيخ الإسلام إبن تيمية والشيخ محمد بن عبد الوهاب تغمدهما الله برحمته الواسعة وأدخلهما الله في فسيح جناته وجزاهما الله خير الجزاء ولكن مع الأسف الشـــديد نســتحي أن نقول ذلك – أن أساتذتنا في المدارس يصفونهم بالكفر والردة ونعوذ بالله أن نقول بمثل هذا الكلام والفتوى بدون تثبت وهداهم الله جميعا.

ومنذ أن علمنا أن اصول الدين هو كتاب الله وسنة رسوله صلى الله عليه وسلم قد وقفنا وفقة أمام هؤلاء الخرافيين لا نخاف في الله لومة لائم وندعوالله سبحانه وتعالى أن يثبت قلوبنا على ذلك وأن يقبضنا وهو راض عنا, ولسنا ممن يخالف ويعادي عقائد السلفية التي تحرض على التمسك بكتاب الله وسنة رسوله صلى الله عليه وسلم

“இஸ்லாமியக் கல்வி, பிரசாரம் தொடர்பான சில விடயங்களை தங்களுக்கு முன் வைக்க விரும்புகின்றேன். இந்தியாவில் இஸ்லாமியக் கல்வியைப் போதிப்பதற்காக அதிகமான கல்விக் கூடங்கள் உருவாக்கப்பட்டன. அக்கல்விக் கூடங்களின் கல்வித் திட்டம் தனியானது. அதற்கும் அரச கல்வி திட்டத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இக்கல்விக் கூடங்களை முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிறுவனங்களே நிர்வகிக்கின்றன. இதற்கான செலவுகள் உள்நாட்டு தர்மங்களை மையமாகக் கொண்டவை. இக்கல்விக் கூடங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் எத்தகைய உதவிகளையும் வழங்குவதில்லை. இக்கல்விக் கூடங்களில் கற்கைக் காலம் 7 முதல் 9 வரையான வருடங்களாகும்.

இக்கல்விக் கூடங்களில், கல்வி கற்று வெளியேறுவோர் அல் – ஆலிம் சான்றிதழைப் பெறுவதோடு, இமாமத் செய்வதற்கும் குத்பா பிரசங்கம் செய்வதற்கும் இஸ்லாமிய கல்விக் கூடங்களில் கற்பிப்பதற்கான தகைமையை பெற்றிருப்பர். நானும் எனது நண்பர்களும் இத்தகைய கல்விக் கூடங்களில் கற்று வெளியேறினோம். இருப்பினும் இத்தகைய கல்விக் கூடங்கள் அனைத்தும் பித்அத்துக்கள், கற்பனையாக மார்க்கம் எனும் போர்வையில் தோற்றுவிக்கப்பட்ட செயற்பாடுகள், நம்பிக்கைகள் போன்றவற்றை பரப்புவதற்காகவும், ஷிர்க்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவதற்காகவும் உருவாக்கப்பட்டவையாகும். நாம் இத்தகைய கல்விக் கூடங்களில் கற்றதால் அவைகளை உண்மையான பரிசுத்த மார்க்கம் என்று எண்ணியிருந்தோம். இவ்வாறுதான் எம்மைப் பயிற்றுவித்தனர். எமது செவிகளையும் உள்ளங்களையும் இத்தகைய சிந்தனையிலேயே நிறைத்து, வளர்த்தனர்.

இருப்பினும், அல்லாஹ்வின் ஒளி எமது உள்ளங்களில் பிரகாசித்தது. தூய தவ்ஹீத் சிந்தனையின் பக்கம் அல்லாஹ் எம்மை மிளிரச் செய்தான் ஷிர்க், பித்அத், குராபாத் போன்றவற்றிலிருந்து அல்லாஹ் எம்மை தூரமாக்கினான். நாம் தூய பாதையில் பயணிக்க ஷெய்குல் இஸ்லாம் இமாம் இப்னு தைமிய்யா, அஷ்ஷைக் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் போன்றவர்களது

நூல்கள் எமக்கு உதவின. அல்லாஹ் தனது நிறைவான அருளால் இவ்விருவரையும் சூழ்ந்து கொள்வானாக! அவ்விருவரையும் மேலான சுவனத்தில் நுழைவிப்பதோடு, நல்ல கூலிகளையும் பரிபூரணமாக அவ்விருவருக்கும் வழங்குவானாக! இங்கு மிகுந்த மன வேதனையோடு வெட்கத்துடனும் சொல்ல வேண்டிய செய்தி ஒன்று உள்ளது. அதாவது, எமது கல்விக் கூடங்களில் உள்ள ஆசான்கள் மேற்குறிப்பிட்ட இரு மேதைகளையும் காபிர் என்றும், முர்தத் என்றும் கூறுகின்றார்கள். அல்லாஹ் இவ்வாறான வார்த்தைகளிலிருந்து எம்மைப் பாதுகாப்பானாக. ஆய்வறிவற்ற மார்க்கத் தீர்ப்புகளில் இருந்தும் பாதுகாப்பதோடு, நேர்வழியை வழங்குவானாக!

நாம் எப்போது எமது மார்க்கத்தின் பிரதான அடிப்படை அல்குர்ஆனும் சுன்னாவும் என அறிந்தோமோ, அன்றிலிருந்து இந்த குராபிகளுக்கு எதிராக செயல்பட்டோம். இப்பாதையில் அல்லாஹ்வுக்காக விமர்சனங்களை சந்தித்தோம். அவற்றைக் கருத்தில் கொள்ளாது, துணிவாகச் செயற்பட்டோம். அல்லாஹ் எமது உள்ளத்தை உறுதிப்படுத்தி, அவன் எம்மை திருப்தி கொண்ட நிலையில் எமது உயிர்கள் கைப்பற்றப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். **“நாம் ஸலபிய்யக் கொள்கையை எதிர்ப்பவர்களோ, அல்லது அதற்கு எதிராகச் செயற்படுபவர்களோ அல்லர். மாறாக, ஸலபிய்யக் கொள்கை குர்ஆனையும் ஹதீஸையும் பின்பற்றத் தூண்டும் கொள்கை என்பதை நாம் சரியாகப் புரிந்துள்ளோம்”** என்று மிகத் தெளிவான வாசகங்களால், ஸலபுஸ் ஸாலிஹீன்களின் கொள்கையே சரியானது என்று எழுதியுள்ளார்.

**பொடி வைத்து எழுதுவது என்றால் என்ன? ஒரு விடயத்தை நேரடியாக சொல்லாமல் மறைத்து வைத்து எழுதுவதைக் குறிக்கும். இக்கட்டான நிலை வரும் நேரத்தில் மாட்டிக்கொள்ளாமல் எழுதி எஸ்கேப் ஆகும் வண்ணம் P.ஜைனுல் ஆபிதீன் எழுதியதாக இவர் ஒப்புக்கொண்டுள்ளார். இதைத்தான் நான் இரட்டை வேடம் என்றேன். அனைத்தையும் பொட்டில் அடித்தாற்போல் சொல்பவர் இந்த இடத்தில் மட்டும் ஏன் பொடி வைத்துப்பேச வேண்டும்? பொட்டில் அடித்தாற் போல் பேசுவதற்கு என்ன தயக்கம் அவரை ஆட்கொண்டது?**

**சில நலவுகளுக்காக தாங்கள் அரபிகளிடத்தில் சமாளித்துத்தான் நடந்து கொள்கிறோம் என்பதை அவர்களது வாயாலேயே ஒப்புக்கொண்டுள்ளார். இது, அவரது வாயில் இருந்து வரவழைக்கவே**

நான் அப்படி எழுதினேன். நான் எதிர்பார்த்தது போல, TNTJ மீது மதிப்பு அதிகரித்த மலைப்பில் (?) உண்மையை வெளிப்படுத்தி, நான் எழுதியது முற்றிலும் உண்மை என முற்றாக நிரூபித்துவிட்டார். அவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

P.ஜைனுல் ஆபிதீன் பல இடங்களில் நாங்கள்தான் இமாம்களைப் பின்பற்றுகிறோம் என்று பேசியிருக்கிறார். அதில் பொடி இல்லை! பொட்டில் அடித்தால் போல் “நச்” என்று இருக்கும். முழுமையாக கேட்டால் இப்படி சொல்லியிருப்பார். மத்ஹபுகள் வழிகேடு! அவற்றை பின்பற்றக்கூடாது என்று சேர்த்தே சொல்லியிருப்பார். இங்கு அப்படியா சொல்லியிருக்கிறார்? இல்லை.

ஸலபுகள் என்போர் குர்ஆன் ஹதீஸ் வழியில் நடப்போர். குர்ஆன் ஹதீஸுக்கு முரண்படாத, சரியாக உள்ள கருத்தை சொல்வோர். அவர்களின் கருத்தை முன்னிலைப்படுத்தி, அவர்கள் கருத்தல்லாததை உதாசீனம் செய்வோர். அப்படி நடப்பதுதான் குர்ஆன் ஹதீஸின் போதனை என்று சவூதிய அறிஞர்கள் கருதுகின்றனர். சவூதி அறிஞர்கள் குர்ஆன் – சுன்னாவை பின்பற்றும் சலபுகள் என்பதை மேலுள்ளவாறு புரிந்து வைத்துள்ளார். இதற்கு மாற்றமான புரிதலில் P.ஜைனுல் ஆபிதீன் உள்ளார். இதை உடைத்துச் சொல்லத் தயங்கி, சொன்னால் என்னவாகும் என்ற விளைவை அஞ்சி, நமது கொள்கையை தெளிவாக சொல்லாமல், பூசி மெழுகி எழுதுவது என்றால் எப்படி எழுதலாம் என்று கஷ்டப்பட்டு, ரூம் போட்டு யோசித்து, பொடி வைத்து எழுதியதை, பட்டென்று உடைத்து மாட்டிக் கொண்டார்.

P.ஜைனுல் ஆபிதீனைப் போன்று பொடி வைத்துப் பேச வேண்டிய அவசியம் நமக்கில்லை. நான் வைத்த விமர்சனத்தில் அத்திபாரம் ஆட்டங் காண்பதை மூடி மறைக்க, முகத்தை மூடி “மேதை”கள் சிலர் அநா“மேதை”களாக வருகின்றனர். இவர் மண்டையை மறைத்தால் மட்டும் போதாது, கொண்டையையும் சேர்த்து மறைக்க வேண்டும்.

கள்ள முகவரியாக, முக நூல் முகவரியை மாற்றினால் மட்டும் போதாது! எழுத்து நடையையும் மாற்ற வேண்டும். எழுதிய நடை எழுத்தர் யார் என்பதை துல்லியமாக புரிய வைக்கிறது. இன்னும் கடின

முயற்சி தேவை என்பதை அறிஞர் அவர்களுக்கு சொல்லி வைக்கிறேன். ( February: 2016) என்று அன்றே இவரது கள்ள முகவரியில் கோழைத்தனமான வேலை பார்ப்பதை எச்சரித்திருந்தோம்.

**அமைச்சரும் அண்ணனும்:** 2016 களில் அமைச்சர் ரிஷாட் பதியுத்தீன் அவர்களை அவரது அமைச்சில் ஒரு சமூகத் தேவை காரணமாகச் சந்திக்க எனது தந்தையுடன் சென்றிருந்தேன். அங்கு என்னைச் சிந்திக்க வைத்த சந்திப்புப் பற்றி ய குறிப்பாக இதை எழுதுகின்றேன்.

அன்று புதன் கிழமை Public day என்பதால் அவரை பொது மக்களில் ஐநூறுக்கும் மேற்பட்டோர் பல்வேறு தேவைகளுக்காக பல பகுதிகளில் இருந்து சந்திக்க வந்திருந்தனர்.

அமைச்சர் சரியாக 3 மணிக்கு அமைச்சினுள் நுழைந்தார். என்னையும் எனது தந்தையையும் கண்டவுடன் அவர் அங்குள்ள ஓர் அறையில் அமரவைத்து, சற்று நேரத்தில் சந்திக்க வருவதாக சொல்லிவிட்டு உள்ளே சென்றார்.

நான் அவரின் மக்கள் சந்திப்பை சற்று நோட்டமிட்டேன். அங்கு வந்திருந்த பொது மக்களில் ஒவ்வொருவராக அவர்களின் பிரச்சினை களை அமைதியாக செவிமடுத்து, மிகவும் சுறுசுறுப்பாக தீர்வுகளை வழங்கிக் கொண்டிருந்தார். சில போது அந்த சந்திப்பு இரவு 2 மணி வரையும் தொடர்ந்துள்ளது என்பதை அறியும் போது, நான் ஆச்சரியப் பட்டதுண்டு. தன்னை சந்திக்க வந்த எந்த ஒருவரையும் அவர் சந்திக்காமல் அனுப்புவதில்லை என்பதில் அவர் குறியாக இருக்கின்றார். இவ்வாறான அவரது தன்னலமற்ற நற்பணிகளுக்காக அல்லாஹ் அவருக்கு நற்கூலியை வழங்குவானாக.

அன்று, அஸர் நேரம் வந்ததும் அப்படியே மக்களை சற்று தாமதிக்குமாறு சொல்லிவிட்டு, அங்குள்ள ஓர் அறைக்குச் சென்று அமைச்சர் தொழுதார். ஓர் அரசியல் தலைவர் ஆன்மிக விடயங்களில் அதிக கவனம் செலுத்துவதைப் பார்த்தவுடன் அதுவும் அதிக மக்கள் நிறைந்திருக்கும் போது, அவர் தொழுவதற்காக எழுந்து சென்றது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஓர் அரசியல் தலைவர் அல்லாஹ் தனக்கு வழங்கியுள்ள பதவிக்கு நன்றி செலுத்த

மறக்காமல் இருப்பதையும், ஆன்மிகம் பேசிக் கொண்டு ஆன்மிக வறுமையில் உழலும் இயக்க வெறிபிடித்தலையும் அண்ணன் பீஜேவை சந்தித்த போதெல்லாம் அவர் தொழாமல் இருந்த அவரது ஆன்மிகப் போலித் தனத்தைக் கண்டு கவலையடைந்தேன்.

எனது பெற்றோர் எப்பவும் தொழுகையை நேரம் தவறவிட மாட்டார்கள். ஸலபிய்யாவின் முதீர் அபூபக்கர் ஸித்தீக் மதனி, முஸ்தபா மவ்லானா, ஸாஹிர் மதனி, இப்ராஹீம் ஆசிரியர் என்று எனது ஆசியர் குழாத்தினர் அனைவரும் தொழுகையில் பேணுதலாக இருப்பார்கள். ஆனால், P.ஜைனுல் ஆபிதீனும் அவரது தக்லீத் குழுவினரும் பேச்சில் பெருச்சாளிகளாகவும் தொழுகையில் ஓட்டாண்டிகளாகவும் ஆன்மிக வறுமையிலும் இருப்பதை நேரில் கண்டு அதிர்ச்சியடைந்தேன்.

அனைத்திலும் நான் மட்டுமே சரியானவன் என்ற மமதையில் ஆட்டம் போடும் வாதாட்டவாளுமைமிக்க அண்ணன் P.ஜைனுல் ஆபிதீனைப் பல தடவைகள் அவரது அலுவலகத்தில் சந்தித்துள்ளேன். அப்போதெல்லாம் எனக்கு பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டது. காபிருக்கும் முஸ்லிமுக்கும் இடையிலான பிரிகோடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட முக்கிய ஐங்காலத் தொழுகையில் அவர் மட்டுமல்ல அவரது ஜமாஅத்தின் நிருவாகிகள், உறவினர்கள், பிள்ளைகள் என்று அனைவரும் கவனமற்று இருப்பதைப் பார்த்து கவலையடைந்தேன். ஜும்ஆத் தொழுகைக்குக் கூடப் பள்ளிக்குச் செல்லாத அவரது உடன் பிறந்த தம்பிதான் அண்ணனின் டிரஸ்ட் உணர்வுப் பத்திரிகையின் முக்கிய புள்ளி.

சென்னை, மண்ணடி, அரண்மனைக்காரன் தெருவில் கீழ்மாடியில் TNTJ பள்ளி உள்ளது, மேல்மாடியில் அண்ணனின் அலுவலகம் உள்ளது. ஆனால், அண்ணன் பள்ளிக்கும் வரமாட்டார். அறையிலும் தொழமாட்டார். இவருக்குப் பத்து வருடங்கள் பணிவிடை செய்த சகோ. ரியாஸ் என்பவர் அது தொடர்பாக வீடியோவும் வெளியிட்டுள்ளார்.

“கடலில் உள்ள மீன்கள் குளிப்பதில்லை; பள்ளியில் இருக்கும் நான் தொழத் தேவையில்லை” என்று குருபாவா சொன்னதைப்

போன்று, அண்ணனும் பள்ளி மாடியில் இருப்பதால் தொழத் தேவை இல்லை என்று முடிவெடுத்துவிட்டாரா? அல்லது தொழுகை பற்றிய ஹதீஸ்களை மறுத்துவிட்டாரா? என்று சந்தேகம் எழுகிறது.

முக்கிய நிருவாகிகள் அலுவலகத்தில் இருந்து கொண்டு, அண்ணன் வழியில் பள்ளிப் பக்கமே வராமலும் தொழாமலும் இருப்பதைப் பார்த்தவுடன் ஆன்மிகம் பேசிக் கொண்டு, மக்களை ஏமாற்றும் இவர்களை விட அரசியல்வாதிகள் எவ்வளவோ பரவாயில்லையே என்ற எண்ணம் எற்பட்டது.

தன்னை நாடிவந்த மக்களை அமைச்சர் ரிஷாட் சந்தித்து, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அரசியல் சாணக்கியத்தையும், பொடிவைத்து இயக்க நலனிற்காக மக்களை ஏமாற்றும் அண்ணன் P.ஜைனுல் ஆபிதீனின் மக்கள் சந்திப்பு அணுகு முறையையும் ஒப்பிட்டு பார்க்கும் போது, உலக நலனிற்காக உருவாக்கப்பட்ட அரசியலை அமைச்சர் ரிஷாட் அவர்கள் மறுமைக்காக ஆக்கிக் கொள்வதையும், தான் கண்ட அனைத்து இயக்கத்தாலும் ஓதுக்கப்பட்டதால், அவற்றைக் கேவலப்படுத்தும் P.ஜைனுல் ஆபிதீன், TNTJ என்று புதிய இயக்கம் கண்டு, மறுமைக்கான பணியைக் கூட அற்ப துன்யாவிற்காக விற்றுக் கொண்டிருக்கும் பரிதாப நிலையையும் காணக் கூடியதாக உள்ளது.

மறுமைக்கான பணிகளை அண்ணனும் அவர் வகையறாக்களும் அற்ப துன்யாவிற்காக ஆக்கிக் கொள்வதைப் பார்க்கும் போது, இனி இத்தகைய இயக்க வெறிபிடித்தவர்களை நல்ல மக்கள் தூக்கி எறியும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பது வெள்ளிடை மலை. (நான் சவுதியில் பணிபுரியும் போது, தமிழகத்தைச் சேர்ந்த, P.ஜைனுல் ஆபிதீனை நன்கு தெரிந்த பலர் P.ஜைனுல் ஆபிதீன் தொழுவதில்லை என்று குற்றம் சாட்டினர். நான் அப்போது நம்பவில்லை. நான் நேரில் சென்று பார்த்த போதுதான், அவர்கள் சொன்னது உண்மை என்று புரிந்து கொண்டேன். அது மட்டுமல்ல தன்னையும் தன் இயக்கத்தையும் காப்பாற்றிக் கொள்ள எத்தகைய நிலைக்குவேண்டுமாலும் செல்வார் என்பதை இப்போது மக்கள் புரிய ஆரம்பித்து விட்டார்கள்.

நான் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவன். இதை நான் எழுதுவதால், அரசியல் சாயம் பூசவோ, வேறு நோக்கம் கற்பிக்கவோ முற்படவேண்டாம். நான் எந்தக் கட்சியிலும் எந்தப் பதவியிலும் இல்லை. நான் சந்தித்த சிந்திக்க வைத்த நிகழ்வை இங்கு தெரியப் படுத்தியுள்ளேன்.

P.ஜைனுல் ஆபிதீனின் குறைகளைப் பேச வேண்டும் என்பதற்காக நான் இதை எழுதவில்லை. அவரும் அவரின் இயக்கத் தொண்டர்களும் தம்மைவிட பரிசுத்தவான்கள் வேறு யாரும் உலகில் இல்லை என்று செய்யும் வெற்றுப் பிரசாரத்தினைப் புரிந்து, ஏமாந்துவிடாமல், P.ஜைனுல் ஆபிதீனை கண்மூடித் தக்லீத் செய்யும் குருட்டு பக்தர்கள் திருந்த வேண்டும். ஜைனுல் ஆபிதீனை நேசிப்பதைவிட, அவர் மீது வெறிபிடித்து அலைவதைவிட, அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் பற்று அதிகரிக்க வேண்டும் என்பதுவே எமது நோக்கம்" (முகநூல் : 2016)

# நீக்கம்

**P.ஜைனுல் ஆபிதீன் 2004 களில் உருவாக்கிய தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்திலிருந்து 2018ம் ஆண்டு நீக்கப்பட்டார். அவரது திடீர் நீக்கம் தொடர்பாக விக்தன் கட்டுரை வெளியிட்டுள்ளது. அதிலிருந்து சில முக்கிய பகுதிகளை இங்கு தருகின்றேன்.**

“இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம்” என்ற தலைப்பில், P.ஜைனுல் ஆபிதீன் ஆற்றிய உரைகள், இஸ்லாமிய இளைஞர்களிடையே அவருக்கான செல்வாக்கை வளர்த்தெடுத்தது. ஆனாலும், பொது மேடைகளில் பீஜேஇன் ஆபாசப் பேச்சுகள் கடும் விமர்சனங்களை உருவாக்கின. நான் சொல்வதுதான் சரி. என்னுடைய பேச்சுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும என 12 ஆண்டுகளாக தவ்ஹீத் ஜமாஅத்தை ஆண்டு வந்த P.ஜைனுல் ஆபிதீன், பெண் விவகாரத்தில் பெயரைக் கெடுத்துக் கொண்டார். அவரை ஏன் அமைப்பை விட்டு நீக்குகிறோம்?” என்பதை வீடியோ பதிவாக டி.என்.டி.ஜே பக்கத்திலும் வெளியிட்டுள்ளனர்.

இஸ்லாமிய இளைஞர்கள் மத்தியில் விவாதத்தை ஏற்படுத்தி யிருக்கிறது தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் தலைவர் பீ.ஜே எனப்படும் ஜைனுல் ஆபிதீன் நீக்கப்பட்ட விவகாரம். “நம்பக் கூடாதவர்களை நம்பியதுதான் நான் செய்த தவறு” என தன்னை சந்திக்க வந்தவர்களிடம் வேதனைப் பட்டிருக்கிறார், P.ஜைனுல் ஆபிதீன். “செல்போனில் பெண்ணுடன் தவறாகப் பேசியதை P.ஜைனுல் ஆபிதீன் ஒப்புக் கொண்டார்” என டி.என்.டி.ஜே இணையத்தளத்தில் வீடியோப் பதிவு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இத்தனை ஆண்டு காலமாக P.ஜைனுல் ஆபிதீன் உருவாக்கி வைத்திருந்த செல்வாக்கு, ஒரே நாளில் சரிந்துவிட்டது. இந்த விவகாரத்தை இஸ்லாமிய அமைப்பில் உள்ள இளைஞர்கள் சிலர், அவ்வளவு எளிதில் விடுவதாக இல்லை.

இது குறித்து நம்மிடம் பேசிய தவ்ஹீத் ஜமாத் நிர்வாகி ஒருவர், P.ஜைனுல் ஆபிதீன் செய்த மிகப் பெரிய தவறு என்பது, இத்தனை ஆண்டுகளில் அதிகப்படியான எதிரிகளை அமைப்புக்குள் சம்பாதித்துக்

கொண்டதுதான். அவரால் பழிவாங்கப்பட்ட நிர்வாகிகள் பலரும், இந்த விவகாரத்துக்குப் பின் ஒன்று கூடியுள்ளனர்.

ஜமாஅத்தில் கொஞ்சம் செல்வாக்கோடு யார் வளர்ந்தாலும், அவர்களை வீழ்த்துவதில் உறுதியாக இருந்தார், பீ.ஜே. இந்த விவகாரம் நீர்த்துப் போன பிறகு, மீண்டும் தவ்ஹீத் ஜமாத்துக்குள் கால் வைக்கும் முடிவில் இருக்கிறார், P.ஜைனுல் ஆபிதீன் "அப்படி அவர் உள்ளே வந்துவிட்டால், அவரை யாரும் எதுவும் செய்துவிட முடியாது" என்ற அச்சத்தில், P.ஜைனுல் ஆபிதீன் தொடர்பான சொத்து விவரங்களை ஒரு குரூப் சேகரித்துக் கொண்டிருக்கிறது. மண்ணடியில் இருக்கும் இரண்டு சூப்பர் மார்க்கெட்டுகள், கொடுங்கையூரில் புதிதாகத் திறக்கப்பட உள்ள ஒரு சூப்பர் மார்க்கெட், அவரது மருமகனுக்காக "நியூ டே" என்ற பெயரில் திறக்கப்பட்டுள்ள ஆடை விற்பனைக் கடை உள்ளிட்டவை வெளியே தெரிந்த சொத்துக்கள். இதைத் தவிர, ஏராளமான நிலங்களை வாங்கிக் குவித்திருக்கிறார். அதுதொடர்பான அனைத்து விவரங்களும் சர்வே எண்ணுடன் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சில நாள்களில் அந்த விவரங்களையும் இணையத்தளத்தில் வெளியிட உள்ளனர். தவ்ஹீத் ஜமாத்துக்குள் அவர் எந்தக் காலத்திலும் வர முடியாத அளவுக்கு அனைத்துக் காரியங்களும் நடைபெற்று வருகின்றன" என்றார் விரிவாக.

"இந்த ஆடியோ விவகாரதை ஒத்துக் கொண்டார், P.ஜைனுல் ஆபிதீன். எனவேதான், விபச்சாரப் பழியை அவர் ஏற்றுக் கொண்டார்" என சமூக ஊடகங்களில் ஒரு பிரிவினர் கருத்து சொல்லி வருகின்றனர். இந்நிலையில், யார் கண்ணிலும் படாமல் ஒதுங்கியிருந்த P.ஜைனுல் ஆபிதீன், மண்ணடியில் உள்ள தன்னுடைய சூப்பர் மார்க்கெட்டின் வியாபாரத்தைக் கவனிக்க இன்று வந்திருந்தார். "யாராவது விசாரிப்பார்கள்" என்பதை அறிந்து, கல்லாவில் அமர்ந்து, பில் போட்டுக் கொண்டிருக்கிறார். இந்த விவகாரம் குறித்து தன்னுடைய உறவினர்களிடம் மனம் திறந்து அவர் பேசியிருக்கிறார். "செய்யக் கூடாததைச் செய்து விட்டேன். நம்பக் கூடாதவர்களை நம்பிவிட்டேன். நம்ப வேண்டியவர்களுக்கு மனக் கஷ்டத்தை உருவாக்கி வெளியேற்றி விட்டேன். நான் செய்தது தவறான செயலாக இருந்தாலும்கூட இந்தச் சூழ்நிலையில் யார் என்னை உண்மையாக நேசித்தார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்" எனக் கூறிவிட்டு கதறி அழுதிருக்கிறார். அவருக்கு ஆறுதல் சொல்லி தேற்றியுள்ளனர் அவரது உறவினர்கள்.

"தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்தின் உயர்நிலைக் குழு கூடி, தலைவர் பதவி உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் P.ஜைனுல் ஆபிதீனை விலக்கி வைக்கிறோம்" என்ற அறிவிப்பு இஸ்லாமிய சமூகத்தில் விவாதப் பொருளாகியிருக்கிறது. பெண்ணுடன் தவறாகப் பேசியதை அவர் ஒப்புக் கொண்டார். மொத்தம் 46 ஆடியோக்களில் மூன்றுதான் வெளியாகி யிருக்கிறது" என அதிர வைக்கின்றனர் தவ்ஹீதுகள் வட்டாரத்தில்.

**பீ.ஜைனுல் ஆபிதீன் செய்த தவறு என்ன?** பெண் ஒருவரிடம் அவர் பாலியல் ரீதியாகப் பேசியதுதான் குற்றச்சாட்டு. உண்மையில் அது ஒரு வீடியோ ஃபைல். இருவரும் ஐ.எம்.ஓ ஆப்பில் பேசியுள்ளனர். அதன் ஆடியோ மட்டும்தான் வெளியாகியிருக்கிறது. வீடியோவை வெளியிடாமல் வைத்திருப்பதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. மீண்டும் டி.என்.டிஜே வில் பீஜே தலையை நீட்டினால், இந்த வீடியோ வெளியிடப்படும்" என ஒரு குரூப் உறுதியாகக் கூறிவிட்டது.

P.ஜைனுல் ஆபிதீனுக்கு எப்போதும் ஒரு பழக்கம் உண்டு. யார் பேசினாலும் அந்த போன் காலைப் பதிவு செய்வார். இலங்கை டீம் வசம் மொத்தம் 46 ஆடியோ, வீடியோ ஃபைல்கள் உள்ளன. அதில் மூன்றை மட்டும்தாம் வெளியிட்டுள்ளனர். P.ஜைனுல் ஆபிதீனுடன் போனில் பேசும் அந்தப் பெண் வடசென்னை மாவட்டப் பொறுப்பாளர் ஒருவரின் உறவினர். மிகப் பெரிய கோடீஸ்வரக் குடும்பம் அது. மதுரையிலிருந்து சென்னை வந்து செட்டில் ஆனவர்கள். ஆண்டர்சன் தெருவில் ஸ்டேஷனரி பொருள்களை பெரிய அளவில் சப்ளை செய்து வருகின்றனர். தங்கள் வருமானத்தில் கிடைத்த பணத்தில், சென்னையின் மையப் பகுதியில் டி.என்.டி.ஜேவுக்கு நல்ல இடம் ஒன்றையும் அளித்துள்ளனர்.

இந்தப் பெண்ணுக்கு 18 வயதில் ஒரு மகன் இருக்கிறார். 13 வயதில் ஒரு மகள் இருக்கிறார். டி.என்.டி.ஜேவைப் பொறுத்தவரையில் யார் தலைவராக வந்தாலும், P.ஜைனுல் ஆபிதீன் இசைவில்லாமல் எதுவும் நடக்காது. இத்தனை ஆண்டுகாலம் P.ஜைனுல் ஆபிதீன் நினைப்பது மட்டும்தான் நடந்துகொண்டிருந்தது. அதற்கு ஒத்து வராததால்தான் எஸ்.எம்.பாக்கர் உள்ளிட்டவர்களைக் குற்றம் சொல்லி வெளியேற்றினார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பக்கீர் முஹம்மது அல்தாபி என்பவர் தவ்ஹீத் ஜமாத் தலைவராகப் பதவியேற்றார். இதை P.ஜைனுல் ஆபிதீன் ரசிக்கவில்லை. தன்னை மீறி எந்த விஷயமும் நடப்பதை அவர் எந்தக்

காலத்திலும் விரும்பியதில்லை. அல்தாபி மீது சில குற்றச்சாட்டுகளைப் பரப்பத் தொடங்கினார். தவ்ஹீத் ஜமாஅத்தை பொறுத்தவரையில், விளக்கம் கேட்க வந்த ஒரு பெண்ணை வீட்டுக்கு வரச் சொல்லிவிட்டார், அல்தாபி. ஆனால், எந்தவித தவறான காரியங்களும் அங்கு நடக்கவில்லை. இதை ஒரு குற்றச்சாட்டாக முன்வைத்து, அல்தாபிக்கு நெருக்கடியைக் கொடுத்தார், P.ஜைனுல் ஆபிதீன். இதற்குப் பதிலளித்த அல்தாபி, நான் செய்தது தவறு என்றால், நானே ராஜினாமா செய்கிறேன்" எனக் கூறிவிட்டு வெளியேறிவிட்டார். இப்போது, பாங்காக்கில் செட்டில் ஆகிவிட்டார்.

இதன் பின்னரும், விபசாரம் செய்துவிட்டார் அல்தாபி என P.ஜைனுல் ஆபிதீன் தரப்பில் பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள். இஸ்லாத்தை வன்மையாக விமர்சித்துவரும் கல்யாண ராமனுக்குக் கூட அல்தாபி விவகாரத்தைத் தெரியப்படுத்தினார், P.ஜைனுல் ஆபிதீன். இதை அல்தாபி எதிர்பார்க்கவில்லை. இதற்கு நிவாரணம் தேட விரும்பினார்.

இஸ்லாத்தில் நிவாரணம் தேடுவதை "முபாஹலா" என்பார்கள். இதுதான் கடைசி நிலை. தன்னை நிரூபிக்க குடும்பத்துடன் வந்திருந்தார், அல்தாபி. கடந்த மாதம் திருச்சியில் அமைக்கப்பட்டிருந்த பொதுமேடையில், நான் தவறு செய்யவில்லை. அப்படிச் செய்திருந்தால் இறைவன், என் மீதும் என் குடும்பத்தின் மீதும் சாபத்தை உண்டாக்கட்டும்" எனக் கூறிவிட்டு மேடையிலிருந்து இறங்கிவிட்டார்.

அல்தாபிக்கு நேர்ந்த இந்தச் சம்பவத்தை இலங்கை டீம் ரசிக்கவில்லை. இதன் விளைவாக மூன்றாவது ஆடியோவை ரிலீஸ் செய்தனர். முதல் முறை ஆடியோ வெளியானபோது, இது "மிமிக்ரி" எனக் கூறிவிட்டார்கள். அடுத்த சில நாள்களில் இரண்டாவது ஆடியோவை வெளியிட்டனர். இந்த ஆடியோவில் உள்ளவை, முதல் ஆடியோவை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகப் பேசப்பட்ட "செட்டில்மென்ட்" தொடர்பானவை. மூன்றாவது ஆடியோ வெளியானபோது, இது P.ஜைனுல் ஆபிதீன்தான்" என உறுதியான முடிவுக்கு வந்தனர், தவ்ஹீத் நிர்வாகிகள்."

இதனையடுத்து, உயர் மட்டக் குழு நிர்வாகிகளின் கூட்டம் கூடியது. அந்தப் பெண்ணின் உறவினர்களை அழைத்து விசாரித்தனர். அவர்கள் தெளிவாக ஒரு விஷயத்தை முன்வைத்தனர். P.ஜைனுல் ஆபிதீன் குரலை யாரோ "மிமிக்ரி" செய்து விட்டார்கள் என நீங்கள் சொல்லலாம். ஆனால், அந்த

ஆடியோவில் கேட்கும் குரல் எங்கள் பெண்ணின் குரல்தான். பீ.ஜே இதை மறுத்தால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்போம். காரணம், P.ஜைனுல் ஆபிதீன் போல பேசிய அந்த நபருக்குத் தண்டனை வாங்கித் தருவோம். மாறாக, இந்த விஷயத்தை P.ஜைனுல் ஆபிதீன் ஒத்துக் கொண்டால், ஜமாத் எடுக்கும் நடவடிக்கைக்கு நாங்கள் கட்டுப்படுவோம்” எனக் கூறிவிட்டனர்.

இதனை எதிர்பார்க்காத P.ஜைனுல் ஆபிதீன், அந்தக் குடும்பத்தை சமசரப்படுத்த எவ்வளவோ முயற்சிகளை எடுத்தார். ஒரு கட்டத்தில் போலீஸ் கமிஷனர் அலுவலகம் செல்வதற்கும் அந்தக் குடும்பம் தயாராகிவிட்டது. இதன் பிறகுதான் வேறு வழியில்லாமல், P.ஜைனுல் ஆபிதீன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதாகிவிட்டது. பெண்ணின் குடும்பம் உறுதியாக இருந்ததால்தான் இப்படியொரு நடவடிக்கையை எடுக்க முடிந்தது. இதிலும், அந்தப் பெண் வீட்டார் திருப்தியடையவில்லை. எனவேதான், பீஜே ஒத்துக் கொண்டதாக வீடியோ பதிவையும் வெளியிட்டனர்” என்றார் விரிவாக. ( 23-05-2018 )

**அவர் அதிகாரம் செலுத்தும் போது, பலரை நீக்கினார். தவறாகச் சித்திரிக்கும் வகையில் எடிட் செய்யப்பட்ட சீடிகளை வெளியிட்டு, அவர்களை அவமானப்படுத்தினார். இஸ்லாம் புனிதமாகக் கருதும் மற்றவர்களது மானத்தோடு விளையாடும் ஈனத்தனமான வெறுக்கத்தக்க இச்செயற்பாட்டை அவர் மட்டுமல்ல, கருத்தை கருத்தால் எதிர் கொள்ள திராணியற்ற தவ்ஹீத் பெயரில் செயற்படும் சில இலங்கை இயக்கக் கயவர்களும் பள்ளி நிர்வாகிகளும் கூடச் செய்துள்ளனர். வித்தியாசம் என்னவென்றால், ஜைனுல் ஆபிதீன் இவர்களைவிட அதிகமாகச் செய்தார். இதே வேளை அவரால், மற்றவர்கள் நீக்கப்பட்டதற்கும் அவர், தலைமைப் பதவியில் இருந்த போது, அவரது இயக்கத்தால் அவர் நீக்கப்பட்டதற்கும் பாரிய வேறுபாடு உள்ளது. Audio விவகாரம் சூடுபிடித்தவுடன் P.ஜைனுல் ஆபிதீன் இனி இயக்கத்தில் இருந்தால் நாறிப்போய்விடும், விலகுவதாக அறிவித்தால் தப்பிவிடலாம் என்று கணக்குப் போட்டார். விலகல் கடிதத்தையும் வெளியிட்டார். இது, அவரது எத்தனையாவது தடவை விலகல் என்று மட்டும் கேட்க வேண்டாம்.**

**அதன் பின்னர், P.ஜைனுல் ஆபிதீன் புதிய கடிதம்! என்று** May 10, 2018 **அன்று தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் முகநூலில் மீண்டும் ஒரு கடிதம் வெளியிடப்பட்டது.**

உயர்நிலைக் குழு உறுப்பினர்களுக்கு P.ஜைனுல் ஆபிதீன் எழுதுவது அஸ்ஸலாமு அலைக்கும்.

ஆடியோ சம்பந்தமாக புகார் எதுவும் வராமல் நாமாக வலியச் சென்று விசாரிக்கும் நடைமுறை இல்லை என்பதால், எனது விலகலைத் திரும்பப் பெறுமாறு உயர்நிலைக் குழு உறுப்பினர்கள் என்னிடம் தெரிவித்து வருகிறார்கள்.

நீங்கள் விசாரணை நடத்தி நான் குற்றமற்றவன் என்று நிரூபித்தாலும் அதன் பின்னரும் நான் விலகலைத் திரும்பப் பெற வேண்டாம் என்பதுதான் என் குடும்பத்தினரின் எண்ணமாக உள்ளது.

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. என் மீது சுமத்தப்பட்டது போல், யார் மீது அவதூறு பரப்பப்பட்டாலும் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். நானும் பாதிக்கப்படுகிறேன். ஆனால், எனக்கு முன்பு போல் வலிமையான இதயம் இல்லை. இரு முறை அட்டாக் (Attack) வந்து, இரு தடவையும் ஆஞ்சயோ (Augio) பண்ணியதால் என்னைப் பற்றிய கேவலமான விமர்சனங்கள் நூற்றுக் கணக்கான நபர்களால் பரப்பும் போது இதயம் மிகவும் பாதிக்கிறது.

மேலும், என்னுடன் பயணித்தவர்களே நம் ஜமாஅத்தை விட்டுப் போன பின், இது போல் அதிகம் பரப்புவதைக் காண்கிறேன். இதை நேற்று வரை பொய் என்று சொன்னவர்கள், இப்போது மெய் என்று வாதிடும் போது கூடுதல் பாதிப்பு ஏற்படுகிறது.

மேலும், என் மீது அன்பு கொண்ட மக்கள் எதிரிகளுக்குப் பதில் கொடுப்பதிலேயே தமது நேரங்களைச் செலவிடுகிறார்கள். ஆக்கப்பூர்வமான பணிகள் எதிலும் ஈடுபட முடியாமல் என்னைப் பற்றி எதிர்த்தும், ஆதரித்தும் எழுதுவது மட்டுமே முக நூலில் மலிந்து கிடக்கின்றது. இதுவும் என்னை மிகவும் பாதிக்கிறது.

அது மட்டுமல்லாமல், என் மீது கொண்ட அன்பின் காரணமாக எனக்கு எதிராக வதந்தி பரப்புவோரைத் தரக்குறைவாக விமர்சிப்பதையும், எதிரிகளின் குடும்பப் பெண்களைக் கேவலமாகப் பேசுவதையும் காண முடிகிறது. யார் என்ன செய்தாலும் அனைத்தும்

நான் செய்வதாகவே பார்க்கப்படுகிறது. அதை ஒட்டியும் விமர்சனங்கள் நீள்கின்றன. பல மாதங்களுக்குப் பின் நான் விலகல் அறிவிப்புச் செய்த அன்று தான் நிம்மதியான தூக்கம் வந்தது. எல்லாப் பாரத்தையும் இறக்கி வைத்தது போல் அன்று தான் உணர்ந்தேன்.

இதை விட முக்கியமான காரணம் ஒன்று உள்ளது. தவ்ஹீத் ஜமாஅத் எதிரிகள் P.ஜைனுல் ஆபிதீன்தான் தவ்ஹீத் ஜமாஅத் என்று கருதுகிறார்கள். என்னை முடக்கினால் தவ்ஹீத் பிரசாரம் முடங்கி விடும் என்று கணக்கிடுகிறார்கள். தவ்ஹீத் சகோதரர்களில் சிலரும் அந்த மன நிலையில் தான் உள்ளனர்.

இதை உடைத்து ஆக வேண்டும். மக்களால் அதிகம் அறியப் பட்ட ஒருவரால் தான் இந்த ஜமாஅத்தைக் கொண்டு செல்ல முடியும் என்பதைப் பொய்யாக்க வேண்டும். இந்த ஜமாஅத்தில் நல்ல ஆய்வுத் திறன் மிக்க அறிஞர்கள் பலர் உள்ளனர். தியாகமும், அர்ப்பணிப்பும் செய்பவர்கள் உள்ளனர். அந்த நல்லறிஞர்களைக் கொண்டு இந்த ஜமாஅத்தைச் சிறப்பாக வழிநடத்த முடியும்.

**"இது கொள்கைக்கான ஜமாஅத் ஆகும். P.ஜைனுல் ஆபிதீன் இல்லாவிட்டாலும் கொள்கைக்காக இந்த ஜமாஅத்தில் இருப்பவர்கள் தொடர்ந்து இருப்பார்கள். வீரியமாக செயல்படுவார்கள். எனவே, என்னை தயவு செய்து வற்புறுத்த வேண்டாம் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். என் விலகலில் எந்த மாற்றமும் இல்லை என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்"** என்று P.ஜைனுல் ஆபிதீன் ஒரு மடலை எழுதினார். தமுமுக விலிருந்து விலகும் போது, அந்த இயக்கத்தைப் புகழ்ந்து எழுதியது போன்று இந்த மடலிலும் தவ்ஹீத் ஜமாஅத்தைப் புகழ்ந்து எழுதினார். இது, அந்த ஜமாஅத் மக்களை மாடாக்கி, தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் என்பதை அவரது சகாக்கள் தெளிவாக உணர்ந்துவிட்டனர்.இன்று அவர் நீக்கப்பட்ட பின்னர், அந்த ஜமாஅத்தை அவர் எவ்வளவு கீழ்த்தரமாக விமர்சிக்கின்றார் என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே!

P.ஜைனுல் ஆபிதீனின் இயக்கக் கட்டுப்பாடும் மறுமை நம்பிக்கையும் எத்தகையது என்பதை அவரே பல தடவைகள்

புலப்படுத்தியுள்ளார். இவர் எத்தகைய கயமைத்தனமும் கபடத் தனமும் நிறைந்த சுயநலவாதி என்பதற்கு பல எடுத்துக் காட்டுக்களை இன்று அவருடன் பயணித்தவர்களே வெளிப்படுத்தி வருகின்றனர். தனக்கு ஒரு நியாயம் மற்றவர்களுக்கு ஒரு நியாயம் என்ற வக்கிரபுத்தி நிறைந்தவர். இவர், TNTJவிலிருந்து ஒத்துக் கொண்ட பாலியல் குற்றத்திற்காக நீக்கப்படும் முன்னர், அன்று இவர் அந்த ஜமாஅத்திலிருந்து கொண்டு, இயக்க வளர்ச்சிக்காக அயராது உழைத்த, உதவிய பலர் மீது வீன் பழி சுமத்தி, ஈவிரக்கமின்றி அவமானப்படுத்தி, வெளியேற்றினார்.

அப்போது, பாதிக்கப்பட்ட பலர் மீள் விசாரணை வைக்குமாறு வேண்டிய போது, அதனை ஏற்றுக் கொள்ளாமல் நழுவினார். ஏனெனில், பாதிக்கப்பட்வர்களிடமிருக்கும் ஆதாரங்களை அவர்கள் அள்ளிப் போட்டிருந்தால், மறுமைக்காக (?) அவர் உருவாக்கிய இயக்கம் இப்போது நார் நாராகக் கிழிந்து தொங்குவதைப் போன்று, அன்றே கிழிந்து தொங்கியிருக்கும். எனினும், அவராலும் அவரது வகையறாக்களாலும் பாதிக்கப்பட்டவர்கள் பொறுமை காத்தனர். அன்று இவராலும் இவர் உருவாக்கிய கயவர்களாலும் பாதிக்கப் பட்டவர்களுக்கு அவர் அன்று சொன்னது: “நிர்வாகம் செய்வது எவ்வளவு சிரமமானது என்பதையும் அதற்காக அவர்கள் செய்யும் தியாகத்தையும் மதித்து முழுமையாக கட்டுப்பட்டேன். எனவே, மறுமைக்காக உருவாக்கப்பட்ட இயக்கத்தில் என்ன தான் பிரச்சினை வந்தாலும் கட்டுப்பாடு தான் முதன்மையானது. அந்த வகையில் இப்போதைய நிர்வாகம் மறு விசாரணை செய்தாலோ வேறு முடிவு எடுத்தாலோ அதற்கு முதலில் கட்டுப்படுபவனாக நான் இருப்பேன்” என்று எழுதினார்.

இன்று அதே நிலை தனக்கு என்று வந்தவுடன் எங்கே போனது, மறுமை நம்பிக்கை, இயக்கக் கட்டுப்பாடு எல்லாம்? அன்று அவர் தன் இயக்கம் தொடர்பாக பம்மாத்துக் காட்டி எழுதினார். அவரது 28 நிமிட ஆபாச உரையாடல் வெளிவந்த போது, அவரது நாடகம் அனைத்தும் அவரது ஜமாஅத்தாலேயே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்ன

**வென்றால், அவர் உருவாக்கிய, விவாதிக்கப் பயிற்றுவித்த அவரது மாணவர்கள், அவருடன் இயக்க ரீதியாக பல வருடங்கள் ஒன்றாகப் பயணித்தவர்கள் யாரும் அவருடன் இன்று இல்லை. சில தக்லீத்வாதிகளைத் தவிர, ஒட்டுமொத்தமாக அனைவராலும் புறக்கணிக்கப் பட்டுள்ளமை அவருக்கு மிகப் பெரிய அவமானமாகும். எந்த முகத்துடன் அவர் வெளியே தலை காட்டுகின்றார் என்று அவரது முன்னாள் ஆதரவாளர்களே கேள்வி எழுப்புகின்றனர். வாதத் திறமையை வைத்து பிழைகளை சரிக்கட்ட முயல்கின்றார். அவரது ஆபாச ஆடியோ சர்ச்சை குறித்து பீ.ஜைனுல் ஆபிதீனின் ஆதரவாளராக நீண்டகாலம் இருந்த ஒருவர் பின்வருமாறு அவரது முகநூலில் பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தார்.**

“பெண்ணின் தங்கையிடம் நான் பேசியது உண்மை தான் என பீஜே Live வில் ஒத்துக்கொண்டதை அனைவரும் பார்த்திருப்பீர்கள். அதிலிருந்து சில கேள்விகள் :

1) மிமிக்ரினு சொல்ல சொல்லிடுன்னு பீஜே எப்படி பேசினார்?
ஆடியோ வெளியானதும் பெண் யாருன்னு தெரியாம இருந்தும் கரெக்டா அந்தப் பெண்ணின் தங்கையிடம் மிமிக்ரினு சொல்ல சொல்லிடுன்னு பீஜே எப்படிப் பேசினார்?

2) போட்டு வாங்கத்தான் அந்தப் பெண்ணின் தங்கையிடம் பேசினேன் என்றார் லைவில் பீஜே.
பேசிய பெண் யாரென்றே தெரியாமலிருக்க, சரியாக அந்த பெண்ணின் தங்கையிடம் எப்படி பேசினார்?

3) நாங்க ரெண்டு பேரும் அப்படி இப்படி பேசுவோம்ல அதை ரிக்கார்டு பண்ணியிருக்காங்க போல.. போன் ரிப்பேருக்கு கொடுத்திருப்பாங்க போல அது வெளியே போயிரிச்சு என்று தொடர்பை பீஜே உறுதிப்படுத்துகிறாரே! அதெப்படி?

4) அக்காவுக்கும் பீஜேக்கும் அந்தமாதிரியான தொடர்பு இருப்பது ஏற்கனவே தனக்கு தெரியும், என்று தங்கை சொன்னாளே... அது எப்படி?

5 தற்போது அக்காவுக்கு உடம்பு முடியாததால் பீஜேயுடனான தொடர்பை

அக்கா நிறுத்தி வைத்துள்ளார் என்று தங்கை ஒப்புதல் அளிக்கிறாரே! அதெப்படி?

6) நானும் ரம்ஜானும் பேசுகிற மாதிரி ஓர் ஆடியோ பேஸ்புக்கில போட்டு விட்டிருக்காங்கன்னு தங்கையிடம் பீஜே சொல்கிறாரே! அது ரம்ஜானின் குரல் தான் என்பது பீஜேக்கு எப்படித் தெரியும்?

7) ரம்ஜானுடனான தொடர்பை முன்னாடியே நிறுத்தி விட்டேன் என்று பீஜே சொல்கிறாரே! இது தொடர்பு இருந்ததை உறுதி செய்கின்றதே?

8) விஷயம் வெளியே தெரிஞ்சா கேவலமா போகும். நான் எங்கிட்டாவது ஓடிப் போயிடற மாதிரி ஆயிடும்னு பீஜே சொல்கிறாரே! ஏன்?

9) "நான் இல்லைனு சொல்ல சொல்லிடு, மிமிக்ரினு சொல்ல சொல்லிடுன்னு அந்த பெண்ணுக்கு சம்பந்தமே இல்லாமல்(!?) ஐடியா கொடுத்தது ஏன்?

10) பக்கத்துல யாரு கேட்டாலும் ஒரே மாதிரியா சொல்ல சொல்லிடுன்னு சொல்ல சொன்னதேன்?

11) தங்கமாக மின்னுகிற பீஜே, நான் ஜமாஅத்துக்கு தகுதியில்லாம போயிட்டேன்னு அந்த பெண்ணிடம் சொன்னது ஏன்?

12) நாளை வரைக்கும் தாமதிக்காமல் உடனே மச்சானுக்கு போண் போட்டு ஜிகிர் தண்டா விஷயமாக பேசனும்னு அக்கா கிட்ட கொடுக்கச் சொல்லி, உடனடியாக விஷயத்தை சொல்லிடுன்னு சொல்லச் சொன்னதேன்?

13) அண்ணன்மார்களுக்கு தெரிஞ்சு கேட்குறதுக்குள்ளே காலையிலேயே சொல்லிடுன்னு அவசரப்படுத்தியதேன்?

14) நீங்க ரெண்டு பேரும் பேசின ஆடியோவை யாரோ எடுத்திருக்காங்க. அது நானில்லைனு சொல்ல சொல்லிடு என பீஜே சொல்கிறார். இதிலும் கள்ளத்தொடர்பை பீஜே உறுதிபடுத்துகிறாரே?

15) நான் செஞ்ச தப்புக்காக தவ்ஹீத் ஜமாஅத்துக்குப் பாதிப்பு வந்துரும்ல என்று பீஜே சொல்கிறாரே? நான் தப்பு செஞ்சேன் என்று ஒத்துக்கொள்கிறாரே?

16) நானே உணர்ந்துட்டேன், விலகிடலாம்னு இருக்கேன்.ரமலானுக்கு பிறகு ஜமாஅத்துல இருக்க மாட்டேன் என்றெல்லாம் தவறே செய்யாத(!?) பீஜே சொன்னதேன்?

இப்படி நிறையக் கேள்விகள் எங்களிடம் இருக்கு.

**நாங்க தப்பு பண்ணினா சட்டையை பிடிச்சு கேளுங்கன்னு ஏற்கனவே அண்ணன் பீஜே அனுமதி தந்திருக்கிறார் என்ற அடிப்படையில் தான் இந்த கேள்விகள் என்று பீஜேவின் முன்னாள் அபிமானி ஒருவர் முகநூலில் பல கேள்விகளை எழுப்பியிருந்தார்.**

ஏகத்துவப் பிரசாரத்திற்கும் தவ்ஹீத் இயக்கங்களுக்கும் P.ஜைனுல் ஆபிதீனின் மிகக் கீழ்த்தரமான பச்சை ஆபாச Audio வும், ஈஸ்டர் தாக்குதலும், இரண்டு பேரிடிகளாக விழுந்த இரண்டு கோரமான நிகழ்வுகளாகும்.இந்த இரண்டு நிகழ்வுகளையும் வரலாறு இலகுவில் மறந்துவிடாது.

# பின்னுரை

**P.**ஜைனுல் ஆபிதீன் பல வருட கால இடைவிடாத கடுமையான உழைப்பால் அவர் கட்டி எழுப்பிய நன்மதிப்பையும் மரியாதையையும் சமூக அங்கீகாரத்தையும் மக்கள் சக்தியையும் இயக்கத்தையும் இன்று இழந்து நிற்கின்றார். 2017 வரை இறுதி உரையாளராகவும், விசேட சொற்பொழிவாளராகவும் இருந்து வந்த அவர், இன்று பொது மேடைகளில் எனக்கு ஓர் உரை தரமாட்டீர்களா என்று கெஞ்சும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்று தமிழக வட்டாரச் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. அவரால் இழிவு படுத்தப்பட்டு, இயக்கத்தை விட்டு வெளியேற்றப்பட்டு, பழி தீர்க்கப்பட்டவர்களிடமே வாய்ப்புக் கேட்டு கெஞ்சும் நிலைக்கு அவர் ஆளாகியுள்ளார்.

அவர் நீண்ட காலம் தனது அருகாமையில் வைத்திருந்தவர்கள், அவர் உருவாக்கிய மாணவர்கள், முக்கிய நிருவாகிகள் என்று யாரும் அவர் பின்னே செல்லவில்லை. அந்தளவுக்கு அவரது செல்வாக்கை அவரது ஆபாச அடியோ சரியச் செய்துவிட்டது. அவரது உண்மை முகத்தை அவரது ஆபாச Audio வெளிப்படுத்திவிட்டது என்று அவரது மாணவர் ஒருவர் ஓர் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**P.**ஜைனுல் ஆபிதீன் TNTJ விலிருந்து நீக்கப்பட்ட போது, அவர் பின்னே யாரும் செல்லவில்லை. அந்த ஆத்திரத்தை அவர் வெளிப்படுத்தி வருகின்றார். தனது முன்னாள் தொண்டர்கள் யாரும் வராததற்குக் காரணம் ஆபாச Audioதான் என்பதை நன்கு உணர்ந்தும் அதை மறைத்தே பேசிவருகின்றார்.வேறு காரணங்களைச் சொல்லி மடைமாற்றம் செய்ய முயல்கின்றார் என்று அவர் மீது முள்ளாள் சாகாக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.ஆனால், அவர் வேறு காரணங்களைச் சொல்லி வருகின்றார். முன்னைய இயக்கத்தில் சம்பளம் கிடைக்கிறது. அதனால், அவர்கள் என்னுடன் வரவில்லை என்று, அவர்கள் மீது பழி சுமத்தி, தனது இழிந்த குணத்தை வெளிப்படுத்தி வருகின்றார் என்று TNTJ வின் பிரசாரகர்கள் தொடர்பான அவரது கருத்துக்கள் மீது கண்டனங்கள் எழுந்துள்ளன.

ஏனெனில், அவர் TNTJ விலிருந்து நீக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் பின்வருமாறு எழுதினார்.

“தவ்ஹீத் ஜமாஅத் எதிரிகள் P.ஜைனுல் ஆபிதீன்தான் தவ்ஹீத் ஜமாஅத் என்று கருதுகிறார்கள். என்னை முடக்கினால், தவ்ஹீத் பிரசாரம் முடங்கி விடும் என்று கணக்கிடுகிறார்கள். தவ்ஹீத் சகோதார்களில் சிலரும் அந்த மன நிலையில் தான் உள்ளனர்.

இதை உடைத்து ஆக வேண்டும். மக்களால் அதிகம் அறியப்பட்ட ஒருவரால் தான் இந்த ஜமாஅத்தைக் கொண்டு செல்ல முடியும் என்பதைப் பொய்யாக்க வேண்டும். இந்த ஜமாஅத்தில் நல்ல ஆய்வுத் திறன் மிக்க அறிஞர்கள் பலர் உள்ளனர். தியாகமும், அர்ப்பணிப்பும் செய்பவர்கள் உள்ளனர். அந்த நல்லறிஞர்களைக் கொண்டு இந்த ஜமாஅத்தைச் சிறப்பாக வழிநடத்த முடியும்.

**இது கொள்கைக்கான ஜமாஅத் ஆகும். P.ஜைனுல் ஆபிதீன் இல்லாவிட்டாலும் கொள்கைக்காக இந்த ஜமாஅத்தில் இருப்பவர்கள் தொடர்ந்து இருப்பார்கள். வீரியமாக செயல்படுவார்கள்.** எனவே, என்னைத் தயவு செய்து வற்புறுத்த வேண்டாம் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். என் விலகலில் எந்த மாற்றமும் இல்லை என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்” **என்று P.ஜைனுல் ஆபிதீன் ஒரு மடலில் எழுதினார். அதைப் பகிரங்கமாக முகப்புத்தகத்திலும் வெளியிட்டார்.**

**P.ஜைனுல் ஆபிதீன், TNTJ வில் இருக்கும் கடைசி நிமிடம் வரை அந்த இயக்கத்தின் பேச்சாளர்களை இவர் வெகுவாகப் பாராட்டிப் பேசினார். தியாகிகளாக வர்ணித்தார். இவர் அந்த இயக்கத்தில் இருக்கும் போது, அந்த இயக்கத்திற்கு நிகரான வேறு எந்த இயக்கமும் உலகில் எங்கும் இல்லை, அந்தப் பேச்சாளர்கள் போன்று யாரும் இல்லை என்றார். இந்தப் பிரசாரம் அனைத்தும் பொய் என்பதை இப்போது, அவரே அவரது வாயால் ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்.**

**இவரது முன்னைய இயக்கம் தொடர்பாக அப்போது அதற்கு வெளியிலிருந்து என்ன விமர்சனங்கள் வந்தனவோ, அவை அனைத்தும் இப்போது, இவரால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.**

அன்று மற்றவர்கள் வைத்த குற்றச்சாட்டுக்களை இவர் மறுத்துவந்தார். குற்றம் சுமத்தியவர்களைக் கடுமையாகத் தாக்கினார். இப்போது, அவர் எதை அன்று மறுத்தாரோ, அக்குற்றச்சாட்டுக்களை அவரே இன்று கூறிவருகின்றார். இதன் மூலம் தனக்குத்தானே முரண்பட்டு, மறுப்பை வழங்கியுள்ளார் என்று பலரும் நையாண்டி பண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்.

கடந்த காலத்தில் முஸ்லிம்களுக்கு முஷ்ரிக் பட்டம் வழங்கியோருக்கு என்ன வாதங்களை முன்வைத்து, அவர்களது தவறான வாதங்களை முறியடித்தாரோ, முனை மழுங்கி, செத்துப் போன அதே வாதங்களை இன்று மீண்டும் இவர் முன்வைத்து, தனது கருத்தை மறுதலிப்போருக்கு முஷ்ரிக் பட்டம் வழங்க முனைந்து, ஏளனத்திற்கும் எள்ளிநகையாடலுக்குகம் உள்ளாகியுள்ளார். ஸலபுக் கொள்கை விடயத்தில் இரட்டை வேடம் போட்டுள்ளார்.

இஸ்லாமிய உலகில் மிகப் பெரும் ஹதீஸ் இயல் திறனாய்வு ஆளுமைகளுக்கு உடன்பாடாகத் தெரிந்த பல ஸஹீஹான ஹதீஸ்கள், ஆன்மிக வறுமையில் உழன்று, ஆபாச Audio சர்ச்சையில் சிக்கிய இவருக்கு முரண்பாடாகத் தெரிய வந்துள்ளது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல என எள்ளிநகையாடப்படுகின்றார்.

ஒவ்வொருவரின் ஆய்வு நிலையும் மாறுபடும். எனினும், தனது ஆய்வை, ஆய்வாக மட்டுமே முன்வைக்க வேண்டும். தனக்குக் கிட்டிய முடிவை அனைவரும் ஏற்க வேண்டும். ஏற்க மறுப்போரையும் மாற்று ஆய்வை முன்வைப்போரையும் மட்டம் தட்ட வேண்டும் என்ற ஆணவப் போக்கு அவரிடம் குறைவற்றுக் காணப்படுகிறது. செழுமையான இஸ்லாமிய ஆய்வுப் பாரம்பரியத்தின் விரிந்த வீச்சுக்கு மாற்றமாக, சிறு பிள்ளைத் தனமான போக்குகளை அண்மைக்காலங்களில் அதிகமாக வெளிப்படுத்தி, அவமானத்தை சந்தித்து வருகின்றார் என்பதுதான் வேதனைக்குரியது.

மெச்சத்தக்க பணிகளைச் செய்த ஒரு மனிதன் இந்த இழி நிலைக்கு ஆளாகக் கூடாது. இவருக்கு ஏற்பட்ட பரிதாபமும் அவமானமும் இனி யாருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கின்றேன்.

அவரது வயது முதிர்ச்சியும், சிந்தனைத் தளர்ச்சியும் அவர் பலவீனமடைந்துவிட்டார் என்பதை பளிச்சென்று வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. ஆரம்ப காலங்களில் அதிகளவு முன்னுக்குப் பின் முரண்பட்டு எழுதமாட்டார். சந்தர்ப்பத்துக்கும், சபைக்கேற்பவும் கருத்துக்களை மாறி மாறி முன்வைக்கமாட்டார். மிக அவதானமாக நின்று, நிதானித்துக் கருத்துச் சொல்வார். அதனால், ஜமாஅத்தே இஸ்லாமி போன்ற இயக்கங்களால் கூடப் பாராட்டப்பட்டார்."P.ஜைனுல் ஆபிதீன் நாடறிந்த நல்ல சிந்தனையாளர்; சிறந்த மார்க்க அறிஞர்; இதழாசிரியர்; தமிழ் நாட்டில் மறுமலர்ச்சிக்காக உழைத்து வருபவர்" என்று சமரசம் இதழ் அவரைப் புகழ்ந்து எழுதியதை முதல் பாகத்தில் எடுத்துக் காட்டியிருந்தோம். அண்மைக்கால அவரது ஒற்றைப் பரிமாணப் போக்கும், ஆணவமும் அவரை அனைவரும் வெறுக்கக் காரணமாகிவிட்டன.

இவருக்கு முன் சிலர் ஹதீஸ்கள், அல்குர்ஆனுக்கு முரண்படுவதாக தங்கள் அவதானத்தை வெளியிட்டனர். ஒரு கருத்தாக மட்டுமே அவர்கள் முன்வைத்தனர். அவர்கள் இயக்க ரீதியாக அக்கருத்தியலை பிழைப்புக்கான வழியாக ஆக்கவில்லை. ஏற்காதோரை காபிர் என்று கர்ஜிக்கவில்லை. ஆனால், P.ஜைனுல் ஆபிதீன் தனது கருத்தை ஏற்காதோரை வன்மையாகத் தாக்கினார். சமூக வலைத் தளங்களில் கள்ளப் பெயரில் பல முகவரிகளை உருவாக்கி, தனக்குப் பிடிக்காத பலரை இழிவுபடுத்தினார். இதற்காக இயக்க ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் அவர் செயல்பட்டார். "இன்னும், P.ஜைனுல் ஆபிதீன் பாடம் படிக்கவோ, திருந்தவோ இல்லை. தொடர்ந்தும் கள்ள முகநூல் முகவரியில் கருத்துப் பதிவதை அவர் விடவில்லை" என்று அல்தாபி போன்றவர்களால் இப்போதும் குற்றம் சாட்டப்படுகின்றார்.

தன்னை விமர்சித்தோர் பற்றிய மதிப்பை மக்களிடம் மங்கச் செய்யப் படாத பாடுபடுகின்றார். தன்னை ஏற்றுக் கொண்டோரை தன் சிந்தனை சிறை வட்டத்திற்குள் அடைத்துப் போட்டார். மாற்றுக் கருத்துக் கூறுவோரின் பள்ளிக்கோ, மாநாட்டிற்கோ, ஏன் சுக நலன் விசாரிக்கக் கூடப் போகவேண்டாம் என்று தடுத்து, எதிரியாகவே பார்க்க வைத்தார். அவர் யாரை எதிரியாக சித்திரிக்கின்றாரோ, அவர்களுடன் தனது இயக்க அங்கத்தவர்களையும் எத்தகைய தொடர்பும் வைக்க

விடாமல் தடுத்தார். P.ஜைனுல் ஆபிதீன் என்ற ஆளுமை பல விடயங்களில் விடலைக் குழந்தையைப் போன்று சின்னத்தனமாக நடந்ததை எண்ணிப் பார்த்தால், அவர் மீது ஆத்திரம் வரவில்லை! அனுதாபமே வருகிறது!

மாற்றுக் கருத்துள்ள விடயங்களில் நட்பு ரீதியான கருத்தாட லுக்கு அவர் இணங்க மறுத்தார். விவாதக் களமே அதற்கான ஒரே வழி என்று அடம்பிடித்தார். அந்தப் போக்கிலேயே தனது இயக்கவாதிகளை வழி நடாத்தினார். இணங்கிப் போகும் போக்கை கைவிட்டுவிட்டு, எப்போதும் பொருதுகின்ற போக்கைக் கடைப்பிடித்து வந்தார். அவர் சந்தித்த விவாதக் களத்தை அடுத்தவர்களை அவமானப்படுத்தும் கொதி நிலையிலேயே நகர்த்திச் சென்றார். அதிரடியான சண்டைக் காட்சிகள், நடிகர்களின் வெற்று வீர வசனங்கள் நிறைந்த சினிமாப் படம் போல், தனது சமயப் போதனை மேடைகளை மாற்றினார். இஸ்லாம் அங்கீகரிக்காத இவ்வாறான போக்கை எல்லா மக்களும் ரசிப்பார்கள் என்று தப்புக் கணக்குப் போட்டார்.

அவர் வளர ஆரம்பித்த துவக்க நாட்களில் கடைப்பிடித்த மென்மை, நளினம் எல்லாம் இப்போது அவரிடம் இல்லாமல் போனது. அவரது அறிவு மட்டம் உள்ளத்தை பண்படுத்தவில்லை. இஸ்லாம் போதிக்கும் இங்கிதம் எல்லாம் 2010களுக்குப் பின்னர் அவரது மேடைகளில் மருந்துக்கும் காணக்கிடைக்காமல் போயுள்ளது எனப் பலர் கவலை தெரிவித்தனர்.

வசீகரிக்கும் வார்த்தைகளால் இஸ்லாத்தின் தூதை முன்வைக்க சக்திபெற்ற அவர், பைபிள் விவாதத்திலும் அதன் ஆபாசக் கருத்துக்களை அளவுக்கு மீறி அள்ளி வீசினார். மத்ஹபு களில் காணப்படும் ஆபாசக் கருத்துக்களை அளவுக்கதிகமாக விவாதப் பொருளாக்கினார். விவாதங்களை சிறுவர்கள், இளைஞர் கள், பெண்கள் என்று பல தரப்பும் பார்க்க நேரிடுமே என்றெல்லாம் அவர் சற்றும் சமூக உணர்வோடு சிந்திக்கத் தவறினார். ஏன் இந்தளவு எல்லை மீறுகின்றார் என்று மக்கள் சலிப்படையும் நிலையை அவரது விவாதக் களங்கள் தோற்றுவித்தன. எதிர்வாதிகளின் குறுந் தகடுகளை வெட்டியும் கொத்தியும் கருத்துச் சிதைவை ஏற்படுத்தியும் எடிட் பண்ணியும் வெளியிட்டு, அதன் மூலம் இயக்கத்திற்கான

வருவாய்க்கு வழி பண்ணினார். அதில் தனக்கு எந்த இலாபமும் இல்லை என்று அடிக்கடி பரப்புரை செய்தார். எனினும், அவரது மூன் பப்ளிகேஷனும் குறுந்தகடு வியாபாரம் செய்து வந்தது.

அவரது பொய்களை, உண்மை என நம்பும் ஒரு கூட்டம் அவரைச் சுற்றி உருவானதால், எதையும் அவர் சொல்லத் துணிந்தார். அவரது கருத்துக்களை மறுப்போரை அவரும் அவரது ஆதரவாளர் களும் குறுக்கு வழியில் கிறுக்குத் தனமாகத் தாக்கினர். ஒவ்வொரு வரின் நீக்கமும் சரியானதுதான் என்று அவரது பரப்புரைகளையும் குற்றச்சாட்டுக்களையும் நம்பி ஒரு வக்கிர உணர்வுகொண்ட மடமைக் கூட்டம் அவற்றை இரவு பகலாகப் பரப்பி இன்புற்றது. தனது தொண்டர் களின் அநாகரிகச் செயற்பாட்டுக்கு வலுச் சேர்க்கும் வகையில், கள்ள முகவரிகளில் இவரும் அசிங்கமாக அவர்கள் பற்றி எழுதிவந்தார். இஸ்லாமிய விழுமியத்தை மறந்த அத்தனை செயற்பாட்டையும் தூண்விட்டுவிட்டு, அவர்களின் ஈனச் செயலைப் பார்த்து பீஜே ரசித்துக் கொண்டிருந்தார். காலத்தை அல்லாஹ் மாற்றிச் சுழற்றினான். அவர் மீது பாலியல் குற்றச்சாட்டு வந்து, அவரே ஒத்துக் கொண்டு, பச்சை அசிங்கத்துடன் தனது சகாக்களாலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டு, தூக்கி எறியப்பட்ட போது, முன்னர் அவரால் பாதிக்கப்பட்ட அத்தனை பேருடைய வலியையும் மொத்தமாக உணர்ந்திருப்பார்.

நமது முதல் பாகம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டதும் அதை வாசிக்காமலும் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று அறியாமலும் முகநூலில் அவரது தக்லீத்வாதிகள் ஒரு யுத்தப் பிரகடனத்தையே மேற்கொண்டனர். இதன் மூலம் அவர்கள் எதையும் ஆய்ந்தறிந்து, புரிந்து, விளங்கி ஏற்பவர்கள் அல்லர். மத்ஹபுவாதிகளைவிட, ஏன் கைஸானிய்யாக்களைவிட தரம் கெட்ட குருட்டுத் தக்லீத்வாதிகள் என்பதை அவர்களே அவர்களை அறியாமல் நிரூபித்து வருகின்றனர். இனம் இனத்தோடு இணையும் என்று இவரது புதிய முகவரியிலிருந்து பரப்புரை செய்கின்றவர் களுடைய வரலாற்றை எடுத்துப் பார்த்தால், அவர்களே அவர்களின் வக்கிர ஈனச் செயற்பாடு பற்றி எழுதிவிட்டு மற்றவர்களின் பெயரை மட்டும் மாற்றியுள்ளனர் என்பதை அறிய முடிந்தது. அன்று மோசமானவர்கள் என்று அவரே கழித்துவிட்டவர்கள் சிலரை இன்று பீஜே தன்னுடன் இணைத்துக் கொண்டு, மீண்டு முதலில் இருந்து

**செயற்பட ஆரம்பித்துவிட்டாரோ என்று ஐயம் கொள்ள வைக்கிறது அவர்களின் நாகரிகமற்ற செயற்பாடு.**

“என்னை தக்லீத் செய்தவர்கள் என்னுடன் தொடர்ந்து இருக்க மாட்டார்கள். என்னை தக்லீத் செய்யாமல் சிந்தித்து சரியானதை ஏற்றுக் கொள்பவர்கள் தான் என்னுடன் இருக்கிறார்கள்” **என்று த.த.ஜ.வில் இருக்கும் போது எழுதினார். இப்போது என்ன ஆனது? யாரை சிந்திப்போர் என்று புகழ்ந்து சொன்னாரோ, அவர்கள் கடைசிவரை தக்லீத் பண்ணிவிட்டு, இன்று படுகுழியில் அவரைத் தள்ளிவிட்டு, அவர்கள் இவரின் விடயத்தில் விழித்துக் கொண்டுவிட்டார்கள். எனினும், இன்னமும் சுய சிந்தனை யற்ற சிற்சில தக்லீத்வாதிகள் மட்டுமே P.ஜைனுல் ஆபிதீனுடன் ஒட்டிக் கொண்டுள்ளனர் என்று அவரது முன்னாள் சகாக்கள் குற்றம் சுமத்திவருகின்றனர். அவரது முன்னாள் சகாக்கள் அவரை இயக்கத்தை விட்டுத் தூக்கி எறிந்தாலும், அவர் விட்டுச் சென்ற தவறான கொள்கை எச்சத்திலேயே இன்னமும் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்.**

“தமுமுக, ஜாக், ஹாமித் பக்ரி, பாக்கர் உள்ளிட்ட அனைவரும் சொன்னது என்ன? பீ.ஜே. என்ற ஒருவன் சொன்னான். அவன் சொன்னதை எதிர்த்தால், நம்மை ஒழித்து விடுவான் என்பதற்காக நாங்கள் சகித்துக் கொண்டு இருந்தோம் என்று சொன்னார்கள்.

நம்மோடு எஞ்சி இருப்பவர்கள் அப்படி அல்ல என்று நான் நினைத்தேன்.அதுவும் தவறு என்பது சமீபகால நிகழ்வுகள் மூலம் எனக்குத் தெரிகிறது. உடன்பாடு இல்லாவிட்டாலும் P.ஜைனுல் ஆபிதீனுக்காக அதை எதிர்க்க முடியவில்லை என்பதுதான் அதிகமானோரின் கருத்து. அதை நான் சமீபகாலமாகப் புரிந்து கொண்டேன். பொது மக்கள் சரியாக இருந்தாலும் – தாயிகளும் முக்கிய பொறுப்பில் உள்ளவர்களும் எனக்காகத் தான் ஒரு கொள்கையை ஆதரிக்கிறார்கள்” **என்று அப்பாஸ் அலிக்கு 2014 களில் அவர் எழுதிய கடிதத்தில் தனது கொள்கை தோல்வியடைந்து வருவதை உணர ஆரம்பித்தார் என்பதை அவரே வெளிப் படுத்தியுள்ளார். எனினும், அந்த இயக்கத்திலிருந்து நீக்கப்படும் வரை அவரால் அதை விட்டு வெளிவர முடியவில்லை. தக்லீதையும் தகர்க்க முடியவில்லை.**

தன்னையும் தன் சிந்தனையையும் ஏற்றுக் கொண்டோர் மட்டுமே முஸ்லிம்கள். மற்றவர்கள் முஷ்ரிக்கள்; அவர்களது பள்ளிக்குச் சென்று , அவர்கள் பின்னால் தொழக் கூடாது என்ற பிரசாரத்தினூடாக, அவரது இயக்கவாதிகளுக்கு சுதந்திரமாக மாற்று விளக்கங்களைக் கேட்கும் சந்தர்ப்பத்தை வழங்க மறுத்தார். மற்ற எந்த உலமாவின் விமர்சனத்தையும் கேட்காத வகையில் தன்னைச் சூழ ஒரு வட்டத்தை வடிவமைத்தார். அதைவிட்டு வெளியேறியோரை மிகவும் தரக் குறைவாக மட்டம் தட்டினார். முன்னர் அவர்கள் எழுதிய நூல்கள், உரைகளைக் கூட தனது ஜமாஅத் எல்லையிலிருந்து அகற்றினார். அவர்கள் பற்றியோ அவர்களின் சேவைகள் பற்றியோ நினைத்துப் பார்க்கக் கூட யாருக்கும் அவர் இடம் அளிக்கவில்லை.

P.ஜைனுல் ஆபிதீன் அவரது சிந்தனைகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய தமிழ்நாடு சென்ற சில இலங்கை உலமாக்களுக்கு இடையூறு செய்துள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டார். அங்கு உரைகள் ஆற்ற முடியாமல் காவல்துறையிடம் இவரது ஆதரவாளர்கள் புகார் அளித்து நிகழ்ச்சிகளைத் தடுத்தனர். இதே போல், அப்பாஸ் அலியை இலங்கைக்குள் வரமுடியாதவாறு அவரது இலங்கை ஆதரவாளர்கள் செய்துள்ளார்கள் என்று விமர்சனங்கள் எழுந்தன.

இலங்கையில் ஏகத்துவ எழுச்சி ஏற்பட்டபோது, அதை எதிர்த்தவர்களால் எவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்பட்டதோ, அவற்றை எல்லாம் இன்று தவ்ஹீத் போர்வை போர்த்திக் கொண்டிருக்கும் சிலர் கொஞ்சமும் குறையில்லாமல், ஏன்? அவர்களை விஞ்சி செய்து வருகின்றனர். மார்க்கத் தெளிவற்றோர் பள்ளி நிர்வாகத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். செல்வந்தர் களுக்கு முக்கியத்துவம் அளித்து, கற்றவர்கள் ஒதுக்கப்படுகின்றனர். பள்ளியினுள் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் ஹதீஸை ஒரு பக்கம் வைத்துவிட்டு, ஊர் மரபு, நடைமுறைப்படி பேசுங்கள் என்று பகிரங்கமாக மார்க்கம் கற்றோரிடம் பாமர நிர்வாகிகளால் அறிவிக்கப் படுவது அதிர்ச்சியை அளிக்கிறது.

இஸ்லாம் ஜாஹிலிய்யப் பண்பாகக் கண்டிக்கும் பிரதேசவாதம், பணத் திமிர், ஆணவப் போக்கு, வைராக்கியம், இயக்க வெறி, பிறரை மதியாமை, ஊர் விலக்கு என்பன இன்னமும் சில தவ்ஹீத்

முகாம்களில் தொடர்கின்றமை வேதனையான விடயம். ஓர் ஊர் பள்ளியிலிருந்து தூரப் பிரதேசத்தில் தேவைக்குப் பள்ளி அமைத்தால், சந்தா பாதிக்கப்படும் என்ற காரணத்திற்காக, வல்லாதிக்க வழிமுறைகளைக் கையாண்டு, காவல் துறையிடம் சென்று பொய் வழக்குப் பதிவு செய்து, காலத்தையும் பொருளாதாரத்தையும் விரயம் செய்யும் அறிவீனம் மாறவேண்டும். அன்று தவ்ஹீதின் எதிர்ப்பாளர் கள் செய்து தோல்வி கண்ட அதே புள்ளயில் நின்று கொண்டு, அவனுடன் பேசாதே, அவனது ஹயரைப் போகாதே, பாடசாலைப் பாடங்களைக் கற்க அந்நியவர்களிடம் சென்றாலும் அவரிடம் உங்கள் பிள்ளைகளை அனுப்பாதீர்கள் என்று, இன்று பெயரளவிலும் போடுகளிலும் தவ்ஹீதை தொங்கவைத்துக் கொண்டு, எந்தத் தெளிவுமற்ற சிலர் பழைய அந்த அநாகரிகச் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளனர்.

கருத்து வேறுபாடுகள் எழுவது சாதாரணமானது. கருத்தைக் கருத்தால் மோதுவதைவிட்டுவிட்டு, கரத்தால் மோதுவதும் ஊர்வாதம், பிரதேசவாதம் பேசுவதும், பொய்யாக வாதாடுவதும் வழக்குத் தொடுப்பதும், மானத்தை சீடிக்குள் சுருட்டி குறுக்கு வழியில் வீழ்த்த முனைவதும் இஸ்லாமிய வழிமுறையல்ல என்பதை இத்தகைய வர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தவ்ஹீத் போர்வையில், P. ஜைனுல் ஆபிதீன் இவ்வாறான அநாகரிக வழிமுறைகளைக் கையாண்டு, இன்று மிகப் பெரிய தோல்வியையும் அவமானத்தையும் இழிவையும் சந்தித்துள்ளார்.

P.ஜைனுல் ஆபிதீன் தரம் தாழ்ந்து நடந்து கொண்டாலும், அவர் மூலம் பயனடைந்தோர் அவருக்கு நன்றி தெரிவிக்க மறக்கவில்லை. அவர், அப்பாஸ் அலி Misc ஐ மிகவும் கேவலப்படுத்தினார். ஆனால், அவர், “நான் இன்று பெற்றுள்ள கல்விக்கு சகோதரர P.ஜைனுல் ஆபிதீன், ஷம்சுல்லுஹா ரஹ்மானீ, மற்றும் TNTJ அமைப்பின் சில அறிஞர்களையே அல்லாஹ் காரணமாக்கினான். இதற்காக நான் அவர்கள் அனைவருக்கும் என் நன்றியை தெரிவிப்பதுடன் அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனையும் செய்கின்றேன் அல்லாஹ் நம் அனைவரையும் நேர்வழியில் நடத்துவானாக!” (2015) என்று குறிப்பிட்டுள்ளார்.

“அல்லாஹ் உங்களுக்கு அறிவையும் ஆற்றலையும் கொடுத்தான். உங்கள் பேச்சுத் திறமையும் எழுத்தாற்றலும் மக்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. இது மார்க்கத்தின் வளர்ச்சிக்காக மட்டுமே பயன்பட வேண்டும். நீங்கள் உங்கள் மறுமை வெற்றியை கவனத்தில் கொண்டு, உங்கள் கருத்துக்களை மீண்டும் ஒரு முறை மறுசீராய்வு செய்து பாருங்கள். உங்களின் தவறான கருத்துக்களிலிருந்து நீங்கள் விடுபட்டதாக ஓர் அறிக்கை விட்டால், அது தமிழுலகிற்கு நீங்கள் செய்யும் பேருதவியாக இருக்கும்” (2015) என்று இஸ்மாயீல் ஸலபி அழைப்பு விடுத்துள்ளார்.

“...நான் மீண்டும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன். தொழாமல் இருப்பது பெரும் பாவம். தொழுகையில் பொடுபோக்காக இருப்பது மிகப்பாரதூரமான குற்றம். உங்கள் இந்த நிலையை பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். நானும் சுட்டிக்காட்டினேன். அந்தத் தவறைத் திருத்துவதுதான் அறிவுடைமை” என்று 2015 களில் நாம் அறிவுரை கூறி எழுதினோம். அவரின் நலம் நாடிய மற்றவர்களின் கருத்துகளுக்கு அவர் மதிப்பளித்திருந்தால், அவர் இன்று சிக்கியுள்ள பல விபத்துக்களில் இருந்து தப்பியிருக்கலாம் என்பது எனது கருத்து.

இரண்டு பாகங்களையும் படித்துவிட்டு உங்கள் கருத்துக்களை எனக்குத் தெரியப்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன். இன்னும் சேர்க்க வேண்டிய தகவல்களும் விமர்சனங்களும் இருந்தால் எழுதி அனுப்புங்கள்.

அல்லாஹ் நம்மனைவரையும் அவனது நேரான பாதையில் இறுதி மூச்சுவரை பயணிக்கச் செய்து, அவனது அருளால் சூழ்ந்து கொள்வானாக! 3ம் பாகத்தில் சந்திக்கும் வரை! வஸ்ஸலாம்

# உசாத்துணைகள்


1. P.ஜைனுல் ஆபிதீன் (2006) ஜகாத் ஓர் ஆய்வு – நபீலா பதிப்பகம், சென்னை.
2. மவ்லவி அப்பாஸ் அலி (2015) சூனியம்…! அஸ்ஸுன்னா பப்ளிகேஷன்ஸ், மதுரை.
3. அல்ஜன்னத் ஆகஸ்ட் 1993
4. அல்ஜன்னத் நவம்பர் 1993
5. அல்ஜன்னத் மே 1995
6. அல்ஜன்னத் ஜுன் 1995
7. அல்ஜன்னத் ஜுன் – ஜுலை 1996
8. அல்ஜன்னத் ஆகஸ்ட் 1996
9. உண்மை உதயம் ஜனவரி – மார்ச் 1993
10. குமுதம் ரிபோட்டர் 05-09-2017
11. ஜுனியர் விகடன் 23-05-2018
12. மீள்பார்வை 1995 இதழ் 97
13. P.ஜைனுல் ஆபிதீன் (2015) அல்குர்ஆன் தமிழாக்கம் – மூன் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
14. P.ஜைனுல் ஆபிதீன் (2015) இஸ்லாத்தின் பார்வையில் பொருளாதாரம் – நபீலா பதிப்பகம், சென்னை.
15. எம்.ஏ.ஹபீழ் ஸலபி (2020) ஓர் ஆளுமையின் திசைமாறிய பயணம். பாகம் 01. – ஹம்னா பதிப்பகம்.
16. P.ஜைனுல் ஆபிதீன் (2015) தப்லீக் தஃலீம் தொகுப்பு ஓர் ஆய்வு – நபீலா பதிப்பகம், சென்னை.
17. P.ஜைனுல் ஆபிதீன் (2015) இஸ்லாத்தியத் திருமணம்– நபீலா பதிப்பகம், சென்னை.
18. குமுதம் 22.03.2002
19. இந்தயா டுடே நவம்பர் 3,2010

**இணையதளங்கள்**

www.onlinetntj.net
www.islamkalvi.com
www.onlinepj.com
www.viktan.com
www.asrc.dharussalam.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. பல்கலைக்கழகங்களைப் பலிபீடமாக்கும் பகிடிவதை
2. நட்புக்கு இலக்கணம்
3. பொறுமையும் துன்பமும்
4. வணக்கத்திற்குரியவன்
5. நிறைவு பெற்ற இறைத் தூது
6. இஸ்லாத்தின் நிழலில் இளைஞர்கள்
7. இஸ்லாம் கூறுவது என்ன?
8. இறையச்சம்
9. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் ஆபாசம்
10. தியாகப் பயணம்
11. ஓர் ஆளுமையின் திசை மாறிய பயணம் பாகம் – 01
12. இஸ்லாமியப் பார்வைக்குள் படைப்பிலக்கியம் (விரைவில்)
13. இஜ்மா– கியாஸ்
14. என் எழுதுகோலின் பதிவுகள் (விரைவில்)
15. பொறுமையும் நன்றியும் (விரைவில்)

## சிறுவர் இலக்கியம்

16. கல்வியே பெரும் செல்வம்
17. நல்லுபதேசத்தின் நளினங்கள்
18. நடந்த கதைகள்
19. நல்ல நண்பர்கள் (விரைவில்)